ISSN 1391-9830

# சமூக அறிவு

CAMŪKA ARIVU

தொகுதி 1 | இதழ் 1 & 2 | ஜூலை 2004

சமூகம், அதன் அசைவியக்கம் பற்றிய ஓர் ஆய்விதழ்

# சமூக அறிவு

## சமூகம், அதன் அசைவியக்கம் பற்றிய ஓர் ஆய்விதழ்


ஆசிரியர் :

பேராசிரியர் வி. நித்தியானந்தம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

ஆலோசகர் குழு :

பேராசிரியர் கா. சிவத்தம்பி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் அ. சிவராசா (பேராதனைப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் சோ. சந்திரசேகரன் (கொழும்புப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் எம். எல். ஏ. காதர் (தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் வி. பி. சிவநாதன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கலாநிதி க. ரகுராகவன் (கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்)

நிர்வாக ஆசிரியர் :

கணேசலிங்கம் குமரன்



'சமூக அறிவு' குமரன் புத்தக இல்லத்தினால் வருடம் இருமுறை (தை, ஆடி) வெளியிடப்படும் புலமைதர உசாவல்களுக்கு உட்படுத்தப்பட்ட சமூகம் அதன் அசைவியக்கம் பற்றிய புலமைப் பேறுகளை ஒருங்கிணைக்கும் ஓர் ஆய்விதழ் ஆகும்.

இவ்வாய்விதழ் தொடர்பான கடிதங்களும், கட்டுரைகளும், மதிப்பீட்டுக்கான நூல்களும் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்:

**குமரன் புத்தக இல்லம்,**
**இல.201, டாம் வீதி, கொழும்பு - 12, இலங்கை.**
**தொலைபேசி இல. : 2421388**
**இ. அஞ்சல் : kumbh@sltnet.lk**

**CAMŪKA AṚIVU** - A refereed journal devoted to the study of society and its dynamics, published biannually (January and July) by Kumaran Book House, 201, Dam Street, Colombo 12, Sri Lanka. Telephone : 2421388; E-mail: kumbh@sltnet.lk

Journal Editer : Prof. V. Nithyanandam

ISSN 1391 - 9830

ISSN 1391 - 9830

# சமூக அறிவு

தொகுதி - 1 ★ ஆடி - 2004 ★ இதழ் - 1 & 2

## பொருளடக்கம்

கட்டுரைகள்

1. யாழ்ப்பாணச் சமூகப் பாரம்பரியத்தில் கட்டடம் பற்றிய எண்ணக்கரு
   - *கார்த்திகேசு சிவத்தம்பி* 7

2. நிறுவனக் கோட்பாடுகளும் சந்தைப்படுத்தல் ஆய்வுகளும்
   - அவை மத்தியிலான கருதுகோள் ரீதியான தொடர்பு
   - *க. ரகுராகவன் & ஐ. ரகுராகவன்* 22

3. ஈழத்தமிழரும் மருத்துவக் கல்வியும்: அதன் சமூகப் பொருளாதாரப் பரிமாணம்
   - *வி. நித்தியானந்தம்* 37

4. மேலாதிக்கமும் அதன் தடுமாற்றமும்
   - *நோம் சொம்ஸ்கி* 64

6. மோதலும் மோதல் தீர்வும்
   - *ஜயதேவ உயங்கொட* 81

## நூலாய்வு


வடக்குக் கிழக்கு நிலைமையின் பின்னணியில்
வறுமைக் குறைப்பும்
இலங்கையை மீட்டெடுத்தலும்

- *வி. நித்தியானந்தம்* 103

சங்ககால வரலாறும்
தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களும்

- *கார்த்திகேசு சிவத்தம்பி* 123


## நூல் விமர்சனங்கள்


***நூல் தலைப்பு :***

**இலங்கையின் பொருளாதார வரலாறு :**
**வடக்கு - கிழக்குப் பரிமாணம்**

- *ந. பேரின்பநாதன்* 166

***நூல் தலைப்பு :***

**உலக அபிவிருத்தி அறிக்கை - 2004 :**
**சேவைகளை வறியோருக்காக இயங்க வைத்தல்**

- *க. சண்முகலிங்கம்* 172


## அஞ்சலி


- எட்வர்ட் சயித் (1935 - 2003) 181

- போல் மார்லர் சுவிசி (1931 - 2004) 185

# ஆசிரியர் உரை

சமூக விஞ்ஞானங்கள் தமிழிற் போதிக்கப்படுவதும் ஆய்வு செய்யப்படுவதும் இலங்கையைப் பொறுத்தவரை ஏறக்குறைய அரை நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்டன. இக்காலகட்டத்தில், (பாடசாலைகளிலான) இரண்டாந்தர மட்டத்திலும் (பல்கலைக் கழகங் களிலான) மூன்றாந்தர மட்டத்திலும் சமூக விஞ்ஞானங்களின் போதனைக்கும் ஆய்வுக்கும் ஆதாரமான முறையில் தமிழிலான சஞ்சிகைகள் பல ஆங்காங்கே தோன்றியும் மறைந்தும் உள்ளன. எனினும், அவற்றுக்கான பற்றாக்குறை மாத்திரம் எவ்வகையிலும் நிவர்த்தி செய்யப்படாது தொடர்ந்தும் கூரிய ஒரு முறையில் நிலவி வருவதாயுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் தான், மூன்றாந்தர மட்டத்திற் சமூக விஞ்ஞானங்களிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமிடத்து அவற்றுக்கு ஓர் அரங்கினை அமைத்துக் கொடுக்கும் வகையிலும் அத்தகைய ஆய்வுகளை மேன்மேலும் ஊக்குவிக்கும் வகையிலும் **சமூக அறிவு** ஓர் ஆய்வுச் சஞ்சிகையாக வெளிவருகின்றது.

சஞ்சிகை பற்றிய சில அறிமுக ரீதியான தகவல்களைத் தருவதற்கு முன்னதாக, அது அரங்கேறும் தருணம் ஈழத் தமிழரின் சமூக விஞ்ஞான முன்னேற்றம் என்பது பொறுத்துப் பெரிதும் நெருக்கடிக்குட்பட்டதொரு கட்டம் என்பதை உணர்த்துவது அவசியமாகின்றது. ஈழத் தமிழர் இன்று பல நிலைகளிலும் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சமூக விஞ்ஞானிகளால் அவர்களது அறிவையும் அநுபவத்தையும் பயன்படுத்தித் தீர்க்கப்பட வேண்டியவையாயிருப்பினும் அத்தகைய பங்களிப்பைச் செய்யக் கூடிய சமூக விஞ்ஞானிகள் ஈழத் தமிழர் மத்தியில் இல்லையென்பது தான் யதார்த்தம். இலங்கையில் ஏறக்குறைய ஐந்து பல்கலைக்கழகங்கள் வருடாவருடம் தமிழ்மொழி மூலம் பயின்ற சமூக விஞ்ஞானத்துறைசார் பட்டதாரிகளைக் கணிசமான அளவில் வெளியீடு செய்து கொண்டிருக்கும் ஒரு சூழலில் இது ஒரு பாரிய முரண்நகை என்பதில் ஐயமில்லை. எனினும்,

ஈழத்தமிழரின் சமூக விஞ்ஞான அறிவு என்பது ஒரே தரத்தில் மறு உருளைப்படுத்தப்படுவதொன்றாக நீடிக்கின்றதேயன்றிப் பரந்தும் விரிந்தும் ஆழமாகவும் புதிய பரிமாணங்களைச் சேர்ப்பதொன்றாக இல்லை. அதற்கான காரணங்கள் ஈழத்தமிழரின் சமூகப் பரப்பில் தான் கண்டறியப்பட வேண்டுமென்பது ஒரு புறமிருக்க, அவ்வாறான துரதிஷ்ட நிலையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் தாம் எம்மைப் பொறுத்தவரை முக்கியமானவையாகும். உண்மையில், இது விடயத்திற் சில மட்டங்களில் முன்வைக்கப்படும் தீர்வு பற்றிய சிந்தனைகள் தாம் ஈழத் தமிழரின் சமூக விஞ்ஞான முன்னேற்றம் பற்றிய நெருக்கடியின் இன்னொரு கூறு எனலாம்.

இவ்வாறான சிந்தனைகள் ஈழத் தமிழரின் சமூகப் பரப்பிலிருந்து தீர்வுகளைக் கண்டறிவதை விடுத்து, ஊடக மட்டத்திற் குறை காண முற்படுகின்றன. ஆங்கிலத்திற் சமூக விஞ்ஞானத்தைக் கற்காமையும் ஆங்கில அறிவின் பற்றாக்குறையும் தாம் சமூக விஞ்ஞானத்தின் பங்களிப்பு உரிய வகையில் இல்லாமைக்கான காரணங்களாக இனம் காணப்பட்டு ஈழத்தமிழ்ப் புலமையாளர் சமூக விஞ்ஞான ஆய்வுகளை ஆங்கிலத்தில் மேற்கொள்வதை நிர்ப்பந்திப்பதற்கு இவை தலைப்படுகின்றன. அதற்கேற்பப் பல்கலைக்கழக மட்டத்திற் சமூக விஞ்ஞானங்களிலான பட்டப் பிற்படிப்பு ஆய்வுகள் ஆங்கிலத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதை நிர்ப்பந்திக்கும் விதிமுறைகள் கூட (ஒரு சில பல்கலைக்கழகங்களிலாவது) அமுலில் உள்ளன. எனினும், இது மிகவும் குறுகியதொரு நோக்கு என்பதை வலியுறுத்துவது அவசியமாகும்.

தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வுகள் தமிழிலேயே மேற்கொள்ளப்படுவது என்பது ஆய்வுக் களத்திலான மிக வசதி நிறைந்த ஒரு சூழல் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய வசதியின் பயன்தரு சாதனங்களாகவே சமூக விஞ்ஞானங்களைத் தமிழிற் கற்றுப் புலமைசார் தகைமை பெற்ற எமது மாணவர் திகழ்கின்றனர். ஆகவே, அவர்களைச் சரியானபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாயின், அவர்கள் தமிழில் ஆய்வு செய்வது ஊக்குவிக்கப்பட வேண்டுமேயன்றித் தடைப்படுத்தப்படக் கூடாது. ஆங்கிலத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கும் வகையில் விதிமுறைகளை வகுப்பதும் அல்லது அவ்வாறான ரீதியிலமைந்த ஆலோசனைகளை வழங்குவதும் ஈழத் தமிழரின் சமூக விஞ்ஞான மேம்பாட்டினைத் தடை செய்யும் முயற்சிகளேயன்றி வேறன்று. ஒருவர் மேற்கொள்ளும் ஆய்வின் செல்நெறி ஆங்கில அறிவைக் கட்டாயப்படுத்துமாயின், குறிப்பிட்ட ஆய்வாளர் அதனை உரியவாறு பெற்றுக்கொள்ள முயல்வார் என்பதிற் சந்தேகமில்லை. ஆங்கில மொழி

மூலம் சமூக விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்ட இலங்கையின் சில பிரசித்தி பெற்ற சமூக விஞ்ஞானிகள் ஆங்கில மொழிக்குப் புறம்பாகப் போர்த்துக்கேய, டச்சு. பிரஞ்சு போன்ற மொழிகளின் தேவை ஏற்பட்ட போது அவற்றைக் கற்று ஆய்வினைப் பூர்த்தி செய்த அனுபவம் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

இது விடயத்தில் நாம் வலியுறுத்த முனைவது யாதெனில், சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை மாத்திரமன்றிக் கல்வியின் எந்த ஒரு பிரிவு பொறுத்தும் ஆங்கிலத்தை முதல் மொழியாகத் தக்க வைக்கும் அல்லது மாற்றும் முயற்சிகள் பலவீனப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். இவ்வாறான முயற்சிகள் தமிழனை ஆங்கிலேயனாக மாற்றும் ஒரு கைங்கரியமாகிப் பெற முற்படும் அறிவின் தரத்தை மழுங்கடிப்பதுடன், சமூகப் பரப்பிலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த வல்லதொன்றாகும். எனவே, ஆங்கிலத்தை, வேண்டப்படும் அளவுக்கு, ஓர் இரண்டாந்தர மட்டத்தில் வைத்துத் தாய்மொழி மூலம் அறிவூட்டுவதே நீண்டகால வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் மிகவும் ஏற்புடையதாகும். அதற்குப் புறம்பான முறையில் முன்வைக்கப் படுபவையெல்லாம் குறுகிய காலத்திற்குரிய வெறும் போலி வாதங்கள் என்பதைப் பல உலக நாடுகளின் அனுபவம் எமக்குப் புகட்டுகின்றது.

ஈழத் தமிழர் உடனடி நன்மை கருதிய குறுகிய காலம் என்பதற்கு மேலாகச் சிந்திக்காமையின் பயனாகவே அவர்களது நீண்டகால முன்னேற்றம் என்பது பெரிதும் தடுக்கப்பட்டு சமூக அறிவு உட்பட்ட ஏனைய அறிவுசார் மட்டங்களிலும் ஆங்கிலத்தின்மீது மிகையாகத் தங்கியிருக்கும் ஒரு நிலைக்கு இடம்கொடுக்கப்பட்டுள்ளது. அதுவே தீங்குதரும் சமூக விழுமியங்களுக்கும் இட்டுச் சென்றுள்ளது. ஆங்கிலத்தின் மீதான மிகைத் தங்கியிருத்தலைப் படிப்படியாகக் குறைப்பதற்கான ஒரே வழி தமிழிலான ஆய்வுகளையும் தமிழ் மூலமான அறிவையும் மேன்மேலும் முடுக்கி விடுவதேயாகும். அத்தகைய முன்னேற்றம் மிகுந்த செல்நெறியின் ஓர் உயர் கட்டத்தில் வேண்டியளவான பல்துறை இலக்கியப் பரப்பினைத் தமிழ்மொழி கொண்டிருக்கும் போது தமிழை நாடி ஏனையோர் வர வேண்டுமேயன்றி ஏனைய மொழிகளிலானவற்றை நாடித் தமிழன் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வெகுவாகக் குறைந்து விடும்.

ஈழத்தமிழர் உற்பவிக்க முற்பட்டிருக்கும் புதிய சமூகம் இத்தகையதொரு தன்மை கொண்ட கல்விப் பரிமாணமுடையதொன்றாக அமைய வேண்டுமென்ற வேணவாவுடன் அதற்கு ஒத்தாசை புரிய வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் சமூக அறிவு தனது பணியைத்

தொடங்குகின்றது. அதற்கேற்பத் தமிழில் எழுதப்பட்ட கட்டுரைகளுடன், ஆங்கிலத்தில் தங்கியிருக்கும் இன்றைய நிலையைப் பிரதிபலிக்கும் வகையிலான, ஓரிரு தழுவல் ஆக்கங்களும் முதலாவது அறிவு இதழை அணி செய்கின்றன. மேலே கூறியவாறு, நாம் கனவு காணும் "பெருமளவு" சுயசார்புத் தன்மை கொண்டதொரு நிலையினைத் தமிழ்மொழி மூலமான ஆய்வுகள் அண்மிக்கும் ஒரு கட்டம் வரையாவது, மூல ஆக்கங்களுடன் தேவைக்கேற்ப ஒருசில தழுவல் ஆக்கங்களையும் *சமூக* **அறிவு** பெரும்பாலும் கொண்டிருக்குமென எதிர்பார்க்கலாம்.

இறுதியாக ஒரு வார்த்தை. உங்கள் கைகளில் தவழுவது சமூகஅறிவின் முதலாவது இதழ் என்ற காரணத்தினால் ஆக்கங்கள் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட பரப்பிலிருந்து ஊற்றெடுத்திருக்கின்றன. இந்த ஊற்று, பரந்து விரியும் ஒரு பெருநிலத்தை ஊடறுத்துப் பேரறிவு பெருக்கெடுக்கும் ஒரு பேராறாக்குவது உங்களது கைகளில் தான் தங்கியுள்ளது. உங்களது ஆக்கங்கள் தாம் *சமூக* **அறிவு** என்ற ஆய்வரங்கின் எமது நிர்மாணத்திற்குப் போதியளவு உறுதி சேர்ப்பதாயிருக்கும்.

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
7 - 21

# யாழ்ப்பாணச் சமூகப் பாரம்பரியத்தில் கட்டடம் பற்றிய எண்ணக்கரு

*கார்த்திகேசு சிவத்தம்பி* *

ஈழத் தமிழ்ச் சமூகத்தின் பல்வேறுபட்ட தனித்துவ அம்சங்கள் போன்றே, அதன் கட்டட நிர்மாணமும் இதர சமூகங்களுக்கில்லாத சில தனித்துவ இயல்புகளைக் கொண்டதொன்றாகும். இத்தகைய இயல்புகளை முன்கொணரும் ஒரு முன்னோடி முயற்சியாக இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. இம்முயற்சியின் சிறப்புக் களமாக யாழ்ப்பாணச் சமூகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய ஒரு சுருக்கக் குறிப்பினைத் தொடர்ந்து கட்டடங்களை வசிப்பிடம் சார்ந்தவை, கோயில் சார்ந்தவை, பொதுநிலை சார்ந்தவை என்று பாகுபடுத்தி அவற்றின் தன்மை களைக் கட்டுரை ஆராய்கின்றது. உரியவிடத்து வரைபடங்கள் கொண்டு விளக்கங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

* தகுநிலை ஓய்வுநிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# யாழ்ப்பாணச் சமூகம்

இவ்விடயம் பற்றிய எடுத்துரைப்பினை தொடங்குவதற்கு முன்னர், யாழ்ப்பாணத்துச் சமூகப் பாரம்பரியம் என எதனைச் சுட்டுகிறேன் என்பது முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணத்துப் பாரம்பரியச் சமூகம் என்பது "சமூகப் பாரம்பரியம்" எனக் குறிப்பிடப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் உள்ளது. யாழ்ப்பாணத்துக்குரிய சமூக ஒழுங்கமைவு முற்றிலும் பிராமணீய முறை சாராதது. ஆதலால், சாதி மேன்மை, சாதி ஆதிக்கம் என்பன கிராமத்துக்கு கிராமம், பெரும் பாகங்களுக்குப் பெரும் பாகம் (division) வித்தியாசமிருப்பது உண்டு.

மேற்சாதியெனப் பொதுவாகக் கொள்ளப்படும் வெள்ளாளர்-களிடையேயும் அந்தஸ்து வேறுபாடு உண்டு. தமிழகத்திலுள்ளது போல வெள்ளாளக் குழுமங்கள் பற்றிய வரையறை இங்கு கிடையாது. இதனைவிட, ஏறத்தாழ 1620 முதல், அதாவது போர்த்துக்கேய ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணம் வந்ததின் பின், வெள்ளாளர் அல்லாத சாதியினரும் சில இடங்களில் மேலோங்கிகளாகக் கிளம்பியிருந்தனர் (உதாரணம்: கரையார்). இதனைவிட பாரம்பரியச் சமூகக் கடமைகள் நடவடிக்கை-களிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட சாதிக் குழுக்களும் உண்டு (உதாரணம்: இட்டம் போன கோவியர்). மேலும், முன்னர் வெள்ளாளராகக் கருதப்படாத சிற்சில வட்டாரக் குழுக்கள் (இவர்கள் மற்றச் சாதிகளுக்கு உரியதான தொழில்கள் எதையும் செய்யாதவர்கள் மாத்திரமே) காலஓட்டத்திற் பொருளாதார முன்னேற்றங்கள் காரணமாகவும் அந்தஸ்து உயர்ச்சி காரணமாகவும் வெள்ளாளராகக் கருதப்பட்டு வெள்ளாங் குடிகட்குரிய நியமங்களைப் போற்றத் தொடங்கியிருந்தனர்.

இத்தகைய நெகிழ்ச்சிகள், மாற்றங்கள் ஆகியன வீடு போன்ற வாழ்நிலை வசதிகளில் நன்கு தெரிய வருவது இயல்பே. இவை யாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்தவத்தின் வருகையும், குறிப்பாகப் புரட்டஸ்தாந்தியத்தின் வருகையும், அது வழங்கிய படிப்புக் (கல்வி) காரணமாக ஏற்பட்ட தொழில் மாற்றங்களும் இந்தச் சமூக நியமங்களிற் பல அந்தஸ்து மாற்றங்களை ஏற்படுத்தின. ஆயினும், இத்தகைய நெகிழ்ச்சிகள், மாற்றங்களினூடே சராசரியான சமூக நடைமுறை நியமப் பொதுத் தன்மை ஒன்று காணப்பட்டது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். அந்தப் பொதுப்படையான சமூகப் பாரம்பரிய நியமங்களை மனங்கொண்டே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் வாழ்நிலை அம்சங்களின், பௌதிகப் பண்பாட்டின் (Material Culture) வரலாறு பற்றிய ஆய்வுகள் இல்லை யென்று சொல்லும் அளவிற்கே உள்ளன. இந்த வாழ்நிலை அம்சங்களைப் பற்றிய நோக்கு எமது வரலாறு எழுதுகையில் (Historiography) இன்னும் இடம் பெறவில்லை. அதனால், சமூக நிலை கட்டட அமைவுகள் பற்றி எழுதுவதற்கான முன் ஆதாரங்கள் இல்லை. பெரும்பாலும் வடமராட்சியைத் தளமாகக் கொண்டு தீவுப் பகுதி தவிர்ந்த மற்றைய யாழ்ப்பாணத்துப் பிரதேசங்கள் பற்றிய ஓரளவு பரிச்சயத்துடன் இக்கட்டுரையில் வரும் தரவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

'Architecture' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "கட்டடம், கட்டடக் கலை" என்பதே வழங்கு சொற்களாகும். "கட்டடம்" என்பதே உரிய சொல் என்பதும் "கட்டிடம்" என்ற வழக்கும் உள்ளது என்பது லெக்ஸிகன் வழியாகத் தெரிய வருகிறது. யாழ்ப்பாண வழக்கிற் "கட்டிடம்" என்பதே உள்ளது. ஆனால், அது மக்கள் நிலையிற் பெரிய, பாரிய கட்டிடங்களைக் (buildings) குறிக்குமே தவிர வீடு, கொட்டில், குடில் போன்றவற்றைக் குறிப்பதில்லை எனக் கொள்ளலாம். பொதுவாகக் கட்டப்படும் வீடுகள் கூட அளவுக்குப் பெரிதாக இருக்கக் கூடாது என்ற ஒரு கிராம நிலை நியமம் உண்டு. "இடம் பட வீடடேல்" என்ற மூதுரை யாழ்ப்பாணத்திற் பெருவழக்கிலுள்ளது. அத்தகைய வீடுகள் "வாழாது" என்கின்ற ஒரு நம்பிக்கையுண்டு. அயலிலுள்ள வீட்டின் குறுக்கு வளை உயரத்துக்கு மேல் ஒரு வீடு இருக்குமாயின் அது அந்த அயல் வீட்டுக்கே கூடாது என்ற நம்பிக்கையுமிருந்தது.

ஆயினும், அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்திற் கட்டட வேலைகளில் ஈடுபடும் நாட்கூலிக்காரர்களைக் "கட்டுவேலைக்காரர்கள்" என்று கூறும் வழக்கு உண்டு. கட்டுவேலைக்காரர்கள் தனியார் கட்டட வேலைகளிலும் பொதுக் கட்டட வேலைகளிலும் (பாடசாலைகள், அலுவலகங்கள் போன்ற பொதுக் கட்டடங்கள்) ஈடுபடுவர். இத்தகைய கட்டுவேலைகளில் தொழில் திறனுள்ள வேலையாட்களும் (மேசன்) உடல் உழைப்பை மாத்திரமே வழங்குபவர்களுமிருப்பர். உடலுழைப்பை வழங்கும் தொழிலாளியை முட்டாள் / முட்டாள் வேலை என்று கூறும் யாழ்ப்பாண மரபும் உண்டு.

கட்டுவேலை என்பது இன்று தனியார் (private) கட்டடங்களையும் பொதுக் (public) கட்டடங்களையும் குறிக்கும். கோயிற் கட்டட வேலை தனியானதாகவே கருதப்படும். இந்தக் கட்டுவேலை மரபு ஏறத்தாழ 1960களிலிருந்தே வழக்கிலுள்ளது. அதற்கு முன்னர் அவ்வாறு கட்டும் மரபு காணப்படவில்லை. பொது விடயங்களுக்கான கட்டடங்களைக் கட்டும்

மரபு மேல் நாட்டார் வருகையுடனே வருகிறது (அலுவலகங்கள், பாடசாலைகள், மண்டபங்கள் ஆகியன). கல்லும் சுண்ணாம்பும் பயன்படுத்தி ஓட்டால் வேயப்படும் கட்டட மரபு ஒல்லாந்தர் காலத்திலிருந்தே யாழ்ப்பாணத்தில் வழக்கிற்கு வந்ததென்று கொள்வர்.

## வசிப்பிட கட்டடங்கள்

யாழ்ப்பாணச் சமூக நிலையில் வசிப்பிடத்திற்கான வீடு கட்டப் பெறுதல் முக்கியமானதொன்றாகும். இந்த வீடுகள் சமூக ஆதிக்க அந்தஸ்து நிலைகளுக்கேற்ப வேறுபடும். யாழ் சமூக நிலையில் வசதியடைந்தவர்களே கல்வீடுகளைக் கட்டுவார்கள். கல்வீடு என்பது கல்லாற் கட்டப்படும் வீட்டையே கருதும். இப்பொழுது கல்வீடுகள் பெரும்பாலும் சீமெந்துக்கல் அரிந்து அந்த அரிகற்களால் கட்டப்படுவனவாக இருக்க, அதற்கு முன்னர் 1920களிலும் 30களிலும் கல்லும் சுண்ணாம்பும் கொண்டே கல் வீடுகள் கட்டப்பட்டன். 1930கள், 40களில் ஒரு சிறு கிராமத்தில் 2 - 3 கல்வீடுகள் இருப்பதுகூட மிகக் குறைவாகவே இருந்தது. அக்காலத்தில் ஒருவர் பணக்காரர் என்பதைக் குறிக்க "கல்வீட்டார்" என்று கூறும் மரபு இருந்தது. சமூக அதிகாரமும் பொருளாதார வசதியும் படைத்தவர்களினாலேயே தனியாருக்குச் சொந்தமான கல்வீடுகள் கட்டப்பட்டன. இது மேலிருந்து கீழாகப் படிப்படியான பரம்புகையைப் பெற்றது. கல்வீட்டின் வருகையோடு யாழ்ப்பாண வீடு கட்டும் மரபில் ஒரு கணிசமான மாற்றம் ஏற்பட்டது எனலாம். அந்த மாற்றங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள அதற்கு முந்திய காலங்களில் தனியார் வீடுகள் எவ்வாறு கட்டப்பட்டன என்பதை அறிதல் வேண்டும்.

வீடு கட்டப்படும் நிலையில் வீடு என்பதிலும் பார்க்க மனை என்ற சொல்லே பெருவழக்கிலிருந்தது. தென்னாசிய சமூகத்தின் பொதுவான இயல்புக்கிணங்க இந்த மனை கட்டுதல் மத சம்பிரதாயங்களுடன் சம்பந்தப்பட்டதாகக், குறிப்பாகச் சோதிடத்தோடு சம்பந்தப்பட்டதாகக் கொள்ளப்படும். இக்காலத்தில் இதனைக் குறிப்பதற்கு வாஸ்து சாஸ்திரம் என்ற பொதுப்பெயரைக் குறிப்பிடும் வழக்கம் வந்துவிட்டது. எனினும், யாழ்ப்பாண மரபில் பாரம்பரியமாக மனையடி சாஸ்திரம் என்றே சொல்லப்படும். யாழ்ப்பாணப் பண்பாட்டின் கையேடாகவுள்ள வாக்கிய பஞ்சாங்க மரபில் இது "வீட்டுக்கு நிலை வகுத்தல்" என்ற தலைப்பில் தரப்படுகிறது. பொதுவாக இது பற்றிய அறிவை "மனையடி சாஸ்திரம்" என்றே கூறுவர். இன்றும் வீடுகள் பற்றிக் குறிப்பிடும் போது அது இன்ன லக்கினத்திற்குரிய மனை என்று குறிப்பிடும் மரபுண்டு. மேலாக மனைப்

பொருத்தம் என்கின்ற ஒரு விசேட அம்சமும் உண்டு. ஒவ்வொரு வருடங்களுக்குரிய சுபமுகூர்த்தங்கள் பற்றிய விபரங்களைத் தரும் போது பஞ்சாங்கங்கள் வீடு கட்டல், குடிபுகல் ஆகியவற்றை ஒரு தனி விடயமாகக் கொள்வதைக் காணலாம்.

இவ்விடத்தில் நிலம், காணி, வளவு என்ற சொற் பிரயோகங்களின் வேறுபாட்டையும் அறிந்திருத்தல் நல்லது. "நிலம்" என்பது எல்லா நிலத்தையும், குறிப்பாக அளக்கப்படாத நிலத்தைக் கருதும். "காணி" என்பது அளந்து வரையறுக்கப்பட்டு உடைமையாகவுள்ள நிலமாகும். காணம் என்பது நில அளவைக் கருவியின் பெயர். "வளவு" என்பது மனைகள் உள்ள காணியைக் குறிக்கும்.

தமிழ் மரபில் வீட்டுக்கான சொல் மனை என்பதேயாகும். 'Palace' எனப்படும் "மாளிகை" என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் "அரண்மனை" என்ற சொற்றொடருடன் "மனை" என்ற சொல் கொண்டுள்ள பொருட் கருத்து ரீதியான தொடர்பினை விளங்கிக் கொள்ளல் வேண்டும். "அரண்மனை" என்பது அரண் செய்யப்பட்ட மனையேயாகும். அந்த மனையின் முக்கியத்துவம் மனை பற்றிய குறிப்பிலும் பார்க்க அரண் செய்யப்பட்ட தன்மையையே விதந்து கூறுகிறது என்பதை மனங் கொள்ளல் வேண்டும். இதனால் பண்டைய அரசர்களின் வீடுகள் கூட, அடிப்படையில் மனைகளாகவே இருந்தன என்பது தெரிய வரும். இதனாலே தான் போலும் அரச இல்லங்களுக்கான அழிபாடுகள் நம்மிடத்து இன்றில்லை.

கல்வீட்டுப் பண்பாடு வருவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் வீடு கட்டும் மரபு எவ்வாறு அமைந்தது என்று நோக்குவோம். "வீடு" என்பது அந்நிலையில் தனியொரு கட்டுமானமாக இல்லாமல் ஒரு வளவுக்குள்ளிருந்த கட்டடத் தொகுதியாகவே பார்க்கப்படல் வேண்டும். வசதி படைத்த வெள்ளாள நிலையிற் குறைந்த பட்சம் அது,

வீடு

கூடம்

அடுக்களை / அடுப்படி

மாட்டுக் கொட்டில்

கிணறு

ஆகியனவற்றைக் கொண்டதொன்றாக இருக்கும்.

யாழ்ப்பாண மரபுப்படி ஒரு வீட்டுக்குட் "புகுதல்" என்பது கதவைத் திறந்து அந்த வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வைப்பதென்பதல்ல. அந்த

வீடு இருக்கும் வளவுக்குள்ளே செல்லுதலே வீட்டுக்குட் செல்லுதல் ஆகும். படலையைத் திறந்து உள்ளே சென்று விடுவதே வீட்டுக்குட் செல்வதாகும்.

ஆனால், யாழ்ப்பாணத்தின் சாதி நியமங்களின்படி துடக்கினை ஏற்படுத்துபவர்கள் எவரும் வீட்டிற்குள் அனுமதிக்கப்படுவதில்லை. "துடக்கு" என்பது பிதாவழி உறவினர் மரணம் காரணமாகவும், பெண்களைப் பொறுத்தவரையில் மாதவிடாய்க் காலம், "பெரிய" பெண்ணாகும் காலம் என்பவற்றிலும் ஏற்படுவதொன்றாகும். இந்தப் பொது நிலைத் துடக்கினைவிடச் சாதி நிலையாகவும் துடக்கு ஏற்படலாம். வெள்ளாள வளவுக்குள் கோவியர், வண்ணார் செல்வதில் துடக்கு இல்லை. மற்றையோர் சென்றால் துடக்கு உண்டு.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் மேநிலைப்படுத்தப்பட்ட குடிகளிடையே வீட்டு வளவுக்குள் நுழையும் படலையடியிலே "படலைக் கொட்டில்" என ஒரு கொட்டிலைப் போட்டு, அதற்கப்பால் தரமறிந்து உட்செல்ல விடப்படுதல் வழக்கமாகும். இதனாற் படலைக் கொட்டிலில் திண்ணை இருப்பது வழக்கம். இத்திண்ணை, வேலிக்கு வெளியேயும் உள்ளேயுமிருக்கும்.

வளவுக்குள் உள்ள பிரதான கட்டடம் வீடாகும். இந்த வீட்டினை தாய்மனை என்றும் சொல்வர். இது மனையடி சாஸ்திர நியமங்களுக்கேற்ப கட்டப்பட்டதாய் இயைபான திசையில் வாயிலைக் கொண்டிருக்கும். வீட்டுக்குள் சுவரில் விளக்கு வைப்பதற்கான மாடம் இருக்கும். முக்கிய பொருட்கள் பெட்டகங்களுள் வைக்கப்படும். பெட்டகங்கள் இல்லாத வீடுகளிற் கட்டுப் பெட்டிகள் இருக்கும். பெட்டகங்கள், கட்டுப் பெட்டிகள் என்பவற்றுக்குள்ளேயே துணிமணிகள், நகைகள் ஆகியன வைக்கப்படும். அலுமாரி, றங்குப் பெட்டி போன்றவை பிற்காலத்தனவே.

அண்மையில் விவாகமானவர்களைத் தவிர மற்றையோர் வீட்டுக்குட் படுப்பதில்லை. வீட்டோடு சேர்ந்து கூடம் இருக்கும். கூடத்திலேயே பொதுவான புழக்கம் நடைபெறும். சில வீடுகளில் கூடம் தனியொரு கட்டடமாகவிருக்கும். வீட்டு வாசலுக்கு இரு புறத்தேயும் திண்ணைகளிருப்பது பெருவழக்கு.

அடுக்களை ஒரு தனிக் கட்டடமாக இருக்கும். இதன் அமைப்பு மனையடி சாஸ்திரப்படி வீட்டுக்கு இயைந்ததாக இருத்தல் வேண்டும். அடுக்களையை அடுப்படி என்று சொல்லும் மரபும் உண்டு. அடுப்படிக்குள் அடுப்புக்கான இடம் களிமண்ணாற் செய்யப்பட்டிருக்கும். ஏறத்தாழ அடுப்புக்கு மேலே பரண் இருக்கும். அடுப்படிக்குள் தீய (தூய) சமையலுக்கான சட்டி, பானைகளே இருக்கும். மச்சச் சட்டி, இறைச்சிச் சட்டி அடுப்படிக்கு வெளியே தாழ்வாரத்தில் அல்லது அதற்கென உரிய

கொட்டிலில் இருக்கும். அம்மி, குழவி, ஆட்டுக்கல் என்பன பெரும்பாலும் அடுப்படி வெளித் திண்ணையிலேயே இருக்கும். உணவு உண்பது அடுக்களைக்குள் நடைபெறுவதில்லை. அடுக்களைத் திண்ணை-யிலிருந்தே பெரும்பாலும் உணவு உட்கொள்வது வழக்கம். நல்ல நாள் பெருநாளிற் கூடத்தில் வைத்து உண்பர்.

இவற்றைத் தவிர ஆடு, மாடுகளுக்கான கொட்டில் தனியே இருக்கும். கிணறு பெரும்பாலும் வீட்டுக்கு வடமேற்கு மூலையில் அல்லது தென்கிழக்கு மூலையில் இருக்கும்.

இவற்றைவிட வெள்ளாள வீடுகளில் மாடுகளுக்கான வைக்கோற் போரும் சில இடங்களில் வைக்கப்பட்டிருக்கும். பாரம்பரியமான வளவுக்குள் அதிக புழக்கமில்லாத ஒரு மூலையில் காளி, வைரவர் போன்ற தெய்வங்களுக்கான வழிபாட்டிடம் இருக்கும். இது பெரும்பாலும் மர வணக்கமாகவே இருக்கும். மரத்திற் காளி அல்லது வைரவர் இருப்பதாக ஐதீகம்.

மேற்கூறியது ஒரு சராசரி உயர்நிலைப்பட்ட விவசாய வளமுள்ள வெள்ளாளக் குடும்பத்தினது வீடு வளவாகும். ஆனால், கிராமத்தின் பெரும்பாலான வீடுகள் இத்துணை வசதிகளுடன் இருப்பதில்லை. மற்றையோரை பெரும்பாலும் இரண்டு நிலைப்படுத்தியே பார்க்கலாம்.

1. தாழ் நிலைச் சாதிகளாகக் கருதப்படாதவர்கள்.
   கரையார், தட்டார், தச்சர், கோவியர் போன்றோர்.

2. தாழ் நிலைச் சாதிகளாகக் கருதப்பட்டவர்கள்.

கிராம அமைப்பிற் பெரும்பாலும் ஒவ்வொரு சாதிக் குழுமங்களும் கிராமத்தின் ஒவ்வொரு பகுதியில் இருக்கும் (பகுதியினர் என்ற சொல் இரண்டு கருத்துக்களை உடையது).

(அ) ஒரு பெரும் சாதிக்குள் வரும் ஒரு வம்ச வழியினர் (Lineage).


(ஆ) கிராமத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் (Area) வாழ்பவர்கள்.

கால ஓட்டத்தில் "அ" பிரிவினர் பரந்து வாழத் தொடங்கினர். மிக அண்மைக் காலத்திலும் "ஆ" பிரிவினர் குழுமங்களாகவே வாழ்ந்தனர்.


"அ" பிரிவினரின் வீடுகள் வீடு, கூடம், அடுக்களை என்பவற்றைவிட வேலைக்கேற்ப பட்டறைக்கான கூடம் ஒன்றைக் கொண்டதாகவிருக்கும். பலர் இருந்து வேலை செய்வதற்கான இடமாக "மால்" எனும் கட்டட அமைப்பு விளங்கியது. "அ" நிலையிற் கூடங்களிலும் பார்க்க மால்களே அதிகம் இருந்தனவென்று கூறலாம். இந்நிலையிலும் அடுக்களை

தனியாகவே இருக்கும். எல்லா வீடுகளிலும் கிணறுகள் இருப்பதில்லை. ஒரு பொதுக் கிணறே இருக்கும். வசதியுள்ளவர்கள் தங்கள் வீடுகளில் கிணறு கிண்டியிருப்பர்.

"ஆ" நிலையினர் வீடு பெரும்பாலும் கொட்டில்களாகவே இருக்கும். மிக அண்மைக் காலம் வரை பெரும்பான்மையோர் சொந்த நிலமற்றவர்களாகவே இருந்தனர். அத்தகையோர் பெரும்பாலும் அப்பகுதி வெள்ளாளர்களுக்குரிய நிலத்தில் (காணியில்) கொட்டில்கள் அமைத்து வாழ்ந்தனர். கொட்டில்கள் அவரவர்கள் வசதிகளுக்கேற்ப சிறியதாகவும் பெரியதாகவும் இருக்கும். இந்த நிலையிலுங்கூட அடுப்படி தனியானதாகவே இருக்கும். ஆனால், மிகச் சிறியதாகவே இருக்கும். கொட்டில்கள் பெரும்பாலும் பின்வரும் அமைப்பிலிருந்தன:



முன்பக்க நோக்கு




பக்க நோக்கு

இதுவரை கூறிய சராசரி அமைப்புக்களை விட யாழ்ப்பாணத்தில் உயர் நிலைப்படுத்தப்பட்டோரின் இல்லங்களிற் சில, "நாற்சாரம் வீடு" என்கின்ற அமைப்பில் இருந்தன. நாற்சாரம் வீடு என்பதைப் பின்வரும் முறையிலே விளங்கிக் கொள்ள வேண்டும்:

> நான்கு புறத்திலும் சாரினைக் (தாழ்வாரம்) கொண்ட வீடாகும். Inner veranda, under sloping roof surrounding the inner courtyard of a house, தாழ்வாரம் எனத் தமிழ் லெக்ஸிகன் கருத்துத் தரும்.

(இதன் வகை மாதிரிக்கான ஒரு படம் இணைக்கப்பட்டுள்ளது)

யாழ்ப்பாணத்து நாற்சாரம் வீடும் ஒரு தலைமுறைக்கு மேல் கூட்டுக் குடும்ப வசிப்பிடமாக இருந்ததற்குச் சான்றுகள் இல்லை. யாழ்ப்பாணத்தில் இப்போதுள்ள நாற்சாரம் வீடு என்ற அமைப்புக்கள் கல் வீடுகளாகவே உள்ளன. இணைப்பில் தரப்பட்டுள்ள படத்துக்குரிய வீடு, அக்குடும்பத்தின் வரலாற்றை நோக்கும் போது, ஏறத்தாழ 19ம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் கட்டப்பட்டதாக இருக்க வேண்டும்.




கல்வீட்டுடன் வந்த நாற்சார வீட்டின் மாதிரி

(இந்த நாற்சாரம் வீடும் அமைப்புக்கும் கேரளத்திலுள்ள தரவாட் அமைப்புக்கும் உள்ள ஒற்றுமைகளை நோக்குதல் வேண்டும். கேரளத்தில் இது தாய்வழிச் சமூக அமைப்போடு சம்பந்தப்பட்டது. யாழ்ப்பாணத்து தேச வழமை ஒழுங்குகளுக்குள்ளும் கேரளத்து மருமக்கள் தாய முறைமைக்குமுள்ள ஒப்புமைகளையும் நோக்கல் வேண்டும்.)

மேனாட்டார் தொடர்புக்கு முன்னருள்ள வீடுகள் களிமண் சுவர்களைக் கொண்டனவாகவும், பெரும்பாலும் பனையோலையினால் வேயப்பட்டனவாகவும் இருந்தன எனக் கொள்ள இடமுண்டு. தென்னங் கிடுகும் வேய்வதற்குப் பயன்படும் ஒன்றாகும். நிலம் களி மண்ணாற் பதனப்படுத்தப்பட்டு எடுக்கப்படும் (அதற்கென ஒரு மரத்தாலான தட்டுக் கருவி இருந்தது). வீடுகள் சாணியினால் மெழுகப்படும். சுவர்கள் சிவந்த களிமண்ணால் மெழுகப்பட்டிருக்கும். நல்ல நாள் பெருநாளின் போதும் குடும்ப மங்கள வைபவங்களின் போதும் களி மண் மெழுகலுக்கு மேலே வெள்ளைச் சுண்ணாம்பு புள்ளி புள்ளிகளாக இடப்படும். வீட்டு வாசலில் இலட்சுமிகரத்துக்காக ஒரு சங்கு அதன் மேற்புறம் தெரியும் வகையில் புதைக்கப்பட்டிருக்கும். நியமமான யாழ்ப்பாண மரபில் மார்கழிக் காலம் தவிர மற்றைய காலங்களிற் கோலம் போடும் வழக்கம் இருந்ததாகச் சொல்ல முடியாது. இந்த அமைப்புக்களை விட வீடுகளிலும் பொது இடங்களிலும் விசேட வைபவங்களின் போது பந்தல் போடும் மரபும் இருந்தது. குறிப்பாக திருமண வைபவங்களின் போது பந்தல் கட்டுவது வழக்கம். பந்தல் பெரும்பாலும் தட்டையானதாகக் கிடுகால் வேயப் பட்டிருக்கும். மழைக் காலங்களில் முகடு வைத்து இரண்டு அகண்ட சாராக அமைப்பர்.

யாழ்ப்பாணத்திற் கல்லால் வீடு கட்டும் முறைமை ஒல்லாந்தர் காலத்திலேயே தொடங்கியது என்பர். இதனை ஒரு வரலாற்று உண்மையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்றும் பாரம்பரிய டச்சுப் பிரதேசம் ஒன்றின் வீட்டின் அமைப்பே யாழ்ப்பாணத்து வீடுகளின் அமைப்பிற் காணப்படுகின்றது. உயர்ந்த முகடும் தாழ்வாரத்தை நோக்கிச் சரிந்து செல்லும் சார்களை இரு பக்கங்களிற் கொண்டதாகவிருக்கும். சுவர்கள் யாழ்ப்பாணத்திற் கிடைக்கும் சுண்ணாம்புக் கல்லினாலும் சுண்ணாம்புக் கலவையாலும் கட்டப்படும். இக் கட்டடங்கள் ஓடுகளால் வேயப்பட்டிருக்கும். ஆரம்பத்தில் ஓடுகள் இந்தியாவிலிருந்தே கொண்டு வரப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஒல்லாந்தர் கேரளத்திலும் செல்வாக்கு உடையவர்களாக விளங்கினர். சீமெந்து எந்தக் காலத்தில் வந்ததென்பது தெரியவில்லை. இப்போதுள்ள பழைய நாற்சாரும் வீடுகள்

பலவற்றில் நிலத்திற்குச் சீமெந்து போடப்பட்டிருந்தாலும் சில இடங்களில் சில அறைகள் மெழுகிய தரைகளாகவே உள்ளன.

## கோயிற் கட்டடங்கள்

அடுத்து யாழ்ப்பாணக் கட்டட அமைப்பில் முக்கியம் பெறுவது கோயில்கள் ஆகும். யாழ்ப்பாணத்துக் கோயில்களின் கட்டட அமைப்புப் பற்றி மிக நுண்ணியமாக விரிவாக ஆராயப்பட வேண்டியது அவசியமாகும். இக் கட்டுரையின் தேவைகளுக்காகச் சமூகப் பாரம்பரிய, கண்ணோட்ட நிலை நின்று கோயில்களின் அமைப்புப் பற்றி மிகச் சுருக்கமாக நோக்குவோம்.

யாழ்ப்பாண இந்து மக்களிடையே வழிபாட்டிடங்கள் நான்கு நிலைப் பட்டனவாக உள்ளன என்பதைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளேன் (*Sri Lankan Tamil Society and Politics, Chennai - 1995).*

முதல் : வீட்டு வளவுக்குள் அல்லது அயலில் பெரும்பாலும் குளத்தங்கரை, பெரிய மரங்களுள்ள ஒரு வழிபாட்டிடம். இது காளி, வைரவர் அல்லது சாதிநலைத் தெய்வங்களாக இருத்தல் (உதாரணம்: விறுமர், பெரிய தம்பிரான், அண்ணமார் ஆகியன)

இரண்டாவது : கிராமத்துக்கான கோயில். இது பெரும்பாலும் பொங்கல்/ குளிர்த்தி மகோற்சவங்கள் உள்ள கோயிலாக இருக்கும். ஒரு கிராமத்துக்குச் சில வேளைகளில் இரண்டு மூன்று கோயில்கள் கூட இருக்கும். ஆனால், பெரும்பாலும் கிராமப் பெரும்பாகங்களுக்கு ஒவ்வொன்றாக இருக்கும்.

மூன்றாவது : அந்தப் பிரதேசத்தின் பெரிய கோயில்கள். உதாரணமாக வடமராட்சிக்கு வல்லிபுர ஆழ்வார், செல்வச் சந்நிதி.

நான்காவது : இதற்கு மேலாக யாழ்ப்பாணம் முழுவதற்கும் பொதுவான கோயில். உதாரணமாக மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி, நல்லூர் என்பன. அண்மைக் காலத்தில் தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயிலும் முக்கியம் பெற்றுள்ளது.

இதில் முதல்நிலையில் கற்கட்டடம் அவசியமில்லை. ஆனால், இப்போது பெரும்பாலான வட்டாரக் கோயில்கள் சிறு கற் கட்டடங்களாக உள்ளன. மற்றைய மூன்று நிலைகளிலும் கற் கட்டடங்களே காணப்படுகின்றன. ஆனால், இந்தக் கட்டடங்களிலும் ஒரு வளர்ச்சி

உள்ளதென்பதை மறந்துவிடக் கூடாது. 1930களில் வெளிவந்த ஈழகேசரி ஆண்டு மலர் ஒன்றில் யாழ்ப்பாணத்துப் பிரபல கோயில்களின் புகைப்படங்கள் உள்ளன. நல்லூர் உட்பட எல்லாக் கோயில்களின் முகப்புக்களிலும் ஒல்லாந்தக் கட்டட அமைப்பின் சாயல்கள் காணப்பட்டன (செல்வச் சந்நிதியில் இந்த முறைமை இன்னமும் காணப்படுகின்றது).

பெரும்பாலான கோயில்கள் இப்போது கோபுரங்களைக் கொண்டனவாக உள்ளன. யாழ்ப்பாணக் கோயில் அமைப்பின் பிரதான அம்சங்களில் ஒன்று கோயில் மணிக்கென தனிக் கோபுரம் இருப்பது தான். (தமிழகத்துக் கோயில் அமைப்பில் கோயில் மணி இவ்வாறு அமைக்கப்படுவதில்லை.) இதற்குக் காரணம் கிறிஸ்தவத் தேவாலயங்களிற் கோயில் மணிக்கென ஒரு தனிக் கட்டடம் இருப்பதாலாகும். அந்த மரபு கல்லாற் கோயில் கட்டத் தொடங்கியதும் உள்வாங்கப்பட்டிருக்கலாம்.

யாழ்ப்பாணக் கோயில்களின் மூலஸ்தானக் கட்டடங்கள் பெரும்பாலும் சுண்ணாம்புப் பொழி கல்லாலே கட்டப்பட்டிருந்தது. ஆனால் அக்கட்டடம் கருங்கல்லாலே கட்டப்பட வேண்டும் என்பது ஒரு நியமம் ஆகும். இப்போது பெரும்பாலான கோயில்களில் மூலஸ்தானம் கருங்கல்லிலேயே கட்டப்படுகிறது. இப்போது கட்டப்படும் கோயில்கள் திராவிட சிற்ப முறையை அடியொற்றிக் கட்டப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவத் தேவாலயங்களின் கட்டட அமைப்பு முக்கியமானது. போர்த்துக்கேயர் காலத்திலேயே கிறிஸ்தவத் தேவாலயங்கள் கல்லால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். பெரும்பாலான யாழ்ப்பாணத்து தேவாலயங்கள் மேற்கத்தேய தேவாலய அமைப்பினைக் கொண்டிருக்கின்றன. எனினும், அண்மைக் காலத்திற் கட்டட அமைப்பில் மாறுதல்கள் காணப்படுகின்றன. திராவிடக் கட்டட அமைப்பிற்கு அண்மித்ததான வகையிற் சில தேவாலயங்கள் கட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இருந்த தேவாலயம் ஆசியா முழுவதிலும் இருந்த டச்சுக் கட்டட அமைப்புக் கோயில்களில் மிகச் சிறந்த ஒன்றெனக் கருதப்பட்டது (இது இப்போது குண்டு வீச்சினால் அழிந்து விட்டது).

## பொதுநிலைக் கட்டடங்கள்

யாழ்ப்பாணத்திற் பொதுநிலைக் கட்டடங்களாக உள்ளவை பாடசாலைகள், நீதி மன்றங்கள், அரச அலுவலகங்கள், நூலகம், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள் ஆகியனவற்றுக்கான கட்டடங்கள் ஆகும். இவற்றிலும் ஏறத்தாழ 1950, 60 வரையும் ஒரு பொதுப் பாணியினைக்

காணலாம். யாழ்ப்பாணப் பொதுநிலைக் கட்டடங்களுள் மிக அழகானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்தது யாழ். நகரசபை மண்டபம் ஆகும் (இப்போது அழிந்து போயுள்ளது). விக்டோறிய கட்டட அமைப்பின் பல அம்சங்கள் அதிலே காணப்பட்டன. யாழ்ப்பாணத்துக் கச்சேரிக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. குறிப்பாக அரசாங்க அதிபரின் இல்லமாகவுள்ள கட்டடத்தின் அமைப்பு அக்காலத்து ஆங்கில காலனித்துவ மரபை அடியொற்றியதாகும். யாழ்ப்பாணத்தின் பொதுக் கட்டட அமைப்பிற்குள் மிகப் பிரசித்தி பெற்றவையாக இருந்தவை யாழ். நகர மண்டபம், யாழ் நூலகம், யாழ் புகையிரத நிலையம் ஆகியனவாகும்.

## தனியார் வீடுகள்

பண்பாட்டு மாற்றங்களும் பிற நாகரிக வருகைகளும் வாழ்நிலை மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது ஓர் அடிப்படையான மானுடவியல் உண்மையாகும். இந்த உண்மையைக் கடந்த 50 வருட காலத்து யாழ்ப்பாணத்துத் தனியார் வீடுகளும் பொது நிலைக் கட்டடங்களும் காட்டுகின்றன. இவை யாவற்றிலுமூடே யாழ்ப்பாணத்துக்கென ஒரு தனிக் "கட்டட" அமைப்புப் பாரம்பரியம் உள்ளதா என்பது பற்றி நோக்கும் போது அது பருவப் பெயர்ச்சிக் காற்று, மழை உள்ள பிரதேசங்களிற் காணப்படும் பொதுவான அமைப்புக்குட்பட்டதாகவும் இப்பகுதியின் சமூக படிநிலை விகசிப்புக்களைச் சித்தரிப்பனவாகவும் அமைந்துள்ளது எனலாம். உண்மையில் வாசல் அமைப்புக்கும் பருவப்பெயர்ச்சிக் காற்று மழைக்கும் தொடர்பு உண்டு. அவ்வாறு ஆரம்பித்தது பின்னர் சாஸ்திரியமயப் படுத்தப்பட்டிருக்கலாம்.

ஏற்கனவே கூறிய தாய்மனை, கூடம், மால், அடுக்களை என்ற அமைப்பு நவீனமயவாக்கத்துடன் சிறிய மாற்றங்களைப் பெற்றது எனலாம். கல்லால் வீடுகள் கட்டப்பட்ட பொழுது ஒல்லாந்தமைப்பில் முக்கிய இடம் பெறும் விறாந்தை (verandah) முக்கிய இடம் பெற்றது. வீட்டின் முகப்பு வாசல் அறையை தலைவாசல் அறை எனவும், முக்கிய பொருள் வைத்திருக்கும் அறையை தாய் அறை எனக் கொள்ளும் மரபும் வந்தது. அத்துடன் தாய் அறைக்குள் சுவாமி படம் வைத்து கும்பிடும் மரபும் தொடங்கியிருத்தல் வேண்டும்.

கல்வீடு கட்டி குடிபுகும் போது இன்றும் கூட தாய் அறைக்குள் சுவாமி படங்களை வீட்டுக்காரர் கொண்டு செல்வது மரபாகவுள்ளது. சிறிய வீடுகளில் தாய் அறையே படுக்கைக்கும் பயன்படுத்தப்பட்டது. எனினும், பொதுவாக அத்தகைய அறைகளுக்குள் மாப்பிள்ளை பொம்பிளை தவிர

எவரும் படுப்பதில்லை. படிப்படியாக படுக்கை அறைகள் தனியே கட்டப்படலாயின. நவீன மயவாக்கத்தின் ஒரு வெளிப்பாடாக வளவின் புற மூலையில் "கக்கூஸ்" கட்டப்படும் வழக்கமும் ஆரம்பித்தது.

இத்தகைய கல்வீடு கட்டல் முறைமையில் சீமெந்துக் கல்லின் வருகை பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. சீமெந்துக் கற்களை முதல் அரிந்து வைத்துவிட்டு பின்னர் அத்திவாரத்தின் மேல் வேண்டிய முறையில் கட்டிச் செல்வர்.

முதலில் கட்டப்பட்ட கல்வீடுகள் பெரும்பாலும் இத்தகையனவாக அமைய ஏறத்தாழ இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் கட்டப்பட்ட அமைப்பு முறையில் அமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டன. 1950களில் புதிய பசன் வீடுகள், அமெரிக்க பசன் வீடுகள் வரத் தலைப்பட்டன. இவற்றினுடைய முக்கிய அம்சம் ஒரு அமைப்புக்குள்ளேயே குளியலறை, கழிப்பறை, குசினி (அடுக்களை) ஆகியன அத்தொகுதியினுள் வந்துவிடும். குசினி அறையில் ஒரு புகைபோக்கி இருக்கும். இருப்பினும் மனையடி சாஸ்திர முறைப்படியே அந்த அந்த அறைகள் அந்த அந்த இடத்தில் கட்டப் பெற்றன.

யாழ்ப்பாண சாதி அமைப்பில் பிராமணியக் கட்டுப்பாடுகள் இல்லாததினால் வாய்ப்பு வசதியுள்ள குழுமங்கள் மேல்நிலையைக் கோருவதைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அத்தகைய பணக்கார தாழ் நிலையல்லா குடும்பங்களும் பெரிய வீட்டை கட்டிக் கொண்டிருந்தன. நகரமயவாக்கம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட போது சாதி வேறுபாடின்றி எல்லாச் சாதியினரும் தங்கள் தங்கள் நிலைமைகளுக்கேற்ப கல்வீடுகள் அமைக்கத் தொடங்கினர். இப்பண்பு பின்னர் நகரமயவாக்கம் பரவப் பரவ மற்றைய இடங்களுக்கும் சென்றன. இவை கட்டப் பெற்ற முறைமை பற்றிய ஆய்வில் அடிநிலை மக்களின் மனை அமைப்புக்கள் பற்றிய தகவல்கள் எம்மிடத்தில் இல்லை. இவ்விடயம் விரிவாக ஆராயப்பட வேண்டியதாகும்.

மண் வீடுகளாகக் கட்டப் பெற்றவற்றுள்ளும் பல்வகை வேறுபாடுகளுள்ளன. அவற்றைப் பற்றிய பதிவுகளும் நம்மிடமில்லை.

நம்முடைய புனைகதை இலக்கியங்களும் கூட அடிநிலை மக்களின் வாழ்க்கை நிலையைக் காட்டுகின்ற போதுமான விபரிப்புகள் இல்லை என்றே கூற வேண்டும்.

எனினும், கே. வி. நடராசனின் "யாழ்ப்பாணத்துச் சிறுகதைகள்" எனும் தொகுதியில் வரும் "கமனியா வளவு" எனும் வாழ்விடம் பற்றிய விபரிப்பு வறுமைப்பட்ட தாழ்நிலைமக்களின் மனை அமைப்புப் பற்றிய ஒரு மனப்பாடத்தினைத் தருகின்றது.

கணேசலிங்கத்தின் சடங்கு நாவலில் உரும்பிராயைச் சேர்ந்த ஒரு சராசரி வெள்ளாளக் குடும்பத்தின் வீட்டு மனப்பதிவு வருகின்றது.

1984 முதல் நடந்து வந்துள்ள யுத்தம் நமது பாரம்பரிய பேறுகள் பலவற்றை அழித்துவிட்டது. எனினும் இந்த அழிவுகளினூடே புதிய ஆக்கத்துக்கான உத்வேகம் கிளம்பும். *

---

* இக்கட்டுரையில் இணைக்கப்பட்டிருக்கும் நாற்சாரம் வீடும் உதாரணத்துக்கான தள அமைப்பை வரைந்து உதவியவர் திருமதி தனலட்சுமி சுப்பிரமணியம் ஆவார். இவ்வீடு அவர் பாட்டனார் திரு. சரவணமுத்து உடையாரின் வீடாகும். இவ்வீடு இளவாலை சிறுவிளானில் இருந்தது. இக்கட்டுரையின் பிரதியாக்கத்திற்கு உதவி செய்து அதன் பொருளமைதிக்கு உதவிய செல்வி வே. மாகிறித்தாவுக்கும் எனது நன்றி உரித்து. இக்கட்டுரை வழக்கம் போல் (அவசர அவசரமாக) எழுதி முடிக்கப்பட்ட பொழுது, இதன் போதாமையே மிகத் துல்லியமாகத் தெரிகிறது. ஆயினும், இந்தப் "போதாமை" இது பற்றி மேலும் ஆராய மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் தூண்டும் என்பது எனது நம்பிக்கை. இதுவே இக்குறை வேலைக்குக் கிடைக்கக் கூடிய நிறைபரிசு.

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
22 - 36

# நிறுவனக் கோட்பாடுகளும் சந்தைப்படுத்தல் ஆய்வுகளும் - அவை மத்தியிலான கருதுகோள் ரீதியான தொடர்பு

க. ரகுராகவன் * ஐ. ரகுராகவன் **

"நிறுவனக் கோட்பாடு" எனப் பாரம்பரியமாக அழைக்கப்படும் ஒரு துறை கடந்த ஒரு தசாப்தமாகப் பொருளியல், முகாமைத்துவ ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. நிறுவனக் கோட்பாட்டின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய நுண்ணிலைப் பொருளியல் அணுகுமுறைகள் செம்மையற்றதொரு வகையில் ஆளுகை மற்றும் இயலுமை/தகமைக் கண்ணோட்டங்களிற் பொதுவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மறுபுறம் தந்திரோபாய மற்றும் நிறுவன வல்லுனர்கள் பல்துறைசார் அறிவு (வளங்கள், இயலுமை, தகமைகள்) தொடர்பிலான அணுகுமுறையின் அடிப்படையில், நிலைத்திருத்தல் மற்றும் சமூகச் சூழ்நிலைகளில் நிறுவனங்களின் பொது என்ற அம்சத்துடன் தொடர்புபடுத்தி தமது கோட்பாடுகளை அபிவிருத்தி செய்தனர்.

* சிரேஷ்ட விரிவுரையாளர், முகாமைத்துவத்துறை, வர்த்தக முகாமைத்துவப் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

** சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற் துறை, வர்த்தக முகாமைத்துவப் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

நவீன நிறுவனத் துறையில், பொருளியல் ஆய்வாளரின் கவனமானது முதலாளித்துவச் சந்தை முறைமையின் பிரதான அமைப்பான நிறுவனங்களின் நிலைத்திருத்தல், எல்லைகள், மற்றும் அவற்றின் உள்ளக அமைப்புப் பற்றியதாகக் காணப்படுகின்றது (Foss, 1999a). நிறுவனக் கோட்பாடுகளின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய நுண்ணிலைப் பொருளியல் அணுகுமுறைகள், பெரும்பாலும் ஆளுகை மற்றும் இயலுமை / தகமை என்ற அடிப்படையிலேயே வகைப் படுத்தப்பட்டன (Williamson, 1999). எனினும் தந்திரோபாய மற்றும் நிறுவன வல்லுனர்கள், பல்துறை சார் அறிவு (வளங்கள், இயலுமை, தகமைகள்) தொடர்பிலான அணுகுமுறையின் அடிப்படையில் நிலைத்திருத்தல் மற்றும் சமூகச் சூழ்நிலைகளுக்குள் நிறுவனங்களின் முக்கியத்துவத்தினை நடுநாயகமாகக் கொண்டு தமது கோட்பாடுகளை அபிவிருத்தி செய்தனர். இது, பகுதியளவில் இயலுமை - மையப் படுத்தப்பட்ட பொருளியலாளரின் எண்ணக் கருவைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றது (Foss, 1999b). பொருளியல் விஞ்ஞானமானது, தந்திரோபாயம், நிறுவனக் கற்கைகள், நிறுவனக் கோட்பாடுகள் என்பவை தொடர்பாக மாறுபட்டதும், முரண்பட்டதுமான பல கருத்துக்களைத் தோற்றுவித்துள்ளன. இக் கட்டுரை நிறுவனக் கோட்பாட்டினை ஆளுமை மற்றும் அறிவு அடிப்படையிலான கண்ணோட்டத்தில், மேலெழுந்தவாரியாக வகைப்படுத்தி ஆய்வுக் குட்படுத்தியுள்ளது.

தற்காலச் சந்தைப்படுத்தல் ஆய்வுகளில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய செல்வாக்குமிக்க மூன்று அணுகுமுறைகள் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன சந்தை நோக்கிய கண்ணோட்டம், தகமை அடிப்படையிலான கண்ணோட்டம், உறவுமுறைச் சந்தைப் படுத்தல்/வலைப்பின்னற் கண்ணோட்டம் என்பனவாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய கருதுகோள் ரீதியாக. நிறுவனக் கோட்பாட்டிற்கான மாற்றுக் கோட்பாடுகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது. அதாவது, நிறுவனக் கோட்பாடுகள், அவற்றின் கருதுகோள் ரீதியான உலகளாவிய கண்ணோட்டத்தினூடாக எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது. வேறுபட்ட ஆய்வுச் சூழ்நிலைகளில் வாதங்கள் மீதான சிறப்பியல்புகள் நிறுவனக் கோட்பாடுகளின் கருதுகோள் ரீதியான வரையறைகளுடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. பொதுவாக, நிறுவனக்

கோட்பாடுகளின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய சில தனித்துவமான எண்ணக் கருக்களைச் சந்தைப்படுத்தல் ஆய்வுக் கண்ணோட்டமானது உள்ளடக்கியதாகக் கருதப்படுகின்றது (Stoelhorst and Van Raaij 1999). இவ்வகையில், இக்கட்டுரையின் நோக்கமானது, மாறுபட்ட நிறுவனக் கோட்பாடுகளுக்கும் சந்தைப்படுத்தல் ஆய்வுக்கு மிடையிலான கருதுகோள் ரீதியான தொடர்பினைப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது:

1. பொருளியல், தந்திரோபாய, மற்றும் நிறுவன ஆய்வுகளி னடிப்படையில் "நிறுவனக் கோட்பாடுகளின்" முக்கியத்துவமானது, நிறுவன நிலைத்திருத்தல், எல்லைகள், மற்றும் உள்ளக அமைப்பு தொடர்பில் எவ்வாறு மதிப்பாய்வு செய்யப்பட முடியும்?

2. தற்காலச் சந்தைப்படுத்தல் ஆய்வில், பயன்பாட்டிலுள்ள அணுகுமுறைகளின் கருதுகோள் ரீதியான ஆதரவினை எவ்வகைப்பட்ட நிறுவனக் கோட்பாடுகள் அதாவது, சந்தை நோக்கிய, தகமை அடிப்படையிலான மற்றும் உறவு முறைச் சந்தைப்படுத்தல் / வலைப்பின்னற் கண்ணோட்டங்கள் - அளிக்கின்றன என்பதை ஒருவர் எவ்வாறு உணர்ந்து கொள்ள முடியும்?

3. சந்தைப்படுத்தல் அணுகுமுறைகள் கட்புலனாகா உட்கூறுகளின் ஒன்றிணைப்பு மாதிரிகளைப் பயன்படுத்துவதைத் தவிர - அதாவது, சந்தைப்படுத்தலானது குறித்த துறைசார் பிரயோகங்களினூடாக அல்லது தனித்துவமான வகையில் - ஒரு பொதுவான மட்டத்திற் பங்களிப்புச் செய்யக் கூடிய சாத்தியமான நிறுவனக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளனவா?

## பொருளியல், தந்திரோபாய, நிறுவனக் கற்கைகளில் நிறுவனக் கோட்பாடுகள் பற்றிய அண்மைக் காலக் கருத்துக்கள்

நிறுவன ஆளுகைக் கோட்பாடானது, மாற்றீட்டுச் செலவுப் பொருளியல் (Transaction Cost Economics), முதல்வர்/முகவர்க் கோட்பாடு (Principal/Agent theory), அளவீட்டுச் செலவு (Measurement Cost), தகவற் பொருளியல் (Economics of information) மற்றும் நிறைவில் ஒப்பந்த அணுகுமுறைகள் (Incomplete contract approaches) போன்றவற்றை உள்ளடக்குகின்றது (Foss, 1999b). மேலும், நிறுவனம் பற்றிய

பொருளியலானது, தகவற் பொருளியலினாலும் நிச்சயமற்ற தன்மையும் சொத்துரிமையும். விளையாட்டுக் கோட்பாடினதும் (Game theory) கணித மாதிரிகளினதும் பிரயோகம் என்பவற்றிலான அண்மைக்கால முன்னேற்றங்களினாலும் தீவிரம் அடைந்துள்ளதாக பொஃஸ் வாதிக்கின்றார். இக் கோட்பாடுகள் கருதுகோள் ரீதியாக வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும், அவை ஒரே மாதிரியான அணுகுமுறையைத் தமக்கிடையே பகிர்ந்து கொண்டுள்ளன. உதாரணமாகச் சொத்துரிமைக் கண்ணோட்டமானது, சொத்துரிமை குறித்தொதுக்குதல். பரிமாற்றுதல், அமுல்படுத்துதல் போன்றவற்றிலான வேறுபட்ட செலவுகளைக் கவனத்திற் கொள்கின்றது. ஒரு நிறுவனத்தின் அடிப்படைத் தொழிற்பாடானது ஒன்றுடனொன்று தொடர்புடையதும் சிக்கல் தன்மை வாய்ந்ததுமான முறைசார், முறைசாரா ஒப்பந்தங்களி-னூடாக மாறுபட்ட தேவையுடையோரின் பிரச்சினை களுக்கான ஒரு சிறந்த தீர்வாக - அதாவது, பலதரப்பட்ட தேவையுடையோர் மத்தியில் இடம்பெறும் பல்வேறுபட்ட தூண்டுதற் பிரச்சினைகளை முறைசார் மற்றும் முறைசாரா ஒப்பந்தங்களின் சிக்கல் தன்மை மிக்க பங்களிப்பினூடாகச் சிறப்பாகத் தீர்த்தல் என இனம் காணப்பட்டுள்ளது (Alchian and Demsetz, 1972). இதற்கேற்ப நிறுவனங்களின் எல்லைகளானவை வினைத் திறன் அடிப்படையில் இந்த ஒப்பந்தங்களைக் கருத்திற் கொண்டு வரையறுக்கப்-படுகின்றது. நிறுவனங்களின் பொருளாதார ரீதியான வினைத்திறன் எல்லைகள் ஒப்பீட்டு ரீதியிலான சந்தைக் கொடுக்கல் வாங்கல்களால் நிர்ணயிக்கப்படுவதாகக் குறிக்கப்படுகின்றது. அதாவது, நிறுவன மொன்றின் குறிப்பிட்ட உற்பத்திச் செயற்பாடுகள் தம்மளவிலான ஒழுங்குபடுத்தலைவிட இன்னொரு நிறுவனத்தின் வினைத்திறனான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான ஒப்பீட்டுச் செலவுகளின் மீது தங்கியுள்ளதாகவும், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அந்நிறுவனத்தின் போட்டிச் சூழலின் சமநிலை அளவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் கருதப்படுகின்றது (Foss, 1999a).

ஆளுகைக் கோட்பாடுகளிற் பரந்த அளவில் அறியப்பட்டதொரு கண்ணோட்டமாகப் பொருளியல் மாற்றீட்டுச் செலவு சிக்கனமாக்கல் தத்துவம் கருதப்படுகின்றது (Williamson, 1999). மாற்றீட்டுச் செலவுப் பகுப்பாய்வின் அடிப்படை நோக்கம், தூய சந்தைப் பரிமாற்றத்தில் நிறுவனத்தின் கட்டமைப்புப் படிமுறைக்குட்பட்ட வகையில் மாறுபட்ட பரிமாற்றச் சூழ்நிலைகளில் அருமையான வளங்களை எவ்வாறு அதிக வினைத்திறனுள்ள முறையில் பயன்படுத்த முடியும் என்பதைத் தீர்மானிப்பதாகும். அனைத்துப் பரிமாற்றச் சூழ்நிலைகளும் நிச்சயமற்ற

தன்மை, வரையறுக்கப்பட்ட பகுத்தறிவு, சமயோசிதவாதம் என்பவற்றுடன் தொடர்புறுவதனால் நிறுவன உள்ளக ஒழுங்கமைப்பில் உற்பத்திச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், பேரம் பேசுதல், நடைமுறைப்படுத்துதல், உடன்படிக்கைகளைத் தமதாக்கிக் கொள்ளுதல் போன்றவற்றில் மிகவும் காத்திரமாகச் செயற்பட வேண்டும். பரிமாற்று ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக மொத்த உற்பத்தி பரிமாற்றச் செயற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதே இங்கு இலக்காகக் கருதப்படுகின்றது. குறிப்பாக, எந்தவொரு போட்டிச் சூழலும் பரிமாற்றச் செயற்பாடுகள், மாற்றீட்டுச் செலவுச் சிக்கனமாக்கல் தத்துவங்களால் ஒழுங்கமைக்கப்பட்டே ஆக வேண்டுமாயினும், தற்கால நிறுவன ஆய்வுகளில் ஆதிக்கம் செலுத்துகின்ற சமூகவியல், மானிடவியல் அணுகுமுறைகளின் அடிப்படையிலான நிறுவன முறைமை பற்றிய விளக்கமானது இவ்வடிப்படை எடுகோளுடன் பாரியளவில் முரண்பட்டுச் செல்கின்றது (Selznick,1996).

மாற்றீட்டுச் செலவுப் பகுப்பாய்வானது, சில உள்ளார்ந்த ஆளுகை முறைமைகளினதும் வினைத்திறன்சார் உள்ளார்ந்த நிறுவன வடிவமைப்பு முறைமைகளினதும் பதிலீடுகளாகச் சந்தைகளை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, வில்லியம்சன் (Williamson 1970) நிலைக்குத்து ரீதியானதும், தொழில்நுட்ப ரீதியாகப் பிரிபடக் கூடியதுமான உற்பத்திப் படிமுறைகளுக்கிடையிலான பரிமாற்றங்களை ஒழுங்கமைப்பதில் சந்தைத் தோல்வி நோக்கிய ஒரு விளக்கத்தை முன்வைத்தார். மேலும், கூட்டாண்மை வளர்ச்சி மற்றும் பல்வகைப்படுத்தற் சூழ்நிலைகளில், முன்பு மிகவும் ஆதிக்கம் செலுத்திய U வடிவிலான மையப்படுத்தப்பட்ட நிறுவனக் கட்டமைப்புக்குப் பதிலாக M வடிவிலான (பரவலாக்கப்பட்ட) நிறுவனக் கட்டமைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் வினைத்திறன் வாய்ந்தது என்பதுடன் ஓர் அத்தியாவசிய தேவை என்பதையும் பொஃஸ் (Foss, 1999a) வலியுறுத்தினார்.

மறுபுறம், பொருளியல் சார்புடைய இயலுமை / போட்டித் தன்மைக் கண்ணோட்டமானது, நிறுவன பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டினையும் செல்வாக்கு மிக்க மார்ஷலிற்குப் பிற்பட்ட பொருளியல் அணுகு முறையினையும் உள்ளடக்கியுள்ளது (Foss, 1999). இக்கோட்பாடுகளில் வரையறுக்கப்பட்ட அறிவின் வினைத்திறனான பயன்பாடு, எதிர்பாராத மாற்றங்களுக்கு இசைவடைதல் போன்றன கருதுகோள் ரீதியாக மைப்படுத்தப்பட்டுள்ளன. 1970, 1980களில் தோற்றம் பெற்ற இவ்

வணுகுமுறைகள் நிறுவனங்களின் சீரான சமநிலைச் சார்புடைய ஆளுகைக் கோட்பாடுகள் பற்றிக் கடுமையாக விமர்சிப்பனவாக இருந்தன. இவை ஒரு குறிப்பிட்ட அரசு தொடர்பான உத்தமப்படுத்தல் இயல்புகளைக் கருத்திற் கொள்வதிலிருந்து விலகி நிறுவனங்களில் இடம்பெறும் மாற்றங்களுக்கேற்ப இணைவதற்கும், பரவலாக்கப்பட்ட அறிவினைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவான தாபனங்கள் மீது அதிகளவு கவனத்தைச் செலுத்தின (Foss, 1999a). இதே போன்ற அறிவை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகள் 1970க்கு பிற்பட்ட தந்திரோபாய மற்றும் நிறுவன ஆய்வுகளில் தோற்றம் பெற்றிருந்தன. மிக முக்கியமாக, நிறுவனத்தின் வளத்தை அடிப்படையாகக் கொண்ட அல்லது வளத்தில் தங்கியிருத்தற் கண்ணோட்டம் (Wernerfelt, 1984; Dierickx and Cool, 1989), இயங்கியல் இயலுமைக் கண்ணோட்டம் (Nelson, 1991; Teece, Pisano, and Shuen, 1997), அறிவை ஆதாரமாகக் கொண்ட நிறுவனக் கோட்பாடுகள் (Kogut and Zander, 1992; Nonaka and Takeuchi, 1995), மூலதாரத் தகமைகள் / தகமை அடிப்படையிலான போட்டிக் கோட்பாட்டு அணுகுமுறைகள் (Prahalad and Hamel, 1990; Sanchez and Heene, 1997) போன்ற இவ்வாய்வுகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அறிவை மையப்படுத்திய வல்லுனர்கள், நிறுவனமொன்றின் பொருளியற் செயற்பாட்டை அவற்றின் செயற்திறன் மிக்க அறிவு, மற்றும் செயற்பாடுகளின் அலட்சியத் தன்மை என்பவற்றின் அடிப்படையிற் பிரதானமாக விமர்சித்தனர். நிறுவனங்கள், வெறுமனே ஊக்கப்படுத்தல் மற்றும் முரண்பாடுகளை ஒழுங்குபடுத்தும் அமைப்புகளாக நோக்கப்பட்டதேயொழிய, அவை அறிவை விருத்தி செய்யும் பயன்படுத்தும் அமைப்புகள் என்ற சிறந்த சிந்தனையின் அடிப்படையில் நோக்கப்படவில்லை (Nonaka and Takeuchi, 1995). சந்தையினால் தோற்றுவிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் அறிவைவிட நிறுவனங்களில் மறைந்திருக்கும் அறிவு மிகவும் வினைத்திறன் மிக்கதாகக் காணப்படுவதால் அவை நிலைத்திருக்கின்றன எனவும், ஒரு நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் வளச் சேவைகளை மீண்டும் மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்குத் (ஏறத்தாழச் சிறப்புத் தேர்ச்சியடைந்த) தேவையான அறிவை உருவாக்கிக் கொடுப்பதே நிறுவனங்களின் திறமை எனவும் பொதுவாக நோக்கப்படுகின்றது. இயலளவு (தகமைகள், சிறப்பான இயலுமைகள், உயர்மட்ட ஒழுங்கமைத்தல் தத்துவங்கள் போன்றவை) பொதுவாக, ஒரு நிறுவனத்தின் நாளாந்த வியாபாரக் கருமங்களில் ஈடுபடுவதற்கும்,

ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், நிறுவனம் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும் அவசியமானவற்றைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்றது. இவ்வாறாக, நிறுவனங்களின் எல்லைகள், அறிவை அடிப்படையாகக் கொண்ட காரணிகளைக் கருத்திற் கொள்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றதேயொழியச் சாதாரணமாக, ஊக்கப்படுத்தல் முரண்பாடுகளைத் தீர்மானிப்பதுடன் சம்பந்தப்பட்ட உறவுமுறைத் தொடர்புகளால் நிர்ணயிக்கப்படுவதில்லை. நிறுவனங்களினது உள்ளக அமைப்பினை (உதாரணமாக, நிறுவனக் கலாச்சாரம்), உள்ளார்ந்த அறிவை இணைப்பதன் மூலமும் பயன்படுத்துவதன் மூலமும் (Alvesson and Berg, 1992), மூலாதார தகைமைகளைக் கட்டியெழுப்பிப் பயன் பெறுவதன் மூலமும் (Sanchez and Heene, 1997) பகிரப்படத்தக்க சூழ்நிலை யொன்றை உருவாக்கலாம் என்ற விளக்கத்தையும் இது வலியுறுத்துகின்றது.

ஆளுகை மற்றும் இயலுமைக் கண்ணோட்டங்களுக்கிடையிலான கருதுகோள் ரீதியான வேறுபாட்டினை நோக்கும் போது முன்னையது பரிமாற்றம், மாற்றீட்டுச் செலவு போன்றவற்றை வலியுறுத்தப் பின்னையது உற்பத்தி மற்றும் செயற்பாட்டுப் பெறுமதியை மையப்படுத்துகின்றது (Foss, 1999a). எனினும், நெல்சன் (Nelson, 1991) வலியுறுத்தியவாறு செயற்பாட்டு அறிவு, பரிமாற்ற அறிவு ஆகிய இரண்டும் நடைமுறையில் மிகவும் இறுக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளமையால் உற்பத்தி, பரிமாற்றம் என்ற இரண்டையும் பிரித்துப் பார்ப்பது செயற்கையான தொன்றாகக் கருதப்படுகின்றது. அண்மைக் காலத்தில் நிறுவனம் பற்றிய பொருளியற் கண்ணோட்டமும் அறிவை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையும் இணைக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப் பட்டது (Williamson, 1999; Foss, 1999b). இவ்விரு கண்ணோட்டங்களும் விருத்தி செய்யப்பட வேண்டியதொரு பொருளாதார நிறுவனத்திற்கான பேரம்பேசல் அணுகுமுறையாகக் காணப்படலாம் என பொஃஸ் (Foss, 1999b) குறிப்பிட்டார். "புதிய பொருளாதாரம்" அல்லது "வலைப்பின்னற் சமூகம்" என்ற வகையில் தீவிரம் அடைந்து வரும் பெயரளவிலான நிறுவனங்கள் (Castells, 1996) பற்றிய எண்ணக்கரு போட்டித்தன்மையை அதிகளவிற் பெற்றுக் கொள்வதற்கும் அதிலிருந்து மிகவும் இலகுவாகக் கைத்தொழிற் பிரதேசங்கள் வலைப்பின்னல்கள் மற்றும் கைத்தொழில் மட்டங்களில் உயர்மட்ட இயலுமைகளைப் பெற முடிவதைப் பற்றி பூரணமாக விளங்கிக் கொள்வதற்குமான ஒரு நிகழ்தன்மை வாய்ந்த வழியாக அபிவிருத்தி செய்யப்பட முடியுமெனவும் கருதப்படுகின்றது (Foss, 1999b).

## சந்தைப்படுத்தல் ஆய்வும் நிறுவனக் கோட்பாடுகளும் – கட்புலனாகா உட்கூறுகளின் பயன்பாடு

1990களில் "சந்தை நோக்கு" பற்றிய கண்ணோட்டமானது, நிறுவனச் செயற்றிறன் மீதான, சந்தை/வாடிக்கையாளர் நோக்குடைய கூட்டாண்மைக் கலாசாரத்தின் விளைவை விளங்கிக் கொள்வதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு தீவிரமடைந்தன (Kohli and Jaworski, 1990; Narver and Slater, 1990; Slater and Narver, 1994a). சந்தை நோக்குடைய செயற்பாடானது ஒரு நிறுவனம் தனது வாடிக்கை யாளர்களுக்கு உயர் பெறுமதி வாய்ந்த சேவையை வழங்குவதைக் குறிப்பிடுகின்றது. இது தொடர்ச்சியாகத் தகவல்களைச் சேகரித்தல், வாடிக்கையாளர் தேவைகளை ஒன்றிணைத்தல், போட்டியாளர்களின் இயலுமைகள், மற்றும் ஏனைய முக்கிய சந்தை முகவர்களின் ஏற்பாடுகள் மீதான நிறுவன ரீதியான ஈடுபாட்டிற்கான தேவைப்பாட்டை வேண்டி நிற்றல் என்பவற்றைக் கொண்டிருக்கும் (Slater and Narver, 1999b). இச்செயற்பாட்டின் மூலம் நிறுவன ரீதியாக ஒன்றிணைக்கப்பட்ட முயற்சியின் செயற்றிறன் அதிகரிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் (Kohli and Jaworski, 1990).

ஹான் (Han) மற்றும் கிம் (Kim, 1998) கருத்துப்படி, கூட்டாண்மைச் செயற்றிறன், உயர் வாடிக்கையாளர் பெறுமதி போன்றவற்றை அதிகரிக்கின்ற வழிமுறைகளைத் தொழில்தருநர் சிறப்பாக விளங்கிக் கொள்ளாவிடில், சந்தை நோக்கானது பூரணமற்ற அல்லது நிறைவற்றதொன்றாகவே காணப்படும். முன்னைய சந்தை நோக்குப் பற்றிய ஆய்வுகளில் இவ் விடயமானது பிரதானமாகச் சந்தை நோக்குச் செயற்றிறன் உறவுமுறையின் பலத்தினைப் புலனாய்வு செய்வதன் மூலம் ஆராயப்பட்டது. உதாரணமாகச் சாத்தியமான சூழற் காரணிகளான, தீவிரமான போட்டி, சந்தைத் தளம்பல், தொழில்நுட்ப மாற்றங்கள் என்பன அதிகளவான கவனத்தைப் பெற்றுள்ளன (Slater and Narvar, 1994a). இந்நடைமுறைகளிலிருந்து விலகியதான ஸ்லேற்றர் மற்றும் நேவர் (Slater and Narvar, 1994b), டே (Day, 1994) ஆகியோரின் முன்மொழிவுகள் மூலாதாரப் பெறுமதி உருவாக்கல் இயலுமையின் ஓர் அங்கமான புதுமை புனைதல் என்பது சந்தை நோக்குச் செயற்றிறன் உறவுமுறையினை நிர்ணயிப்பதாக இயம்புகின்றன. முழுமையாக நோக்கும் போது ஹான் மற்றும் கிம் (Ham and Kim, 1998) வாதப்படி ஆரம்பம் முதல் அனுமானிக்கப்பட்ட சந்தை நோக்கு - புதுமை புனைதல் செயற்றிறன் இணைப்பானது தொடர்ந்தும் அனுபவரீதியாகப் பலவீனமானதாகவே

உள்ளது. மறு புறம், பிற்பகுதி இணைப்பான புதுமை புனைதல் - செயற்றிறன் இணைப்பானது நியாயமானதும் உண்மையென்று நிரூபிக்கக் கூடியதுமான கண்டுபிடிப்புக்களால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அடிப்படையான நிறுவனக் கோட்பாடுகள் உறுதியான இரட்டைத் தன்மை வாய்ந்த நோக்கினை இனம் காணக் கூடியதாக உள்ளன. சந்தை நோக்கு - செயற்றிறன் ஆய்வுகள் உறுதியான ஓர் அடிப்படையில் ஆளுகை அணுகுமுறையுடன் கருதுகோள் ரீதியாக ஒத்திசைந்து செல்லக் கூடியதாகத் தோற்றம் பெறும். சந்தை நோக்கு - புதுமை புனைதல் அணுகுமுறைகள் அறிவுடைமை அடிப்படையிலான நிறுவனக் கோட்பாடுகளுடன் மிகவும் நெருங்கியதாகக் காணப்படுகின்றன. கோட்பாட்டு ரீதியான ஈடுபாட்டைப் பொறுத்தவரை சந்தை இயல்பானது - அதாவது நடத்தை நோக்கிய (போட்டித் தன்மை எதிர் கூட்டுறவுச்) செயற்பாடு, மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, வினைத்திறனான ஆளுகைக் கண்ணோட்ட மானது, சில அண்மைக்கால ஆய்வு முயற்சிகள் நீங்கலாக, இப்பொழுதும் உறுதியாகச் செல்வாக்குச் செலுத்துவதொன்றென வாதிக்க முடியும் (Morgan, Katsikeas and Appiad - Adu, 1998).

அண்மைக் காலத்திற் பிரபல்யம் வாய்ந்த வள/தகமை அடிப்படையிலான கண்ணோட்டமானது, சந்தைப்படுத்தல் ஆய்வுகளிற் பல பிரயோகங்களை உள்ளடக்கியுள்ளது (Day and Wensley, 1988; Hunt and Morgan, 1997). நிறுவனத்தின் வள அடிப்படையிலான கண்ணோட்டத்தின் அடிப்படையில் முன்னைய பிரயோகங்களின் பொதுவான நோக்கமானது (உதாரணமாக, Day and Wensley, 1998) நிறுவனங்களின் உள்ளகச் சொத்துக்களின் பெருக்கம் மற்றும் பயன் பெறுவது என்பவற்றை மையப்படுத்துவதன் மூலம் தந்திரோபாயப் போட்டி நன்மையை விளக்குவதாகும். எனினும், மிக அண்மைக் காலச் சந்தைப் படுத்தல் ஆய்வுப் பிரயோகங்கள், சந்தை அல்லது நிறுவனங்களுக் கிடையிலான கண்ணோட்டத்தை அதிகளவில் வலியுறுத்துவதனால் நிறுவன ரீதியான கற்றலானது, சந்தை ஊடான கற்றலின் மீதே உண்மையில் தங்கியிருக்கின்றது. அதாவது, போட்டிச் சந்தைகளில் உயர் சந்தைப்படுத்தல் நோக்கு அல்லது நிறுவனங்களுக்கிடையிலான வியாபார உறவுகளில் வினைத்திறனான கூட்டுறவு என்ற நிலைப்பாடு மிக அழுத்தமாக வலியுறுத்தப்படுகின்றது (Day, 1994; Juttner and Wehrli, 1994; Sanchez, 1999). வளங்கள், தகமைகள் மற்றும் போட்டி தன்மைகள் மீதான அண்மைக் காலச் சந்தைப்படுத்தல் ஆய்வுகளின் அடிப்படையில், முன்னைய பகுதியிற் பகுப்பாய்வு செய்யப்பட்ட அறிவை அடிப்படையாகக்

கொண்ட நிறுவனக் கோட்பாடுகள் ஏறத்தாழ வெளிப்படையான கருதுகோள் ரீதியான செல்வாக்கினைக் கொண்டிருப்தனைக் காணக் கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, நிறுவனக் கற்றல், புதுமை புனைதல், சந்தை நோக்கு போன்றவற்றுக்கிடையிலான அனுபவரீதியான தொடர்பினையும், கருதுகோள் ரீதியான விட்டுக் கொடுப்பினையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ளதைக் குறிப்பிடலாம் (Hurley and Hult, 1998).

முன்னைய இரண்டு அணுகுமுறைகளுக்கும் சமாந்தரமாகப் பரந்ததும், விசாலமானதும், வேறுபாட்டுத் தன்மை மிக்கதுமான, உறவுமுறைச் சந்தைப்படுத்தல் தொடர்பான உலகளாவிய ஆய்வு தீவிரமடைந்துள்ளது (Anderson, Hakansson and Jonanson, 1994; Morgan and Hunt, 1994; Gummesson, 1999; Achrol nd Kolter, 1999). உறவுமுறைச் சந்தைப்படுத்தலானது உள்ளார்ந்த மற்றும் நிறுவனங் களுக்கிடையிலான முகாமை, ஒன்றிணைந்த உறவு முறைகளை வலியுறுத்துகின்ற ஒரு தத்துவமாகவே பெரும்பாலும் முன்வைக்கப் பட்டுள்ளது. கம்மெசன் (Gummesson, 1999) கருத்துப்படி "முப்பது அக்கறையாளர்களின் உறவுமுறைகள்" என்ற அணுகுமுறை யானது, சந்தைப்படுத்தலில் தந்திரோபாய முகாமைத்துவம் உட்பட ஒரு புதிய "பொதுக் கோட்பாடாகக்" கருதப்பட முடியும். அண்மைக் காலக் கட்டுரை ஒன்றில் மொல்லர் மற்றும் ஹாலினன்கைலா (Moller and Halinen - Kaila, 2000) ஆகியோர் வலைப்பின்னல் அடிப்படையிலான வாடிக்கையாளர் - சந்தைப்படுத்தல் உறவுமுறைச் சந்தைப்படுத்தலுக் கிடையிலான வேறுபாட்டை விளக்கியுள்ளார். சந்தைப்படுத்தலின் மையப்படுத்தப்பட்ட கண்ணோட்டமானது, பரந்த கருதுகோள் ரீதியான எண்ணத்தினை (உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த) நிறுவன உள்ளக அலகுகளின் ஒத்துழைப்புடன் வலுப்படுத்தல் (Gronroos, 1994), கூட்டான தொழில்நுட்ப அபிவிருத்தி, மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான கூட்டிணைவு ஊடாக நிறுவனத்தினதும், வலைப் பின்னலினதும் பிரதான வளங்களையும் இயலுமைகளையும் கட்டியெழுப்புதலும் பயன்பெறலும் (Anderson, Hakansson, and Johanson, 1994), வாடிக்கையாளர் மற்றும் ஏனைய அக்கறையாளர் மீதான ஈடுபாடு உடையதும் நம்பிக்கைத் தன்மை வாய்ந்ததுமான உறவுமுறையை நிறுவுதல் (Morgan and Hunt, 1994) போன்ற இன்னோரன்ன விடயங்களிற் கவனம் செலுத்துகின்றது.

பொதுவாக, 21ம் நூற்றாண்டின் சந்தைப்படுத்தல் வளர்ச்சிகள் நிறுவனங்களுக்கிடையிலான இயங்கிகளுடனான உறவுமுறைகள், நிறுவன ரீதியான சூழ்நிலைகளின் புரட்சிகரமான மாற்றங்கள்

போன்றவற்றை நிலைநிறுத்திய அல்லது சமநிலைப்படுத்திய ஆய்வாகக் குறிப்பிடப்படுகின்றது. அக்றொல் மற்றும் கொற்லர் (Achrol and Kotler, 1999). ஆகியோர் சக்தி வாய்ந்ததும் அறிவுத் தன்மை வாய்ந்ததுமான சூழலினாற் பெறப்பட்ட பல்வேறு வகைப்பட்ட வலைப்பின்னல் வடிவிலான அமைப்புக்கள் படிமுறை அடிப்படையிலான நிறுவனக் கட்டமைப்புக்களுடன் இணைந்து செல்லாது முரண்பட்டுச் செல்லும் என்பதாக வாதிடுகின்றனர். இவ்வாறான சூழ்நிலைகளிற் சந்தைப்படுத்தலானது புதிய சந்தைப்படுத்தல் அறிவு, கல்வி, உடனுக்குடனான சந்தைத் தகவல் அமைப்பு, கட்புலனாகும். கட்புலனாகா விலை மாற்றங்கள். ஆபத்து, முதலீட்டுப் பகுப்பாய்வுகள், தொழில்நுட்ப முன்னுணர்வுகள், முரண்பாடுகளைத் தீர்த்தல், நிறுவனத்திற்குள்ளான ஒருங்கிணைப்புக்கள், வலைப்பின்னல்களின் பொருளாதார சமூக செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு போன்றவற்றை உருவாக்குவதற்கும் முகாமை செய்வதற்குமான அதிகளவு பொறுப்புக்களைக் கொண்டிருக்க வேண்டி நேரிடுமெனக் குறிப்பிடப்படுகின்றது (Achrol and Kotler, 1999).

சந்தைப்படுத்தல் தொடர்பான (நபர்களுக்கிடையிலானதும், நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் இடையிலானதும், நிறுவனங்களுக்கிடையிலானதும்) உறவுமுறைகளின் பல்வகைப்பட்ட அணுகுமுறைகளின் காரணமாகவும் ஆளுகை மற்றும் அறிவு அடிப்படையிலான கோட்பாடுகளை உள்ளடக்கிய வலைப்பின்னல்கள் காரணமாகவும் நிறுவனக் கோட்பாடுகள் பல்வேறுபட்ட ஆய்வுப் பகுதிகளுக்குக் கருதுகோள் ரீதியாக உறுதுணை புரிய முடியும் என அடையாளம் காணப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, அண்மைக் காலத்திற் சந்தைப்படுத்தல், விநியோக உறவுமுறைகளை ஆய்வு செய்வதில் மாற்றீட்டுச் செலவு மற்றும் முகவராண்மைக் கோட்பாடுகளின் பகுப்பாய்வு மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது (Brown, Dev and Lee, 2000). மறுபுறம், அண்மைக் காலத்தில், அறிவு அடிப்படையிலான கருதுகோள்கள், உறவுமுறை மற்றும் வலைப்பின்னற் பகுப்பாய்வில் ஒரு பிரதான அம்சமாகக் கருதப்படுகின்றன (Achrol and Kotler, 1999). மேலும், ஐரோப்பிய ஆய்வுக் கற்கைகளில் உறவுமுறை / வலைப்பின்னல் அணுகுமுறை கைத்தொழில் சந்தைப்படுத்தல் ஆய்வுகளில் நிறுவனங்களுக்கிடையிலான உறவு முறைகளின் ஆளுகையை (உதாரணமாக, தொடர்பு முறைத் தந்திரோபாயம் அல்லது இயங்கி களுக்கிடையிலான அடக்கல்) அறிவு அடிப்படையிலான பகுப்பாய்வுடன் (உதாரணமாக நிறுவனங்களுக்கிடையிலான வலைப்பின்னல்களில் அதிகரித்த செயற்பாடு மற்றும் வளப் பிணைப்புக்களினூடாக இயலுமை அபிவிருத்தி) இணைப்பவையாகக் கருதப்பட முடியும் (Anderson, Hakansson and Johnson, 1994).

## முடிவுரை

இதுவரை கருத்திற் கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட நிறுவனக் கோட்பாடுகள் தொடர்பான பகுப்பாய்வானது சந்தைப்படுத்தலின் தற்போதைய ஆய்வுகள் பொறுத்து மூன்று முக்கிய அணுகுமுறைகளை உள்ளடக்கியதோர் உறுதியான, கட்புலனாகா உட்கூறுகளின் ஒன்றிணைப்பு மாதிரிக்கானதொரு சூழ்நிலையினை இனங்காட்டின. எனவே, பாரம்பரியமாகச் சந்தைப்படுத்தலானது ஒரு பிரயோக விஞ்ஞானமாகக் கருதப்படுவது ஆச்சரியமற்றதாகும். மேலும், அண்மைக் காலச் சந்தைப்படுத்தல் ஆய்வுகளில், அதிகளவான கற்கைகள், ஆளுகை மற்றும் அறிவு அடிப்படையிலான அணுகுமுறைகளை ஒன்றிணைப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக பொஃஸ் (Foss, 1999b) குறிப்பிடுவது போன்று ஒன்றையொன்று சார்ந்துள்ள பேரம்பேசல் அணுகுமுறைகளின் மூலம் நிறுவனங்களுக்கிடையிலான உறவுகளுக்கான எண்ணக்கரு ரீதியான வித்துக்களை வலைப்பின்னல் கோட்பாட்டியல் ஆய்வுகளிற் கைத்தொழிற் சந்தைப் படுத்தல் அழுத்தமானதும் பாரம்பரியமானதுமான நிறுவன ரீதியான நடத்தையியல் மற்றும் உளரீதியான நோக்கினூடாக ஏற்கனவே வெளிக் கொணர்ந்துள்ளது.

மேலும், மூன்று சந்தைப்படுத்தல் அணுகுமுறைகளிலும், குறிப்பாக உறவுமுறை / வலைப்பின்னல் கண்ணோட்டத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தும் தனித்துவமான பங்களிப்புக்கள் தோற்றம் பெற்றன. நிறுவனமானது தொடர்ந்தும் அறிவு மற்றும் இயலுமைகளுக்கான அடிப்படையாகத் தொழிற்பட முடியாதெனவும் உள்ளக நிறுவனச் செயன்முறையானது உயர்ந்த அறிவு சார்ந்ததாகி இருப்பினும் நீண்ட காலத்திற்கு ஓர் அடிப்படை அறிவினைக் கொண்டதாகச் செயற்பட முடியாதெனவும் அநேக சந்தைப்படுத்தல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதே விடயம் மேலும் சில நிறுவனக் கோட்பாட்டாளர்களால் அண்மையில் ஆராயப்பட்ட போதும், பொஃஸ் (Foss, 1999) கருத்தின்படி நிறுவன உள்ளடக்கம், தன்மை, உள்ளகத் தொடர்புகளின் அபிவிருத்தி என்பன மாத்திரமன்றிச் சந்தைப்படுத்தல் ஆய்வானது அறிவுருவாக்கல் மற்றும் இயலுமை விருத்தி பற்றிய பல்வேறு நிலைப்பாடுகளையும் நிறுவனக் கோட்பாட்டாக்கத்தின் போது வெளிப்படுத்த வேண்டும். 21ம் நூற்றாண்டு வலைப்பின்னற் பொருளாதாரத்திற் சந்தைப்படுத்தல் ஆய்வினது இச்செயற்பாடானது நிறுவனங்களினது நிலைத்திருத்தல், எல்லைகள், மற்றும் உள்ளக அமைப்புத் தொடர்பான கோட்பாட்டாக்கத்திற்கான சூழலை இணைப்பதற்கு உறுதுணையாகச் செயற்படுகின்றது.

## உசாவியவை

Achrol, Ravi S. and Kotler, Philip (1999), Marketing in the Network Economy, *Journal of Marketing*, 63/ Special Issue, 146 - 164.

Alchian, Armen A. and Harold Demsetz (1972), Production, Information Costs, and Economic Organization, *American Economic Review*, 62(5): 772 - 795.

Alvesson, Mats and Berg, Per-Olof (1992), *Corporate Culture and Organaizational Symbolism: An Overview*. Berlin: DeGruyter.

Anderson, James C., Hakan Hakansson and Jan Hohanson (1994), Dyadic Business Relationships Within a Business Network Context, *Journal of Marketing*, 58 (October), 1 - 15.

Brown, James R. Dev, Chekitan S. and Lee, Dong-Jin (2000), Managing Marketing Channel Opportunism: The Efficacy of Alternative Governance Mechanisms, *Journal of Marketing*, 64/2, 51 - 66.

Castells, Manuel (1996), *The Rise of the Network Society. The Information Age: Economy, Society and Culture. Vol. 1.* Oxford: Blackwell Publishers.

Day, George S. (1994), The Capabilities of Market-Driven Organizations. *Journal of Marketing*, 548 (October), 37 - 52.

Day, George S. and Wensley, Robin (1988), Assessing Advantage: A Framework for Diagnosing Competitive Superiority, *Journal of Marketing*, 58/2, 1 - 20.

Dierickx, Ingemar and Cool, Karen (1989), Asset Stock Accumulation nd the Sustainability of Competitive Advantage, *Management Science*, 35/12, 1504 - 1511.

Foss, Nicolai J. (1999a), The Theory of the Firm: An Introduction to Themes and Contributions. In Nicolai J. Foss (ed.) *Theories of the Firm: Critical Perspectives in Economic Organization*. London: Routledge.

Foss, Nicolai J. (1999b), Perspectives on Business Systems, *International Studies of Management and Organization*, 29, 3 - 8.

Gronroos, Christian (1994), From Marketing Mix to Relationship Marketing. Towards a Paradigm Shift in Marketing, *Management Decision*, 32/3, 4 - 20.

Gummesson, Evert (1999), *Total Relationship Marketing. Rethinking Marketing Management: From 4 Ps tp 30 Rs*. Butterworth-Heinemann, London.

Han, Jin K. and Kim, Namwoon (1998), Market Orientation and Organizational Performance: Is Innovtion a Missing Link? *Journal of Marketing*, 62/4, 30 - 45.

Hunt, Shelby D. and Morgan Robert M. (1997), Resource - Advantage Theory: A Snake Swallowing Its Tail or a General Theory of Competition, *Journal of Marketing*, 61 (October), 74 - 82.

Hurley, Robert F. and Hult, G. Thomas M. (1998), Innovation, Market Orientation, and Organizational Learning: An Integration and Empirical Examination, *Journal of Marketing*, 62/3, 42 - 55.

Jaworski, Bernard J. and Kohli, Ajay K. (1993), Market Orientation: Antecedents and Consequences, *Journal of Marketing*, 57 (July), 53-70.

Juttner, Uta and Wehrli, Hans - Peter (1994), Competitive Advantage: Merging Marketing and the Competence - based Perspective, *Journal of Business and Industrial Marketing*, 9/4, 42 - 53.

Kogut, Bruce and Zander, Udo (1992), Knowledge of the Firm, Combinative Capabilities, and the Replication of Technology, *Organization Science*, 2, 383 - 387.

Kohli, Ajay K and Bernard J. Jaworski (1990), Market Orientation: The Construct, Research Propositions, and Managerial Implications, *Journal of Marketing*, 54 (April), 1 - 18.

Morgan, Robert M., Katsikeas, C. S. and Appiah - Adu, Kwaku (1998), Market Orientation and Organizational Learning Capabilities, *Journal of Marketing Management*, 14/4. 353 - 381.

Morgan, Robert M. and Hunt, Shelby D. (1994), The Commitment - Trust Theory of Relationship Marketing, *Journal of Marketing*, 58 (July), 20 - 38.

Moller, Kristian K. and Halinen - Kila. Aino (2000), Relationship Marketing Theory: Its Roots and Direction, *Journal of Marketing Management*, 16, 29 - 54.

Narver, John C. and Slater, Stanley E (1990), The Effect of a Market Orientation on Business Profitability, *Journal of Marketing*, 54 (October), 20 - 35.

Nelson, Richard R. (1991), Why Do Firms Differ, and How Does It Matter, Strategic *Management Journal*, 12, 61 - 74.

Nonaka, Ikujiro and Takeuchi, Hiro (1995), *Knowledge - creating Company. How Japanese Companies Create the Dynamics of Innovation*, New York: Oxford University Press.

Prahalad, C. K. and Hamel, Gary (1990), The Core Competence of the Corporation, *Harvard Business Review*, 68 (3), 19 - 91.

Richardson, George B. (1972), The Organization of Industry, *Economic Journal*, 82, 883 - 96.

Sanchez, Ron (1999), Modular Architectures in the Marketing Proces, *Journal of Marketing*, 63/Special Issue, 92 - 112.

Sanchez, Ron and Heene, Aime (1997), Reinventing Strategic Management: New Theory and Practice for Competence - Based Competition, *European Management Journal*, 15 (3), 303 - 317.

Selznick, Philip (1996), Institutionalism, 'Old' and 'New', *Administrative Science Quarterly*, 42 (2), 270 - 278.

Slater, Stanley F. and Narver, John C. (1994a), Does Competitive Enviornment Moderate the Market Orientation - Performance Relationship?, *Journal of Marketing*, 58 (January), 46 - 55.

Slater, Stanley F. and Narver, John C. (1994b), Market Orientation, Customer Value, and Superior Performnce, *Business Horizons*, 37 (March/April), 22 - 28.

Slater, Stanley F. and Narver, John C. (1995), Market Orientation and the Learning Organization, *Journal of Marketing*, 59 (July), 63 - 74.

Teece, David., Pisno, Gary and Shuen, Amy (1997), Dynamic Capabilities and Strategic Management, *Strategic Management Journal*, 18 (7), 509 - 533.

Wernerfelt, Birger (1984), Resource- based View of the Firm. *Strategic Management Journal*, 5 (2), 171 - 180.

Williamson, Oliver E. (1999), Strategy Research: Governance and Competence Perspectives, *Strategic Management Journal*, 20, 1087 - 1108.

Williamson, Oliver E. (1970), *Corporate Control and Business Behavior*. New Jersey: Prentice - Hall.

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
37 - 63

# ஈழத்தமிழரும் மருத்துவக் கல்வியும்: அதன் சமூகப் பொருளாதாரப் பரிமாணம்

வி. நித்தியானந்தம் *

ஈழத்தமிழர் கல்வி, அதன் தரத்தையும் பரப்பையும் பொறுத்தவரை, மிக விரிந்ததொன்றாயினும், அதன் சமூகப் பொருளாதாரப் பரிமாணம் நன்கு அலசப்படாததொரு பகுதியாகும். அதனை ஈழத்தமிழரின் மருத்துவக் கல்வியை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது. மருத்துவக் கல்வியின் மாறுபடும் பொருளாதார முக்கியத்துவம் எடுத்துக் கூறப்பட்டு அதன் மூலம் ஈழத் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட திரிபு நிலைகள் விளக்கப்படுகின்றன. இவை ஈழத்தமிழரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்குமிடத்து, அத்தகைய பாதிப்புகள் நீண்ட காலத்திலும் குறுகிய காலத்திலும் நிவர்த்தி செய்யப்படுவதற்கு உரிய வழிவகைகள் முடிவுரையாக முன்வைக்கப்படுகின்றன.

* பேராசிரியர், பொருளியற் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

ஈழத்தமிழர் தாம் கல்வி கற்ற ஒரு சமூகம் என்று நீண்ட காலமாகத் தாமே மார் தட்டிக் கொண்டாலும், அவர்களது கல்வி பற்றிய சமூகப் பொருளாதார ஆய்வுகள் எதுவும் கல்வியின் பொது நிலையிலோ அல்லது அதன் வேறுபட்ட பிரிவுகளிலோ இடம்பெற்ற வளர்ச்சிகளின் அடிப்படையில் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது. ஈழத்தமிழரின் அரசியல், வரலாறு, பொருளாதாரம், பண்பாடு என்பன ஆராயப்படும் போது கல்வி பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே சிதறிய நிலையிற் காணப்பட்டாலும், ஈழத்தமிழர் கல்வி ஒருமுகப்பட்ட ஒழுங்கான பரிசீலனைக்குட்படவில்லை.

மறுபுறம், பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் என்பவற்றை உள்ளடக்கும் கல்வியின் மூன்றாந்தர மட்டத்திற் கல்வியியல் ஒரு பாடநெறியாக தனித்துவ நிலையில் வளர்ச்சியடைந்துள்ள காரணத்தினாற் கல்வித்துறை ஆய்வுகள் பல, குறிப்பாகப் பட்டப்படிப்பின் படிப்பு மட்டத்தில் இடம் பெற்றுள்ளன. எனினும், இவை பெரும்பாலும் ஏற்கெனவே நிலவியுள்ள கல்வி முறைமை பற்றியதாகவும் அம்முறைமையை மேற்கொண்டு எவ்வாறு சீர்திருத்தலாம் என்பது பற்றியதாகவும் உள்நோக்கிய ஒரு முறையில் அமைந்துள்ளனவேயன்றி, கல்வி வெளிநோக்கிய ஒரு வகையில் எவ்வாறு சமூகத்துடன் ஊடுதொடர்பு கொண்டு சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கு இடமளித்ததென்பது பற்றியதாக இல்லை.

இவ்வாறான கல்வியியல் ஆய்விலுள்ள அபாயம் என்னவெனில், சமூகம் பெற்றுக் கொள்ளும் கல்வியே அடிப்படை நிலையிற் குறைபாடுடையதொன்றாயின், ஒரு புறம், கல்வியியற் சீர்திருத்தங்கள் எத்துணை அக்கறையுடன் மேற்கொள்ளப்பட்டாலும் அவை சமூகப் பொருளாதார முன்னேற்றங்களாகப் பிரதிபலிப்பதில்லை. அதாவது, அவை "குண்டுச் சட்டிக்குள் குதிரையோடும்" முயற்சிகளாகவே விளங்கியிருக்கும். மறுபுறம், கல்வி, சமூகப் பொருளாதார மட்டத்தில் எத்தகைய தாக்கங்களுக்கு இடமளித்துள்ளதென்பதைக் கண்டறிந்து அவற்றை விமர்சிப்பதற்குரிய பிரயத்தனங்களெதுவும் இடம் பெறுவதில்லை. இந்நிலையிற் சமூகமானது தவறானதொரு கல்வி முறைமையைப் பல்வேறுவிதமான சீர்திருத்தங்களுடன் முன்னெடுப்பதற்கு வழி வகுக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் சமூகப் பொருளாதார மட்டத்தில் அதன் ஒட்டுமொத்த விளைவு ஒரு தேக்கநிலை என்பதாகவே காணப்படும். அரசியற் பொருளாதார மட்டத்திலான இதர வளர்ச்சிகள் இத்தேக்க நிலையை மேலும் மெருகுபடுத்துவனவாக விளங்கியிருக்கும்.

ஈழத்தமிழர் கல்வியியல் ஆய்வு இவ்வாறானதொரு குறை பாட்டுக்குட்பட்ட ஒன்றேயாகும். இத்தகைய பொதுவான ஒரு பின்னணியில், அவர்கள் மத்தியிற் பெரிதும் பிரபல்யம் பெற்றிருக்கும் மருத்துவக் கல்வி பற்றிய சமூகப் பொருளியல் ரீதியிலான சில சிந்தனைகளை முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவ்வாறு செய்யுமிடத்து, மருத்துவக் கல்வி பொறுத்த வளர்ச்சிகள் பொதுவாக ஈழத் தமிழர் சமூகத்திலும், குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்திலும், நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் ஓர் ஆழமான பிரச்சினையின் வெளிப்பாடு தாம் என்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது. அதுவே (மருத்துவக்) கல்வி மூலமான தனிப்பட்ட நன்மைக்கும் - சமூக நன்மைக்குமிடையிலான முரண்பாடாகும். அவ்வகையில் இந்த ஆய்வு ஈழத்தமிழர் கல்வியின் பொருளியல் பற்றியதாகும். ஈழத்தமிழர் சமூகம் பல வழிகளிலும் தனக்கெனப் புதிய அடையாளமொன்றைத் தேடிக் கொள்ள முனைந்திருக்கும். இன்றைய நிலையில், இத்தகையதோர் ஆய்வு ஓர் அத்தியாவசியத் தேவையென்றே கணிக்கப்படலாம்.

கல்விக்கு ஈழத்தமிழர் வழங்கும் தராதர முக்கியத்துவத்தை வெளிக்கொணர்ந்து அதனை விமர்சிப்பதன் வாயிலாக அவர்களது சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்குக் கல்வி எத்தகைய ஒரு பங்களிப்பை வழங்கியுள்ளதென்பது கட்டுரையில் எடுத்துக்காட்டப் படுகின்றது. எதிர்க்கணியத் தன்மை கொண்ட இத்தகைய பங்களிப்பை நேர்க்கணிய நன்மை தருவதொன்றாக எவ்வாறு நீண்டகாலத்திலும் குறுகிய காலத்திலும் மாற்றிக் கொள்ளலாமென்பது பற்றிய சில சிந்தனைகள் கட்டுரையின் ஒரு முடிவுரை என்ற வகையில் இறுதியில் முன்வைக்கப்படுகின்றன.

## ஈழத்தமிழர் கல்வியின் பொருளியல்

ஈழத்தமிழர் பொருளாதார வரலாற்றை ஆராயுமிடத்து, அவர்கள் கல்வியைத் தாம் எதிர்கொண்ட அரசியற் பொருளாதார நிர்ப்பந்தங்கள் காரணமாக ஒரு பொருளாதார அலுவலாக அல்லது பொருளாதார மேம்பாட்டுக்கான ஒரு சாதனமாகத்தான் கல்வியை எப்போதும் நோக்கி வந்திருப்பது தெரிய வரும். இது கூட ஒரு சமூக மட்ட மேம்பாடாயன்றித் தனியார் மட்ட மேம்பாடாகவே எப்போதும் இயங்கி வந்துள்ளது. ஏனெனில், ஈழத்தமிழர் ஒரு கல்வி கற்ற சமூகம் என்பதற்கான சமூக மட்ட வெளிப்பாடுகள் மிகவும் குறைவானவையாகும். மருத்துவத் துறையின் சமூக அளவிலான சாதனையொன்றே அதனை எடுத்துக்காட்டுவதற்குப் போதுமானது.

ஈழத்தமிழர், மருத்துவக் கல்வியின் பொது நிலையிலும் அதன் சிறப்புப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் விசேட தகைமை பெற்று உலகின் பல பாகங்களிலும் தொழில் செய்துகொண்டிருந்தாலும், அவர்கள் மத்தி-யிலிருந்து ஈழத் தமிழர் சமூகத்துக்குத் தம்மை அர்ப்பணித்துத் தொழில் செய்ய முன்வந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதென்பது தான் யதார்த்தம். அதாவது, மருத்துவக் கல்வி மூலம் ஈழத்தமிழருக்குக் கிடைத்த சமூக நன்மை மிக மட்டுப்படுத்தப்பட்டதென்பதேயாகும். இந்த உண்மையை மேற்கொண்டு இரு அம்சங்களை ஆதாரம் காட்டிப் பெரிதுபடுத்த முடியும். ஒரு புறம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்டு எம்மத்தியில், எமது மண்ணிலிருந்து மருத்துவப் பட்டதாரிகள் வெளியேறுகிறார்கள் என்பது சமூக அர்ப்பணிப்பு என்ற நிலையில் ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடத்தக்க மாற்றமெதனையும் ஏற்படுத்தவில்லை. நடப்பு நிலைமை, உண்மையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் திறக்கப்படுவதற்கு முன்னிருந்ததை விடப் படிப்படியாக மோசமடைந்து கொண்டு சென்ற தொன்றேயாகும். மறு புறம், ஏறக்குறைய யாழ். மருத்துவ பீடம் இயங்கத் தொடங்கிய சமகாலத்திலிருந்து, ஈழத்தமிழர் அரசியல் நிலைமை மோசமடைந்து, சமூக மட்டத்தில் மருத்துவ வசதிகளுக்குக் கூடிய தட்டுப்பாடு தோன்றி மருத்துவ சேவைகளின் நிரம்பல் ஒரு முழு நிலையிற் பாரிய நெருக்கடியொன்றை எதிர்நோக்கிய போது கூட, மருத்துவக் கல்வி கற்றவர்களிடமிருந்து சமூக உணர்வை வெளிப்படுத்தும் எதிர்த் தாக்குதல் எதுவும் தோன்றியிருக்கவில்லை. மாறாக, அவர்கள் ஏற்கெனவே நிலவியிருந்த மேலதிக வருமானத்தை ஈட்டுவது என்ற நோக்குடன், இப்போது மேலதிகமாகப் பாதுகாப்புக் கருதிய நோக்கினாலும் உந்தப்பட்டவர்களாகத் தாயகத்தை விட்டு வெளியேறும் போக்கானது பெரிதும் துரிதப்படுத்தப்பட்டிருந்தது.

ஈழத்தமிழர் கல்வியின் பொருளியலில் மருத்துவக் கல்வி பாரியதோர் இடத்தை எடுத்துக் கொண்டிருப்பதொன்றாகும். அதற்கான காரணத்தை ஈழத்தமிழர், கல்வி என்பதையே எவ்வாறு பொருளியல் ரீதியாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தனரென்பதிலிருந்து தான் கண்டு கொள்ள வேண்டும்.

கல்வியைக் கல்விக்காகவும் அதனை அடிப்படையாகக் கொண்ட பொதுவான சமூக முன்னேற்றத்திற்காகவும் பயிலும் போது, சமூக முன்னேற்றம் என்பதிலிருந்து தான் தனிப்பட்ட ஒருவர் நன்மை பெற விழைகின்றார். இது தான் உலக நாடுகள் பலவற்றினதும் பொதுவான அநுபவமாகும். ஆனால், இதற்கு மாறாகக் "குதிரைக்கு முன் வண்டியைப்

பூட்டிய" கதையாகக் கல்வி ஒரு பொருளாதார அலுவல் என்பதாகத் தனியாருக்கு முதலில் நன்மை செய்ய, அதனூடாகச் சமூகம் நன்மை பெற வேண்டுமென்ற நிலைமை ஏற்படும் போது, அது சமூக மட்டத்திற் பல திரிபு நிலைகளுக்கு இடமளிக்கின்றது. ஈழத்தமிழரைப் பொறுத்த வரை, உண்மையில், இத்தகைய ஒரு நிலைமைக்குத் தான் அவர்களுடைய அரசியற் பொருளாதாரம் இடமளித்திருந்தது.

"அரசியற் பொருளாதாரம்" எனக் குறிப்பதிலிருந்து இத்தகைய மாறுபட்ட நிலைமைக்கும் ஈழத்தமிழர் அரசியலுக்கும் நெருக்கமான தொடர்பிருப்பது புலனாகும். அவர்களது அரசியல் வரலாற்றிலிருந்தும் அதன் மூலமான பொருளாதார மாறுபாடுகளிலிருந்தும் தான் உண்மையில், இந்த முரண்பாடு உருவெடுக்கின்றது. எனினும், அதனைக் கட்டுரையின் ஓட்டம், பருமன் என்பன கருதி ஒதுக்கிச் சமூகப் பொருளாதார அம்சங்களை மாத்திரம் இங்கு கருத்தில் எடுப்போம்.[1]

யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து "காலனித்துவம்" என்ற இருண்ட காலத்தினுள் ஈழத்தமிழர் உள்ளடக்கப் பட்ட நாளிலிருந்து, அவர்களது பௌதிக வளங்கள் புறக்கணிக்கப்பட்ட காரணத்தினால் அவற்றுடன் அவர்கள் தம்மை ஒரு மனித வளம் என்ற முறையில் இணைத்து உரிய வகையில் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள முடியவில்லை. அதற்குப் பதிலாக, ஒரு தனிநிலையில், தாமே உள்ளடங்கிய மனித வளங்களின் மீது அவர்கள் தமது பொருளாதார மேம்பாட்டிற்குப் பெருமளவில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. இத்தகைய ஒரு சூழலில், மனித வளத்தைப் பொருளாதார ரீதியாகப் பயனுடையதாக்குவதற்குத் தான் கல்வி அவர்களுக்குத் தகுந்த சாதனமாயிற்று.

ஆங்கிலேயர் ஆட்சியின் போது அரசாங்கப் பணித்துறைப் பதவிகள் சுதேசிகளுக்குத் திறந்து விடப்பட்டமையும், அதனை ஈழத்தமிழர் விரைந்து பயன்படுத்திக் கொண்டமையும் பொதுவாகக் கல்வியையும் குறிப்பாக ஆங்கிலக் கல்வியையும் அவர்களுக்கு அத்தியாவசியமுடையவையாக ஆக்கிவிட்டிருந்தன. எனினும், கல்வியை உயர்வான மட்டங்களுக்கு எடுத்துச் செல்வதன் மூலம் மாத்திரமன்றிக் கற்கும் கல்வியின் தன்மையையும், உரிய வகையிற் சிறப்பு நிலைக்கு உட்படுத்துவதன் மூலம் பொருளாதார வாய்ப்புக்களை விரிவுபடுத்தி வருமானத்தையும் பெருக்கிக் கொள்ள முடியுமென்பதை ஈழத்தமிழர் விரைவிலேயே அறிந்து கொண்டிருந்தனர். அதேநேரத்தில், நாட்டின் மட்டுப்படுத்தப்பட்ட அபிவிருத்தி பணித்துறை விரிவாக்கத்தைப் பெரிதும் கட்டுப்படுத்தியமையும், இலங்கை சுதந்திரமடைந்த பின்பு, பணித்

துறையிலான பதவிகளே சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை அரசியல் லாபம் ஈட்டுவதற்கான ஒரு மார்க்கமாக மாறியிருந்தமையும், கல்வியை ஈழத்தமிழர் ஒரே தரத்தில் ஒரு சீருடையதாக வைத்திருப்பதிற் பயனில்லை என்பதை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தன.

## கல்விப் போட்டியில் மருத்துவக் கல்வி

இந்நிலையில் தான் உயர்ந்த வருமானத்தைக் கொடுக்க வல்ல தொழின்மை நிலைப்பட்ட பதவிகளுக்கான கல்வி ஈழத்தமிழர் மத்தியிற் பிரபல்யம் பெறுவதாயிற்று. அதனுள்ளும் உயர் வருமானம் மாத்திரமன்றிச் சமூகத்தில் அதிக செல்வாக்கையும் உயர் அந்தஸ்தையும் ஈட்டிக் கொடுக்கக் கூடியதாயிருந்த டாக்டர் பதவிக்கான மருத்துவக் கல்விக்கு மிகுந்த கேள்வி ஏற்படுவதாயிற்று. அத்துடன் மருத்துவக் கல்வி ஏனைய தொழிலின்மைக் கற்கை நெறிகளை விட மிகுந்த பின்வள வாய்ப்புடைய தொன்றாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதாவது, மருத்துவக் கல்வி என்ற வரையறையினுள்ளேயே ஒருவர் சிறப்புநிலைத் தகுதி பெறக் கூடிய எண்ணற்ற வாய்ப்புக்களை அது வழங்கக் கூடியதாயிருந்தது. அத்தகைமைகளுடன் சேர்ந்ததாக ஒருவருடைய சமூக செல்வாக்கும் வருமான அளவும் பாரிய முறையில் வளர்ந்து செல்ல முடிந்தன. இவை மாத்திரமன்றி, அபிவிருத்தியடைந்த பல வெளிநாடுகளில் வேலை செய்யக் கூடிய வாய்ப்பும் மருத்துவத் துறையைப் பொறுத்தவரை எப்போதும் நீடித்துக் காணப்பட்டது. எனவே, மருத்துவக் கல்வியைக் கற்று அதில் ஒருவர் எந்த வகையிலாவது தகைமை பெற்றும் தொழில் செய்வது அவருக்கும் அவரது குடும்பத்துக்கும், அதனுடன் கூடவே, ஈழத்தமிழர் சமூக அமைப்பின் முக்கியமானதோர் அங்கமாயிருந்த, அவரைச் சூழவிருந்த அவரது கூட்டுக் குடும்பத்துக்கும் கூடப் பலதரப்பட்ட நன்மைகளையும் பெற்றுக் கொடுக்கக் கூடியதாயிருந்தது. எவ்வாறாயினும் மருத்துவத் தொழிலின் மூலாதார நிலையிலிருந்த சமூக சேவையின்றிச் சமூக மதிப்பும் அதனுடன் கூட வே உழைக்கப்படக் கூடியதாயிருந்த, ஒப்பீட்டு ரீதியில், மிகையாயிருந்த வருமானமும் தான் மருத்துவக் கல்வியின் கேள்வித் தூண்டலுக்கான முக்கிய காரணங்களென்பது மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டிய தொன்றாகும்.

மருத்துவக் கல்வியிற் பொதுவாகவே உள்ளடங்கியிருந்த இவ்வாறான அதன் தன்மைகள் ஒரு புறமிருக்க, ஈழத்தமிழர் இத்தன்மைகளின் பின்னணியிலான நன்மைகளை அடைவதற்குப்

போட்டியிட்ட விதமும் அப்போட்டியின் தன்மையே, நாட்டின் அரசியல் நிலைமைகளுக்கேற்பப் படிப்படியாகக் கூர்மையடைந்து வந்தமையும் தான் மருத்துவக் கல்வியின் சமூக நோக்கினைப் பெரிதும் பாதிப்பதாயிருந்தன. மத்தியதர நிலையிலும் அதற்கு மேலாகவும் விளங்கிய ஒவ்வொரு குடும்ப மட்டத்திலும் தமது குழந்தைகள் டாக்டராக வரவேண்டுமென்ற எண்ணத்துடன் தான் அவர்களுடைய கல்விப் பாதையைத் திட்டமிடுவதற்கு ஆரம்பத்திலிருந்தே பல பெற்றோர் முயன்றனர். இது வெளிப்படையாகத் தெரியாத ஒரு மறைமுகமான போட்டியை ஈழத்தமிழர் மத்தியில் உருவாக்கி விட்டிருந்ததெனக் கூறின் அது மிகையாகாது. ஈழத்தமிழ்ச் சமூக உணர்வொன்றின் வளர்ச்சியை எதிர்க்கணிய நிலையில் ஊடறுப்பதில், மக்கள் மத்தியிற் கல்வி கற்பதிலும் அக்கல்வியைப் பயன்படுத்தித் தொழில் வாய்ப்புப் பெறுவதிலும் ஏற்பட்ட போட்டி முக்கிய இடம் பெறுவதாயிருந்தது. அதிலும் மருத்துவக் கல்வி இது விடயத்தில் முன்னணி வகித்தது. இது எவ்வாறு ஏற்பட்ட தென்பதையும் அதன் மூலமான சமூகத் தாக்கங்களையும் அறிவதற்கு ஈழத்தமிழ்க் குழந்தைகளின் கல்விப் பாதையின் தொடக்க நிலைக்கே செல்ல வேண்டியதாகின்றது. மருத்துவக் கல்வியின் வழி நின்று அதனைப் பார்ப்பது பொருத்தமானதென்பதுடன் அது நடைமுறை ஆய்வின்பாற்பட்ட ருசிகரமானதோர் அநுபவமும் ஆகும்.

ஒரு பிள்ளை தனது கல்வி வாழ்க்கையைத் தொடங்கிய பின் மருத்துவக் கல்விக்கான போட்டியின் முதற் படி, பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவுக்கான மாணவர் தேர்வாகும். அப்பிரிவினுள்ளான (மிக மட்டுப்படுத்தப்பட்ட) தெரிவுகளில் ஒன்றாகவே மருத்துவக் கல்வி விளங்கியிருந்ததால் அதனைச் சென்றடைந்தாலன்றி மருத்துவக் கற்கைநெறியைப் பயிலுவதென்பது அசாத்தியமானது. அதன் காரணமாக விஞ்ஞானப் பாடங்களில் அதீத கவனமும், ஏனைய பாடங்களின் புறக்கணிப்பும் கல்விப் பாதையின் ஆரம்பத்திலேயே பொதுவாக மாணவர் மத்தியில் அவதானிக்கப்படக் கூடியதொன்றாகும். அது மாத்திரமன்றித் திறமையானவர் என்று இனம் காணப்படும் மாணவரை விஞ்ஞானக் கல்வி நோக்கி ஆற்றுப்படுத்துவதிலேயே பெற்றோரும் பாடசாலைகளும் எப்போதும் மிகுந்த ஆர்வம் காட்டின. இது மருத்துவக் கல்விக்கான முதற்படியாக அமையும் அதே சமயம் (அந்நோக்கம் ஈடேறுகின்றதோ இல்லையோ), சமூக விஞ்ஞானம்சார் கற்கைநெறிகளது புறக்கணிப்பின் உறுதியான முதற்படியாகவும் ஆகின்றதென்பது குறிப்பாகக் கவனிக்கத் தக்கது.

விஞ்ஞானப் பிரிவை அடைவதற்கான வடிகட்டலின் பின்பு அதனுள்ளும் மருத்துவக் கல்விக்கு இட்டுச் செல்லும் உயிரியற் பாடநெறியைச் சென்று சேர்ந்ததன் பின், அடுத்த மிக முக்கிய வடிகட்டல் பல்கலைக்கழகப் புகுமுக மட்டத்தில், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையுடன் ஏற்படுகின்றது. ஈழத்தமிழர் சமூகத்தைப் பொறுத்தவரை இதுவே குழந்தைகளின் சமூகப் பொருளாதார எதிர்காலத்தையும் அவர்களது வாழ்க்கையின் வெற்றி தோல்வியையும் நிர்ணயிக்கின்ற கட்டமாகும். இக்கட்டத்தின் முக்கியத்துவம் என்னவெனில், பொதுவாக ஈழத்தமிழரினதும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழரினதும் பார்வையில், உயர்தரப் பரீட்சையின் பெறுபேறு தான் வாழ்க்கையின் வெற்றிக்கான அளவுகோல் என்பதாகும். முதல் நிலையில், ஒரு பிள்ளை பல்கலைக் கழகத் தேர்வினுள் அகப்படுகின்றதா என்பதும், அதனையடுத்து, அது எந்தப் பாடநெறியைச் சென்று சேர்கின்றது என்பதும் சமூகப் பொருளாதார வெற்றியின் தராதர அளவை எடுத்துக்காட்டுவதாகக் கருதப்படும். இத்தராதர ஏணியின் உச்சத்தில் மருத்துவம் வீற்றிருக்கச் சமூக விஞ்ஞானம் இறுதிப் படியில் முடங்கியிருப்பது தான் சமூக நியதியாகும். ஏனைய பாடநெறிகள் யாவும், இரு அந்தங்களிலுமான இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட இடங்களை எடுத்துக் கொண்டுள்ளன.

கற்கை நெறிகளுக்கிடையிலான இந்தப் படிநிலை அமைப்பில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதென்னவெனில், அது குறைந்தது ஒரு பருமட்டான முறையிலேனும், குறிப்பிட்ட பாடநெறிசார் கல்வியின் முடிவிற் பெறப்படக்கூடிய பதவி அல்லது பதவிகள் உழைத்துக் கொடுக்கக்கூடிய ஒப்பீட்டு வருமான அளவினையும் சமூகச் செல்வாக்கினையும் பிரதிபலிப்பதாகும். ஆகவே இது, ஏற்கனவே நாம் முன் வைத்த கருத்தாகிய, கல்விக்கான நாட்டம் நேரடியாகவே பொருளியல் நன்மை தான் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்த நன்மை கருதிய முறையில் தனிப்பட்டவர், மேலே காட்டிய வரையறையினுள் உச்ச மட்டத்தை அடைவதற்கு முன்னுரிமை வழங்கிப் போட்டியிடுவதும், உச்ச மட்டத்தை எட்டுவது சாத்தியமில்லாதுவிடின் படிநிலை அமைப்பின் இறங்கு வரிசைக்கேற்பத் தராதர ரீதியாகத் திருப்திப்பட்டுக் கொள்வதும் தாம் ஈழத் தமிழர் கல்வி முன்னேற்றத்தினதும் சமூகச் செல்நெறியினதும் முக்கிய அம்சங்களாயின.

இத்தகைய போக்கினைப் பொருளாதார ரீதியான சாத்தியங்கள் மனித வளத்துடன் மாத்திரம் பெரிதும் மட்டுப்படுத்தப்படுவதன் மூலம் ஏற்படும் ஒரு விளைவென வர்ணித்தோம். ஆனால், இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், அவ்வாறான வளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை

இல்லாதிருந்த சூழ்நிலைகளிற்கூட ஈழத்தமிழர் இதே போக்கினை வெளிப்படுத்தத் தலைப்பட்டமையாகும். உலகின் பல பாகங்களிலும் புலம் பெயர்ந்திருக்கும் ஈழத்தமிழரிடையே இந்தப் பண்பினைத் தெளிவான முறையில் இனம் கண்டு கொள்ள முடியும். அங்கெல்லாம் ஏனைய கல்வி நெறிகளுக்கான பொருளாதார வாய்ப்புகள் மலிந்திருக்கும் ஒரு நிலையிலும் மருத்துவக் கல்விக்குத் தான் மற்ற எல்லாவற்றையும் விட அதிக முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. ஆகவே, தொழின்மை நிலைக் கல்விக்கு ஈழத்தமிழர் போட்டியிடுவதென்பதும் அதனுள்ளும் மருத்துவக் கல்விக்கு ஏனையவற்றை மீறிய முக்கியத்துவம் வழங்குவதென்பதும் தனிப்பட்ட தன்மை கொண்டு முழுச் சமூகத்தையுமே ஊடுருவி அரவணைத்துள்ளது. அதிலிருந்து விடுபடுவதென்பது அத்துணை சுலபமானதல்ல என்பதைத் தான் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர் மத்தியிலும் இப்போக்கு ஊடறுத்திருப்பது நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

## தரப்படுத்தல் மூலமான தாக்கங்கள்

எனினும், சமூகத்தின் மத்தியிலான இத்தகைய கல்விசார் போட்டி கூட மருத்துவக் கல்விக்கான முன்னுரிமை ஈழத் தமிழர் சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கக் கூடிய பாதிப்புக்களைச் சரியான முறையில் இன்னமும் வெளிக்கொணர்ந்திருப்பதாகக் கூறமுடியாது. நாம் ஏலவே முன்வைத்த விபரங்களிலிருந்தே அத்தகைய பாதிப்புக்களை விளக்க முடியுமாயினும், அவற்றை மிக மோசமான ஒரு முறையில் தூண்டி விட்ட இன்னொரு வளர்ச்சியைச் சுட்டிக்காட்டிப் பாதிப்புக்களை அதன் பின் எடுத்துக் கொள்வது அவற்றின் தன்மையையும் தாக்கத்தையும் நன்கு தெளிவு படுத்த உதவும். இந்த வளர்ச்சி தான் இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கான மாணவர் அனுமதியில் 1970களின் ஆரம்பம் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட "தரப்படுத்தல்" முறையாகும்.

பல்கலைக்கழக அனுமதியிலான தரப்படுத்தல் என்பது ஈழத் தமிழர் மீது பல நிலைகளிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் நன்கு அலசப்பட்டதொரு விடயமாகும்.[2] எனினும் எம்மைப் பொறுத்தவரை இங்கு முக்கியமான தென்னவெனில், அது ஈழத்தமிழர் கல்வியின் பொருளியல் மீது ஏற்படுத்த முற்பட்ட பாரிய தாக்கமேயாகும். கல்வியைப் பயன்படுத்தி ஈழத்தமிழர் பொருளாதார மேம்பாட்டுக்காகப் போட்டியிடக் கூடிய பரப்பிலான வாய்ப்புக்களின் எண்ணிக்கையைத் தரப்படுத்தல் மிகவும் குறுக்கி விடுவதாயிருந்தது. ஆகவே, இத்தகைய நிரம்பற் குறைவு

இயல்பாகவே கல்வி மூலமான போட்டியைப் பெரிதும் கூர்மைப் படுத்துவதாக அமைந்தது. அதற்கு முன்னதாகவே, 1956ம் ஆண்டு "சிங்களம் மாத்திரம்" சட்ட அமுலாக்கத்தினாலும், இலங்கை அரசாங்கங்களின் ஈழத் தமிழருக்கெதிரான இனத்துவப் பாரபட்சக் கொள்கைகளினாலும், கல்வியைப் பயன்படுத்தி ஈழத்தமிழர் பெற்றுக் கொண்டிருந்த பொருளாதார வாய்ப்புக்கள், ஒரு பொதுநிலையில், மிகவும் அருகிப் போயிருந்தன. இந்நிலையில் அவர்களுடைய கவனம், இன்னமும் அரசாங்கக் கொள்கைகளினாற் பெருமளவு பாதிக்கப்படாதிருந்த, தொழின்மை நிலைப்பட்ட பதவிகளின் மீது கூடியளவுக்குத் திரும்பி யிருந்தது. அதனால், அவற்றுக்கான ஈழத்தமிழர் மத்தியிலான போட்டி ஏற்கனவே பெருமளவுக்குக் கூர்மையடைந்திருந்தது. ஆனால், தரப்படுத்தல் முறையின் அறிமுகம், தொழின்மைக் கற்கை நெறிகளின் மீதும் அவற்றின் பதவிகள் மீதும் ஈழத்தமிழருக்குச் சாதகமான முறையில் இது வரை நீடித்திருந்த நிலைமை மீதான அரசாங்கத்தின் கவனக் குறைவை இல்லாமலாக்கி விட்டது. தொழின்மைக் கற்கை நெறிகளைத் தரப்படுத்தலைப் பயன்படுத்தி இலக்கு வைப்பதன் மூலம் அரசாங்கம் அவற்றின் இறுதியில் ஈழத் தமிழருக்குக் கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்புக்களைப் பெரிதும் குறைத்து விட்டிருந்தது. இவ்வாறு குறுக்கப்பட்ட வாய்ப்புக்களை ஈடு செய்யக் கூடிய மாற்றுச் சந்தர்ப்பங்கள் எதுவுமற்ற நிலையில், தமிழர் தமக்கென ஒதுக்கப்பட்ட ஒரு தொகைப் பதவிகளுக்கு மேலும் கூரிய ஒரு முறையிற் போட்டி போடலாயினர். இத்தகைய போட்டியிற் பெரும்பான்மையான இளைஞரின் தோல்வி நோக்கிய அசைவு ஈழத்தமிழர் அரசியலை ஈற்றில் அதன் தீவிர கட்டமொன்றுக்கு எடுத்துச் சென்றதென்பது ஈழத்தமிழரின் கிட்டிய கால வரலாறாகும். ஆனால், இந்த வரலாறு ஒரு புறமிருக்கத் தமிழர் மத்தியிலான அகநிலைப் போட்டி அவர்களது கல்வியின் பொருளியலிலும் குறிப்பிடத்தக்க சில திரிபு நிலைகளுக்கு இடமளித்திருந்தது.

இத்தகைய திரிபு நிலைகளின் பொதுவான தன்மை கல்விப் போட்டி மேலும் கூர்மையடைவதை வெளிப்படுத்தும் வகையில் தான் அமைந்திருந்தது. இவ்வாறான மேலதிக கூர்மைப் போட்டியின் வெளிப்பாடு களுள் ஒன்று தான் பாடசாலைக் கல்வி முறைமை மீது, ஒப்பீட்டு ரீதியாக, உண்டாகிய நம்பிக்கைக் குறைவும் அதனைத் தனியார் கல்வி நிலையங்களின் மீது தங்கியிருப்பதன் மூலம் ஈடு செய்ய முயன்றமையும் ஆகும். இதன் மூலம் ஏற்பட்ட சமூகப் பொருளாதாரத் தாக்கங்கள் முக்கியமானவையெனினும், அவை தனியான ஓர் ஆய்வுக்குரியதொரு

கருப் பொருளாகும். இங்கு எமது அக்கறை, திரிபு நிலையினைத் தூண்டி விடும் வகையில், ஏற்கெனவே மருத்துவக் கல்வி பொறுத்து நிலவியிருந்த குறிப்பிட்ட போட்டிப் பரிமாணத்தின் மீது ஏற்பட முற்பட்டிருந்த விரிவுத் தாக்கமேயாகும்.

தொழின்மை நிலைப்பட்ட பதவிகளுள் மருத்துவக் கல்வி மூலமானவை உச்ச நிலையிலிருந்தமை பற்றி ஏலவே குறிப்பிட்டோம். அதனால், மருத்துவக் கற்கைநெறி பெரிதும் பிரபல்யம் பெற்றுப் பெற்றோரினதும் பாடசாலைகளினதும் ஒத்துழைப்புடன் திறமையான மாணவர்களைக் கவர்ந்து கொண்டதென்றும் கூறினோம். தரப்படுத்தல் மூலமான மாறுபட்ட கல்விச் சூழலில், இவ்வாறான நிலைமைகள் பொறுத்து எத்தகைய மாற்றமும் ஏற்படாதிருந்த காரணத்தினால், மருத்துவக் கற்கைநெறிக்கு அநுமதி பெறுவதற்கான போட்டி இப்போது கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு அதிகரித்திருந்தது. முன்பு திறமை வேண்டப்பட்ட விடத்து, இப்போது அதீத திறமை அவசியமாயிருந்தது. முன்பு உழைப்பு வேண்டப்பட்டவிடத்து இப்போது கடின உழைப்பு அவசியமாயிற்று. இவற்றுடன் கூடவே, ஒழுங்கான முயற்சியும் மனஉறுதியும் கூட முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு இப்போது அத்தியாவசியமாக வேண்டப்பட்டன. இவை எல்லாவற்றுக்கும் புறம்பாக ஓரளவான அதிஷ்டமும் தேவைப்பட்டதெனலாம். இதிலிருந்து வெளிப்படும் யதார்த்த நிலை உண்மை யாதெனில், இத்தகைய எதிர்பார்க்கைகளுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்ட பதின்ம வயதிலான ஈழத்தமிழ் மாணவர், தமது பதின்ம வயதிற்கான இயல்பான நடத்தை, பொழுதுபோக்கு, மகிழ்ச்சி, கேளிக்கை என்ற-அனைத்தையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு (மருத்துவக் கல்விக்கான முன்கூட்டிய) படிப்பில் மாத்திரம் முனைப்புடன் ஈடுபட வேண்டியிருந்தது என்பதேயாகும். அவ்வாறு ஈடுபடுபவர்களிற் கூடப் பலர் நாம் இறுதியாகக் குறிப்பிட்ட அதிஷ்ட தேவதையின் கிருபையின்றி மயிரிழையிற் சந்தர்ப்பத்தைத் தவற விடுவதென்பது தான் யதார்த்தத்தினுள்ளான இன்னொரு யதார்த்தம் என்பதாகவும் ஆகிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய, பல வகைகளிலும் வேறுபட்ட, ஒரு நடத்தைப் போக்கிற்குத் தம்மை உட்படுத்தத் தயாராயிருந்த மாணவர் ஒரு "தனித்துவம்" பொருந்திய குழாமாக மாணவர் மத்தியில் மாத்திரமன்றி ஈழத்தமிழர் சமூகத்தின் மத்தியிற் கூட வளர முற்பட்டிருந்தனர். ஆகவே, அதற்கேற்ப அவர்கள் இந்த இரு பரிமாணங்களிலும் பௌதிக, உளவியல் ரீதியாக ஒரு சிறப்புநிலையில் இயங்கத் தலைப்பட்டனர். இம்மாணவர் குழாமின் தனித்துவப் போக்கிற்கு, அவர்களது திறமை நன்கு வெளிப்பட

வேண்டுமென்ற ஆர்வத்தினால் உந்தப்பட்ட பெற்றோரினதும் பாடசாலைகளினதும் ஆதரவு பெரிதும் கிடைக்கப் பெற்றது. சுருக்கமாகக் கூறின், இம்மாணவர் குழாமுடன் தொடர்புடைய பலரும், குறிப்பாகப் பெற்றோரும் பாடசாலை ஆசிரியரும், அதன் முயற்சிக்கு உறுதுணையாகச் செயற்பட்டனர்.

## மருத்துவக் கல்வியும் சமூக நோக்கும்

இவ்வாறாகத் தமது சமூகத்திலிருந்து புறம்பாக்கப்பட்டு எறியப் படுத்தப்பட்ட மாணவர், தமது மேதகவுரிமைக் குறிக்கோளாகிய மருத்துவ பீடத்திற்கு அநுமதி பெறுவதென்பது ஈடேறுமாயின், அத்தகைய "எறிய" நிலைமையானது பெருமளவிற்கு நிரந்தரத் தன்மை பெறுவதற்கு இட்டுச் செல்லப்படுகின்றது. அவர்கள் தாம் சமூகத்தின் ஒரு பகுதியென்பதை மறந்து, தாம் தம்மைச் சூழ்ந்துள்ள சராசரி சமூகத்தை விட உயர்வானவர்கள் என்ற எண்ணத்தினால் உந்தப்பட்டவர்களாகவே நடக்கத் தலைப்படுகின்றனர். முதலில் ஏனைய பல்கலைக்கழக மாணவர் சமூகத்திலிருந்து தம்மை விடுபட்டவர்களாகப் பார்த்துப் பின்பு படிப்படியாகத் தமது தராதர உயர்வுக்கேற்ப, அதாவது டாக்டர், சிறப்பு நிலையிலான நிபுணர் போன்ற ஏறுவரிசைக்கேற்ப, முழுநிலையில் ஈழத்தமிழர் சமூகத்திலிருந்தே தம்மைப் பிரித்து ஓர் உயர்நிலையில் வைத்துப் பார்க்க முற்பட்டனர். அவர்கள் தொழின்மை நிலையிலிருந்து மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியும் அவர்களைச் சமூக மட்டத்திலிருந்து பிரித்துச் சிறப்பான ஒரு குழாமினுள் எடுத்துச் சென்றதேயன்றிக் கீழ் நோக்கிப் பரந்த சமூகத்தினுள் அவர்களைக் கொண்டு வருவதாயிருக்க வில்லை.

அதன் ஒரு முக்கிய வெளிப்பாடாக அவர்களது சமூகம் நோக்கிய அணுகுமுறையும் முற்றாகவே ஒரு திரிபு நிலைக்குட்படுத்துவ தாயிருந்தது. அத்திரிபு நிலையின் ஒரு முக்கிய அம்சம் யாதெனில், தமது வெற்றியும் முன்னேற்றமும் முற்றிலும் தமது தனிப்பட்ட ஒரு சாதனை யென்றே அவர்கள் கணிக்கத் தலைப்பட்டமையாகும். அவற்றிற் சமூகத்தின் ஒரு பங்களிப்பும் உண்டென்பதை அவர்களிற் பலர் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கவில்லை. குறிப்பாக, ஒரு பொருளியற் கண்ணோட்டத்தில், தாமும் சமூகத்தின் ஏனைய மாணவரைப் போன்றே சமூகம் மேற்கொண்ட செலவின் ஓர் அறுவடை தான் என்பதை அவர்கள் உணர முன்வரவில்லை. அதன் விளைவாகச் சமூகத்திற்கான தமது கடப்பாடு ஒன்று உண்டென்பதற்குப் பதிலாகச் சமூகம் தான் தம்மீது

தங்கியுள்ளதென்ற ஓர் எண்ணப்பாங்கினை அவர்கள் வளர்த்துக் கொண்டிருந்தனர். இத்தகைய சிந்தனையின் பின்னணியில் இழையோடிக் கொண்டிருந்த மறைமுகமான எதிர்பார்க்கை யாதெனில், தமது சொந்தத் திறமை, அறிவு என்பவற்றைச் சேவையாகப் பெற்றிருப்பதற்குச் சமூகம் தான் தமக்குக் கடமைப்பட்டுள்ளது என்பதேயாகும். இந்நிலையிற் பரந்த மட்டத்திலான சமூக அங்கத்தவரைத் தமது சகபாடியாக, நண்பனாகப் பார்ப்பதற்குப் பதிலாகத் தாம் சமூகத்தின் ஓர் உயர் தானத்திலிருப்பவர் என்ற உணர்வுடன் சமூகத்தைக் கீழ் நோக்கிப் பார்க்கும் ஒரு பண்பு தான் மேலோங்குவதாயிருந்தது. அவ்வாறு நண்பனாகவோ சகபாடியாகவோ பார்ப்பதாயின், அது குறிப்பிட்ட தனிநபரின் தனிப்பட்ட சொந்த இடையுறவுகளின் வழி அவரது உறவினன், நண்பன், ஊரவன், அயலவன், ஆசிரியன் என்ற இது போன்ற ஏதோ ஒரு வகையான தகைமை பெற்றிருக்க வேண்டும்.

இத்தகைய போக்குக் கொண்ட நடத்தையின் நடைமுறை ரீதியான வெளிப்பாட்டை எமது மருத்துவ மனைகளில் டாக்டருக்கும் நோயாளிக்கு மிடையிலான உறவில் வெகு இலகுவாகக் கண்டு கொள்ள முடியும். நாம் கட்டுரையின் தொடக்கத்திற் குறிப்பிட்ட காரணங்களினால் டாக்டர் களுக்கான பற்றாக்குறையும் அதன் மூலம் ஏற்பட்டுள்ள கேள்வி உயர்வும், தொடர்ந்து தொழில் செய்யும் சாராரின் கேள்வியையும் மதிப்பினையும் மேலும் உயர்த்தி நிலைமையைப் பன்மடங்கு மோசமாக்கியுள்ளன வெனலாம்.

சமூகம் நோக்கிய இந்த மேல்நிலைப் பார்வை எந்தளவுக்கு உண்மையுடையதென்பதை, அபிவிருத்தியடைந்த மேற்கத்திய பின்னணியில் மருத்துவ சேவை எவ்வாறு இயங்குகிறதென்பதை ஒப்பு நோக்கும் போது தெளிவாகக் கண்டு கொள்ள முடியும். இங்கெல்லாம் மருத்துவத் துறை என்பது ஏனைய பல தொழில் வசதிகளுள் ஒன்றாகவே கருதப்படுவது மாத்திரமன்றி எந்தச் சமூகத்தில் டாக்டர்கள் தொழிற்படுகின்றனரோ அந்தச் சமூக மட்டத்திற்கு அவர்கள் கீழிறங்கி அதன் சாதாரண அங்கத்தவருடன் இணைந்து அவர்களுடைய தேவைகளை அறிந்து செயற்படுவதொன்றாகவே வளர்ந்துள்ளது. தமது கல்வித் தகைமையும் திறமையும் எவ்வளவு உயர்வாயிருப்பினும், மருத்துவக் கல்வியின் சேவைசார் அம்சங்களில் அக்கறையுடையவர்கள் மாத்திரம் தாம் அதனைத் தொழின்மை நிலையில் தேர்ந்தெடுக்க விழைகின்றனர். அதற்கேற்பச் சமூக அங்கத்தவராகிய பொதுமக்களை மாத்திரமன்றி, மருத்துவ மனைகளிலும் ஏனைய எல்லா ஊழியரையும் ஒரே சேவையிலான சகபாடிகளாகவே கொண்டு பலதரப்பட்ட கடமைகளையும்

டாக்டர்களும் பகிர்ந்து கொள்கின்றனர். முற்றிலும் மாறுபட்ட நோக்குக் கொண்ட இவ்வாறான அபிவிருத்தியடைந்த ஒரு சூழலில் எம்மவர், (பெரும்பாலும் தமது சொந்தத் தெரிவின் அடிப்படையிற் குடிபெயர்ந்து), தொழிற்பட முற்படும் போது, அது அவர்களுக்குப் பெரிதும் ஆச்சரியம் தருவதாயிருப்பதுடன் புதிய சூழலுக்குத் தம்மை விரைந்து சரிப்படுத்திக் கொள்ளும்படியும் அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதே ஆச்சரியம், மறுகோடியில், மேற்கத்திய சூழலிலிருந்து சேவை நோக்குக் கருதி எமது பகுதிகளிற் செயற்படும் டாக்டர்களுட்பட்ட வைத்திய குழாம்களின் சமூகம் நோக்கிய அணுகுமுறையையிட்டும் ஏற்படுவதைக் காணலாம். அவ்வாறு வருவோர் பரந்த சமூகத்திலான சாதாரண மக்களின் தேவைகள், பிரச்சினைகளையிட்டு உணர்வுபூர்வமாக அறிந்து கொள்வதற்கு எடுக்கும் முயற்சி எம்மவரைப் பல சமயங்களில் வியப்புக்கு ஆளாக்குகின்றது. அதுவே, சாதாரண செயற்பாடு என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். ஆனால், இவ்வாறான சிரமத்தின் மத்தியிற் பலர் தாம் எதிர்கொள்ளும் நிதர்சனம் ஒரு புறநடை என்று கொள்ள முற்படுகின்றனரேயன்றித் தமது நோக்கும் சொந்தச் சமூகத்தினுள்ளான தமது செயற்பாடும் தான் உண்மையான புறநடைகள் என்பதை நம்ப மறுக்கின்றனர்.

நாம் மேலே விளக்கியுள்ளவாறு, மருத்துவக் கற்கை நெறிக் கூடாகச் செல்வோர் சமூகத்திலிருந்தே ஊற்றெடுத்தாலும், அதனின்றும் விடுபட்டுச் செல்லும் ஒரு முறையில் தான் தமது அலுவல்களில் முன்னேறிக் கொண்டிருந்தனர். எனினும், அவர்களது தொழின்மை நிலையிலான கடமைகள் சமூகத்தின் மத்தியிலேயே மேற்கொள்ளப்பட வேண்டி-யிருந்ததால், சமூகத்துடனான ஊடு தொடர்பினைக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்வோர் எவ்வகையிலும் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை. இந்நிலையில் தான் சமூகத்துடனான அவர்களது உறவு ஒரு மேல் நிலையிலிருந்து சமூகத்தைப் பார்க்கும் வகையில் அமைந்திருந்தது. இத்தகைய தன்மை கொண்டதொரு போக்கிற் சமூகத்துக்கான கடப்பாட்டுணர்வொன்றை அவர்கள் மத்தியில் ஊடுருவவோ அல்லது ஊறிச் செல்லவோ முடியவில்லை. எனவே, சமூகத்துடன் சேர்த்துத் தம்மை இனம் காணாத நிலையில், தேவையேற்படின் சமூகத்துடனான தொடர்பினைத் துண்டித்து அதனை விட்டுச் செல்வதும் அத்துணை பாரியதொரு விடயமாகவும் அவர்களைப் பொறுத்தவரை இருக்கவில்லை. அதனாலேயே எடுத்த எடுப்பிற் சமூகத்தை விட்டுப் போவது அவர்களுக்குச் சுலபமாகின்றது. இவ்வகையில் ஒரு சில நாட்கள் கூடத் தம்மை உற்பவித்த சமூகத்தின் மத்தியிற் கடமையாற்றாது விடுபட்டுப்

போனது மாத்திரமன்றி அதனை ஒரு சாதனையாகக் கருதிப் பெருமைப் பட்டுக் கொண்ட எமது மருத்துவப் பட்டதாரிகள் பலரை நான் வெளிநாடு களிற் சந்திக்கவும் நேரிட்டுள்ளது.

## மருத்துவக் கல்வியும் போதனை மொழியும்

மருத்துவத் துறையைச் சார்ந்தோர் தமது சமூகத்திலிருந்து விலகிச் செல்வதைத் தூண்டி விட்ட மற்றொரு காரணி மருத்துவக் கல்விக்கான போதனை மொழி இன்னமும் ஆங்கிலம் என்பதாக நீடித்திருப்பதாகும். தாய்மொழிக் கல்வி சிறந்ததென அங்கீகரிக்கப்பட்டு பல கற்கை நெறிகளைப் பொறுத்து அது அமுலாக்கப்பட்ட நிலையிலும், இலங்கையிலான மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரை அது ஒரு போதும் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஏனைய சில கற்கைநெறிகள் விடயத்திலும் அதேநிலைமை காணப்பட்டதென எதிர்வாதம் புரிவது சாத்தியமானது தான். ஆனால், அதுவே எந்த வகையிலும் சரியானதென்று ஏற்றுக்கொள்ள முடியாததென்பது ஒரு புறமிருக்க, மருத்துவக் கல்வி விடயத்தில் மொழி ஒரு தனித்துவத் தன்மை பொருந்தியதாயிருப்பதைப் பலரும் உணருவதில்லை. மருத்துவத் துறை, நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியவாறு, ஏனைய கற்கைநெறிகளைப் போன்றன்றி, மனித உடலின் பிரச்சினைகள் பற்றியதாகவும் அம்மனிதனை உள்ளடக்கிய சமூகத்தின் உடல், உள நலன் பற்றியதாகவும் விளங்கி, அவ்வகையில், எல்லா மக்களுடனும் நேரடியாக ஊடுதொடர்பு கொள்வ தொன்றாகும். எனவே, தாம் இயங்கும் சமூகத்தின் மக்கள் பேசும் மொழியில் விடயங்களைக் கற்றிருத்தல் தேவையானவற்றை அவர்களுக்கு எடுத்து விளக்குவதற்கும் புரிய வைப்பதற்கும் இலகுவான-தென்பதில் ஐயமில்லை. ஆனால், இலங்கையில், ஏனைய பல காலனித்துவ நாடுகள் போன்று, ஆரம்பத்திலிருந்தே இந்த அம்சம் புறக்கணிக்கப்பட்டு, மருத்துவக் கல்வி மேற்குலகுக்குச் சொந்தமானதெனக் காரணம் காட்டி ஆங்கிலமே போதனை மொழியாக நீடித்து வந்துள்ளது. எனினும், மேற்குலகுக்குச் சொந்தமான தத்துவங்கள் மேற்குலக மொழியில் தான் கற்பிக்கப்பட வேண்டுமென்ற எந்த ஒரு நியதியும் இல்லை. இது ஏனைய கற்கைநெறிகளைப் பொறுத்தவரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், ஒப்பீட்டு ரீதியில், அவற்றை விடச் சமூக மட்டத்திற் கூடியளவு நடைமுறைப் பயன் கொண்ட மருத்துவக் கல்வி விடயத்திற் பூரணமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஈழத்தமிழரின் நிலையில், நாம் ஏலவே முன் வைத்த காரணங்களினால் அருகத் தொடங்கியிருந்த சமூக உணர்வினை,

ஆங்கில மொழி மூலமான போதனை மேலும் குறைத்து விடுவதற்கான ஒரு தூண்டுகோலாகச் செயற்பட்டுள்ளது. ஏனெனில், அது வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெறுவதைப் பெரிதும் சுலபப்படுத்தியது மாத்திரமன்றித் தமது சமூகத்திற்கு மேலாக நிற்கும் மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணப்பாங்கிற்கு மேலும் துணை போவதொன்றாகவும் விளங்கியது.

உண்மையில், மருத்துவக் கல்வியைத் தாய்மொழியில் வழங்குவது பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு தருணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே அடையப்பட்டு விட்டதென்றே கூறலாம். சமூகத்தின் மத்தியிற் சமூகத்துக்கு நேரடியாகவே பிரயோகிக்க வேண்டிய ஒரு கற்கைநெறியை அவர்களது மொழியிலன்றி அவர்களுக்கு அந்நியமான ஒரு மொழியில் இனியும் போதிப்பதில் அர்த்தமில்லை. தமிழுக்கு அதற்கான திறமை, தகைமை, நெகிழ்தன்மை என்பன இல்லை என்ற வாதங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், அனைத்துக் கற்கைநெறிகளுமே தமிழிற் போதிக்கப்பட்டு வந்துள்ள ஒரு நிலையிற் சமூகத்துக்கு மிக அண்மித்த மருத்துவக் கல்வி மாத்திரம் அவ்வாறு செய்யப்பட முடியாததொன்றெனக் கூறுவதில் நியாயமில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகள் ஏறக்குறைய அனைத்தும் வளர்முக நாடுகள் பலவும் தத்தம் மக்களது தாய்மொழியிலேயே மருத்துவக் கற்கைநெறி உட்பட்ட எல்லாக் கற்கை நெறிகளையும் போதிப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தமது தாய் மொழியை முன்னிலைப்படுத்தித் தமக்கென அடிப்படையான அரசியல் அமைப்பொன்றையும் அதனை ஆதாரமாகக் கொண்ட சமூக பொருளாதாரக் கட்டமைப்பொன்றையும் உருவாக்கிக் கொள்வதற்கான ஆயத்த நிலையிலிருக்கும் ஈழத் தமிழர் மாத்திரம் மருத்துவக் கல்வி உட்பட்ட தமது பல்வேறு கற்கை நெறிகளையும் இன்னமும் அந்நிய மொழியொன்றிற் போதனையை மேற்கொண்டு, அதனைக் கற்றோர் சமூகத்திலிருந்து ஏறக்குறைய முற்றாகவே உளவியல் ரீதியாகவும் பெருமளவுக்குப் பௌதிக நிலையிலும் அந்நியப்பட்டுத் தம்மைத் துண்டித்துக் கொள்வதைத் தொடர்ந்து அநுமதிக்க முடியாது. தாய்மொழியாம் தமிழிலேயே போதனையை மாத்திரமன்றி முடிந்தவரை ஆய்வு வேலைகளையும் மேற்கொள்வதன் மூலம் மாத்திரம் தான் பொதுவாக ஈழத்தமிழ்ப் பிரதேசங்களிலான பல்கலைக்கழகங்களும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தாம் உருவாக்கும் மனித வளங்களைத் தமது தாயகப் பிரதேசத்துக்கெனத் தக்க வைத்துக் கொள்வதுடன் தமக்கே உரிய தனித்துவத் தன்மையுடனும் திகழ முடியும். இத்தகைய தனித்துவம் தான் பல்கலைக்கழகங்களை உலகளாவிய

நிலையிற் பிரசித்தமடையச் செய்து புகழ் பரப்புவதுடன் ஏனையோரையும் அவற்றை நோக்கிக் கவருகின்றன என்பதை உயர்கல்விச் செயற்பாடு களை நன்கு புரிந்து கொண்டுள்ள எவரும் ஏற்றுக் கொள்வர்.

இவ்வாறு செய்ய முற்படும் போது, இம்முயற்சியுடன் இணைந்துள்ள இரு பிரச்சினைகளை அவ்வத்துறை சார்ந்தோர், குறிப்பாக ஓர் எதிர்வாதம் என்பதாக, முன்வைக்க விழைர். எமது சிறப்பான கவனம் மருத்துவக் கல்வி பற்றியதென்பதால், அதனூடாக அவற்றை நோக்குவது பொருத்தமாயிருக்கும்.

முதலாவது, பாடநூல்கள் பற்றியதாகும். இப்பிரச்சினைக்கான தீர்வு உண்மையில் மருத்துவ பீடங்களிலும் அதற்குப் புறம்பாகவும் மருத்துவத் துறையிற் செயற்படும் அத்துறைசார் புத்திஜீவிகளிடம் தான் உள்ளது. அவர்கள் தமது ஏனைய சாதனைகளுடன், தமது துறைசார் நூல்களைத் தமிழில் எழுதியும், தமது பாடங்களைத் தமிழில் நடாத்தியும் சாதனை படைக்க முன்வர வேண்டும். அதனையே ஈழத்தமிழுலகு எதிர்பார்த்தும் நிற்கின்றது. தமிழில் மருத்துவ நூல்களை எழுதும் முன்னோடி முயற்சிகள் ஒருசிலவாவது எழுத்து விடயத்தில் உரிய வழிகாட்டியாகவும் தூண்டுகோலாகவும் விளங்குகின்றன என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. கிரீன் மேற்கொண்ட முயற்சி அதன் ஆரம்பம் என்றால், மிக அண்மையில், மகப்பேறு வைத்திய நிபுணர் ஆனைமுகன் எழுதியது, உளநலம் பற்றிச் சோமசுந்தரம், சிவயோகன் ஆகியோரது முயற்சி, மற்றும் முருகானந்தம் ஒரு பொது நிலையில் எழுதிவரும் நூல்கள் என்பன அவ்வாறான முயற்சி எவ்வகையிலும் நின்றுபோய்விடவில்லை என்பதற்கான எடுத்துக் காட்டுகளாகும். இத்தகைய முயற்சிகள் தங்கு தடையின்றிப் பல்கிப் பெருக வேண்டுமென்பதே எமது வேணவா. மேலும் மொழிப் பாவனையிலான திறமையும் முன்னேற்றமும் மொழிப் பாவனை யுடன் சேர்ந்தே எப்பொழுதும் வளர்ந்து கொண்டு செல்வதால், தமிழிற் கற்பிக்கத் தொடங்கிய பின்பு, அம்முயற்சியும் துணை மட்டத்திலான பிற முயற்சிகளும் மேலும் செழுமை அடையுமென்பதில் எதுவித ஐயமுமில்லை.

இரண்டாவது பிரச்சினை ஆங்கிலத்தின் நிலை என்ன என்பது பற்றியதாகும். தமிழ்மொழியிற் கல்வி அலுவல்களைப் பரிந்துரைப்பதன் கருத்து ஆங்கிலமொழியைப் புறக்கணிக்கப்படுவதென்பதல்ல. மாறாக, அதன் பாவனையை இன்னும் மேல்நிலைப்படுத்துவதேயாகும். தகுந்த அடிப்படை அறிவு, சமூகத்தின் மத்தியிலான அதன் பரவல் என்பவை பொறுத்துத் தாய்மொழி அவசியமானதெனின், அத்தகைய அறிவின் பரப்பு, விரிவாக்கம், கூர்மை, நவீனத்துவம் என்பவற்றுக்கு ஆங்கில மொழி அத்தியாவசியமானதாகும். ஆங்கிலமொழியை இரண்டாவது மொழி

யாகக் கொண்டுள்ள நாடுகள் அனைத்திலும் இதுவே உரிய செல்நெறி யாக விளங்குவதையும் காணலாம். தகுந்த அடிப்படை அறிவுக்குத் தமிழும் அந்த அறிவைச் செம்மைப்படுத்துவதற்கு ஆங்கிலமும் என்று ஆகும் போது அது சமூகத்துக்குப் பயன்படும் துறைபோகிய சிறந்த அறிஞர்களை எந்த ஒரு கல்வி நெறியிலும் ஆக்கிக் கொடுக்குமென்பது திண்ணம். இதற்கு மருத்துவக் கல்வி மாத்திரம் ஒரு விதிவிலக்காக அமைய முடியாது.

மேலும், ஆங்கிலத்தைப் போதனை மொழியாக முன்வைக்கும் எவரும் அவசியம் கருத்திற் கொள்ள வேண்டிய ஓர் அம்சம் யாதெனில், கல்வி கற்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் அதற்குரிய தகைமையை அடைவதற்கான சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்பதாகும். இன்று அவ்வாறான ஒரு சூழல் இல்லையென்பதுடன், மக்களது தாய்மொழிக்குப் புறம்பான ஒரு மொழியை அத்தகைய தரத்திற்கு உயர்த்துவதென்பது என்றுமே கடினமானதாகும். இது இலங்கையிற் பிரித்தானியர் காலத்தி லிருந்தே உணரப்பட்டதொரு யதார்த்தமாகும். அதனாலேயே அவர்கள் ஆங்கிலத்தைத் தமது தேவைகளுக்குரிய ஒரு மட்டத்தில் மட்டுப்படுத்தி ஏனையோருக்குச் சுயமொழிக் கல்வியைப் பரிந்துரைத்தனர். ஒரு காலனித்துவ அரசு அவ்வாறு செய்ய முடிந்தாலும், எல்லா மக்களையும் சமமாகக் கருத வேண்டிய சுதந்திர அரசொன்று அவ்வாறு செய்ய முற்பட்டால், அது வேண்டுமென்றே சமத்துவமற்ற சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப விழைகிறதென்றே கொள்ள வேண்டும். ஆங்கிலத்தைப் பரிந்துரைப்போர் உயர்குழாம் நலன்களைப் பேண முற்படுகின்றனரென்ற குற்றச்சாட்டுகளும் அதிலிருந்தே ஊற்றெடுக் கின்றன. உண்மையில், அவ்வாறு பேணப்பட்டும் வந்துள்ளன என்பது தான் நிதர்சனம். இன்று ஆங்கிலத்தைச் சிபாரிசு செய்பவர்கள்கூட முற்றிலும் அத்தகைய நோக்கமற்றவர்கள் என்றும் கூறிவிட முடியாது. ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக முன்னெடுக்கும் போதும் இதே பரம்பற் பிரச்சினைகள் தோன்றுவதற்கு வாய்ப்பிருந்தாலும், அக்கட்டத்தில் அவை அபிவிருத்திக்கு எதிரானதோர் இரண்டாம்பட்சத் தடையென இனம் காணப்பட்டு அதனை நீக்குவதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், ஆங்கிலத்தைப் போதனா மொழியாகப் பரிந்துரை செய்யும் போது ஓர் அடிப்படை நிலையில், முதலாவது மட்டத்திலேயே அபிவிருத்தி பிழையானதொரு பாதையிற் செல்வதற்கு வழி வகுக்கப் படுகின்றது. இரண்டாந்தர மட்டத்திலான பிரச்சினைகள் ஒரு வகையில் தவிர்க்க முடியாதவை என்பதுடன் அவற்றின் மூலமான சமூகத் தீங்கு ஒப்பீட்டு ரீதியாகக் குறைவான தென்பதும் குறிப்பிடத்தக்கது.

## வருமானப் பரிமாணம்

மருத்துவக் கல்விக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பில் அக்கல்வி கற்றோர், அதுவும் குறிப்பாக அதில் துறைபோகியோர், சமூகத்திலிருந்து விடுபடுவதைப் புட்டுக்காட்டும் ஒரு முக்கிய வெளிப்பாடு அவர்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதிற் காட்டும் அதீத ஆர்வமாகும். வருமானம் உழைப்பதற்கான சந்தர்ப்பங்களை எவரும் நன்கு பயன்படுத்த வேண்டுமென்பது பொதுவான ஓர் உண்மையாயினும், அது சமூக நன்மை என்ற வரையறைக்குள் அமைந்திருக்க வேண்டுமென்பது பொருளியல் நியதியாகும். அவ்வாறில்லாவிடில் அதனை அத்தகைய ஓர் ஒழுங்கினுள் கொண்டு வருவது அரசின் கடமையாகும். கடத்தல் வர்த்தகம் மூலமான வருமானத்தை அரசாங்கங்கள் தடை செய்வதென்பது அதற்குரிய ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆனால், மருத்துவத் துறை விடயத்தில், இலங்கை அரசாங்கங்கள் பல சந்தர்ப்பங்களில் அவ்வாறு சமூக நன்மையை நிலைநாட்டும் தமது கடப்பாட்டைச் செய்ய முடியவில்லை அல்லது செய்வதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளதென்பது தான் உண்மையாகும். மருத்துவர் வெளிநாடுகளில் வேலை தேடி ஓடுவதையோ அல்லது அவர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் செய்வதையோ, முற்றாக இல்லா விட்டாலும், கணிசமான அளவிற் கூட அவற்றினால் தடுக்கவோ கட்டுபடுத்தவோ முடியவில்லை. மருத்துவத்துறையின் புறத்திலிருந்து இதற்குக் கற்பிக்கப்படும் நியாயம். மருத்துவத் தகைமை பெறுவதற்கான கடின உழைப்பு உட்பட்ட முதலீடும் தியாகமும் ஏனைய கற்கை நெறிகளை விட அதிகம் என்பதால் உத்தம வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கான தமது பொருள்முதற் செயற்பாட்டில் தவறில்லை என்பதாகும். இந்த வாதத்தின் சரி - பிழை எவ்வாறிருப்பினும், அதனை அவர்கள், ஒப்பீட்டு ரீதியில், இலகுவாகவும் தம்மைப் பெருமளவு அலட்டிக் கொள்ளாத ஒரு முறையிலும் செய்ய முடிவதற்குக் காரணம், நாம் ஏற்கெனவே முன்வைத்த, சமூகத்துடன் ஒட்டாத அவர்களது பண்பென்றே கொள்ள வேண்டும்.

இதிலுள்ள முரண் நகையென்னவெனில், ஈழத்தமிழ்ச் சமூகமும் இத்தகைய செல்நெறியை ஏறக்குறைய முற்றாகவே ஏற்றுத் தனது மருத்துவத் துறையுடனான ஊடுதொடர்பினை அதற்கேற்ப அமைத்துக் கொள்ள விழைந்தமையாகும். சமூகம் பெருமளவுக்குத் தங்கியிருக்கும் வர்த்தகத் துறையில் எவ்வாறு அதில் ஈடுபடுவோர் தம்மத்தியிற் போட்டியிட்டுச் செல்வத்தைத் திரட்டுவதையும் அதன் மூலம் தராதர வேறுபாடுகளை அவர்கள் மத்தியிலேயே தத்தம் வெற்றிக்கேற்ப

வளர்த்துக் கொள்வதையும் சமூகம் அநுமதிக்கின்றதோ, அதே போன்று கல்விப் போட்டியில் வெற்றியடைந்தவர்களும் தமக்குகந்த முறைகளில் செல்வத்தைச் சேர்த்துக் கொள்வதை அநுமதிக்கலாம் என்ற பாணியிலேயே சமூகம் இயங்கியுள்ளதெனலாம். ஆகவே, வர்த்தகத் துறை பொறுத்த அதே எடுகோளின் அடிப்படையிலேயே, அதாவது வர்த்தகத் துறையுடன் ஊடுதொடர்பு கொள்ளும் அதே அலைவரிசையில் தான், சமூகம் மருத்துவத் துறையுடனும் ஊடுதொடர்பு கொள்ளுகின்றது. வர்த்தகத் துறையில் எவ்வாறு ஆரம்ப மூலதனம் ஒருவருடைய சொந்தப் பணமாக அமைகின்றதோ அவ்வாறே மருத்துவத்துறையிற் சொந்தக் கல்வி தொடக்க மூலதனமாகின்றது. ஆனால், ஆரம்பகால மூலதனத் திரட்டலிலான சமூகத்தின் பங்கு வர்த்தகத் துறையை விட மருத்துவத் துறையில், ஒப்பீட்டுரீதியாக. மிக அதிகமானதென்பதைச் சமூகம் கருத்திலெடுப்பதில்லை. இதனை மருத்துவத் துறையும் தனக்கு மிகுந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதெனலாம்.

மருத்துவத்துறைக்கும் சமூக சகிப்புத் தன்மைக்குமிடையிலான தொடர்பு நிலைநிறுத்தப்படுவதற்கும் தொடர்ந்து மேலோங்குவதற்கும் ஈழத்தமிழ்ச் சமூக நிறுவனங்கள் சில மருத்துவத் துறையுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவும் காரணமாயிருந்துள்ளது. ஈழத்தமிழர் மத்தியிலான சீதன முறைமை இதில் முக்கிய இடம் வகிக்கின்றது. சீதன முறைமை, ஒரு பொருளாதாரக் கண்ணோட்டத்தில், (திருமண) வாழ்க்கையை "இலவசமாக" அமைத்துக் கொள்வதற்கான ஒரு மார்க்கமேயாகும். சீதன அதிகரிப்புக்கேற்ப இலவசத் தன்மையும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கலாம். எனினும், இம்முறைமை யிலான மிகத் துரதிஷ்டமான முரண் நகை என்னவெனில், இந்த "இலவச அழைப்பு" வசதியற்றவர்களுக்கன்றி வசதியுள்ளவர்களுக்கே விடுக்கப் படுவதாகும். எனவே, இந்நிலையில், மருத்துவத் துறையில் இயங்கும் டாக்டர்கள், தமது மிகை வருமானம், சமூக செல்வாக்கு என்பவற்றுடன் சீதனச் சந்தையிலும் முன்னணியில் நிற்பதில் வியப்பில்லை. அதனைப் பெரும்பாலான மருத்துவர் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் தவற வில்லை. நாம் ஏற்கெனவே குறித்த கடின உழைப்புடன் கூடிய "கல்வி" என்ற முதலீட்டிற்கான அறுவடையின் ஒரு பகுதியாகவே அவர்கள் சீதனத்தைக் கருதுவதுடன் தமது சமூக மேலாண்மை நிலையை அது மேலும் மெருகு படுத்துகிறதென்பதையும் அவர்கள் கருத்திலெடுக்கத் தவறுவதில்லை.

எவ்வாறாயினும், ஈழத்தமிழ்ச் சமூகத்திற் சீதன முறைமையைத் தக்க வைப்பதில் மாத்திரமன்றி, அதனை மேலும் உறுதிப்படுத்துவதிலும் மருத்துவத்துறை துணை போயுள்ளதென்பது மறுக்க முடியாத கசப்பான

ஓர் உண்மையாகும். உறுதிப்படுத்துவது தொடர்பாக முக்கியமாகக் கவனிக்க் வேண்டியதென்னவெனில், மருத்துவத் துறைக் கல்விக்கான அநுமதி ஈழத் தமிழருக்கு எந்தளவுக்குக் கடினமடைந்து வந்துள்ளதோ அந்தளவுக்கு மருத்துவருக்கான சீதன அளவுகளும் அதிகரித்து வந்துள்ளன என்பதாகும். பணவீக்கத்தின் பங்களிப்புக்கு மேலாக அதன் செயற்பாடு அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நாம் ஏலவே குறித்த, சமூகத்திலிருந்து "விடுபடும்" தன்மை காரணமாக ஒரு சமூகச் சீரழிவு ஏற்படுகின்றதாயின், சீதனச் சம்பாத்தியத்தின் மூலம் தாம் இன்னொரு சமூகச் சீரழிவிற்குக் காலாகின்றோம் என்பதைக் கருத்திலெடுக்கவோ அல்லது அது பற்றி உணர்வுபூர்வமாகத் தம்மை அதிகம் அலட்டிக் கொள்ளவோ வைத்தியத் துறைப் பட்டதாரிகள் முன்வருவதில்லை. அதன் மூலம் உண்டாகும் உண்மையான சமூகத் தீங்கு யாதெனில், சமூகச் சீர்கேடொன்றைக் களைவதில், கல்வியறிவுடையவர்களில் முக்கிய சாரார் என்ற வகையில், முன்னணியில் நின்றிருக்க வேண்டிய மருத்துவத் துறை சார்ந்தோர் அதற்கு முற்றிலும் மாறுபட்டதொரு வகையிற் சீர்கேட்டுக்கு உடந்தையாயிருந்து அது மேலும் வளர்வதற்குப் பொறுப்பாயிருந்து வருவதாகும்.

## போர்க்காலமும் அதன் தாக்கமும்

இனத்துவப் போரொன்று 1980களிலிருந்து ஈழத்தமிழ்ச் சமூகத்தை ஆக்கிரமித்துக் கொண்ட போது, போர் நெருக்கடிகள் காரணமாகச் சமூக உணர்வுகள் மேலோங்கிச் சமூக ஒருமைப்பாடு-வளர்வதற்கு வாய்ப்பான சூழலொன்று உருவாக்கப்பட்டிருந்தது. இது சமூக மட்டத்திற் சாதி, பெண்நிலை போன்றவற்றின் இறுக்கத் தன்மை ஓரளவு கரைவதற்கு இடமளித்து நிறுவன ரீதியிலான சில முன்னேற்றங்கள் தென்படுவதற்கு வழி வகுத்துள்ளதென்பதிலும் சந்தேகமில்லை. எனினும், இவை நிரந்தரத் தன்மை பெறுவதற்கான கீழ்க்கட்டுமான வளர்ச்சிகள் உரிய பொருளாதாரக் கொள்கைகள் மூலம் வழி நடாத்தப்படும் பொருளாதார உருமாற்றத்தின் மூலம் தான் சாத்தியமாகும். ஆனால், அவ்வாறானதொரு நிலை கொள்கை வகுப்பதற்கான அரசியல் இறைமையைப் பெற்றுக் கொள்வதன் வழிதான் உருவாக வேண்டும். அதுவரை சமூக மாறுபாடுகள் ஒரு தற்காலிகத் தன்மை கொண்டவையாகவோ அல்லது ஓர் எல்லை நிலையில் ஏற்படுபவையாகவோ தான் இருக்க முடியும். அது மாத்திரமன்றி, மக்களுக்கான பொருளாதாரச் சாத்தியங்கள் மேன்மேலும் குறுகிச் சென்றுள்ள ஒரு சூழ்நிலையில், அவர்கள் மத்தியிலான பொருளாதாரப்

போட்டி ஒரு தனிப்பட்ட மட்டத்தில் மேலும் கூர்மையடைவதற்கே இடம் ஏற்பட்டுள்ளது. இது ஈழத்தமிழரின் பிரதான பொருளாதாரச் சாத்தியமாகத் தொடர்ந்திருந்து வரும் கல்வித் துறையில் நன்கு பிரகாசிப்பதொன்றாகும். ஆகவே, கல்வித் துறையில் இன்னமும் உன்னத நிலையில் வீற்றிருக்கும் மருத்துவக் கல்வித் தகைமைகள் முன்னணி நிலையில் தொடர்ந்து இருந்து வருகின்றன என்பதிலும் சந்தேகமில்லை.

ஈழத்தமிழ்ச் சமூகத்தின் கல்விப் போட்டி பற்றியும் அப்போட்டியில் வெற்றி பெற்று மருத்துவபீடத்தை அடைந்தவர்கள் பொருள்முதல் ரீதியாகவும் அதற்குப் புறம்பாகவும் உத்தம நன்மை பெறும் குறிக்கோளுடன் இயங்கினார்கள் என்றும் குறிப்பிட்டோம். போர்க்காலச் சூழ்நிலைகள் அத்தகைய செல்நெறியிலிருந்து மருத்துவபீட மாணவர் இம்மியளவும் வழுவிச் செல்வதற்கு இடம் கொடுத்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் போர்க்காலமொன்றில் தமக்குத் துணை புரியக் கூடிய வளர்ச்சிகளையும் சக்திகளையும் இனம் கண்டு அவற்றிற்கேற்பத் தமது நடத்தைப் போக்கினைச் சரிப்படுத்திக் கொள்வதிலும் நடத்தைத் தந்திரங்களை வகுத்துக் கொள்வதிலும் தான் கண்ணும் கருத்துமாயிருந்தனரெனலாம். அத்தகைய நடவடிக்கைகளின் தராதரம், விழுமியம், நீதி - நியாயம் என்பவை பற்றி அவர்கள் அதிகமாகத் தம்மை அலட்டிக் கொள்ளத் தயாராயிருக்க வில்லை. அவர்களைப் பொறுத்தவரை எத்துணை விரைவாகப் படித்து முடித்து வருமான முழைக்கும் தகைமையுடையவராகத் தம்மை ஆக்கிக் கொள்ள முடியுமோ அத்துணை விரைவாக அதனைச் சாதிக்க விரும்பினர். ஆகவே, தமக்குதவக் கூடிய சமூக மட்டத்திலான சங்கதிகள் சில பிரச்சினைக்குரியவையாக இருக்குமாயின், அதுபற்றி மாணவர் தமக்குள் ஒரு மறைமுக நிலையில் அநுதாபப்பட்டுக் கொண்டாலும், அவற்றை வெளிப்படையாக எதிர்த்துத் தமது முன்னேற்றத்தை மழுங்கடித்துக் கொள்ள அவர்கள் தயாராயிருக்கவில்லை.

ஈழத்தமிழ்ச் சமூகத்தை நோக்கின், சமூகத்தின் எதிர்பார்க்கை, மருத்துவத் துறை சார்ந்தோரின் சாதாரண நடத்தையுடன் ஒத்திசைவு பெறுவதொன்றாகவே இருந்து வந்துள்ளது. இந்த நடத்தை - எதிர் பார்க்கைக்குப் புறம்பான முறையில் யாராவது இயங்கினால் அதனைச் சமூகம், ஒரு முரண்நகை எனப்படக் கூடிய விதத்தில், ஒரு வகை வியப்புடன் மட்டும் பார்த்துக் கொண்டது. அதே நேரத்தில், அப்புறநடை யிலிருந்து ஊற்றெடுத்த நன்மைகளை அது அநுபவிக்கவும் தவறவில்லை.

அதற்கான காரணம் யாதெனில், ஈழத்தமிழரிடையே "சமூகம்" என்ற ஒன்றைச் சாதி, சமயம் போன்ற சில சமூக நிறுவனங்களின் அடிப்படையில் இனம் கண்டு கொள்ள முடிந்தாலும், பொருளாதார நடத்தை மட்டத்தில் அது பெயர்க்கப்பட்டிருக்கவில்லை. கட்டுரையின் தொடக்கத்தில் நாம் குறிப்பிட்ட அரசியற் பொருளாதார காரணங்களின் நிமித்தம் தம்மத்தியில் தனிநிலையில் ஒருவருடனொருவர் போட்டி போடும் ஒரு கூட்டத்தின ராகவே ஈழத்தமிழர் வளர்ந்திருந்தனர். ஆகவே, போட்டியை விட்டுக் கொடுத்து ஒருவரோ ஒரு சிலரோ இயங்க முற்பட்டால், அது பெரும்பாலானவர்களின் செல்நெறிக்கு முரணான ஒரு புறநடையாக நோக்கப்பட்டதேயன்றிச் சமூக மட்டத்தில் அதிகளவான எதிர்த் தாக்குதல் எதனையும் அது ஏற்படுத்தியிருக்கவில்லை. அதாவது, புறநடையைச் சமூகத்துக்கான ஒரு வழிகாட்டியாகக் கொண்டு அதனையே மருத்துவத் துறைக்கான பொதுநிலையாக மாற்றுவதற்குரிய உணர்வோ உந்துதலோ சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டிருக்கவில்லை.

## முடிவுரை:
## தீர்வு பற்றிய சில சிந்தனைகள்

ஈழத்தமிழருக்கும் மருத்துவக் கல்விக்குமிடையிலான தொடர்பு, ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்டது போன்று, அவர்களது சமூகத்தில் ஆழமாக வேரோடியுள்ள சில முரண்பாடுகளையும் அவற்றின் அடிப்படையிற் சமூகம் கொண்டுள்ள குறைபாடுகளையும் வெளிக் கொணர்வதற்கு உதவியுள்ளதென்பதைக் கட்டுரை நிறுவியுள்ளது. இன்று ஈழத்தமிழர் தமக்கே உரித்தான அரசியற் பொருளாதாரமொன்றைத் தோற்றுவித்து அதன் அடிப்படையிற் சமூகப் பொருளாதார அமைப் பொன்றையும் நிறுவுவதில் வெற்றி காணும் ஒரு தறுவாயில் நின்று கொண்டிருக்கும் போது முரண்பாடுகளையும் குறைபாடுகளையும் இனம் காண்பதுடன் மாத்திரம் அமைந்துவிடாது, அவற்றிற்கான தீர்வுகள் பற்றியும் சிந்திப்பது அவசியமாகின்றது. அதன் மூலம் தான் ஈழத்தமிழர் சமூகத்திற்கான மருத்துவத் துறையின் பங்களிப்பினையும் உரிய வகையில் திட்டமிட்டுக் கொள்ள முடியும்.

தீர்வு பற்றிய சிந்தனைகள் சில ஆங்காங்கே பிரச்சினைகளுடன் இணைந்த எண்ணம் முன்வைக்கப்பட்ட போதும், தீர்வுகளை முறைப்படி அணுகும் போது, அவற்றை நீண்ட காலத் தீர்வுகள் என்றும் குறுகிய காலத் தீர்வுகள் என்றும் வகுத்துக் கொள்ள முடியும்.

நீண்ட காலத் தீர்வுகள், உண்மையில், ஈழத் தமிழர் எதிர்நோக்கும் இதர அரசியற் பொருளாதாரப் பிரச்சினைகளுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. ஆகவே, அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் போது மருத்துவத் துறை அவற்றிற்கேற்பத் தன்னைச் சரி செய்து கொள்ளுவது தவிர்க்க முடியாதது. அப்போது அத்துறை தொடர்பான பிரச்சினைகளும் தாமாகத் தீர்ந்து விடுமென்று எதிர்பார்க்கலாம். உதாரணமாக, ஈழத்தமிழ்ப் பிரதேசங்களின் பௌதிக வளங்கள், அரசாங்கமொன்று அடியெடுத்துக் கொடுப்பதன் வழி திட்டமிட்ட பயன்பாட்டுக்குட்படுமாயின், தொழில் வாய்ப்புக்கள் பெருகிக் கல்வி மூலம் போட்டியிடுவதற்கான தேவை அருகி மருத்துவக் கல்வியும் முன்னுரிமைப் பட்டியலில் அளவு மீறிய முக்கியத்துவம் பெறுவதற்குப் பதிலாக உரிய அளவான முக்கியத்துவத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ளும். ஆனால், இவ்வாறான தீர்வுகளுக்குரிய சுமுகமானதொரு நிலைமை வரும் வரையிலான, இன்னமும் நீண்டு செல்லும் இடைக்காலத்திலும் நிலைமை மாறுபடத் தொடங்கிய பின்னாலான நிலைமாறு காலத்திலும், குறுகிய கால முகாமை என்பதும் மிகவும் வேண்டப்படுவதொன்றேயாகும்.

இத்தகைய குறுகிய காலத்தில், மருத்துவத் துறையின் சேவையை மக்களுக்குச் சம பரம்பலான முறையிற் பெற்றுக் கொடுப்பது முக்கியத்துவம் பெறுகின்றது. மருத்துவத் துறையிலான சமமான பரம்பல் என்பது இரு விடயங்களை உள்ளடக்கியதாகும். ஒரு புறம், பொதுவான மருத்துவ வசதிகள் தடுப்பு, சிகிச்சை என்ற இரு நிலைகளிலும் எல்லா மக்களையும் சென்றடைய வேண்டும். மறுபுறம், மருத்துவத் துறையின் வேறுபட்ட சிறப்புப் பிரிவுகளின் சேவை ஒரு பூரண நிலையில் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அதாவது, மக்கள் இச்சிறப்புச் சேவைகளைப் பெறுவதற்காக வடக்கு - கிழக்கு என்பதற்குப் புறம்பாகக் கொழும்பு போன்ற ஏனைய இடங்களுக்குச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும். இந்த இரண்டுமே தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ்த் தான் இருந்து வருகின்றன. மத்திய - மாகாண அரசாங்கம் என்ற முகாமைப் பரவலாக்கம் அது விடயத்திற் பெருமளவான வேறுபாடெதனையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. ஆகவே, அதன் கருத்து யாதெனில், மருத்துவத் துறையானது ஈழத் தமிழரது சொந்தக் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதென்ற அவர்களது ஏனைய சமூகப் பொருளாதார அம்சங்களிலிருந்து எவ்வகையிலும் வேறுபடவில்லை யென்பதேயாகும். எனவே, மருத்துவத் துறைக்கான அணுகுமுறை ஏனையவற்றுக்கான அணுகுமுறையின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும்.

சமூகப் பொருளாதார அணுகுமுறையின் பிரதான அம்சம் வளங்களின் முகாமையேயாகும். ஒரு பொருளாதாரத்தின் வளங்கள் பௌதிக வளங்கள் என்றும் மனித வளங்கள் என்றும் இரண்டாகப் பிரிக்கப்படக் கூடியவை. இந்த இரு வகை வளங்களையும் இணைத்து அபிவிருத்தி நோக்கில் முகாமை செய்து அவற்றைக் கட்டுப்படுத்து-வதற்கான (அரசியல்) அதிகாரம் ஈழத் தமிழர் வசம் இல்லாதிருக்கும் வரை, நாம் செய்ய வேண்டியதெல்லாம் எமது பிரதேசத்தினுள்ளான வளங்களை எம்முடன் தக்க வைத்து, அவற்றின் முறையான பாவனையை உத்தரவாதப்படுத்தி அவற்றைப் பேணிப் பாதுகாப்பதேயாகும். இந்த ஒரு நோக்கிலேயே பனை வளம் பேணல், மண் - கல் அகழ்வு போன்றவற்றில் சில வகையான கட்டுப்பாடுகளை அமுலாக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால், மனித வளத்தைப் பேணுவதென்பது அதனைப் பௌதிக வளங்களுடன் உரியவாறு இணைப்பதொன்றாகவிருந்தாலும் கூடப், பௌதிக வளங்களைப் பேணிக் கொள்வதினின்றும் பெரிதும் வேறுபட்ட-தென்பதும் கருத்திலெடுக்கப்பட வேண்டியதொன்றாகும். மனித வள முகாமை அடிப்படை மனித உரிமைகள் பற்றியதும் ஆகும். மக்களது அசைவு அத்தகைய உரிமைகளுள் முக்கியமானது. ஆகவே, மக்களைப் பலவந்தமாகப் பௌதிக வளங்களுடன் இணைத்து அபிவிருத்தியை ஏற்படுத்த முயற்சிப்பது அவர்களது அடிப்படையான மனித உரிமையை மீறுவதென்பதுடன், அதன் மூலமான தேறிய விளைவுகளும் எதிர்க்கணியமானவையாகவே காணப்படும். அது மாத்திரமன்றிப் பௌதிக வளங்களின் பாவனை மூலம் மக்களை அவற்றுடன் இணைத்து அவர்களுக்கு உரிய வேலை வாய்ப்புகளைப் பருநிலைக் கொள்கை மட்டத்தில் உத்தரவாதப்படுத்த முடியாதவிடத்து அவர்களைத் தக்க வைக்க முயற்சிப்பதிலும் பயனில்லை.

எனினும், தரப்பட்ட நிலையிலுள்ள குறிப்பிட்டதொரு வரையறையினுள் மனித வள முகாமை, பாதுகாப்பு என்பவை பற்றிக் கவனம் செலுத்துவது சாத்தியமானதே. இந்த வகையில் மனித வளத்தை எமது தேவைக் கேற்றவாறு பயிற்றுவித்து அதனை மனித மூலதனமாக மாற்றுவது முக்கியமானதெனலாம். இது விடயத்தில் தான் தாய் மொழி மூலமான கல்வி மூலம் சமூக உணர்வு, சமூகத் தேவை என்பவற்றைக் கருத்திற் கொண்டு உறுதியான அடிப்படையை வழங்குவதும் உரிய ஆங்கில அறிவு, பயிற்சி என்பவற்றின் வழி கூர்மை, நவீனமயவாக்கம் என்பவற்றை ஏற்படுத்துவதும் அவசியமாகின்றது. மனித வள முகாமையின் மற்றொரு பகுதி புலம்பெயர் நிலையில் அல்லது வேறு வகையில்

அறிவையும் பயிற்சியையும் வெளிநாடுகளிற் பெற்று அவற்றைத் தாய் மண்ணுக்குப் பலவித நெருக்கடிகளின் மத்தியிலும் வழங்க முன்வருவோரின் பங்களிப்பைத் தக்க வைப்பதும் பயன்படுத்துவதும் ஆகும்.

இந்த இரு படிநிலைகளிலும் மருத்துவத் துறை முன்னணியிலேயே நிற்கின்றது. மருத்துவக் கல்விக்கும் ஈழத்தமிழ்ச் சமூகத்துக்கும் மத்தியிலான இடையுறவு பொறுத்து இக்கட்டுரையில் ஆராயப்பட்ட வரையறைகளைக் கருத்திற் கொண்டு சில சீர்திருத்த முயற்சிகளை ஒரு மூலாதார மட்டத்திலிருந்து நிச்சயம் ஆராய்ந்து பார்க்க முடியும். அதே போன்ற மண்ணை நோக்கிச் சுயவிருப்புடன் சேவை செய்ய வருவோர் விடயத்திற் கூடியளவு நேர்க்கணியமான அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும். இந்தக் கட்டத்திற், சமீப காலத்திற் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பெரிதும் பிரபல்யமடைந்த, நரம்பியற் சத்திரசிகிச்சை நிபுணர் குணானந்தம் பற்றிய சர்ச்சை முக்கியமானதொன்றாகும்.[3] அவர் தொடர்பான விடயத்தை யாழ். மருத்துவபீடமும் போதனா வைத்தியசாலையும் தனது பங்களிப்பைக் கூரிய நெருக்கடிகள் மிகுந்த காலம் முதல் தொடர்ந்து அர்ப்பணிக்க முன்வந்த ஒருவர் மூலமான நன்மையைத் தக்க வைத்துக் கொள்ளும் நேர்க்கணியமானதொரு நோக்குடன் அணுகியுள்ளனவா என்பது முக்கியமாகக் கருத்திலெடுக்கப்பட வேண்டியதொன்றாகும். நெருக்கடி காலச் சேவைக்கு வெறுமனே நன்றி தெரிவிப்பது மட்டும் சரியான அணுகுமுறையாகி விடாதென்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஈழத்தமிழ்ச் சமூகத்துக்கு வேண்டப்படுவோரை ஒரு குறுகிய கால நோக்கிலன்றி, நீண்ட காலக் கண்ணோட்டத்தில் உள்வாங்கிப் பயனை நிரந்தரப் படுத்துவது அவசியமாகும்.

உசாவியவை

1. அரசியற் பொருளாதார வரலாற்றில் அக்கறையுடையோர் பார்க்க: வி. நித்தியானந்தம், "இலங்கையின் பொருளாதார வரலாறு: வடக்குக் - கிழக்குப் பரிமாணம்" (யாழ்ப்பாணம் : உயர் கல்விச் சேவை நிலையம், 2003) பக். 119 - 165.

2. இதுவிடயத்தில் சீ. ஆர். டி சில்வா அவர்களுடைய பங்களிப்புக்கு நிகரான வேறு ஆய்வுகள் இல்லை என்னும் அளவுக்கு அவருடைய ஆய்வுகள் இன்னமும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. பார்க்க : C R de Silva, 'The Politics of University Admissions: A Review of Some Aspects of the Admissions Policy in Sri Lanka 1971 - 1978', *Sri Lanka Journal of Social Sciences*, 1(2), December 1978, pp. 85 - 123.

   C R de Silva, 'Weightage in University Admissions: Standardisation and District Quotas in Sri Lanka 1970 - 1975', *Modern Ceylon Studies*, 5(2), July 1974, pp. 151 - 178.

3. இந்தச் சர்ச்சை தொடர்பான பல செய்திக் குறிப்புகளும் வாசகர் கடிதங்களும், குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் செய்தித் தினசரிகளிற் பிரசுரமாகியிருந்தன. அவற்றை ஒருமித்த வகையில் உள்ளடக்கிய ஒரு பங்களிப்புக்குப் பார்க்க: ராஜபுத்திரன், "ஏன் இந்த நிலை?", உதயன், டிசம்பர் 21, 2003.

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
64 - 80

# மேலாதிக்கமும் அதன் தடுமாற்றமும்

*நோம் சொம்ஸ்கி* *

அமெரிக்கா தனது தேசிய பாதுகாப்பு தந்திரோபாயத் திட்டத்தின் மூலம் உலக தலைவனாக, பாதுகாவலனாக, செயல்முறைப் படுத்துபவனாக மாறி தனிநாடோ அல்லது கூட்டணிகளோ ஒரு போதும் சவால்விட முடியாத ஒருமுனைப்பட்ட உலகத்தைக் கொண்டு வருவதைத் நோக்காகக் கொண்டுள்ளது. மேற்கண்ட முயற்சியினை விபரிப்பதுடன் அது தொடர்பாக அமெரிக்கா எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பற்றியும், அதன் சுயநலமான, போலியான வெளிவிவகார கொள்கைகளைப் பற்றியும், அதன் உலக மேலாதிக்க முயற்சியின் தடுமாற்றங்கள் பற்றியும் இக்கட்டுரை விபரிக்கின்றது.

* மொழியியல் பேராசிரியர், மசசுசஸ் இன்ஸ்டிட்யூட் ஒஃவ் டெக்னோலஜி (MIT), அமெரிக்கா.
கட்டுரையின் ஆங்கிலவழி மொழிபெயர்ப்பு க. ரமணேஷ். *நன்றி* : Frontline, நவம்பர், 2003.

## அறிமுகம்

உலக விவகாரங்களில் 2001ஆம் ஆண்டு மிகவும் முக்கியமானது. 2001 செப்ரெம்பர் மாதத்தில் பல முக்கியமான நிகழ்ச்சிகளும், அதை மையமாகக் கொண்ட சம்பவங்களும் கால் கொண்டன. வரலாற்றில் உலக வல்லரசொன்று, தான் **உலக மேலாதிக்கத்தை நிரந்தரமாகப் பேணிக் கொள்ளும்** என்பதை உறுதிப்படுத்தி, புதிய **தேசிய பந்தோபஸ்து மூலோபாயத் திட்டத்தை** (National Security Strategy ) அறிவித்தது. அதாவது, அமெரிக்கா அதிகார உச்சியில் அமர்ந்து, எந்த சவாலையும் பல பிரயோகத்தால் தடுக்கும் என்பதே அதன் அர்த்தம் ஆகும். அதேவேளை, ஈராக்கிய ஆக்கிரமிப்புக்காக மக்களை அசையச் செய்யும் போர் முரசங்கள் முழங்க ஆரம்பித்தன. ஈராக்கிய ஆக்கிரமிப்பின் பின், நியூயோர்க் ரைம்ஸ் பின்வருமாறு எழுதியது : "இது (சொல்லப்பட்ட கொள்கையின்) முதற் சோதனை முயற்சி மட்டுமேயன்றி இறுதியானதல்ல.".[1] இடைக்கால காங்கிரஸ் தேர்தலுக்கான பிரச்சாரமும் ஆரம்பமாகியது. அமெரிக்க நிர்வாகத்தின், தீவிரமான சர்வதேச நிகழ்ச்சி நிரலும், உள்நாட்டு நிகழ்ச்சி நிரலும் முன்னெடுக்கக் கூடியவையா என்பதை தீர்மானிப்பவையாக தேர்தல் அமையவிருந்தது.

ஒருமுறை, **தேசிய பந்தோபஸ்து மூலோபாயத்திட்டமானது**, ஜோன் இகென்பெரியால் (John Ikenberry) **ஏகாதிக்க பேருபாயம்** (Imperial Grand Strategy) என வர்ணிக்கப்பட்டது. தற்காலிகமாகக் கிடைத்த அனுகூலத்தைக் கொண்டு, உலக ஒழுங்கின் உச்சியில் இருந்து நாடகத்தை நடத்தும் வண்ணம் அமெரிக்காவை மாற்றுவதும், **உலக தலைவனாக, பாதுகாவலனாக, செயல்முறைப்படுத்துபவனாக**[2] மாறி, தனி நாடோ அல்லது கூட்டணிகளோ ஒருபோதும் சவால்விட முடியாத வகையில் ஒருமுனைப்பட்ட உலகத்தைக் கொண்டு வருவதும் இவ்வுபாயத்திட்டத்தின் நோக்கமாகும். ஏனைய வெளியுறவு கொள்கை உயர் குழாத்தினரைப் போலவே, ஜோன் இகென்பெரியும், "இக்கொள்கைகள் (அமெரிக்காவுக்கு கூட) அபாயத்தை ஏற்படுத்த வழிவகுக்க வல்லன ''என எச்சரித்துள்ளார்.

**எது பாதுகாக்கப்பட வேண்டும்** என்றால், அமெரிக்காவின் பலமும் அதன் நலன்களுமேயல்லாமல், இந்த கருத்தியல்களைக் கடுமையாக எதிர்க்கின்ற சர்வதேசத்தையல்ல. சில மாதங்களுக்குள், அமெரிக்க அரசின் அச்சம் உச்சத்துக்குச் சென்றதை, அரசியல் தலைமை மீதான நம்பிக்கையீனம் வெளிப்பட்டதை அல்லது நம்பிக்கையீனம் அதிகரித்தமையை தேர்தல் வெளிப்படுத்தியது. அமெரிக்காவினாலும் நேச அணிகளாலும் (உண்மையில் அமெரிக்க பிரித்தானிய கூட்டால்)

அறிவிக்கப்பட்ட போர் திட்டத்துக்கு உண்மையிலேயே எவ்வித ஆதரவும் இல்லையென்பது, டிசம்பரில் நடத்தப்பட்ட சர்வதேச கருத்துக்கணிப்பு காட்டியது. கொள்கை சோதனை முயற்சியான, ஈராக் ஆக்கிரமிப்பு பற்றிய அபிப்பிராயமும் இதுதான்.

ஏகாதிக்க பேருபாயத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை இரண்டாம் உலகமகா யுத்தத்தின் ஆரம்ப காலங்களில் இருந்தே காண முடியும். இற்றைவரை அது மீளமீள எடுத்தாளப்படுகிறது. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அமெரிக்கா நுழையமுன்னரே, அமெரிக்காவின் திட்ட ஆய்வாளர்களும், பகுப்பாய்வாளர்களும் போருக்கு பின்னரான காலத்தில் அமெரிக்கா கேள்விக்கிடமில்லாத பலத்தைக் கொண்டதாக அமைய வேண்டும் என்பதை முடிவெடுத்திருந்தார்கள். பெரும்பரப்பில் அமெரிக்கா வானது இராணுவ பொருளாதார உச்ச நிலைக்கு செல்லக் கூடியதான ஒன்றிணைந்த கொள்கை ஒன்றைக் கோடிட்டுக் காட்டி இருந்தனர். பெரும்பரப் பென்பது, குறைந்தது மேல் அரைக் கோளம், முன்னாள் பிரித்தானிய பேரரசு, தூர கிழக்கு என்பவற்றை உள்ளடக்கியது. பின்னர் ஜேர்மனி தோற்கடிக்கப்படுவது உறுதியானதும், யுரேசியாவின் (Eurasia) இயலுமான பெரும்பகுதியும் பெரும்பரப்பில் உள்ளடக்கப்பட்டது.

இதற்கு 20 வருடங்களின் பின், அமெரிக்காவின் வல்லமைக்கு, நிலைக்கு, கௌரவத்துக்கு எதிரான சவால்களை எதிர்கொண்டு நடவடிக்கை எடுக்கும் போது, சட்டப் பிரச்சினை எழக் கூடாது என மூத்த அரச பிரதானி டீன் ஆகிசன் (Dean Acheson), சர்வதேச சட்டத்துக்கான அமெரிக்க கழகத்துக்கு (American Society for International Law) அறிவுறுத்தினார். அவர், பிக்ஸ் வளைகுடாவில் (Bay of Pigs) கியூபாவுக்கு எதிரான வாசிங்டனின் பொருளாதார யுத்தத்தை குறிப்பாகச் சுட்டுகின்றார். ஆனால், அவர், கென்னடியின் பயங்கரவாத எதிர்ப் பிரச்சாரமானது அதிகார மாற்றத்தை நோக்கமாகக் கொண்டிருந்ததை அறிந்தே இருந்தார். இதுவே, அணுவாயுத யுத்தத்துக்கு உலகை இட்டுச் சென்ற மிக முக்கியமான காரணியாகும். கியூபா ஏவுகணை நெருக்கடி தீர்க்கப்பட்டதும் அணுவாயுத போர் அபாயம் உடனடியாக முடிவுக்கு வந்தது.

நிக்கராகுவாவுக்கு எதிரான அமெரிக்கத் தாக்குதல் தொடர்பில் உலக நீதிமன்ற நியாயாதிக்கத்தை (World Court Jurisdiction) அமெரிக்கா ஏற்க மறுத்த போதும், இதே போன்றதொரு கொள்கை, றொனால்ட் றேகன் நிர்வாகத்தால் கடைப்பிடிக்கப்பட்டது. எமது பார்வையை பகிர்ந்து கொள்ள உலகத்தின் பெரும்பான்மையான

நாடுகளைக் கருத்தில் கொள்ள முடியாது என, ராஜாங்க திணைக்கள சட்ட ஆலோசகர் ஏப்பிரகாம் சோபர் (Abraham Sofaer) விபரித்தார். அவை முக்கியமான சர்வதேசப் பிரச்சினைகளில் அமெரிக்காவை அடிக்கடி எதிர்க்கின்றன என்றார். இதன்படி எவை அமெரிக்காவின் உள்நாட்டு நியாயாதிக்கத்தில் வரும் என்பதை தீர்மானிக்கும் பலத்தை நாமாகவே ஒதுக்கிக் கொள்ள வேண்டும் என்றார். இந்த விவகாரத்தை, அதாவது நிக்கராகுவாவுக்கு எதிராக நடவடிக்கைகளை, சட்டத்துக்குப் புறம்பான பலப் பிரயோகம் என நீதிமன்று கண்டித்தது. அதாவது, எளிமையாகச் சொல்வதானால் சர்வதேச பயங்கரவாதம்.

அவர்களுக்குப் பின்வந்த ஆட்சியாளர்களும் அமெரிக்காவானது அவசியமானபோது தன்னிச்சையாக செயற்படும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதைத் தொடர்ந்தும் தெளிவுபடுத்தினார்கள். அத்துடன், பிரதான சந்தைகள், சக்தி வழங்கல்கள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வளங்கள் என்பவற்றுக்கு தடுக்க முடியாத வகையிலான அணுகும் வழியை உறுதிப்படுத்துவது போன்ற உயிர்நாடியான நலன்களைப் பாதுகாக்க தன்னிச்சையான இராணுவப் பலப்பிரயோகத்தையும் அது உள்ளடக்கியது.

இந்தச் சிறிய மாதிரி கூட, திட்டமிடற்பரப்பின் குறுகியதன்மையை எடுத்துக்காட்டுகின்றது. எது எவ்வாறிருந்தபோதும், செப்ரெம்பர் 2002இல் ஒலிக்கப்பட்ட அபாய மணியோசை நியாயப்படுத்தப்பட்டன. ஆகிசனும் (Acheson), சோபரும் (Sofaer) கொள்கை வழிகாட்டல்களை விபரிக்கத் தொடங்கினார்கள். மேல்தட்டு வட்டத்தினுள் இதனை விபரிக்க ஆரம்பித்தனர். துசைடிடஸ் (Thucydides) இன் பழங்கூற்றான "பெரிய நாடுகள் அவை விரும்புவதைச் செய்கின்றன. அதே வேளை சிறிய நாடுகள் எதை ஏற்றுக்கொள்வது கட்டாயமோ அதை ஏற்றுக் கொள்கின்றன" என்பதைப் போலவே ஏனைய வகைகள் நோக்கப்படக் கூடும். மறுபுறமாக, சென்னி- ரம்ஸ்பீல்ட்- பவல் போன்றவர்களின் அணி, இன்னும் தீவிரமான கொள்கையை உத்தியோகபூர்வமாகப் பிரகடனம் செய்கிறார்கள். அவர்கள் எதைக் கருதுகின்றனரோ அதைச் சொல்ல - உலகுக்கு அறிவிக்க - ஒரு முறையே நடவடிக்கை எடுத்தார்கள். இது மிக முக்கியமான வேறுபாடு.

ஏகாதிக்க பேர் உபாயம் ஆனது, இராணுவ திட்டங்களின் மூலம் அமெரிக்காவானது முழுவளவு மேலாதிக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்ற எடுகோளினை அடிப்படையாகக் கொண்டது. இந்த இராணுவத் திட்டங்கள் ஆற்றலுள்ள கூட்டுக்களையும் தளர்வடையச் செய்யும். அது

நல்ல பக்க விளைவுகளைத் தரும். அதில் ஒன்று, எதிர்கால தனியார்துறைப் பொருளாதாரத்தின் செலவுகள், அபாயங்களை சமூகஞ் சார்ந்ததாக்கும்; அதாவது மரபுரீதியாக இராணுவ செலவீனங்களுக்கு பங்களிப்பு செய்வதுடன் புதிய பொருளாதாரத்துக்கான அடித்தளமாகவும் இருக்கும். அத்துடன் அது, "சமஸ்டி செலவீனங்களை வெட்ட, அழுத்தத்தை உருவாக்கக்கூடிய பொருளாதார தொடரணியின் முறிப்புக்கு (fiscal train wreck) பங்களிக்கும். இவ்விதம் சில வேளை புதிய கைங்கரியத்துக்கு மீளச்செல்லும் நிர்வாகத்தின் இலக்கை நிறை வேற்றும்", இது றேகனின் திட்டம் பற்றிய விபரிப்பு. இப்பொழுது இன்னும் பேராசையுள்ள திட்டமாக இது விரிவடைந்துள்ளது.

செப்ரெம்பர் 17இல் ஏகாதிக்க பேர் உபாயம் அறிவிக்கப்பட்டதும், உயிரியல் யுத்தத்துக்கு (Germ warefare) எதிராக உயிரியல் ஆயுத உடன்படிக்கையை (Biological Wepons Conventions) வலுப்படுத்தும் சர்வதேச முயற்சியை அமெரிக்கா கைவிட்டது. இது தொடர்பான மேலதிக கலந்துரையாடல் இன்னும் நான்கு வருடங்களுக்கு பிற்போடப்படும்[6] என நேசநாடுகளுக்கு அமெரிக்கா அறிவித்தது. ஒரு மாதத்துக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் ஆயுதபரிகரண கமிட்டி, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. விண்வெளியை இராணுவமயப்படுத்துவதற்கு எதிராக, கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், விண்வெளியை இராணுவ மயமாக்குவது சர்வதேச சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் பெரும் அபாயத்தைக் கொண்டு வரும் என அத்தீர்மானம் சுட்டிக்காட்டியது. அத் தீர்மானத்தில் இன்னொரு அம்சமாக, நச்சுவாயுக்களையும், பற்றீரிய நுண்ணுயிர் யுத்த முறைகளையும் தடுக்கும் 1925 ஆண்டு ஜெனிவா விதிகளை மீளவலியுறுத்தியது. இவை இரண்டும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. இரண்டு நாடுகள் இதில் சமூகம் அளிக்கவில்லை. அவை அமெரிக்காவும் இஸ்ரவேலும் ஆகும்.[7] அமெரிக்காவின் சமூகமளிக்காமை, வெட்டு அதிகாரத்துக்கு (Veto) சமமானது. இது உண்மையில் இரட்டை வெட்டுரிமைக்கு நிகரானது, அதாவது நிகழ்வுகளை அறிக்கை யிடுவதைத் தடுப்பது வரலாற்றைத் தடுப்பதாக அமையும்.

சில வாரங்களின் பின்னர், விண்வெளி ஆணையம் திட்டமொன்றை வெளியிட்டது. அதில் பாதுகாப்பு உபாயங்களுக்கு அமைவாக விண்வெளியை இராணுவ நோக்கங்களுக்காக அமெரிக்கா கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பதற்கப்பால், அதனை நிரந்தரமாக சொந்தமாக்கிக் கொள்வது என்பதாக அத்திட்டம் இருந்தது. விண்வெளியை உரிமையாக்கிக் கொள்வதானது எமது தேசத்தின் இராணுவ வினைத்

திறனுக்கு முக்கியமானது. அத்துடன் உலகத்தின் எவ்விடத்திலும் - அது அணுவாயுதமாக அல்லது அணுவாயுதமல்லாததாக இருந்தாலும் - உடனடியாக துல்லியமாக தாக்கக்கூடிய திறனைக் கொண்டிருக்க வேண்டும். அமெரிக்காவானது துரிதமாக உயர் இலக்குகளை, தோற்கடிக்கக் கடினமான இலக்குகளை நிலையான வீச்சில் நின்று தாக்க வகை செய்யும். (அத்துடன்) அமெரிக்காவுக்கும் நேசப்படைகளுக்கும் முன்னணிப் படையின் அளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கும் போது, களமுனைத் தளபதிகளுக்கு துரிதமாக இலக்குகளை மறுக்கவோ தாமதிக்கவோ இடைஞ்சல் செய்யவோ அழிக்கவோ சுரண்டவோ செய்யும் ஆற்றலை வழங்கும். பல கிழமைகள்/நாட்கள் என்றில்லாமல் சில மணித்தியாலங்கள்/நிமிடங்களில் முடிக்க வகை செய்யும்.[8] இதன்மூலம் பிறநாடுகளில் இருக்கும் அந்நாட்டு மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்கும் இராணுவ தளங்களின் தேவையைக் குறைக்க முடியும்.

இதுபோன்ற திட்டங்கள், மே 2002இல் பென்ரகன் திட்டமிடல் ஆவணத்தில் தொகுத்துரைக்கப்பட்டிருந்தன. அதன் ஒரு பகுதி கசிந்திருந்தது. அவ்வாவணம், முன்னோக்கிய தடை உபாயத்தை (forward deterence) கோரியிருந்தது. அதன்படி எச்சரிக்கப்படாத இலக்குகளை விண்வெளித் தளங்களில் இருந்து ஏவுகணைகள் மூலம் தாக்க முடியும். இராணுவப் பகுப்பாய்வாளர் வில்லியம் அர்கின் (William Arkin), "**பூமியில் உள்ள எந்த இலக்கும் சரி, விண்வெளியில் உள்ள எந்த இலக்கும் சரி, அமெரிக்க தாக்குதலில் இருந்து தப்ப முடியாது. அமெரிக்கா முன்னெச்சரிக்கை செய்யாமல், எப்போதும் எங்கேயிருந்தும் தாக்க முடியும். அத்துடன் அமெரிக்காவானது ஏவுகணை கவசத்தால் பாதுகாக்கப் பட்டிருக்கும்**" எனக் கூறுகின்றார். மீயொலி முரசங்கள் (Hypersonic drones), இலக்குகளை கண்காணிக்கும் இடைஞ்சல் விளைவிக்கும், கண்காணிக்கும் தொகுதிகளுக்கு (Surveillance systems), பிற நாடொன்றின் நகரில், ஒவ்வொரு வாகனத்தின் அசைவையும், சுவடு பிடித்து, பதிவு செய்து, பகுப்பாய்வு செய்யும்[9] ஆற்றல் வழங்கப்படும்.

உலகமானது, அமெரிக்கா விரும்பினால் முன்னெச்சரிக்கையின்றி தாக்கப்படும் நிலைக்கு தள்ளப்படும். இவ்வகை திட்டங்கள் நனவாக நீண்டகாலம் எடுக்கும் என்றில்லை. இதைவிடவும் விசித்திரமான திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்க நிர்வாகத்தின் இவ்வகைச் செயற்பாடுகள், சர்வதேச சட்டங்களையும், சர்வதேச நிறுவனங்களையும் அலட்சியம் செய்யும் போக்கைக் காட்டுகின்றன. **தேசிய பந்தோபஸ்து உபாயத்தில்**, ஒரு

சொல்லுடன் ஆயுதக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நிராகரிக்கப்பட்டமையும், தீவிரத் தன்மையுள்ள நீண்டகால கொள்கைக்கான அமெரிக்காவின் நிலைப்பாடும் இதனை வெளிப்படுத்துகின்றன.

இத்தத்துவங்களுக்கு அமைவாக, அமெரிக்க நிர்வாகமானது, ஐ.நா. சபைக்கு, ஈராக்கை ஆக்கிரமிக்கும் திட்டத்துக்கு உடன்படுவதன் மூலம் **இணங்கிப் போவதாக** ஐ. நா. இருக்க முடியும் அல்லது ஐ.நா. வெறுமனே அரட்டை அரங்கமாக இருக்க முடியும் என அறிவித்தது. 2003 ஜனவரியில், உலகப் பொருளாதார மன்றத்தில் கொலின் பவல், "**அமெரிக்காவுக்கு இராணுவ நடவடிக்கை எடுக்க இறைமையுள்ள அதிகாரம் உள்ளது**" என அறிவித்தார். வாசிங்டனின் யுத்த திட்டத்தை கடுமையாக எதிர்த்த, உலகப் பொருளாதார மன்றத்துக்கு, "**எவரும் எம்மை பின் தொடர்ந்து வராத போதும் கூட, ஒரு விடயத்தையிட்டு நாம் உறுதியாக உணர்ந்தால், நாம் முன்செல்வோம்**" என கொலின் பவல் அறிவித்தார்.[10]

ஈராக்கிய ஆக்கிரமிப்புக்கு முன்னர், அசோரஸ் மாநாட்டில் (Azores Summit) ஜோர்ஜ் புஸ்சும், ரொனி பிளேயரும், சர்வதேச சட்டங்களையும் நிறுவனங்களையும் அவமதிக்கும் தம் நிலைப்பாட்டை கோடிட்டுக் காட்டினர். அவர்கள் ஒரு இறுதி எச்சரிக்கையை விடுத்தார்கள். அது ஈராக்குக்கானதல்ல. மாறாக, ஐ.நா. பாதுகாப்பு சபைக்கே விடுத்தார்கள். **தலையாட்டுங்கள் அல்லது உங்களது அனுமதியில்லாமல் நாம் ஆக்கிரமிப்போம். சதாம் உசைனும் குடும்பமும் ஈராக்கை விட்டு வெளியேறினாலும் சரி, வெளியேறாவிட்டாலும் சரி, நாம் ஆக்கிரமிப்போம்.**[11] இதன் முடிவான கருத்து என்னவெனின், ஈராக்கை, அமெரிக்கா திறமையாக ஆள வேண்டும் என்பதே.

1940களின் நடுப்பகுதியில் இருந்து வளைகுடாவை **மூலோபாய பலத்துக்கான அதியற்புத ஊற்று, உலக வரலாற்றில் மிகப் பெரிய பரிசு** என அமெரிக்கா கருதியிருந்தது. ஐசின் ஓவரின் (Eisen Hower) வார்த்தையில் கூறுவதானால், அதன் கேந்திர முக்கியத்துவம் காரணமாகவும் வளம் காரணமாகவும் **உலகத்திலேயே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய இடம்**. வளைகுடா பிரதேசத்தின் கட்டுப்பாடும் அதன் வளங்களும், கொள்கை வகுப்பில் தட்டிக் கழிக்க முடியாத அம்சங்கள். முக்கிய எண்ணெய் உற்பத்தி நாட்டைக் கையகப்படுத்தி, உலகத்தின் பெரிய எண்ணெய் உற்பத்தி தொகுதியின் இதயப் பகுதியில் இராணுவத் தளத்தைப் பெற்றுக் கொண்டு, சந்தேகமில்லாமல் ஒரு **அரபுத் தோற்றத்தை** (Arab Facade) உருவாக்குவது அமெரிக்காவுக்கு மகிழ்ச்சியளிக்கும். இது சூரியன் அஸ்தமிக்காத

பிரித்தானிய பேரரசின் காலத்தை பெற்றதுக்கு ஒக்கும். முறையான ஜனநாயகம் சிறந்தது தான், ஆனால், அது வாசிங்டனின் கொல்லைப் புறத்தில் கும்பிடு போடும் நிலையில் இருந்தால் மட்டுமே.

இப்பிரயத்தனத்தில் தோற்பது, உண்மையான ஆற்றலை வெளிக் காட்டும். இணக்கமற்ற சூழலில் கூட, இராணுவ ஆக்கிரமிப்பு பொதுவில் வெற்றியளிக்கும். ஒரு தசாப்தகால பொருளாதாரத் தடை மெய்யாகவே ஈராக்கை அழித்துவிட்டது. அதுவுமல்லாமல் இப்போதைய வாசிங்டன் ஆட்சியாளர்களினால் வளர்க்கப்பட்ட, கொடூரமான சர்வாதிகாரியின் கையில் அச்சமுதாயம் அழிக்கப்பட்டது. கோடுங்கோலரின் பட்டியலில் உள்ள, அமெரிக்காவால் வளர்க்கப்பட்ட ரோமானியாவின் செயோசேச (Ceausescu) இதற்கு மிக நல்ல உதாரணம். நாஜிகளால் ஆக்கிர மிக்கப்பட்ட ஐரோப்பாவைப் போலவோ, அல்லது ரஷ்ய நுகத்தடியின் கீழ் இருந்த கிழக்கைரோப்பாவைப் போலவோ இல்லாமல், ஈராக்கில், எதிர்ப்புப் போராட்டத்துக்கு பயனுள்ள வெளியாதரவு இருக்கவில்லை. மாறாக முன்சொன்ன நாடுகள் எவ்வாறிருந்த போதும் சேர்ந்து ஒன்றிணைந்து, தமது எல்லைகளில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றன.

பேர் உபாயமானது (Grand strategy) தடுப்பு போரை (Preventive) மேற்கொள்ள வாசிங்டனுக்கு அதிகாரமளிக்கிறது. தடுப்பு (Preventive) என்பது கைமுந்துவது (Pre-emptive) அல்ல . சில சமயங்களில், கைமுந்தித் தாக்குவதை நியாயப்படுத்தினாலும், அது தடுப்பு போருக்கு பொருந்தாது. குறிப்பாக, உருவாக்கப்பட்ட அபாயம் அல்லது கற்பனை செய்யப்பட்ட அபாயத்துக்காக இராணுவ பலப் பிரயோகத்தை பயன் படுத்துவது பற்றி தடுப்பு யுத்தத்தின் ஆதரவாளர் பேசுவது பொருந்தாது. இன்னும் தடுப்பு (Preventive) எனும் பதப் பிரயோகம் கூட பெருந் தன்மையான பிரயோகந்தான். எளிமையாக சொல்வதானால், தடுப்பு யுத்தம் (Preventive war) என்பது நுரம்பேர்க்கில் (Nuremberg) கண்டிக்கப் பட்டது போல், முதன்மையான குற்றச் செயல் (Supreme crime) ஆகும்.

இது பரவலாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமிக்கையில் ஆத்தர் ஸ்செல்சிங்கர் (Arthur Schlesinger) என்பார், புஸ்சின் போர் உபாயமானது, ஜப்பானிய பேரரசு பேர்ள் துறைமுகத்தில் (Pearl Harbour) கையாண்ட கொள்கைக்கு ஒப்பானது. இதனை அப்போதைய ஜனாதிபதி ஜப்பானின் வெட்கக்கேடான பெரும்பழிச் செயல் என வர்ணித்தார். றூஸ்வேர்ற் (FDR) கூறியதும் சரியே. இன்று நாம், (அமெரிக்கர்கள்) பெரும் பழியில் வாழ்கிறோம் என ஆர்த்தர் எழுதினார். செப்ரெம்பர் 11க்கு பின்னர் அமெரிக்கா பெற்ற

அனுதாப அலையானது அமெரிக்காவின் தான்தோன்றித் தனமான இராணுவ வாதத்துக்கெதிரான உலகளாவிய எதிர்ப்பு அலையை தோற்று வித்துள்ளது என்பது அதிசயமானதல்ல. அத்துடன் உலக சமாதானத்துக்கு சதாமைவிட புஸ்ஸே அதிக ஆபத்தானவர்[12] என எண்ணப்படுவதும் ஆச்சரிய மானதல்ல.

அரசியல் தலைமைப் பீடத்துக்கு, பெரும்பாலும் றேகன் - புஷ் I அச்சில் உருவாக்கப்பட்டவர்களுக்கு "உலகளாவிய வெறுப்பலை" ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சனையல்ல. அவர்கள், தம்மைக்கண்டு பயப்பட வேண்டுமென்று விரும்புகின்றார்களேயன்றி, நேசிக்கப்படுவதையல்ல. அவர்களும் அதே போல அவர்களது தாபன விமர்சகர்களும் அவர்களது செயற்பாடுகளால், **பேரழிவு ஆயுதங்களின் பரிகரணத்தின்** அபாயத்தை அதிகரிக்கும் என்பதை அறிவார்கள். ஆனால் அவர்களுக்கு அதுவும் ஒரு பெரிய பிரச்சனையல்ல. உலக மேலாதிக்கத்துக்கே முன்னுரிமை வழங்குகிறார்கள். அத்துடன், தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்துவதிலும் குறியாக உள்ளார்கள். அந்நிகழ்ச்சி நிரல், கடந்த நூற்றாண்டில் புகழ்பெற்ற போராட்டங்களின் மூலம் பெற்றுக் கொண்ட முன்னேற்றமான பெறுபேறுகளை அழித் தொழிப்பதும், இந்த தீவிர மாற்றங்களை நிறுவனமயப்படுத்துவதன் மூலம் அவை பழைய நிலைக்கு செல்வதை கடினமாக்குவது என்பவையே.

ஒரு உத்தியோகபூர்வ கொள்கையை பிரகடனஞ் செய்வது மட்டும், ஒரு மேலாதிக்க சக்திக்கு போதியதன்று. எச்சரிக்கையூட்டும் நடவடிக்கை மூலம் அதனை **ஒரு சர்வதேச சட்டத்தின் புதிய நியமம்** என நிலைநாட்ட வேண்டும். அப்போதுதான் தகைசான்ற வர்ணனையாளர், **சட்டமென்பது நெகிழ்வான சாதனம். ஆகவேதான் புதிய நியமம் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டியாக கிடைத்துள்ளது** என விளங்கப் படுத்துவார்கள். துப்பாக்கியுடன் இருப்பவர் தான், புதிய **நியமங்களை** (Norms) நிலைநாட்ட முடியும் என்பதும், சர்வதேச சட்டங்களை திருத்த முடியும் என்பதும் விளங்கக் கூடியதே.

தெரிவு செய்யப்பட்ட இலக்கு பல நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அது பாதுகாக்கப்படாததாக இருக்க வேண்டும். பிரச்சனைப் படும் அளவுக்கு முக்கியத்துவமுள்ளதாக இருக்க வேண்டும், எமது ஜீவிதத்துக்கு அச்சுறுத்தலாக இருக்க வேண்டும். அதிக தீங்கானதாக (Evil) இருக்க வேண்டும். ஈராக்கானது, எல்லாவிதத்திலும் இந்நிபந்தனைகளுக்கு பொருந்தி வருகிறது.முதலிரு நிபந்தனைகள் வெளிப்படையானவை. மூன்றாவது நிபந்தனையைப் பொறுத்த வரை, புஷ், பிளேயர், அவர்களது சகபாடிகள் ஆகியோரால் அடிக்கடி நிகழ்த்தப்பட்ட

மேடைப் பேச்சுக்கள் போதுமானதாக்கக் கூடியதாக உள்ளது. அதாவது **இந்த சர்வாதிகாரி மிகப் பயங்கர ஆயுதங்களை சேகரிக்கின்றான். (அவற்றைக் கொண்டு) ஆதிக்கம் செலுத்த, அச்சுறுத்த, அல்லது தாக்க முற்படுகின்றான். அவன் ஏலவே பல கிராமங்களின் மீது பயன்படுத்தி, தமது சொந்த மக்களைக் கொன்றும், பார்வை இழக்கச் செய்தும், ஊனமாக்கியும் செய்துள்ளான். இது தீமை** (Evil) **இல்லாவிட்டால் வேறு எதுதான் தீமை.**

நாவன்மையுடன் ஜனாதிபதி புஷ் சொல்லும் பழி சுமத்தல்கள், உண்மையையே உரைக்கின்றன. எவர் தீமையை (Evil) வளர பங்களிப்பு செய்தார்களோ, அவர்கள் தண்டனையில் இருந்து விலக்களிக்கப்படக் கூடாது. அவர்களுள் இந்த விழுமிய வார்த்தையைப் பேசியவரும், அவரது தற்கால சகபாடிகளும், பின்னர் இணைந்து கொண்டவர்களும், இந்த **தீயவன்** குற்றங்களை, இழைத்த பின்னும் அவனை ஆதரித்திருந்தார்கள். இவனே, அமெரிக்காவின் ஆதரவுடன் ஈரான் யுத்தத்தை வென்றான். புஷ் I நிர்வாகமானது, அமெரிக்க ஏற்றுமதியாளரின் நலனைக் கருத்திற் கொண்டு **நாம் அவனுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க வேண்டும்** என்று விளக்கந் தந்தது. **எமது உதவியுடன்** கொடுங்கோலன் கொடூர குற்றங்களை செய்து கொண்டிருந்த போது, **இவ்வகை பிரச்சனைகளை யிட்டு நாம் கவலைப்படுவதில்லை** என்றவாறு இருந்த அரசியல் தலைவர்களுக்கு எப்போது அவர்களுடைய நண்பன், **முதலாவது** பெருங் குற்றத்தை இழைத்தானோ, அன்றிலிருந்து ஆதரவு நிலை, பழி சுமத்தலாக மாறுகின்றது. அவனது முதலாவது **குற்றம்** எதுவெனில், உத்தரவுகளை **மதிக்காமல் (அல்லது உத்தரவை தவறாகப் புரிந்து) குவைத்தை ஆக்கிரமித்ததே.** அதற்குரிய தண்டனை மிகக் கடுமையானது. அது ஈராக் மக்களுக்கே வழங்கப்பட்டது. கொடுங்கோலன் எத்தீங்குமின்றி தப்பினான். கொடுங்கோலனின் முந்தைய நேச அணியால் போடப்பட்ட தடைகளின் விளைவாக, தான் கொடுமைப்படுத்திய மக்களின் மீதான பிடியை மேன் மேலும் இறுக்கினான்.

வளைகுடா யுத்தத்தின் பின் சதாமை ஆட்சியில் இருந்து விரட்டக் கூடியதாக இருந்த கிளர்ச்சியை கொடூரமாக ஒடுக்கிய சதாமுக்கு எதற்காக வாஷிங்டன் உதவ முன் வந்தது என்ற காரணங்கள் இலகுவில் மறைத்துவிடக் கூடியவை. **நியூயோர்க் ரைம்ஸின்** *(New York Times)* முதன்மை அரசியல் விவகார செய்தியாளர் சதாம் **இல்லாத உறுதியான ஆட்சிக்குழுவால் ஆளப்படும்** ஈராக்கே உலகத்தில் **அமெரிக்காவுக்கு மிக உகந்தது** என விபரித்தார். ஆனால், அந்த இலக்கு நிறைவேற

முடியாததாக தோன்றுவதால், நாம் அடுத்த சிறந்த தெரிவை நாட வேண்டியவராகிறோம். **சதாம் எத்தகைய தீமைகளைப் புரிபவராக இருந்தபோதும், மேற்குக்கும் நேசநாடுகளுக்கும் சதாம் இடமளித்தார்** என்ற நிலைப்பாட்டை அமெரிக்கா கொண்டிருந்ததால், கிளர்ச்சியாளர் தோல்வியுற்றனர்.[13] **அமெரிக்காவின், சதாமால்** கொல்லப்பட்டவர்களின் மனித புதைகுழிகள் பற்றி வர்ணனைகள் அடக்கப்பட்டுவிட்டன. யுத்தத்தை நியாயப்படுத்த, இப்பொழுது சாட்டப்படும் குற்றங்கள் எல்லாம் ***நீதி நியாயத்தின் அடிப்படையிலானவை.***[14] 1991 இலேயே எல்லோருக்கும் தெரிந்த தனது நோக்கங்களுக்காக அமெரிக்காவினால் புறக்கணிக்கப் பட்ட உண்மை : **வெற்றிகரமான கிளர்ச்சி, ஈராக்கை ஈராக்கியர்களிடமே தந்திருக்கும்.**

அமெரிக்காவில், இன்னொரு பாரம்பரியமான பிரச்சனை, உள்ளூர் மக்களில் தயக்கம் கொண்டவர்கள், போர்க் காய்ச்சல் மனநிலையில் புலம்பத் தொடங்குவது. செப்ரெம்பர் 2002 இல் இருந்து, சதாமின் அல்-குவைடா தொடர்பு குறித்தும், சதாமால் அமெரிக்காவுக்கு வரப்போகும் ஆபத்து குறித்தும், செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கும் சதாமுக்குமுள்ள தொடர்பு குறித்த துப்புக்கள் வழங்கப்படலாயின. **அணு விஞ்ஞானிகளின் செய்தி மடலின்** (Bulletin of Atomic Scientists) ஆசிரியர், **ஊடகங்களுக்கு முன் தொங்கவிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சிரிக்க வைப்பதில் தோற்று விட்டன. தேசபக்தி சோதனையில் அவை எவ்வளவுக்கெவ்வளவு அபத்தமானவையோ, அவ்வளவுக்கவ்வளவு ஊடகங்கள் முழுமனத்துடன் விழுங்குமாறு செய்தன.**[15]

கடந்த காலங்களில் நிகழ்ந்ததைப் போலவே, பிரச்சார தாக்குதல்கள் குறைந்த பட்சம் குறுகிய கால பாதிப்புக்களைத் தந்தன. சில வாரங்களில், பெரும்பான்மையான அமெரிக்கர்கள் சதாமால் அமெரிக்காவுக்கு ஆபத்தென எண்ணத் தலைப்பட்டனர். விரைவில், அரைவாசியினர் செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு ஈராக் பின்னணியில் இருந்தது என நம்பத் துவங்கினர். இந்நம்பிக்கைகளுடன் யுத்தத்துக்கான ஆதரவு, தொடர்புபடுகின்றது. வாக்காளர்கள் உடனடி அக்கறைக்குரிய விடயங்களை தள்ளி வைத்து விட்டு, பயங்கரமான எதிரியின் பேரிலான பயத்தினால், சக்திமிக்க குடையின் கீழ் நெருக்கியடித்துக் கொண்டு, நிர்வாகத்தினருக்கு இடைக்கால தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்தார்கள்.

மே 1 இல், **ஆப்பிரகாம் லிங்கன்** விமானந் தாக்கிக் கப்பலின் மேற்தளத்தில், ஜனாதிபதி "ஆறுவார யுத்தத்துக்கு சக்திமிக்க **நீகனிய மங்களம்பாடிய** போது, **பொதுமக்கள் ராஜதந்திரம்** (Public Diplomacy) வெளிப்பட்டது. 1983இல் நற்மக் தலைநகரை (Nutmeg)வெற்றி கொண்ட பின்பு **அமெரிக்கா உயர்ந்து நிற்கிறது (ரஷ்யர்கள் இதனைக் கைப்பற்ற அமெரிக்காவை தாக்காமல் தடுப்பதற்கு)** என்ற றொனால்ட் றேகனின் கர்வம் பிடித்த பிரகடனத்தை பிரதி செய்வது, **அல் குவைடாவின் ஒரு அணியை அகற்றி ஒரு யுத்தத்தில் ஒரு வெற்றியை பெற்றுள்ளமை.**[16] குறித்து உள்நாட்டு விமரிசனங்களில் அக்கறையில்லாமல், ஜனாதிபதி கூறினார். சதாமுக்கும் அவரது எதிரி ஒஸாமா பின் லேடனுக்கும் இடையே, குற்றம் சாட்டப்பட்டது போல் தொடர்பு இருந்ததை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் இல்லை என்பது, அக்கறைப்படுத்தப்படவில்லை. அந்த குற்றச்சாட்டும் தகுதிவாய்ந்த அவதானிகளால் நிராகரிக்கப்பட்டது. வெற்றிக்கும் பயங்கரவாதத்துக்கும் இடையேயான அறியப்பட்ட தொடர்பும் அக்கறைப் படுத்தப்படவில்லை. அதாவது, அமெரிக்க அதிகாரிகள் ஒப்புக் கொள்வதைப் போல், அல்குவைடாவின் உன்னிப்பான ஆட்திரட்டலை பார்க்குமிடத்து, ஈராக்கிய ஆக்கிரமிப்பானது பயங்கரவாதத்துக்-கெதிரான யுத்தத்தில் பாரதூரமான பின்னடைவு.[17]

சில விவேகமுள்ள அவதானிகள், **ஆப்பிரகாம் லிங்கன்** விமானந் தாங்கித் தளத்தில் புஷ்ஷினால் கவனமாக மேடையேற்றப்பட்ட பிரச்சாரம் அவரது 2004ம் ஆண்டைய மறு தேர்தலுக்கான தேர்தல் பரப்புரையின் ஆரம்பம் எனக் குறிப்பிட்டனர். **தேசிய பாதுகாப்பு கருத்தியல்களை சுற்றி** தேர்தல் பரப்புரை அமைய வேண்டுமென, வெள்ளை மாளிகை எண்ணுகின்றது. தேர்தல் பரப்புரையானது **ஈராக் சண்டை (Battle) மீது கவனம் எடுக்குமேயன்றி, யுத்தத்தையல்ல** (war) என குடியரசுக் கட்சியின் அரசியல் நிபுணர் கார்ல் ரோவ் (Karl Rove) விபரித்தார்.[18] உள்நாட்டு மக்களை கட்டுப்படுத்த வேண்டுமானால், யுத்தம் தொடர வேண்டும். 2002 தேர்தலுக்கு முன், அவர் தனது கட்சி நடவடிக்கைக் குழுவினருக்கு, பிரபல்யமில்லாத குடியரசுக் கொள்கையில் இருந்து திசை திரும்பி, பாதுகாப்பு பிரச்சனைகளுக்கு அழுத்தம் கொடுக்குமாறு அறிவுறுத்தினார். இவை யெல்லாம் றேகன்வாதிகள் அதிகாரத்துக்கு மீள வருவதன் அறிகுறி. இவ்வாறு முதற் தடவை, அதிகாரம் வந்த பின் அரசியல் பலத்தை தக்க வைக்க றேகன் கையாண்ட கொள்கைகளின் ஒத்த கொள்கைகளுக்கு எதிரான பொதுமக்களின் எதிர்ப்பை திசை

திருப்ப கிலியை ஏற்படுத்தும் பொத்தானை அழுத்துவார்கள். இவ்வகைக் கொள்கைகளே, 1992இல் றேகனை, நிக்சனைப் போல மிகவும் வெறுத் தொதுக்கப்படும் வாழும் ஜனாதிபதியாக்கியது.

இலேசான வெற்றியாக இருந்தபோதும், தீவிர பிரச்சாரமானது மக்களை அடிப்படை விடயங்கள் குறித்து சாந்தமாக வைத்திருக்க உதவியது. அநேகர், சர்வதேச பிரச்சனையில் அமெரிக்காவின் தலைமைத்துவத்தைவிட, ஐ.நா. சபையின் தலைமைத்துவத்தையே விரும்புகின்றனர். இருவருக்கு ஒருவர், ஈராக்கை மீள கட்டியெழுப்புவதில் அமெரிக்காவைவிட ஐ.நா.வையே விரும்புகின்றனர்.[19]

அமெரிக்க ஆக்கிரமிப்பு இராணுவம், பேரழிவு ஆயுதங்களை கண்டுபிடிப்பது தோல்வியில் முடிந்ததும், **ஈராக்கானது பேரழிவு ஆயுதங்களை நிச்சயமாக வைத்திருந்தது** என்ற அமெரிக்க நிர்வாகத்தின் நிலைப்பாடானது, கண்டுபிடிக்கப்பட்ட உபகரணங்களின் தன்மையைப் பார்க்கையில் அவை பேரழிவு ஆயுதங்களை ஈராக் உற்பத்தி செய்ய பயன்பட்டிருக்கக் கூடும் என்ற நியாயப்படுத்தலாக மாறியது. **விரோதமுள்ள நாடானது பேரழிவு ஆயுதங்களை தயாரிக்கும் ஆற்றலை அல்லது நோக்கத்தை மட்டுமே கொண்டிருந்தாலே** அமெரிக்க நிர்வாகம் எதிர் நடவடிக்கை எடுக்கும் வண்ணம் **தடுப்பு யுத்தம்** என்ற எண்ணக்கருவுக்கு **(அந்த எண்ணக்கரு பயங்கரமான ஆயுதங்களை பேரளவில் வைத்திருக்கும் நாடுகளை தாக்க அமெரிக்காவுக்கு உரிமையை வழங்குகின்றது)** சில்லறைத்திருத்தம் செய்ய ஆலோசனை வழங்கப்பட்டது.[20]

பலப் பிரயோகத்தை தேர்ந்து கொள்வதற்கான தடைக்கற்கள் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டன. **தடுப்பு யுத்தம்** பற்றிய கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட திருத்தம், ஆக்கிரமிப்புக்கு முன்வைக்கப்பட்ட வாதம் அடிபட்டு போவதை எடுத்துக்காட்டுகின்றது. முன்னெப்போதும்இல்லாத வகையில் ஜனநாயக அவமதிப்பும், வெறுப்பும் நிலவும் போது மத்திய கிழக்கில் ஜனநாயகத்தை கொண்டு வரும் ஜனாதிபதியின் புகழ்மிக்க **தரிசனம்** சிலவேளை பிரமிக்கத்தக்க பிரச்சாரத்தின் பெறுபேறாக இருக்கலாம். பழைய ஐரோப்பாவுக்கும் புதிய ஐரோப்பாவுக்கும் இடையேயுள்ள குறிப்பிடத்தக்க வித்தியாசம், பழைய ஐரோப்பா நிந்திக்கப்பட்டது; புதிய ஐரோப்பா அதனது விடாமுயற்சிக்காக வரவேற்கப்பட்டது. **இனங்காணும் வழிமுறை** (criterion) மிகவும் கூர்மையானது ; பழைய ஐரோப்பா அதனது பெரிய சனத் தொகை போலவே அரசாங்கங்கள் ஒரே நிலைப்பாட்டை எடுத்தன. புதிய ஐரோப்பாவின் பெரு வீரர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில்

பெரும்பான்மையினரின் எண்ணங்களை புறக்கணித்தனர். கிறபோட் (Crawford), ரெக்ஸாஸ் (Texas) இல் இருந்து வரும் உத்தரவுகளுக்கு பணிந்தார்கள். கீழ்ப்படிவுள்ள பழைய ஐரோப்பா குறித்தும் அதன் மனோவியாதி குறித்தும், அரசியல் வர்ணனையாளர் உளறிக் கொண்டிருக்கையில், காங்கிரஸ் மூன்றாந்தர நகைச்சுவை நாடகத்துக்கு கீழ் இறங்கியது.

ரிச்சட். கொல்புருக் (Richard Holbrooke), ஒரு முக்கியமான கருத்தை வலியுறுத்தினார். அதாவது, புதிய ஐரோப்பாவின் உண்மையான எட்டு உறுப்பு நாடுகளில் சனத்தொகையானது, பழைய ஐரோப்பாவைவிட பெரியது. இது ஜேர்மனியும், பிரான்சும் அந்நியப்படுத்தப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது. தோமஸ் பிரெட்மன் (Thomas Friedman) “பாதுகாப்பு சபையின் நிரந்தர அங்கத்துவத்தில் இருந்து பிரான்ஸ் நீக்கப்படவேண்டும். ஏனெனில், அது பாலர் வகுப்பில் உள்ளது. மற்றவர்களுடன் சேர்ந்து விளையாட வருவதுமில்லை” எனவும் “புதிய ஐரோப்பாவின் மக்கள் இன்னமும் நேர்சரி வகுப்பில் தான் இருக்க வேண்டும்” என்றும் குறிப்பிட்டார்.[21]

துருக்கிய விவகாரம் குறிப்பிடத்தக்களவு படிப்பினை தரும் ஒன்று. துருக்கிய அரசு தனது ஜனநாயக நற்சாட்சிப்பத்திரங்களை அமெரிக்காவுக்கு காட்ட 95 வீத மக்களை உதறித்தள்ளி உத்தரவு-களுக்கு கீழ்ப்படிய வேண்டியிருந்தது. இந்த ஜனநாயக பாடம் வர்ணனை யாளர்களைச் சீற்றங்கொள்ளச்செய்தது. சிலர் 1990களில் குர்தீஸ் இனத்தவருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை அடுக்க ஆரம்பித்தனர். முன்பு இதில் அமெரிக்காவின் பங்கு குறித்து அடக்கி வாசிக்கப்பட்டது. இருந்தபோதும் புலம்பல்களில் இப்போதும் மறைக்கப்படுகிறது.

மிகமுக்கியமான கருத்து போல் போவிற்சினால் (Paul Wilfowitz) வெளிப்படுத்தப்பட்டது. நாம் எதிர்பார்த்தது போல் துருக்கி உறுதியான தலைமைப்பாத்திரத்தை முன்னெடுக்கவில்லை என்பதற்காக துருக்கிய இராணுவத்தை அவர் கண்டித்தார். எனவே, துருக்கி நாம் தவறிழைத்து விட்டோம். இனி எப்படியெல்லாம் அமெரிக்காவுக்கு உதவமுடியும் என்பதை சொல்கிறோம்[22] என முன்வரவேண்டும். போவிற்சின் நிலைப்பாடு முக்கிய படிப்பினையாக அமைகிறது. ஏனெனில், அவர் மத்திய கிழக்கை ஜனநாயகப்படுத்தும் புனித காரியத்தில் முன்னணி வகிப்பவராக வர்ணிக்கப்படுகின்றார்.

பழைய ஐரோப்பா மீதான கோபமானது, சனநாயக அவமதிப்பை விட ஆழமாக வேரோடியது. அமெரிக்கா எப்போதும், ஐரோப்பாவின் ஒன்றிணைதலை இரண்டு மனத்துடனேயே பார்த்தது. ஏனெனில், ஐரோப்பா, சர்வதேச விவகாரங்களில் சுயாதீனமான சக்தியாக வர வாய்ப்பிருந்தது. இதன்படி, சிரேஷ்ட ராஜதந்திரியான டேவிட் புருஸ் (David Bruce) கென்னடியின் காலத்தில், ஐரோப்பிய ஒன்றிணைப்பை உற்சாகப்படுத்துவதில் முன்னணி வகித்தார். அவர் வாஷிங்டனை ஒன்றிணைந்த ஐரோப்பாவை சமதையாக நடத்தும்படி தூண்டினார். ஆனால் அமெரிக்கா, தலைமை வகிக்கும் வகையில் இருக்க வேண்டும். ஐரோப்பா, தன்பாட்டில் அமெரிக்காவை தவிர்த்து தனிப் பாத்திரம் வகிக்க விரும்பினால் அது ஆபத்தானது என அவர் கண்டார்.

30 வருடங்களுக்கு முன் ஆற்றப்பட்ட ஐரோப்பியா வருடம் (Year of Europe) எனும் உரையில் ஹென்ரி கிசிங்கர்(Henry Kissinger) "அமெரிக்காவினால் நிர்வாகிக்கப்படும் ஒட்டுமொத்த ஒழுங்கமைப்பில் (over all frame work of order) பிரதேச பொறுப்புணர்வுடன் ஐரோப்பியரை இருக்கும்படியும் கைத்தொழில் மற்றும் நிதி தலங்களாகப் பிரான்ஸையும் ஜேர்மனியையும் அடிப்படையாகக் கொண்டு, ஐரோப்பா சுதந்திரமாக முன் செல்லக் கூடாது" எனவும் அறிவுரை வழங்கினார்.

அந்நேரத்தில், மும்முனை உலகம் உருவாகிக் கொண்டிருந்த நேரத்தில், இந்த அக்கறைகள் ஆசியாவுக்கும் விரிவுபடுத்தப்பட்டன. தென் கிழக்கு ஆசியா, தற்போது மிகவும் செயற்றிறனுள்ள பொருளாதார வலயமாக, உலக மொத்த உள்ளூர் உற்பத்தியில் (globl GDP) இல் 30 வீதத்தினை கொண்டதாகவும் அமெரிக்காவினை விட மிக உயர்வானதாகவும், சர்வதேச அந்நிய செலாவணி இருப்பின் அரைவாசியைக் கொண்டதாகவும் உள்ளது. அது முன்னேறிய கைத்தொழில் பொருளாதாரங்களையும், அளவற்ற வளங்களையும் கொண்டு உள்ளார்ந்து ஒன்றிணைந்த பிரதேசமாக உள்ளது. இதுவும் ஒட்டுமொத்த, ஒழுங்கமைப்புக்கு சவால்விட்டு அதிர்ச்சியூட்டக் கூடியளவுக்கு ஆபத்தானது என்பதை காட்டுகின்றது. இதனை, அவசியமெனில், பலப் பிரயோகத்தால் அமெரிக்கா சமாளிக்க வேண்டும் என வாஷிங்டன் பிரகடனஞ் செய்துள்ளது.

வரலாறு எடுத்துக்காட்டுவது போல், வன்முறையானது கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும் பலம்மிக்க சாதனம் தான். ஆனால், மேலாதிக்கத்தின் தடுமாற்றம் இலேசானதல்ல.

## அடிக்குறிப்புகள்


1. David Sanger and Steven Weisman, *The New York Times,* April 10, 2003.
2. John Ikenberry, *Foreign Affairs*, September - October 2002.
3. Memorandum of the War and Peace Studies Project of the Council on Foreign Telations, with the State Department participation, October 19, 1940, Kaurence Shoup & William Minter, *Imperial Brain Trust* (monthly Review, 1977) 130ff.
4. Acheson, Proceedings, ASIL, 13, 14 (1963), Sofaer, U.S. Department of State, *Current Policy*, No. 769 (December, 1985). President Clinton, address to the U.N., 1993; Secretary of Devence, William Cohen, Annual Report, 1999.
5. Thomas Ferguson and Joel Rogers, *Right Turn* (Hill & Wang, 1986). On Clinton's contribution, see Michael Meeropol, *Surrender; How the Clinton Administration Completed the Reagan Revolution* (University of Michigan, 2000; updated 2003).
6. Peter Slevin, *The Washington Post*, September 19, 2002.
7. M2 PRESSWIRE, October 23, 2002, HEADLINE; U.N.
8. Air Force Spce Command 'Strategic Master Plan (SMP) RY 04 and Beyond," November 5, 2002.
9. William Arkin, *Los Angeles Times*, July 14, 2002, Michael Sniffen, A.P., July 1, 2003.
10. *Wall Street*, January 27, 2003.
11. Michael Gordon, *The New York Times*, March 18, 2003.
12. *Los Angeles Times*, March 23, 2003.
13. Thomas Friedman, *The New York Times*, June 7, 1991, Alan Cowell, *The New York Times*. April 11, 1991.
14. Thomas Friedman, *The New York Times*, June 4, 2003.
15. Linda Rothstein, editor, *BAS*, July 2003.
16. Elisabeth Bumiller, *The New York Times*, May 2, 2003; Transcript, same day.
17. Jason Burke, London *Sunday Observer*, May 18, 2003.
18. Jeanne Cummings and greg Hire, *Wall Street Journal*, May 2, 2003. Francis Clines, *The New York Times*, Op-ed, May 10, 2003 ; Rove's emphasis.

19. Program on International Policy Attitudes (PIPA), University of Maryland, April 18 - 22, 2003.

20. Dana Milbank, *The Washington Post*, June 1, 2003. Guy Dinmore and James Harding, *Financial Times*, May 3/4, 2003.

21. Lee Michael Katz, *National Journal*, February 8, 2003; Friedman, *The New York Times*, February 9, 2003.

22. Marc Lacey, *The New York Times*, May 7/8, 2003.

23. Frank Costingliola, *Political Science Quarterly*, Spring 1995.

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
81 - 102

# மோதலும் மோதல் தீர்வும் - I *

ஜயதேவ உயங்கொட **

இலங்கையில் இனத்துவ மோதல் என்பது முன்னணிக்கு வந்து அதன் பின்விளைவுகளை யுத்தம், சமாதானம் என்ற இரு பரிமாணங்களிலும் நாடு இன்னமும் அநுபவித்துக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில், மோதல் பற்றியும் அதன் தீர்வு பற்றியும் கோட்பாட்டு ரீதியான ஒரு கண்ணோட்டத்தை இக்கட்டுரை மேற்கொள்ள முனைகின்றது. மோதல் என்பதை வரையறை செய்து, அதன் செயற்பாடுகளையும் அது வெளிப்படும் முறைகளையும் முன்வைத்த பின்பு மோதலுடன் தொடர்புபடும் பல்வேறு எண்ணக்கருக்களும் ஆராயப்படுகின்றன. மோதலை எதிர்கொள்ளும் வழிவகைகளும் இம்முதற்பகுதி கட்டுரையின் ஈற்றில் எடுத்துக் கூறப்படுகின்றன. அடுத்த இதழில் இறுதிப் பகுதி வெளியாகும்.

---

* இக்கட்டுரை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தினால் (SSA) "Guide to Learning Peace - 1" என்ற நூல் வரிசையில் பேராசிரியர் ஜெயதேவா உயங்கொட அவர்கள் எழுதிய "Fonflict, Negotion, Mediation and Peace" எனும் சிறுநூலின் முதற்பகுதியின் மொழி பெயர்ப்பாகும்.

* பேராசிரியர், அரசறிவியற் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்.

## எவை மோதல்கள்?

நாம் எல்லோரும் அறிந்தது போலவே, இலங்கை, ஆயுத மோதல், கிளர்ச்சி, எதிர்ப் புரட்சி, போர் என்பனவற்றாலும், அதன் அழிவு தரும் பின்விளைவுகளாலும் கடந்த மூன்று தசாப்தங்களாகப் பீடிக்கப்பட்டுள்ளது. இன மோதலைப் பொறுத்தவரை, பேச்சுவார்த்தைகள், போர் நிறுத்தங்கள், மோதல் தவிர்ப்புக்கள், சமாதான உடன்படிக்கைகள், இன்னும் உடன்பாட்டின் பின்னரான யுத்தம் எனப் பல நிகழ்ந்துள்ளன. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக, சண்டையிடும் தரப்பினரைப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரும் சர்வதேச மத்தியஸ்தமும், அனுசரணையும் கூடக் காணப்படுகின்றன. இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனவின் இரண்டு கிளர்ச்சிகளின் போதும், பேச்சு வார்த்தையோ, மத்தியஸ்தமோ, அல்லது உடன்பாட்டை ஏற்படுத்தும் அம்சமோ காணப்படவில்லை. பேச்சுவார்த்தை, மத்தியஸ்தம், மோதல் தீர்வு என்ற கருத்துக்கள், இலங்கையில் அண்மைக் காலத்திலேயே அதாவது எண்பதுகளின் நடுக் கூற்றிலும், பிற்கூறிலும் தாம் அடிபடத் தொடங்கியது என்பதைக் குறிப்பாகச் சொல்லவேண்டும். "அமைதி" என்ற சொல் எமது சமூகத்திற் பல பிரிவினராலும் பயன்படுத்தப்பட்ட போதும், அதன் அர்த்தம் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. இந்தக் கட்டுரையில், இலங்கையின் அரசியற் கலந்துரையாடல்களிற் பேசப்படும், இவ்வெண்ணக் கருக்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

சாதாரண மொழியில் நாம் விளங்கிக் கொள்வது போல், மோதல் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஓர் அம்சம். சக மனிதர்களை எதிர் கொள்கையில், உடன்படாமை, கருத்து மோதல், சச்சரவு என்பன ஏற்படுவது போலவே, ஒற்றுமை, உடன்பாடு, ஒருமைப்பாடு என்பனவும் காணப்படுகின்றன. நாம், விரும்பத்தகாத அல்லது விரோத உறவுகளை மோதல் என அநேகமாக விளங்கிக் கொள்கிறோம். "மோதல்" நிலையை முகாமை செய்வதற்கு நாம் சிலவகையான திறன்களைக் கொண்டிருக்கின்றோம்: இணங்கச் செய்தல், பேரம் பேசுதல், பயமுறுத்தல், தவிர்த்தல் என்பன போன்ற வழிமுறைகளைக் குறிப்பிடலாம். எமது சமூக வாழ்வை இனங் காட்டும் பரிமாணங்களாக, வேற்றுமைகளால் தோன்றும் மோதல்களும், அவ்வேற்றுமைகளைக் கையாளும் ஆற்றலும் அமைகின்றன.

எனினும், மனிதனின் சமூக வாழ்க்கையிற் கருத்து மோதல்களும், மோதல்களும் இயல்பானவை என்ற விளக்கத்துடன் முடித்துவிட முடியாது. இவ்வாறு இனங் காண முற்படுவதானது உண்மையில் ஒரு சிக்கலான கதையை, விளக்க முற்படுவதைக் குறிக்கும்.

தனிநபர்களுக்கிடையிலான, குழுக்களுக்கிடையிலான, அரசுகளுக்கிடையிலான பிணக்குகளும் மோதல்களும் அழிவைத் தரும் விளைவுகளை உருவாக்குகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில், இணக்கப்பாட்டின்மையையும், வேறுபாடுகளையும் கையாள, வன்முறை ஒரு வழியாக மாறுகின்றது. வேறுபாடுகளையும், கருத்து மோதல்களையும் கையாள அடிபாடு, கலகம், கிளர்ச்சி, ஆக்கிரமிப்பு, யுத்தம் போன்ற வன்முறை சார்ந்த வழிகளை மனிதர் கைக்கொள்கிறார்கள். காயமடைதல், பொருள் அழிவு, இறப்பு என்பன மனிதனின் வன்முறை நடத்தையால் ஏற்படுகின்றன. இவ்வகையிற் சிறிய வேறுபாடுகளும் கருத்து மோதல்களும், சில வேளைகளிற் பெரிதாக்கப்படும் நிலைமைகள் தோன்றுகின்றன.

மோதல் என்னும் எண்ணக்கருவை ஒரு செய்முறையாகக் கொள்ள முடியும். அதாவது, வேறுபாடுகள் கருத்து மோதல்களை வளர்க்கும், அதன் பின்னரான வன்முறையின் செயற்பாடுகள், அழிவு தரும் பின் விளைவுகள் என வளரும் ஒரு செய்முறையாக மோதல் அமையும்.

எல்லா மோதல்களும், வன்முறையைச் சார்ந்தவையாயும் பின் விளைவுகளைக் கொண்டவையாயும் இருப்பதில்லை. மோதல்கள் வன்முறையற்றதாக இருக்க முடியும். அல்லது மோதல்களை வன்முறையற்ற வழிகளில் அணுக முடியும்.

மோதல் குறித்த இவ்வாரம்ப விளக்கத்தில் இருந்து, வேறு சில கேள்விகள் எழுகின்றன. வேறுபாடுகளும், கருத்து வேறுபாடுகளும் மோதல்களுக்குத் தான் இட்டுச் செல்ல வேண்டுமா? அழிவைத் தராத வகையில் வேறுபாடுகளையும் பிணக்குகளையும் அணுக வழிகள் உள்ளனவா? மோதல் இருக்கின்ற போதிலும், அவற்றை முடிவுக்குக் கொண்டுவரச் சாத்தியப்பாடுகள் இல்லையா? அல்லது குறைந்த பட்சம் எதிர்க்கணிய விளைவுகள் ஏற்படுவதைத் தடுக்க முடியுமா? இக்கட்டுரையில், இவற்றுக்கும் இவை போன்ற வினாக்களுக்கும் பதில் அளிக்க நாம் முயலுவோம்.

மோதல் பற்றிய வரைவிலக்கணம், அதன் பரிமாணம், இயங்கு நிலை குறித்து நோக்குவதுடன், இவ்வம்சங்களைக் கையாள மனிதர் பயன்படுத்தும் உபாயங்கள் குறித்தும் நாம் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

## மோதல் – ஆரம்பநிலை வரைவிலக்கணம்

மோதல்கள் என்றால் என்ன? மோதலை ஒரு கருப்பொருள் என்ற அடிப்படையில் எப்படி நாம் விளங்கிக் கொள்கிறோம்? இதற்குப் பொதுக்

கருத்தியல் ரீதியான அணுகுமுறை அவசியம். இவ்வினாக்களுக்கு விடையளிக்கச், சில சமூகவியற் கோட்பாடுகள் எமக்குத் தேவையாக உள்ளன. இரு மனிதர்களுக்கிடையிலான அல்லது பல மனிதர்கள், குழுக்கள், அரசுகள் இவற்றுக்கிடையிலான ஒரு தொடர்பு தான் "மோதல்" என்பதில் இருந்து தொடங்குவோம். பேராசிரியர் கிறிஸ்தோப்பர் மிற்செல் (Christopher Michell) என்பார், சர்வதேச மோதல்களின் அமைப்பு [Structure of International Conflict (1981)] எனும் தனது நூலில், "பொருந்தாத இலக்குகளைக் கொண்டிருப்பதாக நினைக்கும் இரு தரப்பினருக்கிடையேயான (தனிநபர்கள் அல்லது குழுக்கள்) ஒரு தொடர்பு" தான் மோதல் என வரையறுத்துள்ளார். இவ்வகையிற் பார்த்தால், மோதலானது, வேறுபாடுகள், போட்டி அல்லது கருத்து மோதல்கள் என்பதில் இருந்து விலகிச் செல்வதாக, அல்லது இவற்றை விட அதிகமான ஒன்றாகத் தெரிகிறது. குவின்சி ரைட் (Quincy Wright) என்பார், போட்டி என்பது சுயாதீனமான சமூகக் கூறுகள் தட்டுப்பாடான வழங்கலுக்குள் ஒன்றுக்கொன்று எதிராக நிற்பதைக் குறிப்பதால், போட்டியை மோதலில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கிறார். மோதல் என்பது "தமக்குள் எதிரெதிராக உள்ள சமூகக் குழுக்களுக்கிடையேயான எதிர்ப்பு" என குவின்சி ரைட் வரையறுக்கிறார்.

மோதல் குறித்து நூல்களில் வந்துள்ள பல அணுகுமுறைகளைத் தொகுத்துப் பார்ப்போமானால், மோதல் என்பதைத் "தமக்கிடையே பொருத்தமற்ற இலக்குகளைக் கொண்டிருப்பதாக நம்புகின்ற, ஒவ்வொருவரும் மற்றைய தரப்பினரை விட அதிகமாகப் பெற்றுக் கொள்வதை அல்லது நொதுமறப்படுத்த அல்லது தீங்கு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ள இரு தரப்பினரிடையே அல்லது பல தரப்பினரிடையே இயல்பாகவே வளரக் கூடிய போட்டி" என வரையறுக்கலாம்.

## மோதலும் அதன் செயற்பாடுகளும்

முதலாவதாகத், தனிப்பட்ட மட்டத்தில் முரண்படுகின்ற இலக்குகளை எய்த முயலும் இருவரிடையே மோதல் உருவாகின்றது. சமூக அரசியல் உறவுகள் என்ற மட்டத்தில், குழுக்களாக மனிதர்கள் ஊடாட்டம் புரியும் போது, அதிகாரத்தில், வளங்களிற், செல்வத்திற், மதிப்பிற் பொருத்தப்பாடு இல்லாமற் போவதால் மோதல் உருவாகின்றது. எனினும், சாதாரண விளக்கத்தில், மோதலை இயல்பாகவே எதிர்மறையானது எனக் கொள்ள முடியும். சமூகவியற் கோட்பாடுகள் மனித விவகாரங்களில் மோதல்

வகிக்கும் பங்கு குறித்த மாற்றுக் கணிப்பீட்டைத் தருகின்றன. உதாரணமாக, மாக்சியக் கொள்கையானது, மனித சமூகத்தின் முன்னேற்றத்துக்கும் உயர்ந்த விருத்திக்கும் வர்க்க மோதல் தான் பிரதான இயங்கு சக்தி எனக் கூறுகின்றது.

செல்வாக்கு மிக்க சமூகவியற் கொள்கையாளர்கள் சமூக மாற்றத்தில் மோதலானது ஆக்கம் தரும் பங்கினை வகிப்பதாகக் கருதுகின்றனர். 18ம் நூற்றாண்டின் ஜேர்மன் நாட்டுச் சமூகவியலாளரான, ஜோர்ஜ் சிமல் (George Simmel) என்பவரின் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய சமூக மோதல் (Social conflict) எனும் நூலில், மோதலானது சாதகமான செயற்பாடுகளைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக் காட்டினார். அது சமூகம் தேக்கமடைவதைத் தடுக்கிறது. பிரச்சினைகள் வெளிப்படுவதற்கும், தீர்வுகள் வருவதற்கும், அது ஓர் ஊடகமாக இருக்கிறது. தனியாள் மாற்றத்துக்கும், சமூக மாற்றத்துக்கும் மோதல் அடிப்படையாக உள்ளது. அது ஒருவர் தன்னைக் கணிப்பிட்டுச் சோதித்துக் கொள்ளும் வழிமுறையின் ஒரு பகுதியாக உள்ளது. ஜோர்ஜ் சிமல்லைப் பொறுத்த வரை, மோதலானது ஒரு குழுவை இன்னொரு குழுவிலிருந்து பிரித்துக் காட்டுகின்றது. இதன் மூலம், குழுக்களை அமைத்துக் கொள்ளவும், தனியாள் அடையாளத்தைக் கொண்டிருக்கவும் உதவுகின்றது. இதே போல் வெளியில் இருந்து வரும் மோதல், குழுவின் உள்ளே உள்ளார்ந்த இணைப்பை வலுப்படுத்துகின்றது. கோஸர் (Coser) 1950 களில், இதே போன்ற ஒரு வாதத்தை முன் வைத்தார். உறுதியற்ற பிணைப்பைக் கொண்ட குழுக்களிலும், திறந்த சமூகங்களிலும் எதிரிகளிடையே நெருக்கடியை தீர்ப்பதை மோதல் நோக்கமாகக் கொண்டிருப்பதால், அது சமநிலைப்படுத்தும், ஒன்றிணைக்கும் தொழிற்பாட்டைக் கொண்டிருக்கின்றது என்று அவர் கூறினார். அது ஒரு குழுவுக்குள், நடைமுறைவிதிகளுக்கு உரமூட்டுவதன் மூலம் புதிய விதி முறைகள் உருவாக வழி கோலுகின்றது. அது அமைதியற்ற பரப்புக்களை இனங் காட்டுகின்றது. அது ஒற்றுமையை மீளக் கட்டியெழுப்புவதில் வழி காட்டுகின்றது.

செயற்பாட்டாளர் என்கிற நோக்கு நிலையில் இருந்து, அமெரிக்கச் சமூகவியலாளர் மோரொன் டிற்ச் (Morton Deutsch), மோதலின் இருபடித்தான வகைகளைக் காண்பிக்கின்றார்: ஒன்று, அழிவைத் தரும் மோதல் மற்றையது ஆக்கந் தரும் மோதல். மோதலிற் பங்கு பெறுவோர் எல்லோரும் மோதலின் விளைவுகளை இட்டு அதிருப்தியடைந்து, மோதலால் தாம் இழப்பை அடைந்ததாக உணரத் தலைப்பட்டால், அவ்வகை மோதல் அழிவு தரும் விளைவுகளைக் கொண்டதாக அமையும்.

இதே போல், மோதலின் விளைவுகளால் மோதலிற் பங்கு பெறுவோர் எல்லோரும் திருப்தியடைந்து, தாம் மோதலால் நன்மையடைந்ததாக உணரத் தலைப்பட்டால் அவ்வகை மோதல் ஆக்கந் தரும் விளைவுகளை உடையதாக இருக்கும். டிற்ச்சினது பகுப்பாய்வின்படி, அழிவைத் தரும் மோதலானது, "விரிவடைந்து உக்கிரமடையும் போக்கை" உடையதென இனங் காணப்படுகிறது. அது விரிந்து பரவுகையில், அம்மோதல் தோன்றியதற்கான மூல காரணத்தில் தங்கி இருக்கலாம். அம்மூல காரணம் பொருத்தமற்றுப் போனாலும் அல்லது மறக்கப்பட்டுப் போனாலும் கூட, மோதல் தொடரும் பாங்கிலேயே இருக்கும். மாறாக, டிற்சேயின் சட்டகத்தில், ஆக்கந் தரும் மோதல் என்பது புத்தாக்கந் தரும் சிந்தனை முறையைப் போன்றது. கவனிக்கப்படாமல் போய்விடக் கூடிய ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தூண்டுதலை ஏற்படுத்துவது ஆக்கந் தரும் மோதலின் முக்கியமான புத்தாக்கச் செயற்பாடு ஆகும்.

## மோதலும் வன்முறையும்

எம்மனதில் மோதலானது உடனடியாக எதிர்மறையான துலங்கலையே ஏற்படுத்தும். இதற்கு மோதலுடன் இணைந்த வன்முறையே காரணம். அழிவைத் தரும் மோதலை எந்த வன்முறை இனங் காட்டுகின்றதோ அந்த வன்முறை காரணமாக அல்லது, மோதல் உருவாக்கும் வன்முறை காரணமாக, அழிவு தரும் மோதல் அநேகமாக அழிவுக்கே இட்டுச் செல்லும். மோதலைத் தீர்ப்பதற்கான அணுகு முறைகள், அநேகமாக, வன்முறையை அறவே ஏற்றுக் கொள்ளாமையால் தூண்டப்படுகின்றன. இதிற் கூட இரு பிரதான அணுகுமுறைகள் உண்டு. ஒன்று வன்முறையின் நேரான தொழிற்பாட்டை வரவேற்பது. மற்றையது அதன் எதிர்மறையான பரிமாணங்களை நோக்குவது.

அரசியற் தத்துவ வரலாற்றில், பெயர் பெற்ற பலர் வன்முறையை ஆதரித்தார்கள். உதாரணமாக, 16ம் நூற்றாண்டில், மாக்கியவல்லி அரச தந்திரத்திரக் கலையில் (state craft) வன்முறையின் நல்ல பயன்பாட்டைக் கண்டார். அவரது சிந்தனையின்படி, யுத்தமும், ஏனைய வன்முறைகளும் அதிகாரத்தைப் பேணிக் கொள்ளும் போதெல்லாம் நியாயப்படுத்தப்படுவதுடன், அது அரசாளுபவனின் கடமையாக உள்ளது. மாக்கியவல்லியின் அரசியல் நடைமுறைவாத தர்க்கத்தின்படி, யுத்தத்தைத் தவிர்க்க வழியில்லை; அதனைப் பிற்போடுவது பிறருக்கு நன்மையாக முடியும். இதே போல் வன்முறையைப் பொறுத்தவரை அறம் (morality) ஒரு சர்ச்சைக்குரிய அம்சமில்லை. குரூரம் (cruelty) நன்கு

பிரயோகிக்கப்பட்டதா அல்லது பிழையாகப் பிரயோகிக்கப்பட்டதா என்பது பற்றிய விடயமே வன்முறை என்பதாகும். 17ம் நூற்றாண்டில் தோமஸ் ஹொப்ஸ் (Thomas Hobbes), அதிகாரத்தை உறுதிப்படுத்த, வன்முறை அத்தியாவசியமானது எனக் கண்டார். கொந்தளிப்பான நிலைக்கோ அல்லது முடியாட்சிக்கோ அல்லது வன்முறைக்கோ சமூகமானது சீரழிந்து போகாமல் (வன்முறையால் பேணப்படும்) அதிகாரம் தடுக்கும். ஹொப்ஸின் பிரபலமான மேற்கோள் அவரது அணுகுமுறையைச் சுருக்கமாக உரைக்கின்றது:

> வாளில்லாமல் செய்யப்பட்ட ஒப்பந்தம் வெறும் வார்த்தையே. அது ஒரு போதும் ஒரு மனிதனைக் காக்கும் பலத்தைத் தக்க வைத்துக் கொள்ளாது.

நாம் ஏலவே, மாக்சிஸத்தில் நேரான வரலாற்றுச் சக்தியாக மோதல் எவ்வாறு நோக்கப்படுகின்றதெனக் குறிப்பிட்டோம். மாக்சியத்தின் பல வகை மாதிரிகளும், அடக்குமுறையாளனின் வன்முறைக்கு எதிரான அடக்கப்படுவோரின் வன்முறையைச் சட்டபூர்வ மானதாக, நீதியான அரசியற் செயற்பாடு என்பதாகப் பார்க்கின்றன. உண்மையில், மார்க்சிய அரசியற் கொள்கைக்குப் பின்னரான பல கொள்கைகள், மூன்றாம் உலக நாடுகளில் (குறிப்பாகத் தேசியவாதம், குடியேற்றவாத எதிர்ப்பு) வன்முறையை அவசியமான எதிர் நடவடிக்கையாக முன்வைத்தன. பிரான்ஸ் பாஃனனின் (Frantz Fanon) நவீன இலக்கியமான, The Wreteched of the Earth (1964) என்பதிற் குடியேற்றவாதத்துக்கெதிரான வன்முறை எதிர்ப்பானது, அடக்கப்பட்ட மக்களின் அரசியற் செயற்பாடாகக் காட்டப்பட்டுள்ளது.

## மோதலும் சாத்வீகமும்

வன்முறை, போராட்டம், எதிர்ப்பு என்பவை அடக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் சட்டபூர்வமான சாதனங்கள் என்ற நம்பிக்கை, அரசியற் சமூக மாற்றத்துக்குரிய, குறிப்பிடத்தக்க ஒரு பங்கை மோதலுக்குத் தருகின்றது. எனினும், இன்னோர் அணுகுமுறையும் உண்டு. அதுவே வன்முறை சாராமற் சாத்வீகமாக மோதலை அணுகுவதாகும். இவ்வணுகுமுறையிற் காந்தீயக் கருத்தான "சத்தியாக்கிரகம்" மிகவும் பலமுள்ள வெளிப்படுத்தலாக உள்ளது. சத்தியாக்கிரகம் என்பது ஆங்கிலத்தில் பெரும்பாலும் passive resistance என மொழிபெயர்க்கப் படுகின்றது. அது இந்தியக் கருத்தியலைத் துல்லியமாகத் தரவில்லை. உண்மையுடன் வாழ்தல்

அல்லது நேர்மையைக் கைக்கொள்ளல் என்பவை இவற்றின் நெருங்கிய அர்த்தங்கள். காந்தீய சத்தியாக் கிரகத்தின் முக்கிய பகுதி அகிம்சை என்பதாகும். அகிம்சை என்பது, வன்முறையற்ற நிலையைக் குறிப்பதோடல்லாமல், வன்முறையற்ற அன்பையும் குறிக்கின்றது. அது மோதலை மறுக்கவில்லை. ஆனால், வன்முறையை எதிர்க்கும் பாங்கில், மீள்வரையறை செய்கின்றது:

> அகிம்சை என்பது, அதன் இயங்குநிலையில் விழிப்புடன் துன்புறுதல் என்பதைக் குறிக்கின்றது. அது தீமை செய்பவனின் பலத்துக்கு கீழ்ப்படிவதென்ற கருத்தல்ல. அது கொடுங்கோலனுக்கு எதிராக, ஒருவனின் முழு ஆத்மாவையும் நிறுத்துதல் எனப் பொருள்படும். இத்தகு விதியின் கீழ், தனியாள், நீதியற்ற பேரரசுக்கு எதிராகத் தனது விழுமியத்தையும், தனது மதத்தையும், தனது உயிரையும் பேணிக் கொண்டு, அப்பேரரசின் வீழ்ச்சிக்கு அல்லது சீரழிவுக்கு அடித்தளம் இடும் சாத்தியம் உண்டு.

காந்தியின் சாத்வீகம், அரசியற் சமூகச் செயற்பாட்டில் நடைமுறைச் சாத்தியம் கொண்டதொன்று என்பது சுவாரசியமானதே. அது மோதலை மறுக்கவில்லை. அதைவிடப் பலமற்றவர்கள் தனித்துவமான வழியில் வீறுநடை போட அவர்களை வலுப்படுத்தி, மோதலின் பாதையை நிர்ணயிக்கின்றது. மோதலில் துடிப்புள்ளவராக நிற்க, அடக்கப்பட்டவர்களுக்கும் ஊக்கமுள்ளவர்களுக்கும் சாத்வீகமே கருவியாகின்றது. காந்தி ஒரு முறை கூறினார் :

> எனது சாத்வீகப் போராட்டம் மிகவும் ஊக்கமுள்ள சக்தி. அங்கு கோழைத் தனத்திற்கோ, பலவீனத்துக்கோ இடம் கிடையாது. ஒரு நாள் வன்முறையாளன் சாத்வீகியாக மாறும் நிலை உண்டு. ஆனால், கோழையாக மாற இடமில்லை.

மோதல் தீர்வுக்கு ஒரு வழிமுறையாகச் சாத்வீகப் போராட்டம் பயன்பட்ட வெற்றிகரமான வரலாறுகள் நிறைய இல்லை. இருந்தபோதும், சாத்வீகப் போராட்டத்தில் தூண்டப்படும் அரசியற் செயற்பாடானது, மிகப் பெரும் அரசியற் சமூக மாற்றத்துக்குக் கருவாக அமையும். 20ம் நூற்றாண்டில் சாத்வீகப் போராட்டத்துக்கு இரண்டு உதாரணங்கள் உண்டு. ஒன்று, மகாத்மா காந்தியால் ஊட்டம் பெற்ற இந்திய சுதந்திரப் போராட்டம். மற்றையது, அமெரிக்காவில், மார்டின் லூதர் கிங் (யூனியர்) இனால் முன்னெடுக்கப்பட்ட கறுப்பினத்தவரின் சிவில் உரிமை இயக்கம். மோதலில், வன்முறை வழிமுறையைக் கைக்கொள்வது உடனடி வெற்றியை உறுதிப்படுத்தினாலும் (ஆட்புல எல்லையை இணைத்தல்,

அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பன) வன்முறையின் இயல்பு காரணமாக அது, மேலும் வன்முறையை விதைத்து, நிரந்தர வெற்றியைப் பெறுவதை தடுக்கும் என வாதிடலாம். வன்முறையினால் "அமைதி" நிலைநாட்டப்படும் போது, அல்லது வன்முறையின் பேறான அச்சத்தால் "அமைதி" நிலைநாட்டப்படும் போது, அது உண்மையான அமைதி இல்லை. ஆனால் அது, "அச்சம் தொடர்ச்சியாக ஊட்டப்படுவதால், பேணப்படும் தற்காலிக, சமநிலையற்ற நிலையே. வன்முறை தற்காலிகமாக அடக்கப்பட்டுள்ளது. அது நீங்கவில்லை". மறு புறத்தில், மகாத்மா காந்தி சுட்டிக் காட்டியது போல் சாத்வீகமும், சத்தியாக்கிரகமும், "அதன் இயல்பில், அமைதியாக, மெதுவாக வேலை செய்யும்." எனினும், சத்தியாக்கிரகம் "நேரடியானதாக, விரைவானதாக" இருப்பதால், அது பலவீனர்களின் கருவியாக, வினைத்திறன் உள்ளதெனக் காந்தி நம்பினார்.

வன்முறை என்பது மோதல் நிலைமைகளிற், சமூகங்கள் எதிரெதிர் நிலையடையும் போக்கினை அநேகமாகக் கொண்டுள்ளன. சில சமயங்களில், அவ்வாறு பிளவுபட்ட சமூகங்கள், வன்முறைக்குத் தூண்டப்படும். சமூகப் பிரிவினைக்கும், வன்முறை மோதலுக்கும் முதன்மையான ஒர் எடுத்துக்காட்டு, வகுப்புக் கலவரங்கள் (communal riots) ஆகும். தென்னாசியாவில் வகுப்பு கலவரம் மிகவும் வழக்கமாகி விட்டது. இவ்வகை நிலைமைகளிற், சமூகங்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவது, மோதல் தீர்வில் முக்கிய சவாலாக மாறிவிடும். ஆழமாகப் பிளவுபட்ட சமூகங்களிடையே இணக்கப்பாட்டைக் கொண்டு வரும் உபாயத்துக்குக், காந்தியின் சாத்வீகப் போராட்டம் நல்ல தளத்தை அமைத்துக் கொடுக்கின்றது.

## மோதல்களைக் கையாளுதல்

மனித உறவுகளில் மோதல் எப்போதும் உள்ளது என்ற பொதுவான கூற்றுடன் இக்கட்டுரையை நாம் ஆரம்பித்தோம். எனினும், அதன் கருத்து மனிதர்கள் மோதல்களைப் புறக்கணிக்க முடியும் என்பதல்ல. மோதலின் ஆக்கந் தரும் தொழிற்பாடுகள் இருந்த போதும், அதனுடைய அழிவு தரும் தன்மையும் பின்விளைவுகளும் பயங்கரமானவை. நாடுகளுக்கிடையில், நாட்டுக்குள், குழுக்களுக்கிடையே தோன்றும் மோதல்கள், மனித சமூகங்களின் அடிப்படையையே ஆட்டங்காண வைக்கின்றன. இன்றும் குறைவிருத்தி அடைந்த பிராந்தியங்களில், உதாரணமாக, தென்னாசியாவில் நாடுகளுக்கிடையிலான சண்டைகள் அணுவாயுத

அழிவு ஏற்படும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளமையால், அந்நாடுகள், பல கோடிக்கணக்கான மக்களின் வாழ்வை அழிக்காத வழியில், மோதலைக் கையாளுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதாகின்றது.

அதே வேளை, உள்நாட்டு மோதல், குறிப்பாக இனக் குழுமங்களுக்கிடையிலான மோதலின் விளைவாக அண்மைக் காலங்களில் அரசாங்கங்கள் ஸ்தம்பித்துள்ளன. தேசியப் பொருளாதாரம் அழிந்துள்ளது. சண்டையில் ஈடுபடாத பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் இறக்க நேரிட்டது. சம காலத்தில் உலகில் நடந்த உள்நாட்டு யுத்தத்தில் மோதல் காரணமான மனித அழிவு அளவிட முடியாததாக உள்ளது.

மரணமடைதல், காயமடைதல் என்பவற்றை விடப் போரின் விளைவாக, நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகியுள்ளனர், இடம் பெயர்ந்துள்ளனர், புலம் பெயர்ந்துள்ளனர். அவர்களைப் பட்டினிக் கொடுமை வாட்டுகின்றது. அழிவின் பாதையில் இட்டுச் செல்லும் மோதல்கள் அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது மோதலின் அழிவு தரும் அம்சங்களை மாற்றக் கூடிய தலையீடுகள் உள்ளனவா?

தனிப்பட்ட முறையிலும், குழு மட்டத்திலும் கூட, மோதலில் ஈடுபடும் தரப்பினர் ஒரு தரப்பு நன்மையை ஈட்டிக் கொள்ளும் போக்குக் காணப்படுகிறது. அவர்கள் தமது நலன்களைப் பிரத்தியேகமானதெனவும் எதிர்த்தரப்பு நலனுக்கு எதிரானது எனவும் எண்ணுகின்றனர். மோதலுக்கான இவ்வகை அணுகுமுறைகள் வெற்றி - தோல்வி, அல்லது ஒட்டு மொத்தச் சூனியம் (zero sum) என்பதே பெறுபேறாக அமையும் எனக் கருதுகின்றனர். எதிராளியின் சரணாகதியுடன் அமையும் மற்றத் தரப்பினரின் வெற்றியானது, மிகப் பழமையான மோதல் தீர்வு வடிவமாகும். இவ்வகையான அணுகுமுறையால், அதிக அழிவு தரும் விளைவுகள் அடிக்கடி உருவாக்கப்படுவதுடன், சட்டரீதியானதாகவும் கொள்ளப்படுகின்றன. பல நவீன கால மோதல்களிற், குறிப்பாக அடையாளப் பிரச்சினை மற்றும் சமூக நீதி குறித்த மோதல்களில், மோதலில் முறியடிக்கப்பட்ட தரப்பினர் பெரும் ஈடுபாட்டுடனும் உறுதியுடனும் மீளவும் மேல் எழுவது சாத்தியமே. இலங்கையில் 1971 கிளர்ச்சியானது தோல்வியில் முடிந்த பின், ஜனதா விமுக்தி பெரமுன, எண்பதுகளில் மீள எழுந்ததை உதாரணமாகக் காட்டலாம்.

மோதலில், நேரான பயனுள்ள பெறுபேறுகள் உள்ளன என மோதலில் ஈடுபடும் தரப்பினரை உணர வைக்கும் அணுகுமுறைகளும் காணப்படுகின்றன. அவர்கள், மோதலில் ஈடுபடுவோர் போட்டி மனப் பாங்கை விடுத்து ஒத்துழைக்கும் மனப்பாங்குக்கு மாற

உற்சாகமளிக்கிறார்கள். தனிப்பட்ட வெற்றிகளுக்குப் பதிலாக, இரு தரப்பினரும் ஒன்றிணைந்து லாபம் பெற ஊக்குவிக்கின்றனர். இனி வரும் பகுதிகளில் மோதல் பற்றிய, நான்கு மாற்றுப் பார்வைகளைச் சுருக்கமாகப் பார்ப்போம். அவையாவன: மோதல் தீர்வு, மோதல் முகாமைத்துவம், மோதல் உருமாற்றம், மோதல் தடுப்பு என்பனவாகும்.

## மோதல் தொடர்பான எண்ணக்கருக்கள்

### 1. மோதல் தீர்வு

மோதல் தீர்வு என்பது குறுகிய மட்டத்தில், மோதலுக்கு வழிவகுத்த காரணிகளை அகற்றுதல் என்பதைக் குறிக்கும். உடனடியாகப் புலனாகாத ஆழவேரோடிய காரணிகளே மோதல் ஏற்படப் பொதுவாகக் காரணமாகின்றன. ஆழவேரோடிய இக்காரணிகள், பொருளாதார, அரசியல், சமூக அல்லது கலாசாரக் காரணிகளாக இருக்கக் கூடும். நீண்ட காலமாகப் பரிணாமம் அடைந்து வந்தவையாகப் பல மோதல்கள் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. மனித சமூகங்களுக்கிடையே இலக்குகளில் ஏற்படும் போட்டாபோட்டி இணக்கமில்லாமற் போகும் போது, மோதல் வெடிக்கிறது. மோதல் தொடர்பான துறையில் புலமைபெற்ற, சுவீடன் பேராசிரியர் பீற்றர் வலன்ஸ்டீன் (Peter Wallensteen) என்பவர், மோதல் தீர்வு என்ற எண்ணக்கருவானது, "மோதலில் ஈடுபடும் தரப்பினரின் வெளிப்படையான நலன்களுக்கு இடந்தரும் வழிகளை தேடுதல் என்பதுடன் தொடர்புடையது" என்று சுட்டிக் காட்டுகின்றார்.

இதன்படி, மோதல் தீர்வு என்ற எண்ணக்கருவானது, மோதலுக்குரிய காரணங்களைக் கவனத்தில் எடுத்து, மோதும் குழுக்களிடையே புதிய, நிலையான உறவை நிலைநாட்டி, பின்னெப்போதும் மோதற் காரணிகள் மீள எழாமல் செய்வதன் மூலம், மோதலை இல்லாமற் செய்வதைக் குறிக்கின்றது. அத்துடன் அது, வன்முறைக்கு முடிவு காணும் உடன்பாட்டைக் காண்பதுடன் நின்றுவிடாமல், இணக்கமில்லாத இலக்குகள் நோக்கங்கள் என்பவற்றுக்குத் தீர்வைத் தரும் உபாயங் களையும் குறிக்கின்றது. இவ்வகையிற் பார்க்கும் போது, மோதலில் ஈடுபடுவோரின் வெற்றி அல்லது தோல்வி என்பதனூடாக மோதலை முடிவுக்குக் கொண்டு வருதல் என்பதை மோதல் தீர்வு குறிக்கவில்லை. ஒரு தரப்பின் வெற்றியினூடாக மோதலை முடிவுக்கு கொண்டு வருவதென்பது, வெற்றி பெற்ற தரப்பு தோல்வியுற்றவரின் மீது தனது விருப்பத்தைத் திணிக்கக் கூடியதாக - மேலாண்மை செலுத்தக் கூடியதாக - இருத்தல் எனப்

பொருள்படும். ஆனால், இவ்வகை விளைவு நிரந்தரமான தல்ல. மோதல் திரும்ப ஏற்படும். ஏனெனில், மோதலுக்குக் காரணமான அடிப்படையான தேவைகள் தீர்க்கப்படவில்லை.

இதன்படி, மோதல் தீர்வு என்பது, சண்டை நிறுத்தம், மோதும் தரப்பினருக்கிடையே உடன்படிக்கைகளை அமுல்படுத்தல் என்ற அளவைவிட பெரிய அளவிற் செயற்படும். சில ஆய்வு நூல்களில் வலியுறுத்தப்படுவது போல், பின்வரும் பண்புகளை உள்ளடக்கும் தீர்வினை, அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டால், மோதல் தீர்க்கப்பட்டுவிட்டது எனக் கருத முடியும்:

★ கூட்டு உடன்படிக்கையானது மோதலுக்கு அடிப்படையாக இருந்த நலன்களையும் தேவைகளையும் திருப்தி செய்யும் தீர்வைக் கொண்டிருத்தல் வேண்டும்.

★ எந்தவொரு தரப்பினரின் முக்கியமான விழுமியங்களையும் தீர்வானது அழிக்காமல் இருக்க வேண்டும்.

★ பிற்காலத்தில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கும் ஒரு தீர்வை, மோதலில் ஈடுபடும் தரப்பினர் ஏற்பதாயிருக்க வேண்டும்.

★ தீர்வானது நீதி வழுவாததாகவும் நியாயமானதாகவும் இருத்தல் வேண்டும்.

★ தீர்வானது, போதியளவு எல்லாத் தரப்பினருக்கும் சாதக மானதாக இருக்க வேண்டும். அதன் மூலம் அது சுயமாக வலுப் பெறுவதாகவும் சுயமாகவே அமுலாவதாகவும் அமையும்.

## உ. மோதல் முகாமைத்துவம்

இரு நோக்கு நிலையில் இருந்து, மோதல் முகாமைத்துவம் எனும் எண்ணக்கரு வரையறுக்கப்படலாம். முதலாவது நோக்குநிலை, குறித்த எல்லைக்குள் மோதலைத் தாக்குப்பிடித்தலைக் குறிக்கும். இதன் மூலம் அழிவு தரும் விளைவுகளும் அசைவியக்கமும் கட்டுப்படுத்தப்படும் அல்லது தடுக்கப்படும். வேறு முறையிற் சொல்வதானால், முகாமை செய்தல் என்பது மோதல் வளர்வதைத் தடுப்பதன் மூலம் ஒரு கட்டுப்பாட்டு எல்லைக்குள் மோதலை வைத்திருக்கும் ஓர் உபாயம் ஆகும். மோதல் பற்றிய எதிர்மறையான அணுகுமுறை காரணமாக, மோதல் முகாமைத்துவத்தில் இவ்வகை விளக்கம் வெளிப்படுகிறது. இவ்வகையிற்

பார்த்தால், வெற்றிகரமான மோதல் முகாமைத்துவமானது, விவேகமான பயன் நாட்டமுடைய தலையீட்டின் தரம் என்றே நோக்கப்படுகின்றது.

இரண்டாவது வரைவிலக்கணத்தின்படி மோதல் முகாமைத்துவம், மோதலை ஆரோக்கியமான திசையில் நோக்குகின்றது. அது, மோதலை "வெவ்வேறான ஒன்றையொன்று எதிர்க்கும் இலக்குகள் மற்றும் அபிலாசைகளின் ஊடாட்டம்" என்பதாக விளங்கிக் கொள்கிறது. இதில் சர்ச்சைகள் செய்முறையாக்கப்படுகின்றனவே அன்றி முற்று முழுதாகத் தீர்க்கப்படுவதில்லை. இவ்வணுகுமுறையானது, மக்களாட்சி எல்லைக்குள், ஆரோக்கியமான ஜனநாயக உரையாடலுக்கும் விவாதத்துக்கும் மோதல் அவசியமானது என்பதை ஏற்றுக் கொள்கிறது. வன்முறையானது, மோதலின் அழிவு தரும் அம்சம் என்பது உண்மையே. ஆனால், சமூக மாற்றத்துக்கு ஊட்டந் தந்து மேம்படுத்தும் ஆரம்பப் புள்ளியாகவும் மோதல் இருக்க முடியும். இந்நோக்குநிலையில், மோதல் முகாமைத்துவம் என்பது, வேறுபாடுகளையும் பிரிவினைகளையும் ஆக்கபூர்வமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் கையாளும் ஒன்றாகக் கருதப்படும். மோதல் முகாமைத்துவத்தை ஆதரிப்போர், மோதல் தீர்வுக்கான உபாயங்களை நாடாமல், மோதல் முகாமைத்துவத்துக்கான உபாயங்களையே நாடுவர். அதாவது, மோதலை அகற்றும் முறைகளுக்குப் பதிலாக, எதிரெதிர்த் தரப்பினரை ஒன்றிணைத்து ஓர் ஒத்துழைக்கும் செயன்முறையால் மோதலை ஆக்கந் தரும் வகையில் கையாள முற்படுவர்.

அண்மைக் காலங்களில், மோதல் முகாமைத்துவமானது, கணிசமான அளவு இடத்தை நிபுணர்களிடையே பெற்றுள்ளது. குறிப்பாக, இன மோதல்களைத் தீர்க்கையில் ஏற்படும் சிக்கல்களைக் கருத்திற் கொள்கையில், மோதல் முகாமைத்துவம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. எதிர்காலம் தொடர்பான கூட்டு மொத்தப் பயமே கடுமையான இன மோதல் ஏற்படுவதற்கு பெரும்பாலும் காரணம் என வலியுறுத்துவதுடன், இன மோதலை முகாமைத்துவம் செய்வதென்பது "இறுதித் தீர்வென்பதில்லாத இடையறாத வழிமுறை" என்றும் இப்பொழுது வலியுறுத்துகின்றனர். இவ்வணுகுமுறையில், இன மோதலுக்கான வினைத்திறனுள்ள முகாமைத்துவமானது, சிறுபான்மைக் குழுக்களின் பௌதிக கலாசாரப் பாதுகாப்புக்கு உறுதியளிக்க, அதிகாரப் பங்கீட்டின் மூலம் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப, ஜனநாயக சுதந்திரம் மற்றும் பிரதேச தன்னாட்சி என்பதை வழங்க விரும்புவதுடன், சிறுபான்மைக் குழுக்களின் உரிமைகளையும், நிலைமைகளையும் உயர்த்த விரும்புகின்றது.

சிறுபான்மைக் குழுக்களின் பாதுகாப்புப் பிரச்சினைகள், சமாதான உடன்படிக்கையின் அமுலாக்கத்தின் ஊடாக வினைத்திறனுடன் கவனிக்கப்படாவிட்டால், மோதல் மீள வரும் சாத்தியம் அதிகம் உண்டு. மேலும், இனத்துவ மோதல் முகாமைத்துவம் என்பது, முடிவில்லாத இடையறாத நடைமுறையாகும்.

## 3. மோதல் உருமாற்றம்

மோதலைக் கையாள்வதற்கான இன்னோர் அணுகுமுறை மோதலின் உருமாற்றமாகும். இதுவும் மோதலைத் தீர்த்தல் என்ற எண்ணக் கருவுக்கு மாற்றாகத் தோன்றியதே ஆகும். மோதல் உருமாற்றம் என்ற கொள்கையை உயர்த்திப் பிடிப்போர், மோதல் தீர்வு முறையினை மோதலில் ஈடுபடும் தரப்பினருக்கிடையேயுள்ள அடிப்படை இணக்க மின்மையைக் கடந்து போகும் ஒரு வழிமுறையாக மட்டுமே வலியுறுத்து கின்றனர். இதன்படி, பெறுபேறுகளில் கவனம் செலுத்தப்படுகிறது. அது மோதலில் ஈடுபடும் தரப்பினரைத் திருப்தி செய்கிறது. அது, மோதலில் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை, பிரச்சினைகளை, மோதலில் ஈடுபடும் தரப்பினருக்கு ஏற்பட்ட மாற்றங்களையிட்டு அதிகம் அக்கறைப்பட வில்லை. மோதலானது அனைத்துத் தரப்பினரையும், அவர்களது உறவினையும், பிரச்சினைகளையும் மாற்றுவதுடன், இப்போராட்டப் போக்கில் ஒட்டு மொத்த மோதல் அசைவியக்கத்தையும், நிலைமாற்றும் அடிப்படைப் பாடங்கள் உள்ளதென்ற எடுகோளின் அடிப்படையில் மோதல் உருமாற்ற அணுகுமுறை இயங்குகின்றது.

மோதலின் உருமாற்றமானது, போராட்டத்தின் பெறுபேறாக அமைகிறது. அது பங்குபெறும் தரப்பினரை, அவர்களது ஆர்வங்களை, செயற்பாடுகளை, சச்சரவுகளை மாற்றமடையச் செய்கிறது. இதற்கு மேல் அது தனிப்பட்டவரின் யுத்தமாக, அல்லது அடிபாடாக இருக்காது. மாறாக, நீண்ட காலத்துக்கான பொதுவான மோதல் அனுபவ மாற்றத்தைப் பற்றிய கவனிப்பாக மாறுகின்றது. போராட்டம், வெற்றி, தோல்வி, இணக்கத் தீர்வு என்பவை திரும்பத்திரும்ப ஏற்படுவதன் பேறாக நிலைமாற்றம் ஏற்படக் கூடும். சுருக்கமாகச் சொல்வதானால், வரலாற்று அனுபவத்தில் இருந்து கற்றலை, பொதுமைப்படுத்தலை, உருமாற்றம்அல்லது நிலைமாற்றம் எனக் கூறலாம். மோதல் அனுபவங்களால், மோதலில் ஈடுபடும் தரப்பினர் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறாக அவர்களில் மாற்றமேற்படுவதால், ஆரம்ப மோதல் புதிய வடிவெடுக்கின்றது. வெற்றிகரமான மோதல் உருமாற்றம் ஒன்றில், பங்கெடுக்கும் தரப்பினரின் சர்ச்சைகள்,

எதிர்பார்ப்புக்கள் என்பவை மாற்றமடைவதால், அதன் பிற்பாடு அவர்களது உறவுகளில் இருந்து யுத்தம் உருவாகும் அச்சம் இருக்காது. மோதலை உருமாற்றும் கொள்கையானது, மோதலைத் தீர்க்கும் முயற்சிகள் வெளிப்படையான முன்னேற்றத்தைக் கொண்டிராத போதும், மோதலானது தொடர்ச்சியாக உருமாறுகிறதென்றே எடுத்துக் கொள்கிறது. இதே போல், கட்டுக்கடங்கா மோதலிலும் விழுமியம் நிலைமாறும் வழிமுறையூடாகவே அபிலாசைகளுக்கும் விழுமியங்களுக்குமான தீர்வுகள் எட்டப்படுகின்றன.

மோதல் உருமாற்றம் பல வித்தியாசமான வழிகளில் நிகழ முடியும். முதல்வகை அது பங்கெடுப்பவரின் உருமாற்றத்தின் வழியாக நிகழ முடியும். மோதலில் ஈடுபடும் பிரதான தரப்பினரிடையே உள்ளார்ந்த மாற்றங்கள் ஏற்படுவதை, அல்லது இணக்க நோக்கு நிலையில் இருந்து புதிய பார்வையில் மோதலை நோக்கக் கூடிய தரப்பினர் வருதலை இது குறிக்கும். இரண்டாவது வகை விடய உருமாற்றம் என்பதாகும். இது மோதலின் அரசியல் நிகழ்ச்சி நிரலை மாற்றுகின்றது. இது முரண்பாடு நிலவும் விடயங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கின்றது. மூன்றாவது வகை ஒழுங்குவிதி உருமாற்றம் என்பதாகும். இது நிகழ்வின் விதிகளை மாற்றுவதைக் குறிக்கும். அது பங்கெடுப்போரின் நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வரும். இறுதியில், ஒட்டுமொத்த மோதல் கட்டமைப்பும் மாற்றமடையக் கூடும். இவ்வாறான அமைப்பு ரீதியான உருமாற்றமானது, முதற் குறித்த மூன்றின் வழி வரும் மாற்றத்தைவிட குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

"மோதல் உருமாற்றம்" என்ற கருத்தியலின் அண்மையக் கோட்பாட்டாக்கத்தில், பேராசிரியர் ஜோன் போல் லெட்ராக் (John Paul Ledrach) என்பார், ஒரு மோதல் உருவாக்கும் சராசரி மாற்றத்தினை இரு வழிகளில் விளங்கிக் கொள்ள முடியும் எனக் கருதுகிறார். அவையாவன: விவரணப்படுத்தல், வரன்முறைப்படுத்தல் என்பனவாகும். இவை நான்கு பரிணாமங்களூடு செயற்படும். அவையாவன: தனியார் பரிமாணம், உறவுப் பரிமாணம், அமைப்புப் பரிமாணம், கலாசாரப் பரிமாணம் என்பனவாகும்.

தனியாள் பரிமாணம் : இது தனிப்பட்ட ஒருவர் மீது ஏற்பட்ட அல்லது ஏற்படுத்த விரும்பப்பட்ட மாற்றங்களைக் குறிக்கும். இதில் மோதலின் மனவுணர்வு, அறிவுணர்வு, ஆன்மீக உணர்வு என்பன செல்வாக்குச் செலுத்தும். விவரண அடிப்படையிற் பார்க்கும் போது, மோதலினால் தனிநபர்கள் சாதகமாகவும், பாதகமாகவும் பாதிக்கப்படுகின்றனரென "உருமாற்றம்" கருதுகிறது. வரன்முறையாகப் பார்க்குமிடத்துத், தனியார்

உருமாற்றம் என்பது, சமூக மோதலின் அறிவு தரும் தாக்கத்தைக் குறைக்கும் திட்டமிடப்பட்ட தலையீட்டையே குறிக்கின்றது. அத்துடன் அது தனியாளின் பௌதிக, உள, ஆன்மீக மட்ட அபிவிருத்திக்காக அவற்றின் வலுவைக் காட்டும் திட்டமிடப்பட்ட தலையீட்டைக் குறிக்கிறது.

உறவுப் பரிமாணம் : மோதலின் உருமாற்றத்தில் உறவுப் பரிமாணம் என்பது, உறவுகளில் ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கின்றது. விவரண ரீதியாக நோக்கினால், அது மக்களின் தொடர்பாடல் மற்றும் ஊடாட்ட உறவுக் கோலத்தில் மோதல் ஏற்படுத்திய தாக்கத்தைக் குறிக்கும். வெளிப்படை யாகத் தெரியும் சர்ச்சைகளைச் சுற்றி எழும் நெருக்கடி-களுக்கப்பால், எவ்வாறு மக்கள் ஒருவரை ஒருவர் உணர்கிறார்கள், மோதலை எப்படிப் பார்க்கிறார்கள், எதிர்கால உறவை எப்படி எதிர்பார்க்கிறார்கள் என்ற இன்னோரன்னவற்றைக் குறித்து நிற்கும்.

அமைப்புப் பரிமாணம்: இது மோதலின் உள்ளார்ந்த காரணத்தை எடுத்துக்காட்டிச் சமூகக் கட்டமைப்பில் மோதல் கொண்டு வரும் கோலங்கள், மாற்றங்களைச் சுட்டிக்காட்டும். அமைப்புப் பரிமாணம் என்பது (மோதலின் உள்ளடக்கம் அல்லது பொருள்) அடிப்படை மனித தேவைகள், வளங்கள் கிடைக்கும் அளவு, தீர்மானமெடுத்தலில் நிறுவன ரீதியான சீர்த்தன்மை போன்ற அம்சங்களை உள்ளடக்கும். விவரண மட்டத்தில், அமைப்புப் பரிமாணம் என்பது, சமூக நிலைமையின் பகுப்பாய்வைக் குறிக்கும். இச்சமூகநிலைமையே, மோதலை ஏற்படுத்த ஏதுவாயும், தீர்மானமெடுக்கும் தொகுதியினரில் மாற்றத்தைக் கொண்டுவருவதாயும் உள்ளது. வரன்முறை மட்டத்தில், இது மோதலின் வன்முறை வெளிப்பாட்டை உருவாக்கும் சமூக நிலைமைகளின் அடிப்படைக் காரணத்தையும் இனம் கண்டு ஆழ்ந்த அறிவை பெறும் திட்டமிட்ட தலையீட்டைக் குறிக்கும். அத்துடன் அது வன்முறையற்ற பொறி முறையையும் முன்னெடுக்கும். அது மோதல்களைக் குறைப்பதற்கும், வன்முறையைக் குறைத்து ஈற்றில் இல்லாமற் செய்வதற்கும், அடிப்படை மனித தேவைகளை உறுதிப்படுத்தும் கட்டமைப்பை உருவாக்க அநுசரணை செய்வதற்கும், தம்மைப் பாதிப்பனவைப் பற்றிய முடிவுகளை எடுப்பதில் அம்மக்களின் அதிகரித்த பங்குபற்றலுக்கும் உதவும்.

கலாசாரப் பரிமாணம்: இது ஒரு குழுமத்தின் கலாசாரக் கோலங்கள் மாற்றம் பெறுவதையும், மோதல் விருத்தியாவதற்கும் அதனைக் கையாளுவதற்கும் கலாசாரம் ஏற்படுத்தும் பாதிப்புக்களையும் குறிக்கும். விபரண மட்டத்திற், கலாசார உருமாற்றம் என்பது, எவ்வாறு மோதல் ஒரு

குழுமத்தின் கலாசாரக் கோலங்களை மாற்றுகின்றது, பாதிக்கின்றது என்பதைச் சுட்டும். மேலும், அது எப்படி இவ்வாறு திரண்ட பகிரப்பட்ட கோலங்கள் மக்களின் புரிந்துணர்வினையும், அவர்கள் மோதலைத் தொடங்குகின்ற ஆற்றலையும் பாதிக்கின்றது என்பது குறித்தும் கவனிக்கும். வரன்முறையாகப் பார்க்குமிடத்து, மோதலின் வன்முறை வெளிப்பாட்டுக்கு, கலாசாரக் கோலங்கள் பங்களிக்குமாற்றலைப் புரிந்து கொள்ள, கலாசார உருமாற்றக் கொள்கை எத்தனிக்கும். அது கலாசாரமொன்றில், ஆக்கபூர்வமாக மோதலைக் கையாளவும், எதிர் கொள்ளவும் தேவையான வளங்கள், பொறிமுறைகள் என்பனவற்றை இனங்கண்டு, முன்னெடுத்துச் செல்லும்.

## 4. மோதல் தடுப்பு

மோதல் வராமல் தடுக்க முடியுமா? யுத்தங்களும் மோதல்களும் வராமல் தடுக்கும் முறைகளும் உபாயங்களும் பல நூல்களிற் சொல்லப்பட்டுள்ளன. "மோதல் வராமல் தடுத்தல்" என்பதைத் தீ மூளாது தடுத்தலுடன் ஒப்பிட முடியும். உதாரணமாக, தொடர்மாடி ஒன்றில், தீ அபாய ஒலியமைப்பு, தீயணை கருவிகள், நீர் தெளிப்பான்கள் உட்பட தீ வராமல் தடுக்கும் பலமுறைகள் இணைக்கப்பட்டிருக்கும். அங்கு வசிப்போருக்குத் தீ அபாய நிலைமையில், எவ்வாறு செயற்பட வேண்டு மென்றும், தீ மூளக்கூடிய காரியங்களைச் செய்யாமல் இருப்பதற்கும் பயிற்சி அளிக்கப்படும். தீ மூளாது தடுப்போரைப் போலவே, மோதல் வராமல் தடுப்போரும் இயங்குகின்றனர்.

மோதல் வராமல் தடுக்கும் இரு முதன்மையான வகைகளாவன, இலேசான தடுப்பு முறையும் ஆழமான தடுப்பு முறையும் ஆகும். இலேசான தடுப்பு முறையானது, வன்முறையுடன் கூடிய ஒரு மோதல்நிலை, ஆயுத மோதலாக உருவெடுக்காமல் இருப்பதை இலக்காகக் கொண்டது. இலேசான தடுப்பு முறையில் ஈடுபடுவோர் மோதலின் மூலகாரணம் பற்றியோ, அல்லது நெருக்கடியைத் தீர்க்கும் வழிமுறைகள் குறித்தோ அக்கறைப்படுவது அவசியமென்றில்லை. மூள இருக்கும், அல்லது மறைந்திருக்கும் மோதல், மோசமான ஆயுத மோதலாக உருவெடுப்பதைத் தடுப்பதே அவர்களின் இலக்கு. இலேசான தடுப்பு முறைகளுக்கு உதாணரமாக, இராஜதந்திர தலையீடு, தனியார் மத்தியஸ்தம், நீண்டகால தொலைநோக்குத் திட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம். அவை உத்தியோகபூர்வ இராஜதந்திரத்தில் இருந்து (மத்தியஸ்தம், இணக்கம், உண்மை நிலையறிதல், சிறந்த நிர்வாகம்,

அமைதிப் பேச்சுவார்த்தை, சமாதானத் தூது, கடும் எச்சரிக்கை) உத்தியோகப் பற்றற்ற இராஜதந்திரம் (தனியார் மத்தியஸ்தம், பின் கதவால் முயற்சி செய்தல், சமாதான ஆணைக்குழு, பிரச்சினை தீர்வுப் பட்டறைகள், மோதல் தீர்வுப் பயிற்சி, வட்டமேசை மாநாடு) வரை அமையும். உள்ளூரில் மனித உரிமை அல்லது மதக்குழுவினர் மேற்கொள்ளும் முயற்சிகளும், அரசியற் கட்சிகளுக்கிடையேயான மாநாடுகளும் இலேசான தடுப்புமுறைகளுக்கு உதாரணங்களாகும். மோதல் நிலை கடுமையாக வெடிக்கு முன்னரே சர்வதேசத் தலையீட்டை முனைப்பாக்குவதும், இலேசான தடுப்புமுறைகளில் அடங்கும். இம்முறை பனிப்போருக்குப் பின்னரான உலகத்தில் உருவானதொன்றெனலாம்.

மறுதலையாக, ஆழமான தடுப்புமுறையானது, மோதலின் மூல காரணத்தை நிவர்த்திப்பதை இலக்காகக் கொண்டது. உள்நாட்டில் மோதல் நிலையில், அபிவிருத்திப் பிரச்சினைகள், அரசியல் அதிகாரப் பிரச்சினை, சமுதாயங்களின் அடையாளத் தேவைகள் என்பவற்றை ஆழமான தடுப்புமுறை உள்ளடக்கும். இலேசான தடுப்பு முறை, மோதலின் உடனடிக் காரணங்கள், பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்துகையில், ஆழமான தடுப்பு முறையானது, மோதலின் ஆழ வேரோடிய கட்டமைப்பு சார் காரணங்களை நோக்குகின்றது. ஆழமான தடுப்புமுறைகள் "நிலைத்து நிற்கும் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்குமான மூலப் பொருட்கள்". அது மனித உரிமைகளுக்குப் பொறுப்பான உள்ளூர், அரச பிரதேச மற்றும் சர்வதேச அமைப்புக்களின் சிறந்த செயலாற்றுகையையும் உள்ளடக்குகின்றது. எனவே, ஆழமான மோதல் தடுப்பானது, மக்களாட்சியையும் ஆட்சி முறைமையையும் மீளக் கட்டமைத்து உறுதி செய்வதையும் தேர்தற் கண்காணிப்பு, ஊடக சுதந்திரத்தைப் பேணுதல், வெளிப்படையான பொறுப்புள்ள அரசியல் நடைமுறை (உதாரணமாக, மனித உரிமைக் கண்காணிப்பு, சட்ட மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம், சுதந்திரமான நீதி பரிபாலனம்) என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.

## முன்கூட்டிய எச்சரிக்கை

1980களிலும் 1990களிலும் மோதல் தடுப்பு பற்றிய நூல்களில், "முன்கூட்டி எச்சரிக்கை செய்தல்" எனும் கருத்தியல் வெகுவாகப் பேசப்பட்டது. முற்கூட்டியே மோதல் வருவதை உணர்த்தும் வழிவகைகளை இனம் காணும் நடைமுறையை ஏற்படுத்துவதன் மூலம், மோதலைத் தடுக்கவோ அல்லது முகாமைத்துவம் செய்யவோ முடியும் என்பதை இது

அடிப்படையாகக் கொண்டது. கெனத் போல்டிங் (Kenneth Boulding) என்பவரால், முன்மொழியப்பட்ட சமூகத் தரவு நிலையம் என்பது இற்கமைவாக உருவாக்கப்பட்டது. வானிலை அவதான நிலையத்துக்கு ஒப்பாக, இந்தச் சமூகத் தரவு நிலையமும் "சமூக வெப்ப மற்றும் அமுக்கங்"களை இனங் காணப் புலமையாளருக்கு வகை செய்யும் எனப் பேராசிரியர் போல்டிங் கருதினார். மேலும் இதன் மூலம், தணிந்த அல்லது சூடான பகுதிகளையும் எதிர்வுகூற முடியும் எனவும் கண்டார். மோதல் எழக் கூடிய பரப்பினைக் கண்காணித்து மோதலை முளையிலேயே கிள்ளி யெறிவது, சமூகத் தரவு நிலையத்தின் பணியாகும். முன்கூட்டிய எச்சரிக்கையில் இரு பணிகள் உள்ளன:

- ★ மோதல் வகையை இனங்காணுதல். அது வரன்முறையாக வெடிக்கக் கூடிய இடத்தை இனங்காணுதல்.
- ★ மோதல் எவ்வளவு தூரத்துக்கு வன்முறையை அண்மிக்கின்றது என்பதை வைத்து, அதன் வளர்ச்சியைக் கண்காணித்தலும் மதிப்பிடலும்.

"முன்கூட்டிய எச்சரிக்கையில்" மோதல் கண்காணிப்பின் போது, ஆராய்ச்சியாளர் பண்புசார் தரவுகளையும் அளவுசார் தரவுகளையும் திரட்டுகின்றனர். அளவுசார் தரவுகளில், வன்முறை, அமைதியற்ற நிலை, வேலைநிறுத்தம் போன்ற நிகழ்வுகள் வரும். இவை மோதற் போக்கைச் சுட்டிக்காட்டுவன. ஆய்வாளர், போக்கினை வரைந்து, நிகழ்வுகளை மதிப்பிட்டு, ஒப்பிட்டுச், சாத்தியமான சமப்படுத்தல் வளைவுகளை இனங் காண்பர். அரசியல் மோதலின் தன்மையை அளக்கச் "செல்நெறி ஆய்வு" என்னும் அணுகுமுறையைப் பயன்படுத்த முடியும் என எடுத்துக் கொள்ளப்படுகிறது. மோதற் கண்காணிப்பிற் பண்புசார் தரவுகள் பல்வகைப்பட்டன. ஒரு குறித்த இடத்தின் அரசியல், சமூக பொருளாதார நிலைமைகள் பற்றிய தகவலும் அதன் பேரளவான அரசியற் போக்குகளும் இதில் உள்ளடக்கப்படும். வழமையாக இவ்வகையான பண்புசார் தரவுகள், மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் அறிக்கைகள், ஊடக, புலமைசார் மற்றும் ராஜதந்திர வியலாளரின் பகுப்பாய்வுகள், அவதானிகளின் அறிக்கைகள் என்பவற்றிலிருந்து பெறப்படுகின்றன. அளவுசார் புள்ளிவிபரவியற் பகுப்பாய்வைவிடப் பண்புசார் கண்காணிப்புத் தரவுகள் மிகவும் பயனுடையவை எனலாம்.

## மோதலை எதிர்கொள்ளும் வழிவகைகள்

மோதல்கள் ஆக்கந் தரும் வழியிற் கையாளப்பட வேண்டுமெனில், அவை மோதலின் அடிப்படைக் காரணங்களுடன் அணுகப்பட வேண்டும். மோதல் காரணங்களுக்கான பல்வேறு கொள்கை அணுகுமுறைகளின் அடிப்படையில், மோதலை அணுகும் உபாயங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பிஃஷர் மற்றும் பலர் (*Fisher et-al, Working with Conflict: Skilks and Strategies for Action, 2000*) எழுதிய நூலான, "மோதலுடன் செயற்படுதல்: செயற்படுவதற்கான திறன்களும் தந்திரோபாயங்களும்" எனும் நூலில் இருந்து சில முக்கியமான அணுகுமுறைகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன:

சமுதாய உறவுகள் : சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு குழுக்களிடையே நிலவும் பிளவு, நம்பிக்கையீனம், பகைமை என்பவற்றால் மோதல் ஏற்படுகின்றதென்று சமுதாய உறவுக் கோட்பாடு எடுத்துக்கொள்கிறது. அவ்வகை நிலைமைகளில் மோதல் தீர்வின் இலக்குகளாவன:

- ★ மோதலில் ஈடுபடும் குழுக்களிடையே தொடர்பாடலையும் புரிந்துணர்வையும் மேம்படுத்தல்.
- ★ சமுதாயத்திற் சகிப்புத் தன்மையையும், பன்முகத் தன்மை யையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை முன்னேற்றுதல்.

மனித தேவைகள்: நிறைவேறாத அல்லது வெறுத்துப் போன மனித தேவைகளால் (பௌதிக, உளவியல் மற்றும் சமூகத் தேவை) தான் மோதல் உருவாகின்றதென்று, மனித தேவைக் கோட்பாடு கூறுகின்றது. இவ்வகை மோதல்களானவை, பாதுகாப்பு, அடையாளப் பிரச்சினை, அங்கீகாரம், பங்குபெறுதல், சுய நிர்ணயம் போன்ற இலக்குகளை வலியுறுத்துகின்றது. மனித தேவையை அடிப்படையாகக் கொண்ட மோதல்களைக் கையாளப் பின்வரும் நோக்கங்கள் உதவிபுரியும்:

- ★ மோதலில் ஈடுபடும் தரப்பினர் நிறைவேறாத தேவைகளை இனங் காண அதனைப் புரிந்து கொண்டு உதவி புரிவதுடன், அத்தேவைகளை நிறைவேற்றத் தெரிவுகளை உருவாக்குதல்.
- ★ இரு தரப்பினரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் இணக்கப்பாட்டுக்கு வர உதவி செய்தல்.

அடையாளத் தேவைகள் : அடையாளத் தேவைக் கொள்கையானது, அடையாளம் அபாயத்துக்குள்ளாகும் உணர்வினால் ஏற்படுகின்றதெனவும், அது தீர்க்கப்படாத கடந்த கால இழப்பு மற்றும் துன்பங்களில் வேர் கொண்டுள்ளது எனவும் எடுத்துக் கொள்கிறது. இவ்வகை மோதல் தீர்வு நடைமுறையிற் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை பின்வருமாறு:

- ★ ஒவ்வொரு தரப்பினரும் அஞ்சுகின்ற பயப்படுகின்ற விடயங்களை இனங் காண உதவி செய்து, ஒருவர் மற்றையவர் பிரச்சினையை உணரச் செய்து, இணக்கத்தை இருவருக்குமிடையில் ஏற்படுத்தல்.
- ★ எல்லாத் தரப்பினரினதும் அடிப்படை அடையாளத் தேவையை அங்கீகரிக்கும் பொது உடன்பாட்டை எட்டச் செய்தல்.

தொடர்பாடல்: ஊடு கலாசாரத் (Intercultural) தொடர்பாடற் கொள்கையானது வெவ்வேறு கலாசாரப் பாணிகளுக்கிடையிலான பொருத்தப்பாடின்மை காரணமாக மோதல் ஏற்படுகின்றதென்று எடுத்துக் கொள்கிறது. இவ்வணுகுமுறையின் இலக்குகளாவன:

- ★ மோதலில் ஈடுபடும் தரப்பினர் மத்தியில் மற்றையவரின் கலாசாரம் பற்றிய அறிவை வளர்த்தல்.
- ★ ஒவ்வொருவரும் மற்றையவர் குறித்து வைத்திருக்கும் எதிர்க்கணிய மாறாப் போக்கைத் தளர்த்துதல்.
- ★ வினைத்திறனுள்ள, ஊடு கலாசாரத் தொடர்பாடலை மேம்படுத்தல்.

மோதல் உருமாற்றம்: சமூக, பொருளாதார கலாசாரச் சட்டகத்தில், நிலவும் சமத்துவமின்மை, அநீதி என்பவற்றால் தோன்றும் பிரச்சினைகளே மோதல் ஏற்படக் காரணமென்று "மோதலின் உருமாற்றக் கொள்கை" கருதுகின்றது. இவ்வாறான நிலைமைகளிற் கருத்திற் கொள்ளப்படும் அம்சங்களாவன:

- ★ சமத்துவமின்மை, அநீதி என்பவற்றை ஏற்படுத்தும் கட்டமைப்பையும் சட்டகங்களையும் மாற்றுதல். இது பொருளாதார மீள்பரம்பலையும் உள்ளடக்கும்.

★ மோதலில் ஈடுபடும் தரப்பினரிடையே நீடித்து நிற்கும் உறவையும் உளப் பாங்குகளையும் மேம்படுத்தல்.

★ அதிகாரமளித்தல், நீதி அமைதி, மன்னிப்பு, இணங்கியிருத்தல், அங்கீகாரம் என்பவற்றை முன்னேற்றும் அமைப்புகளையும் வழிமுறைகளையும் விருத்தி செய்தல்.

பிரச்சினைகளைத் தீர்த்தல்: பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறை யான, பேச்சுவார்த்தைக் கொள்கையானது, மோதலில் ஈடுபடும் தரப்பினர் மேற்கொள்ளும் இணங்காத நிலைப்பாடு மற்றும் ஒட்டுமொத்த சூனிய மனப்பாங்கு என்பவை காரணமாக, அம்மோதல் தீர்ப்பதற்கு கடினமான பணியாகின்றதென எடுத்துக்கொள்கிறது. பிரச்சினையைத் தீர்த்தல் அணுகுமுறையானது, பின்வரும் இலக்குகளை நோக்கமாகக் கொண்டது:

★ கடும் நிலைப்பாடுகளை விடுத்து, நலன்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தவும், தனிப்பட்ட விவகாரங்களைப் பிரச்சினைகளிலிருந்து பிரித்துப் பார்க்க, மோதலில் ஈடுபடும் தரப்பினருக்கு உதவுதல்.

★ அனைத்துத் தரப்பினரும் பரஸ்பர நன்மை பெறும் இணக்கப்பாட்டுக்கு வர அனுசரணை செய்தல்.

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
103 - 122

# வடக்குக் கிழக்கு நிலைமையின் பின்னணியில் வறுமைக் குறைப்பும் இலங்கையை மீட்டெடுத்தலும்

*வி. நித்தியானந்தம் **

**இலங்கையை மீட்டெடுத்தல் - துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கான தொலைநோக்கும் தந்திரமும்; வெளியீடு: இலங்கை அரசாங்கம் ; 2003 ; பக்கங்கள் : 222.**

## அறிமுகம்

2003ம் ஆண்டு மே மாதத்தில் இலங்கை அரசாங்கம் **இலங்கையை மீட்டெடுத்தல் துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கான தொலைநோக்கும் தந்திரமும்** என்ற தலைப்பிலான 222 பக்கங்களைக் கொண்ட ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை இரு பாகங்களைக் கொண்டதாகும். அதன் முதலாவது பாகம் இருபது பக்கங்களுடன் **வளர்ச்சிக்கான தொலைநோக்கு** என்றும், இரண்டாவது பாகம் அதிக பக்கங்களுடன் **வளர்ச்சியுடன் இணைத்தல்: இலங்கையின் வறுமைக் குறைப்புத் தந்திரம்** என்றும் தலைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொருளாதார ரீதியாக மீட்டெடுக்கும் குறிக்கோளுடன் இரு பாகங்களைக் கொண்டு இந்த அறிக்கை வெளிவந்த அதே தருணத்தில், வடக்குக் கிழக்கில் உள்ளடங்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என்ற எட்டு

* பேராசிரியர், பொருளியற் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மாவட்டங்களுக்குமான தேவைகள் பற்றிய மதிப்பீடொன்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த மதிப்பீட்டு அறிக்கை **இலங்கை : முரண்பாட்டினாற் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான தேவைகளின் மதிப்பீடு** என்ற தலைப்பைப் பெற்றுள்ளது.

"இலங்கையை மீட்டெடுத்தல்" எனக் கூறுமிடத்து அது இயல்பாகவே வடக்குக் கிழக்கை உள்ளடக்கியதாகவே இருக்க வேண்டும். இது வடக்குக் கிழக்கு இன்னமும் இலங்கையின் ஒரு பகுதி என்பதனால் மாத்திரம் ஏற்படுவதொன்றன்று. அதனுடன் கூடவே, ஒரு மீட்டெடுப்புச் செய்முறையை இலங்கை மீது பிரயோகிக்க வேண்டியளவுக்கு அதன் ஒருமித்த சமூகப் பொருளாதார நிலைமை நலிவுற்றதென்றால் அதற்கு வடக்குக் கிழக்கில் உருவாக்கப்பட்ட நிலைமைகளே பெருமளவுக்குப் பொறுப்பாயிருந்தன என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டியிருந்த சிறப்பு நிலை காரணமாகவும் ஏற்படுவ-தொன்றாகும். எனினும், "மீட்டெடுத்தல்" அறிக்கை வெளிவந்த ஏக காலத்தில் நாம் மேலே குறிப்பிட்ட பல்பக்க நிறுவனங்களின் அநுசரணையிலான "தேவைகளின் மதிப்பீடு" பற்றிய அறிக்கையும் வெளிவந்திருந்தமையினால், முன்னையது அதனையும் கணிப்பி-லெடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. (ப.5).[1] அவ்வாறு செய்தமை மூலம் "மீட்டெடுத்தல்" அறிக்கை, வடக்குக் கிழக்கைத் தனித்துவ நிலையிற் கணிப்பிற் கொள்ள வேண்டிய பொறுப்பிலிருந்து தன்னைப் பெருமளவுக்கு விடுவித்துக் கொண்டிருந்ததெனலாம். அதனால், வடக்குக் கிழக்கின் பின்னணியிலிருந்து அந்த அறிக்கையை ஆராயுமிடத்துத் தொடக்கத்திலேயே அதன் உள்ளார்ந்த நிலையில் தவிர்க்க முடியாத வகையில் ஒரு குறைபாடு புகுந்து கொள்வதை உணர முடியும். அதாவது அறிக்கை, வடக்குக்கிழக்கைச் சிறப்பு நிலைக்குட்படுத்தி விடயங்களை ஆராயவில்லை என்பதேயாகும். அதற்குப் பதிலாக "இலங்கை" என்ற பொது நிலையிலிருந்தே அவை அணுகப்படுகின்றன.

ஆனால், அதே சமயம், "தேவைகளின் மதிப்பீடு" பற்றிய அறிக்கையும் "மீட்டெடுத்தல்" அறிக்கை பற்றித் தெரிந்து கொண்ட நிலையில் தான் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே அது "மீட்டெடுத்தல்" ஆவணத்திற்கு இசைவுடையதாயிருக்குமென்ற எதிர்பார்க்கை நேரடியாகவே குறிக்கப்படுகின்றது (**தேவைகளின் மதிப்பீடு : ப. 75**). இரு அறிக்கைகளும், உண்மையில், ஒன்றுக்கொன்று ஒத்திசைவுடையதாக இருக்க வேண்டுமென்ற முழுமையான புரிந்துணர்வுடன் தான் ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. ஆகவே, வடக்குக்கிழக்கின்

அபிவிருத்தி பற்றிப் பேசும் போது இந்த இரு ஆவணங்களையும் ஒருசேரக் கவனத்திற்கெடுத்துக் கொள்வது அவசியமாகின்றதென்பது மாத்திர-மன்றித் தவிர்க்க முடியாததொன்றாகவும் ஆகிவிடுகின்றது.

## அணுகுமுறைக் குறைபாடு: இலங்கையை மீட்டெடுத்தல்

வடக்குக் கிழக்கின் பின்னணியில் "மீட்டெடுத்தல்" அறிக்கையை நோக்குமிடத்து, அதன் சகபாடியாகிய "தேவைகளின் மதிப்பீடு" நிலவியுள்ள நிலையிலும் முன்னையதன் அணுகுமுறையிலான அடிப்படைத் தன்மை வாய்ந்த குறைந்தது, இரு குறைபாடுகளையாவது சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகின்றது.

முதலாவதாக, இலங்கையை மீட்டெடுத்தல் என்பது தீவு மீதான ஒரு முழுநிலைக் கண்ணோட்டமாயிருந்தாலும், உண்மையில் மீட்டெடுக்க வேண்டியிருந்தது இனத்துவப் போரினாற் சின்னாபின்னமடைந்திருந்த வடக்குக்கிழக்கே என்பது சிறப்பாகக் கணிப்பிற் கொள்ளப்பட வேண்டிய-தொன்றாகும். தீவின் ஏனைய பகுதிகள் போரின் தாக்கங்களுக்கு உட்படவில்லையென்று எவ்வகையிலும் வாதிட முடியாவிட்டாலும் அவ்வாறான தாக்கங்கள் ஓர் இரண்டாந்தர மட்டத்தில் தான் ஏற்பட்டிருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக, வடக்குக்கிழக்குப் போன்று அவற்றின் சமூகப் பொருளாதாரக் கீழ்க்கட்டுமானம் முற்றாகச் சிதைக்கப்பட்டதென்று எதுவிதத்திலும் கூறிவிட முடியாது. இந்நிலையில், இலங்கையை மீட்டெடுப்பதற்கான எந்த ஓர் ஆய்வும் பாரதூரமான பாதிப்புக்குட்பட்ட வடக்குக்கிழக்கின் மீது சிறப்பாகக் கவனம் செலுத்துவது அவசியமானது. எனினும், "மீட்டெடுத்தல்" அறிக்கை அவ்வாறானதொரு முறையில் வடக்குக்கிழக்கின் மீதான சிறப்பு நிலை அணுகுமுறை எதனையும் பூரணமாகப் பின்பற்றுவதிலிருந்து தன்னை ஓர் உள்ளார்ந்த நிலையில் ஆரம்பத்திலிருந்தே தவிர்த்துக் கொண்டு விட்டதென்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். ஆயினும், அந்த அறிக்கையின் இரு பகுதிகள் ஓரளவுக்கு அத்தகைய அணுகுமுறைக்கு அண்மித்த ஒரு கட்டத்திற்கு வருகின்றன எனலாம். ஆனால், ஈற்றில் அவையும் வடக்குக்கிழக்கின் மீது தனித்துவக் கவனம் என்ற தேவையைச் சரியான முறையிற் பூர்த்தி செய்யவில்லையென்றே கொள்ள வேண்டும்.

**துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான ஒரு புதிய அணுகுமுறை** என்று தலையங்கமிடப்பட்ட அறிக்கையின் முதலாவது பாகத்தின் ஐந்தாவது அத்தியாயத்தில்,

> பொருட்கள், சேவைகளின் திறமையற்ற உற்பத்தியென்பது பொருளாதாரத்தின் எந்த ஒரு பகுதியில் நிலவியிருந்தாலும் அது முழு நாடும் பொறுப்பேற்க வேண்டியதொரு சுமையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது (ப. 13).

என்று கூறப்பட்டிருந்த போதும் வடக்குக்கிழக்கு அத்தகைய திறமையற்ற உற்பத்தியின் இருப்பிடம் என்பதோ அதனை மீட்டெடுத்துத் தான் இலங்கையின் சுமையைப் போக்க வேண்டுமென்பதோ உரிய வகையிற் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. "தேவைகளின் மதிப்பீடு" என்ற அறிக்கை உரிய வகையில் அல்லது ஓரளவுக்கு அதனைப் பூர்த்தி செய்கின்றதென்பது கூடச் சுட்டிக் காட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக "…. எமது எல்லா மக்களுக்கும் முன்னேற்றம் மிக்க சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி, உற்பத்திசார் மேலதிக தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்" (மேலது) என்று தான், அதாவது இலங்கையை முற்றாகக் கொண்ட ஒரு பொதுநிலைப்படுத்தப்பட்ட ரீதியில் தான் கூறப்பட்டுள்ளது. அது போன்று, அறிக்கையின் இரண்டாவது பாகத்தில், நான்காவது அத்தியாயம், **முரண்பாடு தொடர்பான வறுமையைக் குறைத்தல்** (பக். 47 - 53) என்ற தலையங்கத்தின் கீழ்ச் சமாதானத்தின் முக்கியத்துவம், இனத்துவ முரண்பாட்டினாற் பாதிக்கப்பட்டோருக்கான கூடியளவு பயன்தரு நிவாரணம், புனர்நிர்மாணத்தை முன்னெடுத்தல், சமூக இசைவுக்கான முதலீடு என்ற பல விடயங்களை ஆராய்ந்துள்ள போதிலும், வறுமையின் உறைவிடங்கள் உண்மையில் எவை என்பதோ அதனை அகற்றுவதற்கான குறிப்பான முயற்சிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படலாமென்பது பற்றியோ எதுவும் காணப்படவில்லை. பச்சையாகக் கூறுவதாயின், வடக்குக் கிழக்குத் தான் வறுமையின் மோசமான இருப்பிடங்கள் என்பது கருத்திலெடுக்கப்பட்டு அதற்கான நிவாரணங்கள் என்ற வடிவிலான தீர்வுகள் எதுவும் ஆராயப்படவில்லை. எவ்வாறாயினும் "மீட்டெடுத்தல்" அறிக்கையானது இந்த இரு சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் முழு இலங்கைக்குமான ஒரு பொதுப்பட்ட அணுகுமுறையையே பின்பற்றுகிறதெனலாம். 1999ம் ஆண்டு ஜூலை மாதத்தில், புறநிலை வளங்கள் திணைக்களத்தினால் முன் வைக்கப்பட்ட நிவாரணம், புனரமைப்பு, இணக்கம் என்பவற்றை அரவணைத்த மும்முனை இலக்குக் (RRR) கூட வடக்குக்கிழக்கைச் சிறப்பாகக் கொண்டதொரு முறையிலன்றி முழு இலங்கைக்கும் உரியதாகவே எடுத்துக் கூறப்பட்டது (ப. 49).

அணுகுமுறை பொறுத்த இரண்டாவது குறைபாடு பொருளாதார முகாமை என்பதிலிருந்து ஊற்றெடுக்கின்றது. இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியை முழுநிலையில் எப்போதுமே பாதித்து வந்துள்ள ஒரு காரணி பொருளாதாரம் தவறானதொரு முறையில் முகாமை செய்யப்படுவதாகும். இத்தகைய தவறான முகாமையின் முக்கியமானதோர் அம்சம் தூய பொருளியல் மட்டத்திற்குப் புறம்பாகச் சமூக மட்டத்திலிருந்து முளை விடுகின்றதெனலாம். இலங்கைத் தீவு பல்லினச் சமூகமொன்றைக் கொண்டிருந்த போதும் தீவினைத் தேசிய அரசொன்றாக வரையறைப்படுத்தியவிடத்து இனத்துவக் காரணிகள் சரியானதொரு முறையிற் கையாளப்பட்டிராமை அதிற் குறிப்பிடத்தக்கது. பெரும்பான்மைச் சக்தியாகிய சிங்கள - பௌத்தம் என்பதற்கு எப்போதும் அத்துமீறிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு வந்துள்ள காரணத்தினால் ஏனைய சிறுபான்மைச் சக்திகள் புறக்கணிக்கப்பட்டு அத்தாக்கம் சமூக அரசியல் மட்டத்தில் மாத்திரமன்றிப் பொருளாதார முகாமை மீதும் படிவதற்கு இடம் கொடுக்கப்பட்டது.

அதன் மூலமான செல்வாக்குப் பொருளாதார முகாமையை இரு நிலைகளிற் பாதித்திருந்தது. அவற்றுள் முதலாவது, "இலங்கை அரசு" என்ற பொது மட்டத்திற் பருநிலைப் பொருளாதாரக் கொள்கையொன்றை வகுத்துக் கொள்வதில் ஏற்பட்டிருந்த குறைபாடாகும். இந்தக் குறைபாடு, இலங்கைத் தீவு பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட மாத்திரத்தே, தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளரின் அரசியல் உரிமைகளைப் பறித்துக் கொள்ளும் முகமாக ஆக்கப்பட்ட குடியுரிமைச் சட்டங்களுடன் உடனடியாகவே புகுந்து விட்டிருந்தது. அதன் பின்பு அது ஆக்கப்பட்ட சட்டங்களின் அளவு, தாக்கம் என்ற இரு நிலைகளிலும் அதிகரித்துச் சென்றமை தான் இலங்கையின் அரசியல் வரலாறாகின்றது. இத்தகைய வரலாறு பொருளாதாரத்தைத் தொடக்க நிலையிலிருந்தே பாதிக்க முற்பட்ட போதும், அதற்கான நிவாரணங்களும் தீர்வுகளும் இனத்துவ முகாமையைக் கைவிடுவதிலன்றி அதனை மேலும் இறுகப் பற்றிக் கொள்வதன் மூலம் தான் தேடிக் கொள்ளப்பட்டது. ஈற்றில் இதுவே தீவின் பொருளாதார வரலாறாகவும் ஆகிவிடுகின்றது. எனினும், பருநிலைக் கொள்கை மட்டத்திலான பலதரப்பட்ட பரிசோதனைகளின் மத்தியிலும் இலங்கையின் பொருளாதார நெருக்கடி கூர்மையடைந்து சென்றதற்கான காரணங்களைத் தேடவிழைந்தோர் இவ்வாறான இனத்துவ அரசியற் பொருளாதார முகாமையை எவ்வகையிலும் கணிப்பிலெடுக்காது தூய பொருளியல் மட்டத்தினையே எப்போதும் தமது பகுப்பாய்வுக்குட்படுத்தினர். அதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக

இலங்கைத் தீவு மேற்கத்திய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் தீவின் இந்த அரை நூற்றாண்டு காலப் பகுதியிலான பொருளாதார மாற்றங்களை ஆய்வு செய்து வெளியிடப்பட்ட நூலைக் குறிப்பிடலாம்.[2] இது இலங்கையின் ஐம்பதாண்டு காலப் பொருளாதாரச் சாதனையைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் பரிசீலனைக்குட்படுத்தியிருந்த போதும் நாட்டின் இனத்துவ முகாமை, பொருளாதாரத்தைப் பாதித்திருக்குமா என்பது எந்த வகையிலும் கணிப்பிற் கொள்ளப்படவில்லை. ஆகவே, "மீட்டெடுத்தல்" அறிக்கை இவ்வாறான குறைபாடு தொடர்ந்து வருவதற்கான ஒரு மேலதிக ஆதாரமாக விளங்குகிறதேயன்றி அதனைப் போக்கும் வகையிற் பொருளாதாரத்தின் இனத்துவ முகாமை என்பதையும் கருத்திற் கொண்டதோர் அணுகுமுறையைப் பின்பற்றுவதற்குத் தவறி விடுகின்றது.

பொருளாதார முகாமையுடன் தொடர்புபடும் அடுத்த குறைபாடு, "இலங்கைத் தீவு" என்ற பின்னணியிற் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதான இருப்பிடமாக விளங்கிய வடக்குக்கிழக்கின் தனித்துவமான சமூகப் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டதாகப் பருநிலைப் பொருளாதாரக் கொள்கையில் உரிய மாறுபாடுகளை மேற்கொள்ளத் தவறியமை மூலம் ஏற்படுவதாயிருந்தது. இது எவ்வாறு வடக்குக்கிழக்கின் முன்னேற்றத்தைப் பாதித்ததென்பதும் அது தொடர்பான நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றியும் நாம் மேற்கொண்டு ஆராய்வோம். ஆனால், "மீட்டெடுத்தல்" அறிக்கையிற் பொதிந்துள்ள குறைபாடு யாதெனில், அது வடக்குக் கிழக்குக்குத் தனித்துவமானதொரு முகாமை தேவைப்படலாமென்பதை எவ்வகையிலும் கருத்தி-லெடுக்காமையாகும். மாறாக, அது பருநிலைப் பொருளியல் முகாமையை ஒரு பொதுநிலை மட்டத்தில் எடுத்துக் கொண்டு எஞ்சிய இலங்கைத் தீவுக்குப் பொருந்துவது வடக்குக்கிழக்குக்கும் பொருந்தும் என்றதொரு பாணியிலேயே பருநிலை முகாமை அம்சங்களை முன்வைத்துள்ளது. அமைப்பு ரீதியிலான கொள்கைச் சீர்திருத்தங்கள் என்பதாக எடுத்தாராயப்பட்டுள்ள வர்த்தகமும் முதலீடும். வணிகச் சட்டம், ஊழியச் சந்தை, நிதித்துறை, சக்தித் துறை என்பனவெல்லாம் இலங்கையை முழுநிலையிற் கருத்திற் கொள்கின்றனவேயன்றி வடக்குக்கிழக்கை எவ்வகையிலும் தனியாக முன்னிலைப்படுத்தவில்லை. வடக்குக் கிழக்கை ஒருமுகமாகக் கணிப்பிற் கொண்ட "தேவைகளின் மதிப்பீடு" பற்றிய அறிக்கை கூட இந்தத் தவறிலிருந்து விடுபடவில்லையென்றே கொள்ள வேண்டும். வடக்குக்கிழக்கிலான பல்வேறு மாவட்டங்களினதும் தேவைகள் எவையென்பதைத் தனிநிலையில் இனம் காண்பதற்குரிய

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவேயன்றி, இத்தேவைகளுக்கான தீர்வுகள் வேறானதொரு (பருநிலைக்) கொள்கை வரையறையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியவை என்பது எவ்வகையிலும் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

## அணுகுமுறைக் குறைபாடு: தேவைகளின் மதிப்பீடு

எவ்வாறாயினும் அணுகுமுறைக் குறைபாடு பற்றிப் பேசும் போது பல்பக்க நிறுவனங்கள் சமர்ப்பித்த "தேவைகளின் மதிப்பீடு" தொடர்பான அறிக்கை பின்பற்றிய அணுகுமுறையைத் தனியாக விமர்சிப்பதும் அவசிய மாகின்றது. அவ்வாறு செய்யுமிடத்து, நாம் மேலே ஈற்றிற் குறித்த இரு ஆவணங்களுக்கும் பொதுவான (பருநிலைக்) கொள்கை மட்டத்திலான குறைபாடு என்பதற்குப் புறம்பாக இன்னும் சிலவற்றை அதில் அடையாளம் காட்ட முடியும்.

"தேவைகளின் மதிப்பீடு" கொண்டிருக்கும் மூலாதாரமானதொரு குறைபாடு யாதெனில், அது இனத்துவப் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிராந்தியம் பற்றிய ஓர் ஆய்வு என்ற (வடக்குக்கிழக்குக்கான) தனி உணர்வுடன் நிதானமாக அனைத்து விடயங்களையும் உரியவாறு கணிப்பிற் கொண்டு வரையப்பட்டதொன்றாக அமைந்திருக்கவில்லை என்பதாகும். அது, உண்மையில், 2003ம் ஆண்டு ஜுன் மாதம் டோக்கியோ நகரில் நடைபெறவிருந்த உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டிற் சமர்ப்பிக்கும் பொருட்டு மிக அவசரமாகத் தயாரிக்கப்பட்டதொன்றா-யிருந்தது. அவ்வாறானதோர் ஆவணம் டோக்கியோ மகாநாட்டுக்குத் தேவைப்படலாமென்பது இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற இரு சாராராலும் கூட்டாக 2003 ஜனவரி முடிவளவில் தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது (ப. 75). அந்த வகையில், ஆறு மாதங் களுக்கும் குறைவான ஒரு காலப் பகுதியில் வரையப்பட்ட "தேவைகளின் மதிப்பீடு" ஒரு மேல்வாரியான தன்மை பெறுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை. அறிக்கையின் அத்தகைய அடிப்படைக் குறைபாட்டினை அதனை ஆக்கியோர் நன்குணர்ந்து கொண்டு அதன் அறிமுகத்திலேயே அதனைப் பின்வருமாறு எடுத்துக்கூற விழைகின்றனர்:

> இது ஒரு திட்டமிடல் ஆவணமன்று. வடக்குக்கிழக்கு அபிவிருத்திக்கான தொலைநோக்கு அல்லது தந்திரம் என்பதாகக் கூட இது அமையவில்லை. அதற்குப் பதிலாக, இன்றைய கட்டத்திலான வெளிப்படையான தேவை களை அது பரந்ததொரு முறையில் இனம் காணுவதற்கு முற்படுகின்றது (ப. 1).

மேற்கூறிய அடிப்படைக் குறைபாட்டின் மத்தியிலும் அறிக்கையானது தான் கருத்திற் கொண்ட எட்டு மாவட்டங்களினதும் உடனடித் தேவைகளை அறிந்து கொள்வதில் விரைந்த தன்மை கொண்ட அவசர அக்கறை செலுத்தியிருந்ததென்பது தெளிவானது. ஆகவே, வடக்குக் கிழக்குத் தேவைகளின் அவசரத் தன்மையை அறிக்கை வெளிப்படுத்துகிறதென்ற வகையில் அதன் அணுகுமுறை பாராட்டப்படலாம். இவ்வகையில் அது உடனடிக் கவனம் வேண்டப்பட்ட புனரமைப்பு, புனர்நிர்மாணம் என்பவற்றுக்குரிய நிகழ்திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் சரியானபடி சுட்டிக் காட்டியதென்பது உண்மை தான். அத்துடன் அது நடப்பு நிலையில் மாத்திரமன்றி, மத்திம தவணைக் காலத்தில் வேண்டப்படுவனவற்றையும், ஓரளவிற்காவது கருத்திற் கொண்டிருந்தது. அதற்கும் மேலாகப் பலவேறு தேவைகளுக்குமான நிதி அளவுகளையும் அமெரிக்க டொலர்களின் வடிவில் எடுத்துக்காட்டியிருந்தது.[3] இத்தகைய அம்சங்கள் "தேவைகளின் மதிப்பீடு" பற்றிய அறிக்கையின் நேர்க்கணியமான தன்மைகளாகவும் அதன் முக்கிய பயன்பாடாகவும் இனம் காணப்படலாம்.

நேர்க்கணியத் தன்மைகள் பற்றிப் பேசும் போது இரு ஆவணங்களும் பால்நிலை அம்சங்களை வேறாக்கி அவற்றின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுவது வரவேற்கக் கூடியதெனலாம். "மீட்டெடுத்தல்" அறிக்கை பால்நிலை மட்டத்திற் பெண்கள் எதிர்நோக்கும் பாரபட்ச சூழ்நிலைகளை இனம் கண்டு அவற்றுக்கு நிறுவன மட்டத்தில் முகம் கொடுக்கக்கூடிய வழிவகைகளை ஆராய்கின்றது (பக். 92 - 93). மறுபுறம், "தேவைகளின் மதிப்பீடு" கீழ்க்கட்டுமானம் மற்றும் அடிப்படையான நீர், சுகாதார, மின்சார வசதிகளின் முக்கிய பாவனையாளர்களாகப் பெண்களை இனம் கண்டு இத்தகைய வசதிகளை இடப்படுத்துவதிலும், வழங்குவதிலும் அவர்களுடன் இணைந்து அவர்களுடைய பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது (ப. 35). எனினும், இரு ஆவணங்களுமே வடக்குக்கிழக்கில் வேறுபட்ட பண்பாடு தமிழ், முஸ்லிம் மட்டங்களில் நிலவுகிறதென்பதைக் கணிப்பிற் கொண்டு அப்பரிமாணங்களுக்கேற்றவாறு பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவர்களது பங்களிப்பினையும் ஆராயத் தவறி விடுகின்றன. அவற்றில் இழையோடிக் கொண்டிருக்கும் பிரதான குறைபாடாகிய (இலங்கையை ஆதாரமாகக் கொண்ட) பொதுமைப்பட்ட அணுகுமுறை என்பது இங்கும் பளிச்சிடுகிறது.

எனினும் "தேவைகளின் மதிப்பீடு" பற்றிய அறிக்கையிலான அணுகுமுறைக் குறைபாடுகள் என்று பார்க்கும் போது, வடக்குக்கிழக்கு அபிவிருத்தியை அது ஒருமித்த நிலையிற் கணிப்பிற் கொண்டிருக்கவில்லையென்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் அது ஈழத்தமிழர் தாயகத்தின் முற்றான நிதர்சனத்தைச் சரியானபடி உணர்ந்திருந்ததென்று உறுதியாகக் கூற முடியவில்லை. குறிப்பாக, மக்கள் பக்கத்திலிருந்து அபிவிருத்தியுடன் இணைந்து கொண்டு அவர்களுக்கான வாய்ப்புக்களை முழுநிலையிற் கண்டறிந்து ஒருங்கிணைக்கப்பட்ட முன்னேற்றத்தைச் சிக்கனமாகக் கட்டியெழுப்புவதற்குத் துணை புரியக் கூடிய விதத்தில் அறிக்கை அமைந்திருக்க வில்லை. அதன் கருத்து என்னவெனில், பௌதிக வளங்களின் வடிவிலும் மனித வளங்களின் வடிவிலும் தற்சமயம் வடக்குக் கிழக்கிற் பொதிந்துள்ள இயல்திறம், பலம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு அவற்றின் பங்களிப்பைப் பெறும் வகையில் அவற்றின் மீது அபிவிருத்தியை நிர்மாணித்துக் கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதாகும். அதற்குப் பதிலாகத் தேவைகள் ஆங்காங்கே, தனிநிலையில், சுகாதாரம், கல்வி, வீட்டு வசதிகள் போன்ற மட்டங்களிலும், அதே போன்று, கீழ்க்கட்டுமானம், விவசாயம், தொழில் வாய்ப்புக்கள் போன்ற நிலைகளிலும் இனம் காணப்பட்டுள்ளன. இவ்வாறான குறைபாடு நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட பருநிலைக் கொள்கை வரையறையொன்று இல்லாத காரணத்தினாலேயே ஏற்பட்டிருந்தது. அத்தகைய வரையறையொன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின், அவை அபிவிருத்தியின் ஒருங் கிணைப்பு, ஒருமித்த தன்மை என்பனவற்றை உத்தரவாதப்படுத்தியிருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

"தேவைகளின் மதிப்பீடு" பற்றிய அறிக்கையிற் பின்பற்றப்பட்டிருக்கும் அணுகுமுறையானது, அறிக்கையை ஆக்குவதற்கு அநுசரணை வழங்கிய சர்வதேசிய மட்டத்திலான பல்பக்க நிறுவனங்களின் பருநிலைப் பொருளாதாரக் கொள்கையைப் பிரதிபலிக்கும் ஒருவகையில் அமைந்துள்ளதென்பதையும் குறிப்பிடாது விட முடியாது. இந்தப் பல்பக்க நிறுவனங்கள் யாவுமே முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் செயற்படுபவை என்பதும் அதனால் அவை முன்வைக்கும் கொள்கைகளும் அபிவிருத்தித் தந்திரங்களும் அதற்கு ஆதரவானதொரு முறையிலேயே அமைந்திருக்குமென்பதும் இன்று யாவரும் அறிந்த பொது இரகசியங்களாகும். அதற்கேற்ப அவை எப்போதும் அரச துறையை விடத் தனியார் துறையை

முன்னிலைப்படுத்தி ஊக்குவிப்பதையே பிரதான குறிக்கோளாகக் கொண்டு அதற்கு அநுசரணையாகவே தமது பரிந்துரைகளையும் முன்வைக்கின்றன. "தேவைகளின் மதிப்பீடு" கூட இதிலிருந்து சற்றும் வழுவாத ஒரு முறையில் தான் ஆலோசனைகள் வேண்டப்படுமிடத்து அவற்றை வழங்க முற்படுகின்றது. இத்தகைய அணுகுமுறை சாதாரண மக்கள் ஈடுபடக்கூடிய பொருளாதார அலுவல்களைப் பொறுத்தவரை மாத்திரமன்றி ஓர் ஆதார நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்க்கட்டுமான முதலீடுகளைப் பொறுத்தவரை கூடப் பின்பற்றப் பட்டுள்ளது. வடக்குக்கிழக்கை மீட்டெடுக்க முற்படும் போது கீழ்க் கட்டுமானப் பணிகளுக்கு மிகுந்த கேள்வி ஏற்படுமென்பது அங்கீகரிக்கப்பட்டு அவ்வாறான கேள்வியைத் தனியார்துறை பூர்த்தி செய்ய முன்வருமென்ற எதிர்பார்க்கையும் கூடவே முன்வைக்கப்-படுகின்றது (ப. 33). இத்தகைய தனியார் துறையுடன் இணைந்த வகையில் தான் அரச நிறுவனங்கள் செயற்பட வேண்டுமென எடுத்துக்கூறப்படு-கின்றதேயன்றி, மாறுபட்ட வகையில், அரச முயற்சியை முன்னிலைப் படுத்தி அதற்கு ஆதாரமாகத் தனியார் நிறுவனங்கள் இயங்கலாமெனக் கூறப்படவில்லை.

எனினும் போரினாற் சின்னாபின்னமடைந்திருக்கும் ஒரு தேசத்தை மறுபுனருத்தாரணம் செய்ய விழையும் போது இத்தகைய பொறுப்பின் (கீழ்க்கட்டுமானத்தை உள்ளடக்கும்) ஒரு முக்கிய பகுதியைத் தனியார் துறை வசம் விட்டுவிட முன்வருவது எந்தளவுக்கு ஏற்புடையதென்பது சிந்திக்க வேண்டியதொன்றாகும். கீழ்க்கட்டுமானம் தான் மீட்டெடுத்தற் செய்முறையின் அடித்தளம் என்பதால் அதனைச் சரியானபடி நிர்மாணித்துக் கொள்வதென்பது ஒரு புறமிருக்க, நிர்மாணத்தினை உரிய முன்னுரிமைப்படி வரிசைப்படுத்திக் கொள்வதும் மிகுந்த அவசிய-மாகின்றது. இத்தகைய வரிசை ஒழுங்கினை "அரசு" என்ற தனி நிறுவனம் மேற்கொள்வது சுலபமானதென்பதிற் சந்தேகமில்லை. தனியார் துறையிற் பல நிறுவனங்கள் இயங்குமிடத்து முன்னுரிமை ஒழுங்கு என்பது எவ்வகையிலும் சாத்தியமற்றதொன்றாகும். அத்துடன் அவற்றின் லாப உந்தற் செயற்பாடு நிலைமையை மேலும் மோசமாக்குவதாயிருக்கும். மேலும், போரினாற் சிதையுண்டு போன ஏற்கெனவே நிலவியிருந்த கீழ்க்கட்டுமானம், உதாரணமாக ஜேர்மனியின் கீழ்க்கட்டுமானம் போன்று, உறுதியானதாகவும் விரும்பத்தக்க பொருத்தப்பாடுடையதொன்றாகவும் காணப்படுமாயின் அதன் மீட்டெடுப்பு வெறும் ஒரு மறுநிர்மாணமாக மாத்திரமே அமைந்திருக்கும். இந்நிலையில் அது விடயத்தில் ஒரு மென்மைப் போக்கினைக் கடைப்பிடிப்பதும் பொறுப்பினைத் தனியார்துறை

வசம் ஒப்படைப்பதும் ஏற்புடையதாயிருக்கலாம். ஆனால், சிதையுண்ட வடக்குக்கிழக்கின் கீழ்க்கட்டுமானம் எந்த வகையிலும் உறுதி மிக்கதென்றோ அல்லது மேற்கட்டுமான அமைப்பினைப் பூரணமாகவும் அபிவிருத்திக்கான இலட்சியபூர்வ நிலையிலும் தாங்கிக் கொள்வதற்கு இசைவுடையதொன்றாக விளங்கியிருந்ததென்றோ கூறிவிட முடியாது. ஆகவே, இவ்வாறானதொரு சூழ்நிலையில், லாப நோக்கினை எப்போதும் முன்னுரிமையாகக் கொண்டு இயங்கும் தனியார் துறையின் பொறுப்பிற் கீழ்க்கட்டுமான நிர்மாணத்தை ஓர் அரைகுறை நிலையிலேனும் விட்டுவிடுவதென்பது எத்துணை நன்மையைக் குறுகிய காலத்திலும், அதைவிட முக்கியமாக, நீண்ட காலத்திலும் கொண்டு வருமென்பது சிந்திக்க வேண்டியதொன்றாகும். லாபம் என்பதை விட மக்கள் நலனுக்கு முன்னுரிமை வழங்குவதே மறுபுனருத்தாரணத்திலும் எதிர்கால அபிவிருத்தியிலும் அவசியமானதென்பதால் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதே கூடியளவு பொருத்தமுடைதாயிருக்கும்.

வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை இது வேறும் இரு நிலைகளில் மேலதிக முக்கியத்துவம் பெறுகின்றதெனலாம். முதலாவதாக, இத்தேச மக்களின் பொருளாதார வரலாற்றிற் கீழ்க்கட்டுமானத்தை அரசாங்கம் உரிய வகையில் அமைத்துக் கொடுக்காது புறக்கணித்தமை தான் முக்கிய இடம் பெறுகின்றது. இது தனிப்பட்டவர் திறமைக்கும் சக்திக்கும் உட்பட்டதொன்றாக அவர்களது முயற்சியை முடக்கி அதன் காரணமாகவே அவர்களது அபிவிருத்தியும் முன்னேற்றமும் பாதிக்கப்பட்டது மாத்திரமன்றி, அவ்வாறான அர்சாங்க அசமந்தம் தான் விரும்பத் தகாத விளைவுகளை அரசியல் மட்டத்தில் ஏற்படுத்தியதென்று வாதிடுவதும் சாத்தியமானதே. சமூக மட்டத்திற்கூட அதுவே தனிப்பட்டவர் மத்தியிலான போட்டிக்கும் அதனுடன் இணைந்த சில எதிர்க்கணிய வளர்ச்சிகளுக்கும் இடமளித்திருந்தது. ஆகவே, இப்போது, புதியதோர் அரசியற் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ள நிலையில் முன்னர் இடம்பெற்ற வரலாற்றுத் தவறைப் போக்கி அரசு உரிய பங்களிப்பைச் செலுத்துவதற்கு முன்வரவேண்டும். அதனை வெளிநாட்டு மூலகங்களை முதன்மை நிலையிற் குறிவைக்கும் இந்த இரு ஆவணங்களுமே புறக்கணித்துள்ளன எனலாம்.

முதலாவது நிலை கடந்த கால வரலாறென்றால், இரண்டாவது காரணம் நடப்பு நிலையுடன் இணைந்து எதிர்கால வரலாற்றுப் போக்கினைச் சுட்டி நிற்கின்றதெனலாம். வடக்குக்கிழக்கின் அரசியற்

பொருளாதார முகாமையை எந்நேரமும் பொறுப்பேற்கக் கூடிய தறுவாயிலிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், எந்த ஒரு (கொரில்லாத்) தீவிரவாத இயக்கத்தையும் போன்று தன்னைச் சார்ந்த (ஈழத்தமிழ்) மக்கள் மத்தியிலிருந்து ஊற்றெடுத்ததொன்றாகும். ஆகவே, அது எப்போதும் மக்கள் சார்ந்த ஓர் அரசியற் பொருளாதார முகாமையை நாடி நிற்குமென எதிர்பார்க்கலாம். இத்தகைய இயல்புநிலை எதிர்பார்க்கை உள்வாங்கப்பட்டு அதற்குகந்தவாறான ஓர் அணுகு முறையைப் பின்பற்றுவது கூடியளவு யதார்த்த பூர்வமானதென்பதுடன் வெற்றியையும் உத்தரவாதப்படுத்த வல்லதாகும். ஆனால், இந்த அம்சம் கூடத் "தேவைகளின் மதிப்பீடு" பற்றிய அறிக்கையில் உரிய கவனத்திற்குட்பட்டிருப்பதாகக் கூற முடியாது. மறு புறம், "மீட்டெடுத்தல்" அறிக்கை தானும் இது விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி யிருக்கவில்லை.

நாம் கருத்திற் கொண்ட இரு அறிக்கைகளினதும் அணுகுமுறை ரீதியான குறைபாடுகளைத் தொகுத்து நோக்கின், அவை இலங்கையை மீட்டெடுத்தல், வடக்குக்கிழக்கிற்கான தேவைகளை மதிப்பிடுதல் என்ற குறிக்கோள்களுடன் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் ஆய்வுகள் வெளிநாட்டுதவியைக் குறி வைத்த முறையில் தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனலாம். எனவே, நாட்டு மக்களை வளங்களாகக் கருதி அவர்களைப் பங்காளிகளாக்கி அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி வருமானத்தை உயர்த்துவதற்கு வெளிநாட்டு வளங்கள் எவ்வாறு உறுதுணையாக விளங்க முடியும் என்ற ரீதியிற் சிந்திப்பதற்குப் பதிலாகக் "குதிரைக்கு முன் வண்டியைப் பூட்டிய" கதையாக வெளிநாட்டு உதவிக் கொடுப்பனவுகளின் வருகையை ஊக்குவிப்பதற்குப் பௌதிக வளங்களையும் மனித வளங்களையும் எவ்வாறு முதற்கண் இசைவுடையதாக்கலாம் என்ற சிந்தனையின் வெளிப்பாடுகளாகவே இந்த ஆவணங்களின் முடிவுகள் காணப்படு கின்றன. ஓர் உயர் மட்டத்திலிருந்து எந்தளவுக்குக் கீழ்நோக்கிச் சாதாரண மக்கள் மட்டத்திற்கு அசைந்து செல்கிறோமோ அந்தளவுக்கு இந்த அறிக்கைகளின் முடிவுகளும் அவற்றின் செயற்பாடும் யதார்த்த நிலையிலிருந்து விடுபட்டுச் செல்வதை உணர்ந்து கொள்ள முடியும். அதன் கருத்து யாதெனில், வடக்குக்கிழக்கின் அர்த்தமுள்ள அபிவிருத்தி, முன்னேற்றம் என்பவற்றுக்குரிய வழிகாட்டியாக விளங்கி அவற்றை இந்த அறிக்கைகள் பெருமளவு சுலபப்படுத்தியிருப்பதாகவோ நெறிப்படுத்தியிருப்பதாகவோ துணிந்து கூற முடியவில்லை என்பதேயாகும்.

அவ்வாறு வடக்குக் கிழக்கின் மேம்பாடு கருதிய இவற்றின் பயன்பாடு குறைவுத் தன்மை கொண்டதென்று வாதிடுவோமாயின், வடக்கு கிழக்கின் பொதுவான வளர்ச்சி எத்தகையதொரு முறையில் அமைந்திருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசிய மாகின்றது. அதனையே கட்டுரையின் அடுத்த பகுதி ஒரு முதனிலைப் படிவத்தை முன் வைப்பதன் மூலம் செய்ய விழைகின்றது.

## வடக்குக்கிழக்கு அபிவிருத்தி: ஒரு முதனிலைப் படிவம்

நடப்பு நிலையில் வடக்குக்கிழக்கு அபிவிருத்திக்கான ஒரு முதனிலைப் படிவம் என்னுமிடத்து, அதற்கான அடிப்படை அமைப்பானது தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவின் ஒரு பகுதியாக வரைவில் உள்ளடங்கியிருக்க வேண்டுமென ஒரு பொது நிலையில் எதிர்பார்க்கலாம். வரைவின் 11வது பகுதியிலிருந்து 21வது பகுதி வரையுள்ள வாசகங்கள், உண்மையில், வடக்குக்கிழக்கு அபிவிருத்தியுடன் தொடர்புபடும் பொருளாதார அம்சங்கள் பற்றியே எடுத்துக்கூறுகின்றன (**விடுதலைப் புலிகள்**, புரட்டாதி - ஐப்பசி 2003, ப. 15). இவை பெருமளவுக்குப் பௌதிக வளங்கள் பற்றியும் நிதி வளங்கள் பற்றியும் எடுத்தியம்புகின்றன. இவ்வளங்களை முகாமை செய்வதற்கு வேண்டப்படும் ஆட்சி அதிகாரம், அதன் தன்மை என்பன இவ்வரைவின் ஏனைய பகுதிகளாகும். வரைவு ஐந்து ஆண்டுகளுக்குரியதொரு இடைக்காலத்தையே கருத்திலெடுத்திருப்பதால் அது முன்வைக்கும் பரிந்துரைகள் ஓர் அபிவிருத்தி நோக்கில் ஒட்டுமொத்தமாக ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தன்மையைக் கொண்டிருத்தல் தவிர்க்க முடியாத தாகின்றது. அது மாத்திரமன்றி, இவ்வரைவு எந்த வகையிலும் முழுநிலையிலான ஒரு பொருளாதாரத் திட்டமன்று. அரசாட்சி செய்வதற்கான இறைமையானது வடக்குக்கிழக்கு வளங்களுடன் எவ்வாறு தொடர்பு பெறுகிறதென்பதை மாத்திரம் தான் இது எடுத்துக்கூறுகின்றது. இந்நிலையில் தான் வடக்குக்கிழக்குக்கான அபிவிருத்தி கருதிய முதனிலைப் படிவமொன்று பற்றிச் சிந்திக்கும் போது, வரைவு தரும் வரையறையைக் கணிப்பிற் கொண்டு அதிலிருந்து விடுபட்டு நிற்பதும் அவசியமாகின்றது. இவ்வாறான விடுபட்ட சிந்தனை மனித வளங்களின் மீது கூடிய கவனம் செலுத்துவதுடன் குறுகிய காலம், நீண்ட காலம் என்ற இரண்டிலும் கவனம் செலுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

வடக்குக்கிழக்கு அபிவிருத்தியானது மக்கள் பெரிதும் இன்னல்களை அனுபவித்த இனத்துவப் போரொன்றினைத் தொடர்ந்து வருகின்ற காரணத்தினால் மக்களை நடுநாயகமாகக் கொண்டதொரு முறையில் தான் இடம்பெற வேண்டியதாகின்றது. மக்கள் முன்னேற்றமின்றி அபிவிருத்தி இல்லையென்று ஒரு பொது நிலையில் வாதிட முடிந்தாலும் வடக்குக்கிழக்கில் "மக்களை முன்னிலைப்படுத்துவது" என்பதற்குத் தனியான அர்த்தமுண்டு.

பொதுவாகப் போர் என்று வருமிடத்து மக்கள் மீதான பாதிப்புத் தவிர்க்க முடியாததொன்றாயினும், இலங்கையின் இனத்துவப் போர் ஈழத்தமிழருக்கெதிராகவே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் (கொரில்லாத்) தீவிரவாதிகள், ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, பொதுமக்களிலிருந்து பிரிக்க முடியாத வகையில் அவர்களின் அமோக ஆதரவுடன் தான் இயங்கிக் கொண்டிருந்த காரணத்தினால் அரசாங்கப் படைகளின் தாக்குதல்கள் யாவுமே பொதுமக்களையும் குறிவைத்தே மேற்கொள்ளப் பட்டிருந்தன எனலாம். அதனால், மக்கள் அரச பாதுகாப்புப் படைகளின் தாக்குதலுக்கு இலக்காகிய பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பௌதிக வளங்களுடன் தாம் கொண்டிருந்த இணைப்புத் துண்டிக்கப்பட்டுத் தமது தொழில் வாய்ப்புக்களை இழந்து வருமான மார்க்கங்களையும் பறிகொடுக்க வேண்டிதாயிற்று. அது மாத்திரமன்றி, அவர்கள் அனாதி காலமாகத் தாம் வாழ்ந்திருந்த சொந்த இடங்களிலிருந்து குடிபெயர்ந்து அகதி முகாம்களிலும் தமக்குச் சொந்தமற்ற வசதி குறைந்த இடங்களிலும் தஞ்சமடைய வேண்டியதாயிற்று. இத்தகைய நிகழ்வுகளின் போது உயிரிழந்தவர்களினதும் காயமடைந்தவர்களினதும் எண்ணிக்கை கணக்கிலடங்காததொன்றாகும். அது போன்றே ஏராளமானோர் பல்வேறு வகைப்பட்ட உளவியல் தாக்கங்களுக்கும் ஆளாகியிருந்தமையை இது தொடர்பான ஆய்வுகள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. இன்னும் பலர் உலகளாவியதொரு நிலையில் வெளிநாடுகளுக்கு வேறுபட்ட தராதரங் களிற் குடிபெயர்ந்து அதன் மூலமான பலவகைப்பட்ட தாக்கங்களுக்கும் இன்னல்களுக்கும் உட்பட்டனர். ஆகவே, எவ்வாறு பார்த்தாலும் போர் ஈழத்தமிழ் மக்கள் மீது ஏற்படுத்திய பாதிப்புக்கள் எழுத்தில் வர்ணிக்க முடியாதளவுக்குப் பாரிய தன்மை கொண்டிருந்தன. சுருக்கமாகக் கூறின், அவை ஈழத்தமிழர் எந்த மட்டத்திலிருந்தாலும் அவர்களில் ஒருவரைத் தானும் விட்டு வைக்கவில்லை எனலாம்.

இவ்வாறானதொரு வருந்தத்தக்க பின்னணியில் ஈழத்தமிழரின் அபிவிருத்தி என்று பேசும் போது அவர்களை முன்னிலைப்படுத்தாத வகையில் மாதிரிக்குரிய ஓர் அபிவிருத்தித் திட்டத்தினையோ தந்திரத்-

தினையோ பரிந்துரைக்க முடியாது. குறிப்பாகக் குறுகிய காலத்துக்கென எடுத்துரைக்கப்படும் எந்த ஒரு திட்டமும் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏதாவது வகையில் மீண்டும் உத்தரவாதப்படுத்துவதாக அமைய வேண்டியது அவசியமாகின்றது. நீண்ட காலத்தில், இந்த இயல்பு வாழ்க்கை மீதுதான் அவர்களுடைய முன்னேற்றம் கட்டியெழுப்பப்பட வேண்டியதாகின்றது. இவ்வாறான எதிர்பார்க்கைக்கிணங்க அபிவிருத்திக்கான முதனிலைப் படிவம் மரபு ரீதியான பிரிவுகளைக் கொண்டதொன்றாயிருந்தாலும் சமூகத்தை முதன்மைப்படுத்தி அதனை வலிந்து சேர்த்துக் கொள்வதொன்றாக அமைகின்றது.

இவ்வகையில் அதனை மூன்று பிரிவுகளுக்குள் அடக்கிக் கொள்ளலாம். அவையாவன: சமூக அரசியல் அம்சங்கள், சமூகப் பொருளாதார அம்சங்கள், சமூகப் பண்பாட்டு அம்சங்கள் என்பனவாகும். இவற்றை விரிவாக ஆராய்வது கட்டுரையின் பருமனுக்கு அப்பாற்பட்ட-தென்பதால் ஒவ்வொன்றையும் பற்றிய சில சுருக்கக் குறிப்புகள் மாத்திரம் இங்கு தரப்படுகின்றன.

## சமூக அரசியல்

இன்றைய நிலையில் ஏனைய எல்லாவற்றையும் விட, உகந்த அரசியல் அமைப்பொன்றின் வாயிலாகப் போருக்கு மீண்டும் இடம் கொடுக்காத சமாதான சூழல் ஒன்றை உருவாக்குவதே ஈழத்தமிழர் சமூகம் வேண்டி நிற்கும் அதிமுக்கிய முன்கூட்டிய தேவையாகும். அதனாலேயே அபிவிருத்தி பற்றிய முதனிலைப் படிவமொன்றில் பொருளாதாரத்தை விட அரசியல் என்பதற்கு முன்னுரிமை வழங்கப் படுகின்றது.

சமூக அரசியல் பொறுத்து ஓர் உடனடி நிலையில் அவசரமாகத் தேவைப்படுவது இராணுவ ரீதியாக முடக்கப்பட்டிருக்கும் தமிழர் வளங்கள் விடுவிக்கப்படுவதாகும். "உயர் பாதுகாப்பு வலயங்கள்" என்ற பெயரிலும் அதற்குப் புறம்பான முறையிலும் ஏராளமான நில வளங்களும் கடல் வளங்களும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இவை மீட்கப்பட்டாலன்றி இலங்கையை மீட்டெடுப்பது பற்றியோ அல்லது வடக்குக்கிழக்குக்குரிய தேவைகளின் மதிப்பீடு பற்றியோ பேச முற்படுவதில் அர்த்தம் எதுவுமில்லை. இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து இவை நீங்கி மக்கள் பாவனைக்கு இவற்றை உட்படுத்துவதன் மூலம் தான் அபிவிருத்தியை முன்னெடுப்பது பற்றி ஏதாவது வகையிற் சிந்திக்க முடியும்.

மேற்கூறியது ஒரு குறுகிய கால நிலையிலான நுண்ணிலை மட்டத்தின் அவசர தேவையென்றால், அதே அலைவரிசையில், பருநிலை மட்டத் தேவையானது, பொதுவாக ஈழத்தமிழர் தமது வளங்கள் மீது அரசியல் இறைமை வடிவிலான கட்டுப்பாட்டை பெற்றுக்கொள்வதென்பது அமைகின்றது. அதனையே நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவு முன்னெடுக்கின்றது. அவ்வாறான கட்டுப்பாடு உடன் சாத்தியப்பட்டாலன்றி நீண்டகால அபிவிருத்தி பற்றிய எந்த வித சிந்தனையும் அசாத்தியமானது.

ஈழத்தமிழருக்குச் சொந்தமான வளங்களின் விடுவிப்புப் பற்றிக் குறிப்பிடும் போது, இராணுவக் கட்டுப்பாட்டிற்குப் புறம்பான இன்னொரு வகை விடுவிப்புப் பற்றி எடுத்துரைப்பதும் அவசியமாகின்றது. இதுவே, ஈழத்தமிழர் நில வளங்கள் மீதான சிங்களவரின் அத்துமீறிய குடியேற்றங்களாகும். அரச மட்டத்திலான ஆதரவும் அதன் கீழான கீழ்க்கட்டுமான வசதிகளுமே இத்தகைய குடியேற்றங்களுக்குக் காலாயிருப்பதால், இது ஒரு சமூக அரசியற் பிரச்சினையேயாகும். ஈழத்தமிழரின் இறைமையை உரிய எல்லைகளுக்குட் பேணிப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, அவர்களது நீண்ட கால சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான இயற்கை வளங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் மேற்கொண்டு இடம் பெறக் கூடிய அத்துமீறிய குடியேற்றங்களை உடன் நிறுத்துவதும் ஏற்கெனவே இடம்பெற்றவை தொடர்பான பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதும் அவசியமாகின்றது. "அத்துமீறல்" என்னும் போது இன்று நிலத்தில் மாத்திரமன்றித் தமிழர் கடற் பிரதேசங்களிலும் சிங்களவரது அத்துமீறலுடன் இந்தியா, சீனா போன்ற வேற்று நாட்டவரது அத்துமீறலும் இடம்பெற்று வருவது துரதிஷ்டவசமானது. ஆகவே, எல்லா வகைகளிலும் ஈழத்தமிழர் வளங்களுக்கு நிலவியிருக்கக் கூடிய அச்சுறுத்தல் நிலை நீக்கப்பட்டு அவை மக்களது பாவனைக்குக் கட்டற்ற முறையிற் கிடைப்பதற்குரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## சமூகப் பொருளாதாரம்

சமூகப் பொருளாதார மட்டத்தில் முக்கியமாக வேண்டப்படுவது வளங்களின் முகாமையாகும். இது பௌதிக வளங்களையும் மனித வளங்களையும் உள்ளடக்கியதாகும். இவற்றை அபிவிருத்திச் சமன்பாட்டினுட் கொண்டு வருவதற்கான பிரதான எடுகோள் அரச மட்டத்தில் ஏற்கெனவே முன்வைக்கப்பட்ட ஈழத்தமிழரின் இறைமை

யாகும். இந்த எடுகோள் ஏதோ ஒரு வகையிற் பூர்த்தி செய்யப்படுமிடத்து, அவற்றின் உரிய முகாமை பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவை தானாகவே உருவாகும். பௌதிக வளங்களில் நில வளம், நீர் வளம் என்றும் பின்னையதனுட் கடல் வளம், நன்னீர் வளம் என்பன பற்றியும் திட்டமிட வேண்டியதாயிருக்கும். நில வளத்தில் நில மீட்பு என்பது முக்கியத்துவம் பெறும். ஏனெனில், வடக்குக்கிழக்கில் மக்களின் தனிப்பட்ட சக்திக்கும் திறமைக்கும் அப்பாற்பட்ட நில வளங்கள் யாவும் அரச மட்ட உதவியில்லாத காரணத்தினால் முற்றாகத் தரிசு நிலையிலேயே காணப்படுகின்றன. ஆகவே இவற்றை மக்கள் குடியிருப்புக்குப் பயன்படுத்தி ஏற்கெனவே குடியிருப்புக்கும் பிற தேவைகளுக்கும் உட்பட்டிருக்கும் செழிப்பான நிலங்களை முடிந்த வரை விடுவித்து அவற்றைப் பொருளாதாரப் பாவனைக்குட்படுத்துவது முன்னுரிமை கொடுத்துத் திட்டமிடப்பட வேண்டியதொன்றாகும். அத்துடன் கூடவே தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் நவீன உத்திகளைக் கையாள்வது சகல துறைகளையும் உள்ளடக்கிய முதன்மையானதொரு தேவையாகும்.

மனித வளங்களைப் பொறுத்தவரை வடக்குக்கிழக்கு ஏலவே கல்வியில் முன்னேற்றம் மிக்க பிரதேசம் என்று பெயர் பெற்றுள்ளது. எனினும், இது உயர்வான சமூகபொருளாதார முன்னேற்றத்திற்கு எதுவிதத்திலும் இடம் கொடுக்கவில்லையென்பது தீவிரமாகக் கவனத்திற் கொள்ள வேண்டியதொரு நிதர்சனமாகும். அதற்குப் பதிலாகக் கல்வியானது, ஈழத்தமிழரின் தனிநிலையிலான பொருளாதார மேம்பாட்டுக்கான ஒரு சாதனமாகவே எப்போதும் நோக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது. ஆகவே, கல்வி பொருள்முதல் மட்டத்தில் வருமானம் உழைப்பதை ஊக்குவித்துள்ளதேயன்றிச் சமூகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்துள்ளதென்று கூற முடியாது. இந்நிலையிற் கல்வி பற்றிய திட்டங்கள் சமூகப் பொருளாதார முன்னுரிமைக்குட்படுத்தப்பட்டு உரிய மாற்றங்களுக்கு இடம் அளிப்பதாயிருக்க வேண்டும். அதன் மூலம் மனித மூலதனம் தன்னை முதலீடு செய்வதற்கு வெளிநோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக உள்நாட்டிலான பௌதிக வளங்களுடன் தன்னை இணைத்துக் கொள்வதற்குரிய முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

சமூகப் பொருளாதார மட்டத்தில் நிதி முகாமை என்பதும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. அதன் ஒரு பிரதான தேவையாக வடக்குக் கிழக்கு நிதியை உள்நாட்டிலேயே தக்க வைத்துக் கொள்வது குறிப்பிடப்படுகின்றது. இப்பிரதேசத்தின் பருநிலைப் பொருளாதார

மட்டத்திலான நிதி முறைமையானது பல வணிக வங்கிகளையும் ஏனைய நிதி நிறுவனங்களையும் கொண்டுள்ள போதிலும் இவை மக்களது சேமிப்பைத் திரட்டுவதிற் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனவேயன்றி ஈழத்தமிழரது முதலீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிற் பின்நிற்பதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. அதன் விளைவாகத் திரட்டப்படும் முதலீட்டின் பெரும்பகுதி இலங்கைத் தீவின் சிங்களப் பகுதிகளுக்கு இழக்கப்படுவதற்கு வாய்ப்பேற்படுகின்றது. ஆகவே, நிலவுகின்ற நிதி முறைமை மூலதன விரயத்திற்குக் காலாக இருக்கின்றதேயன்றி மூலதனத் திரட்டலுக்கு உதவவில்லையெனப் படுகின்றது. அபிவிருத்தித் திட்டமிடலில் இவ்வாறான குறைபாடுகள் களையப்படுவதுடன், வேண்டியளவான மூலதனம் முதலில் உள்நாட்டு மூலங்களிலிருந்து வடக்குக்கிழக்குப் பகுதிகளுக்குக் கிடைப்பதற்கும் வகை செய்ய வேண்டும். அதன் பின்னரே இந்த இரு ஆவணங்களும் முக்கியத்துவம் கொடுக்கும் மூலதனத்திற்கான வெளிநாட்டு மூலகங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

## சமூகப் பண்பாடு

சமூகப் பண்பாட்டிலிருந்து விடுபட்ட வகையில் எந்த ஒரு பொருளா-தாரத்தையும் அபிவிருத்தி செய்ய முடியாதென்பது உண்மையாயினும், வடக்குக்கிழக்கில், அது ஏனைய பல அம்சங்கள் போன்றே, ஒரு படி கூடிய முக்கியத்துவம் பெறுகிறதெனலாம். வடக்குக்கிழக்கானது தமிழ், முஸ்லிம் பண்பாடுகளின் இருப்பிடம் என்பது ஒருபுறமிருக்க, அவற்றின் அகநிலை மட்டத்திலேயே பல முரண்பாடுகளுக்கும் திரிபு நிலைகளுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதும் கருத்திலெடுக்கப்பட வேண்டிய-தொன்றாகும். முக்கியமாக, ஈழத்தமிழர் மத்தியிலான சாதி வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கன. இவை சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற் கெதிரான கட்டுப்பாடுகள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும். அது போன்றே சமயமும் சாதி போன்ற ஏனைய சமூக மட்டத் தீங்குகளுக்குத் துணை புரிவதாகவோ அல்லது இதர வழிகளிற் சமூகப்பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாகவோ இல்லாது ஒருமித்த முன்னேற்றத்தை மேம்படுத்தக் கூடிய ஒரு முறையிற் சீர்திருத்தப்பட வேண்டும்.

சமூகப்பண்பாட்டுடன் இணையும் இன்னொரு முக்கிய அம்சம் பால்நிலையாகும். இதில் ஆண் - பெண் சமத்துவம் வலியுறுத்தப்பட்டுக் குறிப்பாகப் பெண்களின் உரிய பங்களிப்புக்கெதிராயுள்ள தடைகளை

நீக்குவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னேற்றம் மிக்க பல நடைமுறைகளை அறிமுகப்படுத்தியிருப்பது கருத்திலெடுக்கப்பட்டு அவை சோர்ந்து போகாது மேலும் உறுதியடைவதை உத்தரவாதப் படுத்துவது அவசியமானது. இது விடயத்தில் இந்த இரு அறிக்கைகளும் கூட ஓரளவு கவனம் செலுத்தியிருப்பது பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டோம். ஆகவே, வெவ்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பலவற்றையும் தொகுத்த வகையில் ஓர் ஒருமித்த பிரயத்தனம் அவசியமானதெனலாம்.

பால்நிலையுடன் இணைந்த மற்றொரு அம்சம் சிறுவர் நலனும் அவர்களது உரிமைகளுமாகும். சிறுவர்களுக்கெதிரான பலாத்காரம் அவர்கள் கல்வி கற்பதற்கான உத்தரவாதம் என்பவை அது விடயத்தில் முக்கியமானவை.

## முடிவுரை

அபிவிருத்திக்கான முதனிலைப் படிவம் பற்றி நாம் முன்வைத்த விபரங்களிலிருந்து வடக்குக்கிழக்கின் பின்னணியில் "இலங்கையை மீட்டெடுத்தல்", "தேவைகளின் மதிப்பீடு" என்ற இரு ஆவணங்களும் பல குறைபாடுகளைக் கொண்டிருப்பது தெளிவானது. குறிப்பாக, முதனிலைப் படிவத்தின் பல விபரங்கள் அறிக்கைகளில் உள்ளடங்கியிருப்பவற்றுக்கு ஒத்திசைவாக அமையாதிருப்பது கண்கூடு. இந்நிலையில், இம்முதனிலைப் படிவத்தைக் கருத்திற் கொண்டு அதிற் குறிப்பிட்டுள்ள பல்வேறு அம்சங்களையும் உள்வாங்கியதாக இன்னோர் அறிக்கை தயார் செய்யப்படுவது அத்தியாவசியமானதெனலாம்.

அவ்வாறான மாற்றுப் பத்திரம், நாம் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இரு அறிக்கைகளையும் முற்றாகப் புறக்கணிக்க வேண்டு-மென்பதில்லை. முதனிலைப் படிவத்தில் நாம் குறிப்பிட்டவற்றுடன் இந்த அறிக்கைகளின் சிறந்த பரிந்துரைகள் மேற்கொண்டு பரிசீலிக்கப்பட்டு அதனுட் சேர்த்துக்கொள்ளப்படலாம். இவ்வாறான புதிய பத்திரம் மக்களை முன்னிலைப்படுத்துவதுடன், அபிவிருத்தியின் குறுகிய காலம், மத்திம காலம், நீண்ட காலம் என்ற மூன்று படிநிலைகளைக் கருத்திற் கொண்டதாக அமைந்திருப்பது பெரிதும் விரும்பத்தக்கது.

இவ்வாறான அம்சங்களை உள்ளடக்கியதாகப் புதிய பத்திர மொன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டி ருப்பதாகத் தகவல்கள் எட்டியுள்ள போதிலும், அது மக்கள் பார்வைக்கு

இது வரை சமர்ப்பிக்கப்படவில்லை. அது ஏதாவது ஒரு தருணத்தில் வெளிவரும் போது நாம் இக்கட்டுரையிற் புட்டுக் காட்டியுள்ள குறைபாடுகள் களையப்பட்டும் வேண்டப்படும் நல்ல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டும் சிறந்ததொரு பத்திரமாக அது விளங்கியிருக்குமென நம்பலாம்.

## அடிக்குறிப்புகள்

1. மேற்கோள்கள் யாவும் ஆங்கில அறிக்கைகளின் பக்கங்களையே குறித்து நிற்கின்றன.
2. W. D. Lakshman (ed.), *Dilemmas of Development: Fifty Years of Economic Change in Sri Lanka* (Colombo: Sri Lanka Association of Economists, 1997).
3. டொலர் வடிவிலான மதிப்பீடுகள் சுதேசிகளுக்குப் பிரச்சினைகளின் அளவுப் பரிமாண- யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதிற் சிரமம் கொடுக்கலாமென்பது வேறானதொரு தனிநிலைக் குறைபாடாகும்.

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
123 - 165

# சங்ககால வரலாறும் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களும் *

## இராவதம் மகாதேவனின் முந்து தமிழ் கல்வெட்டுக்கள் நூல் பற்றிய ஒரு விமர்சிப்பு

*கார்த்திகேசு சிவத்தம்பி* **

**Early Tamil Epigraphy : From the Earliest Times to the Sixth Century** *By* **I. Mahadevan ;** *Published by* **Cre - A: Chennai, India and The Department of Sanskrit and Indian Studies, Harvard University, U.S.A.; 2003;** *pages* **: xl + 719.**

## I

பண்டைய தமிழகத்தின் கல்வெட்டுக்களான தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் பற்றிய, ஏறத்தாழ 40 வருடகால ஆய்வின் முத்தாய்ப்பாக வரும் இந்நூல், தமிழிலக்கிய உலகு சங்ககாலமென அடையாளங் காணுவதும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும் முந்து வரலாற்றுக் காலம் (early historic period) எனக் கொள்ளப்படுவதுமான காலப்பகுதி பற்றிய பார்வைத்

---

* கலாநிதி இராவதம் மகாதேவனின் "Early Tamil Epigraphy" எனும் நூலுக்கு எழுதப்பட்ட இந்த விமர்சிப்பு (Critique) பண்டைய தமிழ் சமூகத்தின் சமூக வரலாற்றினைப் பற்றி மிக விரிவாக ஆராய்வதன் காரணமாக இங்கு பிரசுரிக்கப்படுகின்றது. விரைவில் வெளிவரவுள்ள பேராசிரியர் கா. சிவத்தம்பியின் "பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்" எனும் நூலில் இடம்பெற்றுள்ள இப்பகுதியினைப் பிரசுரிக்க அனுமதி தந்த அவருக்கு எமது நன்றிகள்.

** தகுநிலை ஓய்வுநிலைப் பேராசிரியர், யாழ்பாணப் பல்கலைக்கழகம்.

தெளிவிற்கும் அதே வேளையில் புதிய வினாக்களுக்கு வித்திடுவதுமாக அமைகின்ற இந்நூல் இந்திய, நிச்சயமாகத் தென்னிந்திய வரலாறு பற்றிய நூல்களுள், மிகவும் முக்கியமான ஓர் ஆய்வு நூலாக அமையப் போகின்றது.

இந்நூலின் முக்கிய வியாக்கியானப் பகுதிகள் தமிழிற் பிரசுரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். இந்நூலிலுள்ள புதிய தரவுகளை இலக்கிய, இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் அறிவதும் விவாதிப்பதும் அவசியமாகும்.

இந்நூல் பற்றிய முக்கிய விமர்சனங்கள் இரண்டு இதுவரை வெளிவந்துள்ளன (செம்பகலக்ஷ்மி, Frontline, July 4th 2003, Vol. 20, No. 13; சுப்பராயலு - ஆவணம்).

## II

முந்து தமிழ்க் கல்வெட்டுக்களென தொகுநிலையாகக் குறிப்பிடப் பெறும் இக் கல்வெட்டுக்கள், தமிழகத்திற் காணப்படும் மிகப்பழைய கல்வெட்டுச் சான்றுகளாகும். இவை தமிழ் பிராமி கல்வெட்டுக்களெனக் குறிப்பிடப்படுகின்றன. பிராமி எழுத்துருவென இனங்காணப்பட்டுள்ள எழுத்து முறைமையில் தமிழை எழுதியுள்ளமை இவற்றின் பண்பாகும். இத்தமிழ் பிராமி, அசோக பிராமி கல்வெட்டுக்களின் வழியாக வந்ததாகும். அசோக பிராமி கல்வெட்டில் (பாறைக் கல்வெட்டு - xiii) தமிழகம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலில் இடம்பெறும் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சமணத் துறவிகளுக்கு கொடுத்த குகை இருப்பிடங்கள் பற்றியவை. அக்குகை இருப்பிடத்தை யார், எந்தத் துறவிக்குக் கொடுத்தார்? என்பதே பிரதான தரவாக இருக்கின்றது, மகாதேவன் அவர்கள், அத்தகைய கல்வெட்டுக்கள் எண்பத்தொன்பதினை (89) ஆராய்கின்றார்.

அந்த கல்வெட்டுக்கள் 89 இற்கும் மேல், முந்து வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இருபத்தொன்றினையும் அவர் பதிப்பித்துள்ளார். வட்டெழுத்து என்பது பிராமி கல்வெட்டுக்களுக்கு முன்னரிருந்து தமிழ் நாட்டில் வழங்கி வந்ததாக இதுகாலவரை கொள்ளப்பட்டது. இவர் அவ்ஆய்வில் வட்டெழுத்துக்கள், பிராமி எழுத்து முறையின் வழியாகவே தோற்றம் பெற்றன எனக் கூறுகின்றார். இவ்விடயம் பற்றி தமிழ் மொழி நிலையில் விவாதங்கள் எற்பட வாய்ப்புண்டு.

இந்த 89+21 கல்வெட்டுக்களையும் இவர் பின்வருமாறு காலப்பகுப்புச் செய்கின்றார்:

1. முந்து பிராமி கல்வெட்டுக்கள் - கி. மு. 2 - கி. பி. 1
2. பிந்திய பிராமி கல்வெட்டுக்கள் - கி. பி. 2 - கி. பி. 4
3. முந்து வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் - கி. பி. 5, 6

இந்தக் காலப் பகுப்பை இவர் எழுத்துக் கையாளுகையின் வழங்கு நிலை அடிப்படையிற் செய்துள்ளார். இப்பகுப்பினுள் ஒரு முக்கிய வரலாற்றுப் பரிமாணம் உண்டு. முந்து - பிந்திய பிராமி கல்வெட்டுக் காலங்களினூடே, குறிப்பாகப் பாண்டியப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமணச் செல்வாக்கு குறைந்து வருகின்றது. களப்பிரரின் இடையீடு பற்றிய செய்தி முந்து வட்டெழுத்துக் காலத்துக்கு முக்கியமானதாகும் (பக். 37). இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில், இந்த முதலிரண்டு பிரிவுகளும் ஏறத்தாழ, ப.த.ச.நா.விற் பேசப்பெறும் முதலிரண்டு காலகட்டங்கள் பற்றியதாக அமைகின்றது. இந்த விடயம் சற்று விரிவாகப் பின்னர் நோக்கப்படும்.

## III

முதலிற், குறிப்பாக முதலிரண்டு கட்டங்களுக்குமுரிய கல்வெட்டுக்-களினது மொழிநிலை முக்கியத்துவங்களை நோக்குதல் பொருத்த முடையதாகும்.

இக்கல்வெட்டுக்களின் முக்கிய மொழிப் பண்பு தென்னிந்தியாவில் வழங்கும் பிராகிருத மொழி கல்வெட்டுக்களில் வரும் எழுத்துருவைப் பயன்படுத்தி தமிழை எழுதியுள்ளமையாகும். தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்துக்கு வடக்கே பெரும்பாலும் பிராகிருத, அர்த்தமாகதி கல்வெட்டுக்களாகவே காணப்படுகின்றன. தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளில் பாளி வடிவம் காணப்படுகிறது. அர்த்தமாகதி சமணச் சார்புடையது. பாளி பௌத்தச் சார்புடையது. தென்னிந்தியாவின் மற்றைய பிரதேசங்களிலுள்ள பிராமி கல்வெட்டுக்களில், அவ்வப் பிரதேசங் களுக்கான உள்ளூர் மொழிகள் பயன்படுத்தப்படாமற் பிராகிருத மொழியே (தமிழில் பாகதம் என்பர்) பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் வழங்கிய பகுதிகளில் மாத்திரம், இந்தத் தமிழ் பிராமி எழுத்துரு முறைமை காணப்படுகின்றது. இதுவொரு முக்கிய வரலாற்றுத் தடயமாகும். அதாவது பிராமி எழுத்துரு மூலம் எழுதப்பட வேண்டிய அளவிற்கு தமிழ் மொழிச் செல்வாக்கு வலுவுள்ள ஒன்றாக விளங்கியிருத்தல் வேண்டும். இந்தச் செல்வாக்கு வலுவை மொழி நிலைப்பட்ட, சமூகப் பிரக்ஞையுடன் மாத்திரமே தொடர்புபடுத்தல்

வேண்டும். ஒரு சமூகப் பிரக்ஞை அவ்வாறு வலுவுள்ளதாக இருப்பதற்கு அப்பிரதேசத்தில் ஏதோவொரு அளவில் நிறுவனமயவாக்கம் (Institutionalisation) ஏற்பட்டிருத்தல் வேண்டும். இக்கல்வெட்டுக்களின் புவியியற் பரம்பல் பற்றிய ஒரு படத்தினை (பக். 34) மகாதேவன் தந்துள்ளார். அதனைப் பார்க்கும் பொழுது, தென்னிந்திய நிலையில் தமிழ் பிராமி கல்வெட்டுப்பரம்பல் சுவாரசியமானதாகவுள்ளது. குறிப்பாக சங்க இலக்கியங்களிலே தமிழ் பற்றி வரும் குறிப்புக்கள் சில முக்கியமாக அருகிலுள்ள இன்னொரு மொழி பிரதேசம் பற்றிக் குறிப்பிடும்பொழுது "மொழிபெயர்த்தேயம்" என்று குறிப்பிடுவதன் நுட்பம், இப்பின்புலத்தில் முக்கியமானதாகவே படுகின்றது. தொல்காப்பியப் பாயிரத்தில் வரும் 'தமிழ் கூறும் நல்லுலகு' எனும் தொடரில் வரும் '**கூறும்**' என்பதுவும் முக்கியமாகின்றது.

இந்தக் கல்வெட்டுக்களை நோக்கும் பொழுது தமிழ், பிராமி எழுத்துரு முறையில் எழுதப்படுவது, அசோக பிராமிக் கல்வெட்டுக் காலத்திலிருந்தே, கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கப் பெற்றிருத்தல் வேண்டுமென மகாதேவன் கூறுவது தமிழிலக்கிய வரலாற்றாய்வுகளுக்கு ஒரு முக்கியத் தரவாக அமைகின்றது.

அடுத்து இந்தக் கல்வெட்டுக்களின் பதிகை முறையினை நோக்குவோம்.

## IV

இக் கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்ட காலத்தில் (19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) இவற்றின் மொழி பற்றிய பெருந் தெளிவின்மைகள் நிலவின. சிலர் இவற்றை கலவை மொழி (hybrid) என்றனர்.

கே. வி. சுப்ரமணிய ஐயரே இது பிராமி எழுத்துருவிலுள்ள தமிழ் என்று அபிப்பிராயம் தெரிவித்தார். 1960 களிலிருந்து இக்கல்வெட்டுக்கள் மீது மீளார்வம் ஏற்பட்டபொழுது, அதன் மொழி பற்றிய பிரச்சினை மீண்டுமெழுந்தது. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், இக்கல்வெட்டுக்களின் மொழி சங்க இலக்கியத்தின் மொழியை ஒத்தது என எடுத்துக் கூறி, இவை பற்றிய ஆராய்ச்சி முன்னேற்றத்துக்கு பெரிதும் உதவினார். மகாதேவன் அவர்கள் தனது ஆய்வுகள் வழியாகவும், இக் கல்வெட்டுக்களின் மொழியை பழந்தமிழ் (Old Tamil) என மொழியியலாளர்கள் கருதும் காலத்துக்குரியதாகக் கொள்கிறார். கமில் ஸ்வலபில் அவர்களும் இதனை முந்து பழந்தமிழ் என்றே கொண்டார்.

இவ்வுண்மையின் அடிப்படையில் இந்தக் கல்வெட்டுக்களை வாசிக்கும் பொழுது, தமிழ் எழுத்து முறைமைக்கு வந்தது கி.மு. 3 நூற்றாண்டிலேயேயென மகாதேவன் கூறுவது முக்கியமாகின்றது. இதுவொரு முக்கியமான விடயமாகும். அதாவது சங்க இலக்கியங்கள் இந்த எழுத்துருவ வளர்ச்சிப் பின்புலத்திலேயே தோன்றியிருத்தல் வேண்டும். இக்கட்டத்திலேயே இப்பிராமி எழுத்துரு நிலை கி.பி. 4ஆம் நூற்றாண்டில் முடிவுறுகின்றது என்ற இவ்வாசிரியரது முடிவு முக்கியமானதாகிறது.

முந்து பிராமிக் கல்வெட்டுக்கள், பிந்திய பிராமிக் கல்வெட்டுக்கள் ஆகியவற்றின் மொழிப் பதிவை, குறிப்பாக எழுதப்பட்ட முறையை வைத்து மகாதேவன் செய்த ஆராய்ச்சியினைப் பற்றி பேரா. செம்பகலக்ஷ்மி தனது விமர்சனக் கட்டுரையில் கூறுவது ஒரு முக்கிய தொகுப்புரையாக அமைகின்றது. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் ஒலிக்குறிப்பான்கள் பற்றியும், சில குறிப்பிட்ட ஒலிகளுக்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகள் பற்றியும் (இடையின உயிர் ஒலிக் குறிப்புகள்) வரும் விதிகள் பிந்திய பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துருக்களை உள்வாங்கியே கூறப்பட்டிருத்தல் வேண்டும் என்பதேயாகும்.

இக்கல்வெட்டுக்களின் மொழிநடை தொல்காப்பிய விதிகளுக்கு உட்பட்டது என்ற கருத்தினை மொழியியலாளர்கள் பலர் கூறியுள்ளார்கள். அசையெழுத்து முறைமையில் (Syllabic writing) அமைந்துள்ள தமிழ் எழுத்து முறைமையில் மெய், உயிர் மெய் ஒலிகளை எழுதும் பொழுது வரும் குறியீடுகள் பற்றியே இங்கு பேசப்படுகின்றது.

இம்மொழி அமைப்பின் பிரதான அம்சங்கள் பற்றிக் கூறும் பொழுது மகாதேவன் முக்கியப்படுத்திக் கூறுபவை பின்வருமாறு:

1. இக் கல்வெட்டுச் சொற்களஞ்சியம் முழுவதிலும் வரும் சொற்களின் அடி (stem) பற்றிய விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| முழுக் கல்வெட்டுத் தொகுதியிலும் காணப்படும் சொல் அடிகள் | - 371 |
| அவற்றுள் திராவிடமொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை | - 256 |
| இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை | - 101 |

இந்த இந்தோ ஆரிய மொழிகளுள் இரண்டு எழுத்து ஒலிகளைத் தவிர்ந்த மற்றைய எழுத்து ஒலிகள் சமமான தமிழொலிகள் மூலமே எழுதப்பட்டுள்ளன. இரண்டு ஒலிகள் மாத்திரமே தமிழ் சாராதவையாகும். அவை d h ம், s (ஸ)ம் ஆகும்.

2. இந்தோ - ஆரிய மொழி வழி வரும் சொற்கள் பெயர்ச் சொற்களே யாகும். இக்கல்வெட்டுக்களில் வரும் எல்லா வினையடிகளும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையே. இக்கல்வெட்டுக் களில் வரும் வினை யடிகளின் மொத்த எண்ணிக்கை 15 ஆகும்.

   (உ+ம்) அறு, ஆகு, ஈ, ஏவு, கொடு, செய், தொடு, பிற, புணரு, வை.

3. இக்கல்வெட்டுக்களில் வந்த சொற்களில் முற்றுவினை வடிவம் எதுவுமில்லை.

4. நிகழ்காலத்தைக் குறிக்கும் சொற்கள் காணப்பட வில்லை.

கிடைத்த இத்தரவுகளை ஆதாரமாகக்கொண்டு நோக்கும் பொழுது பின்வருவனவற்றை முக்கியப்படுத்திக் கூறலாம்:

1. "கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள கடன் சொற்களில் எல்லாமே பெயர்சொற்களாகும்" எனும் கூற்று முக்கிய மானதாகும். இப்பெயர்ச்சொற்களுள்ளும் பெரும்பாலானவை மதச்சடங்கு சார்பானவையாகவும், ஆட்பெயர்களாகவும் உள்ளன என்ற உண்மை கூர்ந்து நோக்கப்படவேண்டியது. ஒரு மக்கள் குழுமத்தினுள் ஒரு புதிய மதப் பண்பாடு வரும்பொழுது, குறிப்பாக மத நிலைப்பட வரும்பொழுது, அவை அவ்வச் சமயங்களின் கோட்பாடுகள் பற்றியனவாகவும், சடங்குகள், நம்பிக்கைகள் பற்றியனவாகவும் அமையும் என்பது சமூக மானிடவியல் வழிவரும் உண்மையாகும். பிராமிக் கல்வெட்டுக்களில் வந்துள்ள இச் சொற்களெல்லாம் பிராகிருத வடிவங்களாகவே உள்ளன. (அதாவது இந்தோ - ஆரிய மொழியொன்றின் பேச்சு வழக்கு நிலை). வந்துள்ள சொற்கள், பெரும்பாலும் சமண மதச் சார்பானவையே என்று மகாதேவன் கூறுகின்றார்.

2. இக்காலகட்டத்தில் தமிழ் தனது பரப்பினுள் வந்து போகின்ற சமணப் பண்பாட்டை உள்வாங்கும்பொழுது, பெயர்ச் சொற்களைத் தவிர வினைச்சொற்களைக் கடனாகப் பெறவில்லையென்பது மிக முக்கியமானவொரு விடயமாகும்.

   இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வதற்கு நாம் வினையடிகளின் சமூகவியல் அம்சங்கள் பற்றி (The Sociology of Verb) சிறிது நோக்கல் வேண்டும். வினைச்சொற்கள் என்பவை செயல், செயல் நிகழ்ச்சி, நடவடிக்கை என்பனவற்றைக் குறிப்பவையாகும். அதாவது, ஒரு மொழியின் வினைச்சொற்கள்

என்பவை, அம்மொழியைப் பேசுபவர்கள் ஈடுபடும் தொழிற்பாடுகள் பற்றியனவாகும். தமது பண்பாட்டினுள் ஏற்கனவே இல்லாத செயற்பாடுகளை செய்ய முனையும் பொழுது அதற்கான சொல் கூட பண்பாட்டின் வழியாகத்தான் வரும். நாம் ஆங்கிலப் பண்பாட்டை முதலில் எதிர்கொண்ட பொழுது வந்த புதிய தொழிற்பாடுகள் பல ஆங்கிலவினைச் சொற்கள் கொண்டே குறிப்பிடப்பட்டன என்பதை நோக்கவும். இன்று ஆங்கிலம் அறிவு, அரசியல், தொழில்நுட்பம் எனப் பல்வேறு துறைகளில் மேலாண்மை செலுத்துவதால், சாதாரணப் பேச்சுவழக்கில், ஆங்கில வினைச்சொல்லைக் கூறி பண்ணு அல்லது பண் என்ற தமிழ் வினையடியைச் சேர்த்து சொற்களை ஆக்குகிறோம். (உ-ம்: Travel பண்ணு, Research பண்ணு, Heat பண்ணு எனவெல்லாம் கூறுவதை மனதிலிருத்துக).

மேற்சொன்ன நிலையில் தமிழ் வினையடிகள் உள்ளன என்று சொல்லும் பொழுது, அந்தப் பண்பாட்டினை எமது சூழலுக்கேற்ப அமைவியைபு செய்து கொண்டு அவற்றை தமிழ் நிலை நின்றே கூறக்கூடியதாக இருந்தது என்பது ஒரு முக்கிய விடயமாகும். இவ்வாறு நோக்கும் பொழுது 7ம் நூற்றாண்டு முதல் வளருகின்ற வைதிக மதச் சூழல் பல தொழில் நிலைகளைக் கூடவே கொண்டு வந்தது என்பது புலப்படும் (கி.பி. 600 முதலே கிரந்த எழுத்துக்கள் அக்காலத்துத் தமிழுக்கான இயல்பான எழுத்துருக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையை மனத் திருத்தல் வேண்டும்).

பெயர்களாக வந்துள்ளனவற்றுள் சில தமிழ் ஒலி முறைமைக்கு இயையவே உள்வாங்கப்பட்டுள்ளன என்பதும் முக்கியமான ஒரு தரவாகும். சமணம் என்பதனை அமண் என்று தமிழ் நிலைப் படுத்திக் கூறுவதை அவதானித்தல் வேண்டும். சமண முனிவர்கள் சார்ந்த கல்வெட்டில், ‘அமண’ என்று குறிப்பிடப் பட்டிருப்பது இந்தப் பண்பாட்டு இயைபாக்கத்தின் ஒரு முக்கிய அம்சத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

பயன்படுத்தப்பட்ட வினைச்சொற்கள் திராவிட அடியினைக் கொண்டவை. எனினும் உண்மையில் அதிலும் பார்க்க மிகப் பெரும் முக்கியத்துவம் உடையதாக விளங்குவது, பயன்படுத்தப்பட்ட இவ் வினையடிகள் கல்வெட்டுக்கள் எழுதப் பெற்ற விடயம் பற்றிய சூழலுடன் தொடர்புடையவை என்பதாகும். அப்பட்டியலை மிக நுண்ணிதாக நோக்கும்பொழுது இவ்வுண்மை புலனாகும். சங்கப் பாடல்கள் சுட்டும் சாதாரண வாழ்க்கைக் கோலங்களினூடு

இணைத்து நோக்கும்பொழுது, இவ்வினைச் சொற்கள் சமண மதக் கொடை மரபில் வரும் சிறப்பியல்புகளைச் சுட்டுவனவாகவே உள்ளன. தமிழ் பண்பாட்டின் மிகமிகச் சாதாரண நடைமுறை இயல்புக்கு வேண்டிய வினையடிகள் எதுவும் இங்கு இடம் பெறவில்லை. நட, போ, வா, இரு, ஓடு, உண், இடு என வரும் வினை யடிகள் எதுவுமே வராதது ஒரு முக்கிய அவதானிப்பு ஆகும். சங்ககால வழக்கிலிருந்த திராவிட / தமிழ் வினையடிகள் யாவற்றுள்ளும் இந்தப் பதினைந்தும் எத்தனை விழுக்காடு என்பதனை அறிதல் நல்லதொரு முயற்சியாகும்.இந்தப் பதினைந்தும் ஏறத்தாழ கலைச்சொல் (glossary) முக்கியத்துவ முடையவையே.

3. அடுத்து முக்கியமானது, முற்று வினைவடிவத்தின் இல்லாமை யாகும். இந்தக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் பேச்சொலியில் மாத்திரமல்லாது பேச்சு வடிவிலும் எழுதப் பட்டுள்ளன. அக்காலத்து வழக்கில் விகுதி ஈறு இல்லாமல் வினை வடிவங்கள் தொழிற் பட்டமைக்கு சங்க இலக்கியங்களிலிருந்து உதாரணம் காட்டலாம். மேலும் மலையாளத்தில் ஈற்றுப் பால், எண் காட்டும் விகுதி இல்லாமலேயே சொற்கள் முடிவது இயல்பாகும். (இப்பண்பினை இலங்கையின் மேல்மாகாணத்து முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றில், அவர்களின் பேச்சு வழக்கில் காணக் கூடியதாக உள்ளது. உ+ம்: சென்ன, பாக்கிய....

இக் கல்வெட்டுக்களில் நிகழ்காலக் குறிப்புக்கள் இல்லாமை, இன்னொரு முக்கிய பண்பாகும். சங்க இலக்கியங்களிலும் நிகழ்கால இடைநிலைகள் இல்லையென்பது நமக்குத் தெரிந்ததே. நிகழ்கால இடைநிலை வடிவம் மணிமேகலையிற் காணப்படுகின்றது என்பர்.

இது பற்றிக் குறிப்பிடும் மொழியியலாளர், இறந்தகாலம் ஒன்றே திட்டவட்டமாகக் கூறப்படத்தக்கதென்றும், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவற்றில் கால உணர்வு பல மயக்கங்களை ஏற்படுத்தலாம் என்றும் கூறுவர். (உ+ம்) "அவன் வந்தான்" என்று சொல்லும் பொழுது "வந்தான்" என்ற சொல்லை உச்சரிக்கும் பொழுது "**அவன்**" இறந்த காலமாகிவிடும்.

இத்தகைய சரித்திட்டமான கால உணர்வு சமூகத்தின் விதிமுறையான ஒழுங்கமைப்பின் பின்னரே ஏற்படக் கூடியதாகும்.

கிடைத்துள்ள கல்வெட்டுக்களின் அமைவு முறையை ஆதாரமாகக் கொண்டு நோக்கி பிராமிக் கல்வெட்டுக்களில் இரண்டு காலப்பகுதிகளையும் வட்டெழுத்து உருவாக்கத்துடன் வரும் இன்னொரு

காலப்பகுதியையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். களப்பிரர் காலமெனக் கொள்ளப்படுவது, கி.பி. 5-6ம் நூற்றாண்டுகளாகும். இது வட்டெழுத்துக் காலத்திலேயே வருகிறதென்பது மகாதேவன் அவர்களின் கருத்து. தமிழ்நாட்டின் சமண மத நடைமுறையில் இந்த 4ம் நூற்றாண்டின் இறுதி ஒரு பிரிகோடாகவே அமைகின்றது என்பதையும் அவர் சுட்டுகின்றார். இவற்றை மனங்கொண்டு சிந்திக்கும் பொழுது (ப.த.ச.நா.) வில் கி.பி. 600 இற்கு முந்திய காலம் பற்றித் தரப்பட்டுள்ள காலப்பகுப்பை நோக்குதல் வேண்டும். வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் சங்ககாலம் ஏறத்தாழ 250 உடன் முடிவுகின்றது என்பதும், அக்காலத்திற்கு உரியனவாகக் கொள்ளப் படாத கலித்தொகை, பரிபாடல் ஆதியனவும் தொல்காப்பியம், குறள் போன்றனவும், சிலப்பதிகாரத்திற்கு முந்தியனவே என்று கூறி இப்பொழுது தமிழிலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலம் எனக் குறிப்பிடுகின்ற காலத்துக்குள்ளேயே இரு கட்டங்களை அந்த ஆய்வில் எடுத்துக் கூறியுள்ளேன்.

தமிழில் இலக்கிய வரலாறு எனும் நூலில் இவ்விடயம் பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது மகாதேவன் அவர்களின் ஆராய்ச்சி முடிவு கொண்டு நோக்கும் பொழுதும், கி.பி. 600 க்கு முன்னுள்ள காலப்பகுதி வரலாற்றை முற்றிலும் கல்வெட்டுக்களின் அடிப்படையில் வைத்து நோக்கும் பொழுதும் கூட மூன்று காலப் பகுதிகளாகவே அவர் பிரித்துள்ளார்.

1 வது காலப்பகுதி - கி.மு. 3/கி.மு 2 - கி.பி. 1ம் நூற்றாண்டின் முடிவுவரை. இது ஏறத்தாழ சங்க காலத்தை உள்ளடக்குவதாகும்.

2 வது காலப்பகுதி - கி. பி. 2 முதல் 4 ன் முடிவு வரை.

3 வது காலப்பகுதி - கி. பி. 5, 6 ன் முடிவு வரை.

இதன்படிக்கு சங்க மருவிய காலமெனக் கொள்ளப்படுவது இரண்டு காலப்பிரிவுகளை உள்ளடக்கியது. இக்கல்வெட்டுக்களைப் பற்றிய ஆய்வின் முக்கியத்துவமுள்ள ஓர் அம்சமாக மகாதேவன் குறிப்பிடுவது, இக்கல்வெட்டுக்களுக்கும், பழைய கன்னடத்துக்கு முள்ள தொடர்பாகும். உண்மையில் இம் முடிவு முந்து தமிழ் நாட்டின் சமூக பண்பாட்டு, பொருளாதார வரலாற்றிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. தமிழ் பிராமி கல்வெட்டுக்களின் புழக்கத்தின் புவியியலை நோக்கும்பொழுது, கீழ் கன்னடப் பிரதேசத்தில் தொடங்கி, படிப்படியாகக் கீழே வந்து, கோயம்புத்தூர் - சேலம் பிரதேசத்தின் வழி கீழே வந்து, தென்

தமிழகத்தின் நடுப்பகுதியில் பாண்டி நாட்டில் மிகப் பெருமளவிற் காணப்படுகிறது.
இது தமிழக வரலாற்றின் 2 அம்சங்களை முக்கியப்படுத்துகிறது:

1. தென் திராவிட மொழி வழிப் பரவுப் பிரதேசம் (கன்னடம், துளு, தொதுவ, மலையாளம்) முக்கியம் பெறுவனவாகும்.
2. சமணத்தின் தமிழ்நாட்டு வருகை இவ்வழியேயே வருகிறது. பௌத்தச் செல்வாக்கானது, கிழக்குப் பகுதியில் நாகார்ஜுன கொண்டா வழியாக கீழ்நோக்கி வந்து, தமிழகத்துக்கு வந்திருத்தல் வேண்டும், இந்த வருகை யானது ஏறத்தாழ தமிழக கிழக்குக் கரையோரப் பகுதியை அண்டி, இந்திய தீபகற்பத்துள் முனைவுற நிற்கும் இலங்கையோடு தொடர்புறுகிறது. பௌத்தச் சார்பான பிராகிருத மரபு (பாளி) கிழக்குக் கரையோரமாகவே வந்திருக்க வேண்டும் போலத் தெரிகிறது.

இது தொடர்பாக இன்னொரு முக்கிய அம்சத்தினையும் குறிப்பிட வேண்டியுள்ளது. அது தமிழ் பிராமி கல்வெட்டுக்களுக்கும், சிங்கள பிராமி கல்வெட்டுக்களுக்குமுள்ள இயைபு ஒப்புமைகளாகும். சிங்கள பிராமியின் எழுத்துருவாக்கத்தில் தமிழ் பிராமியின் எழுத்துரு முறைமை காணப்படுவதும், அதற்கும் மேலாக சில பெயர்ச் சொற்களில் காணப்படுகின்ற ஒற்றுமையும் (உ+ம் : Tishya - Tissa) முக்கியமாக எடுத்துக் கூறப்படுகின்றன.

"காவிதி" எனும் சொல் மகாதேவன் Gahapathi எனும் சொல்லின் வழியாகவே தோற்றம் பெற்றது என்கிறார். இத்தகைய இயைபு இணைவுகள், தமிழ் பிராமி சிங்கள பிராமிக்கு இடையிலே காணப்படுகின்ற ஒப்புமைகள் தனித்துவங்களுக்கான சமூக, பண்பாட்டு பின்புலங்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை நோக்கல் வேண்டும். ஏற்கனவே கூறியபடி, தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சமண மதச் சார்புடையனவாக இருக்கும் அதே வேளையில் சிங்கள பிராமிக் கல் வெட்டுக்கள் பௌத்த மதச் சார்புடையனவாக இருக்கின்றன. இவை யிரண்டுமே அசோக பிராமியிலிருந்து உருப்பெற்று வளர்ந்தன வென்றும், இரண்டும் சமாந்தர இருப்பினைக் கொண்டவை யென்றும் மகாதேவன் கூறுகின்றார். இவற்றுக்கான வரலாற்றுப் பின்புலம், தெளிவு படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால், இந்தக் கல்வெட்டுத் தரவுகளை வைத்துக் கொண்டு ஒரு வரலாற்று உண்மையை அழுத்திக் கூறலாம் போலத் தெரிகிறது. அது, இலங்கைக்கான பௌத்தம் தென்னிந்தியா வழியாக - தமிழகம் வழியாக வந்திருத்தல் வேண்டும் என்பதாகும்.

# V

இக் கல்வெட்டுக்கள் வழியாகத் தெரியவரும் சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைகள் முக்கியமானவையாகும். தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் உறவுப் பெயர்கள் பல வருவது நன்கு அவதானிக்கப்படல் வேண்டும். இக்கல்வெட்டுக்களில் தந்தை, தாயியரு, மகன், மகள் (குறுமகள்), பின்னன், சாலகன் போன்ற பெயர்ச் சொற்கள் காணப்படுகின்றன.

சாலகன் எனும் சொல் தற்கால வழக்கில் சகலன் என நிற்கும் (மனைவியின் சகோதரியின் கணவன்). தந்தை எனும் சொல்லின் வரலாறு பற்றி மகாதேவனின் கருத்து ஒரு மிகப் பெரிய வரலாற்றுப் பங்களிப்பென்று சுப்பராயுலு கூறுவார். "அந்தை" என்பது மரியாதைக் குறிப்புச் சொல்லாயிருந்து பின்னர் தகப்பனைக் குறித்தது என்றும், அதனை நுந்தை போன்ற வடிவங்களில் காணலாம் என்றும் சுப்பராயுலு கூறுவார்.

"தாயியரு" எனும் சொல்லிற் கன்னடப் பாங்கு நன்கு தெரிகிறது. தாய் என்பது "தன் ஆய்" என்பதே. சகோதரர்கள் பற்றிய தரவும் உள்ளது. இவை யாவும் மையக் குடும்ப உறவுகளாகும். சகலன் பற்றிய குறிப்பு அக்காலத்தில் நிலவிய குடும்ப விரிநிலை அமைப்பைக் (Extended Family) குறிக்கின்றது. அதாவது சமூகத்தின் அடி அலகான குடும்ப அலகு விதிநிலை அளவாகப் பேணப்படுகின்ற அளவிற்குக் குடும்ப அமைப்பு இருந்தமை ஒரு முக்கியமான தரவாகும். குறுமகள் என்பது சிறுகுழந்தையைக் குறிப்பது. இச்சொற்றொடர் சங்க இலக்கியங்களிலும் வருவதாகும்.

குடும்ப மட்டத்திற்கு மேல் அடுத்து வரும் சமூக ஒழுங்கமைவு ஆட்சி, ஆளுகை (rule, governance) நிலை பற்றியதாகும். இந்நிலையிலும் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றுக்கான முக்கியத் தரவுகள் இக்கல்வெட்டுக்கள் மூலம் கிடைக்கின்றன. அவற்றுள் மிக முக்கியமானது சேரவரலாறு பற்றிக் கூறுவதாகும். புகளூர்க் கல்வெட்டுக்களில் வரும் சேர அரசர்கள் பற்றிய குறிப்பு (ஆதன் செல் இரும்பொறை, பெருங்கடுங்கோ இளங்கடுங்கோ) பதிற்றுப் பத்தில் 7, 8, 9ஆம் பதிகங்களில் குறிப்பிடப்படும் தரவுகளை மெய்ப்பிப்பனவாக உள்ளன. 1966ல் இவ்வுண்மை முதலில் எடுத்துப் பேசப்பட்டது. சங்க இலக்கியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை இக்குறிப்பு மேலும் அதிகரிக்கச் செய்கிறது. ஏனெனில் முன்னர் பதிற்றுப்பத்துப் பதிகங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் மரபு இருக்கவில்லை. சேர ஆட்சிப் பரம்பரை பற்றிய "சேர" என்ற குறிப்பும் ஒரு கல்வெட்டில் வருகின்றது (எடகல் - அ. 2, ப. 433). இவை காரணமாக

மூவேந்தர்களின் வரலாற்று இருப்பு மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. அரசினைக் குறிக்கும் "கோன்" என்ற சொல்லும் காணப்படுகின்றது (திருமலை 2, ப. 389). (இது பற்றிய குறிப்புக்கு 'Studies in Ancient Tamil Society" என்ற எனது நூலினைப் பார்க்கவும்)

சேர, சோழ, பாண்டிய அரசர்கள் இருந்த காலத்தில், பல பிரதானிகளும் இருந்தனர் என்பது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள ஓர் உண்மையாகும் (சங்ககால சிறப்புப் பெயர்கள் - துறை அரங்கனார்). நாகன் என்றவொரு பிரதானியின் குறிப்பு இக்கல்வெட்டுக்களில் (அழகர் மலை -13) காணப்படுகின்றது. இவற்றளவு முக்கியமான ஓர் உண்மையும் மகாதேவனால் வெளிக் கொணரப்பட்டுள்ளது. அது 'ஊர்' பற்றிய குறிப்பாகும். இக் கல் வெட்டுக்களில் வரும் நிர்வாக ஒழுங்கமைவு பற்றி குறிப்பிடும் பொழுது "ஊர்" எனும் சொல்லின் பயில்வு பற்றிக் குறிப்பிடுகின்றார். இச்சொல் பல்லவ, சோழ காலங்களிலே பெற்றிருந்த நிர்வாக அமைப்பு நுண்மையை இங்கேயும் சுட்டுகின்றதெனக் கொள்ள முடியாவிட்டாலும் ஊரை, அதாவது ஒரு குறிப்பிட்ட புவியியல் இயைபுடைய குடியிருப்புகளின் தொகுதியை, ஊர் எனும் அலகாகக் கொள்ளும் தன்மை காணப்படுகின்றது என்ற வகையில் மகாதேவனின் குறிப்புச் செல்கிறது. ஆனால், செம்பகலக்ஷ்மி கூறுவதுபோல, அவை பிற்காலத்தில் சுட்டி நின்ற எண்ணக்கருக்களை தமிழ் பிராமிக் கல்வெட்டுக் காலத்துக்கும் கொள்வது பொருத்தமாகாது எனினும், ஊர் ஒரு முக்கியமான அலகாக இருந்திருத்தல் வேண்டும் என்பதை மறுக்க முடியாதுள்ளது. உண்மையில் பிராமிக் கல்வெட்டு நிலையில் ஊர் என்பது பொருளாதார உற்பத்தி முறைமை ஒன்றோ, இரண்டோ தொழிற்படுகின்ற ஒரு குடியிருப்பு (settlement) அலகாகவே கொள்ளப்பட வேண்டும் போலத் தெரிகிறது. சங்க இலக்கியங்களிலும் ஊர், ஊரன் எனும் தொடர்கள் நிறைய வந்துள்ளன.

சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்ற கிழான் எனும் சொல் கல்வெட்டுக்களில் காணப்படுவது, நாம் சங்க இலக்கியம் வழியாக மேற்கொண்ட சிந்திப்புக்களை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது. உரித்துடையவன் என்ற கருத்தில் வரும் 'கிழான்' எனும் சொல்லின் வருகை, ஆட்சி அதிகார நிலைக்குக் கீழ் வருகின்றவர்களும் சொத்துரிமை காரணமாக முக்கியத்துவம் பெறும் நிலையையே இச்சொற் பயன்பாடு சுட்டுகிறது எனலாம். சங்க இலக்கியத்தில் நல்லைக் கிழான் நாகன் பெயர் வருகிறது. (தமிழகத்தில் ஆளுகை / ஆட்சி அதிகாரம் வளர்ந்திருக்கக் கூடிய முறைமை பற்றி அறிவதற்கு மேற்கூறிய கட்டுரையினைப் பார்க்க.)

இக்கல்வெட்டுக்கள் அடியாகவும் சங்க இலக்கியங்களின் அடியாகவும் புலப்படும் பொருளாதார ஒழுங்கமைப்பு நடவடிக்கை முறைமைகள் பற்றிய ஒரு குறிப்பு இவ்விடத்தில் அத்தியாவசியமாகிற தென்றே கருதுகின்றேன்.

மகாதேவன் அவர்கள் கல்வெட்டுக்களில் வரும் குறிப்புக்களின் அடிப்படையில் கூறும் பொருளாதார விடயங்களை இக்கல்வெட்டுக் களின் பரம்பல் அடிப்படையிலும் இணைத்தே நோக்கல் வேண்டும். அவ்வாறு நோக்கும்பொழுது இக்கல்வெட்டுப் பரம்பலுள்ள பிரதேசம், சிறப்பாகக் கூறினால் இக்கல்வெட்டுக்களை பொறிப்பித்தவர்களுக்குத் தளமாக வுள்ள வேளாண்மை நடவடிக்கைகள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டன வாகவே தென்படுகின்றன. வேளாண்மைக்கான உற்பத்திக் கருவிகள் (இரும்பாலான கொழு; கரும்பு இயந்திரம்) முக்கியமாகின்றன. கல்வெட்டுக்களினூடாக மேற்கிளம்பும் பொருளாதாரப் படிமத்தினுள் திணைக் கோட்பாட்டின் அடியாகத் தெரியவரும் நிலவேறுபாடு, உற்பத்தி முறை வேறுபாடு ஆதியன தெளிவாக வரவில்லை. நானிலம், அவற்றின் கருபொருள் வேறுபாடு (உற்பத்தி, பண்பாடு) ஆதியன இலக்கியங்கள் மூலமாகவே தெளிவாகத் தெரிய வருகின்றன (பார்க்க - திணைக் கோட்பாடு பற்றிய எனது கட்டுரை). இலக்கியங்களினூடாகவும் அவற்றை நோக்கும் முறைமையினை தீர்மானித்துள்ள தொல்காப்பியப் பொருளதிகாரம் மூலமாகவும் நாம் தமிழகம் என்ற முழு நிலப்பரப்பினையும் காணக் கூடியதாயுள்ளது. அதற்குள் ஒரு கால பார்வை (Diachronic) தெரிகிறது. நிலச் சொத்துரிமை வழி, அதிகார வழி முக்கியத்து வங்களைப் பற்றிப் பேசும் இக்கட்டத்தில், கல்வெட்டுக்களோ கொத்தணி கொத்தணிகளாக ஒரு "கால ஒருமையினூடாக" (synchronic) வரும் பார்வையினையே காட்டுகின்றன.

இவ்வாறு நோக்கும்பொழுது இலக்கியங்களும், கல்வெட்டுக் களும், தொல்காப்பியப் பொருளதிகாரமும் ஒன்றுக்கொன்று இணைவாக நின்று (supplementary) ஓர் ஒட்டுமொத்தமான முழுமை நோக்கினைத் தருகின்றன.

பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் வணிகம் பற்றிய தகவல்கள் மிகமிக முக்கியமானவையாகும். கல்வெட்டுக்களில் நேரடியாகவும், மட்பாண்டக் கீறல்களாகவுமுள்ள தரவுகளை கொண்டு பார்க்கும் பொழுது அக்காலத்து தமிழகத்தில் வணிகம் இந்தோ - உரோம வணிகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பதை மகாதேவன் விளக்கமாகக் காட்டுகிறார். இந்தோ - உரோம வணிகப்

பாதைகள் என அடையாளங் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் இக் கல்வெட்டுக்கள் அதிகமாகக் காணப்படுவதோடு, உரோம நாணயங் களும் காணப்படுகின்றன என்பதைக் காட்டுகிறார்.

வணிகம் பற்றி மகாதேவன் தரும் தகவல்களுள் (அவை பற்றிய தகவல்கள் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருப்பினும்) முக்கியமானவை, மத்தியதரைப் பிரதேசத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பெற்ற மட்பாண்டப் பகுதிகள் சிலவற்றில் தமிழ் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன எனும் செய்தியே (பக். 163). செங்கடற் பகுதியில் உரோமக் குடியிருப்புகளாக இருந்த பகுதிகளில் தமிழ் எழுத்துக் களுள்ள மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதனினும் மேலாக தமிழ் நாட்டிலிருந்து அலெக்சாந்திரியாவிற்குப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான ஒப்பந்தமொன்று பப்பிரஸ் பட்டைகளில் எழுதப் பட்டுள்ளது. அந்த ஆவணம் தமிழில் இல்லையெனினும், தமிழக வணிகம் கி.பி 2ம் நூற்றாண்டில் எத்துணை ஒழுங்கமைப்பினைப் பெற்றிருந்தது என்பது புலனாகின்றது.

உண்மையில் இந்தப் பெரு வியாபாரத் தொடர்பில் ஈடுபட்டிருந்தவர்கள் பெரும்பாலும், தமிழ் நாட்டினுள் சமணரே என்பது உறுதியாவதுடன், வணிகம் பல மட்டங்களில் நிலவியதையும் காணலாம். வணிக, வாணிக என்ற இரண்டு சொற்களும் பயன்படுத்தப் படுகின்றன. இந்த வணிகம் அக்காலத்துத் தொழில்நுட்பத்தோடு தொடர்பு கொண்டிருந்தது என்பதும் தெளிவாகிறது. இவ்வாறு நோக்கும்பொழுது மிக முக்கியமாக எடுத்துக் கூறப்பட வேண்டியது கொழு **வணிகன்** பற்றிய குறிப்பாகும். கொழு என்பது கலப்பையிலுள்ள ஏர்க் கொழுவாகும். அது இரும்பாற் செய்யப்பட்டதாகும். கலப்பைக்கான ஏர்க்கொழு வணிக அளவில் விற்பனை செய்யப்பட வேண்டிய அளவிற்கு உற்பத்தி தேவைப்பட்டதெனில் விவசாயம் (கமச்செய்கை) எந்த அளவிற்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது என்பது தெரிய வருகிறது. இந்தநிலை வெறுமனே நிலையூன்றிய வேளாண் செய்கையை (settled Agriculture) காட்டுவது மாத்திரமல்லாமல், உற்பத்தியை (productivity) அதிகரிப்ப-தற்கான இரும்பு சார்ந்த ஒரு தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்ட தென்பது அக்காலத்து விவசாயத்தின் ஒழுங்கமைவு நிலையை எடுத்துக் காட்டுகின்றது. நெற்செய்கை பற்றிய குறிப்புக்கள் நிறைய வருகின்றன. நூறுகலம் நெல் பற்றி, நெல் வேலி எனும் கிராமம் பற்றியென பல உதாரணங்களைக் காட்டலாம். இந்த நெற்செய்கை நீர்ப்பாசனத்தை நம்பியிருந்தது என்பது, விவசாயத்திற்கான குளம், ஏரி பற்றிய தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

விவசாயம் நெற்செய்கையோடு நின்றுவிடாது கரும்புச் செய்கையையும் (அழகர்மலை - 7) நியாயமானளவு பெருநிலைப்படச் செய்தனர் என்பது இந்தக் கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றது.

பொன் கொல்லன் பற்றிய குறிப்பு உபரிச் செல்வம் கணிசமாக இருந்ததைச் சுட்டுகின்றது. இவற்றை விட துணிச் செய்கை (textile) யின் வளர்ச்சி காரணமாக அறுவை வணிகன் பற்றிய குறிப்பு வருகிறது. எண்ணெய் வாணிகன் பற்றிய குறிப்பும் முக்கியமானதாகும். எண்ணெய் ஒரு முக்கியமான பண்பாட்டுப் பண்டமாகும். சமயம் முதல் சாப்பாடு வரை நமது பண்பாட்டில் அது முக்கிய பங்கு வகிக்கிறது.

சங்க இலக்கியத்தில் பெரிதும் பேசப்படும் உப்பு வணிகம் பற்றிய குறிப்பு இக்கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றது. உரோம வணிகம் முதல் உப்பு வணிகம் வரையுள்ள வணிகக் குறிப்புக்களைப் பார்க்கும் பொழுது வணிகம் இரண்டு நிலைகளிலே தொழிற்பட்டுள்ளதைக் காணலாம்:

1. பிறநாட்டு வணிகம், அந்த வணிகத்தோடு தொடர்புபட்ட பொருட்கள்.
2. அக்காலத்து வாழ்க்கை ஒழுங்கமைவிற்கு வேண்டியிருந்த வணிக நடவடிக்கைகள்.

அவற்றினை இரண்டாக வகுக்கலாம். ஒன்று, உயர் சமூக நிலையில் (உபரிச் செல்வமுடைய நிலையில்) பயன் படுத்தப்படுபவை.

இரண்டு, அன்றாட வாழ்க்கை முறைக்கு அவசியமானவை. அறுவை, எண்ணெய், உப்பு ஆகியவற்றை இரண்டாவதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

வணிக வளர்ச்சி காரணமாக கணக்குப் பார்ப்பவர்கள் பற்றியும் குறிப்பு வருகின்றது. அழகர்மலை - 5ம் கல்வெட்டில் "கணக" (kanaka) பற்றிய குறிப்பு வருகின்றது. பொரும்பாலும் வணிகத்தில் ஈடுபட்டிருந்தோரே இக்குகைக் கொடைகளைச் செய்துள்ளனர்.

சித்தன்னவாசல் (அ) கல்வெட்டில் (ப. 385), தெங்கு சிறுபொசில் இளையர், கவுடிகி எனும் துறவிக்கு குகைக்கொடை வழங்கியதைக் கூறுகிறது. அதில் வரும் இளயரை மகாதேவன் ஒரு குலக் குழுவினராகக் கொள்கின்றார். இளையர் என்போரை குலக் குழுவினராகக் கொள்வது பொருத்தமோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில் இளையர் என்பது சங்க இலக்கியங்களில் பரக்கக் காணப்படும் ஒரு சொல்லாகும்.

இச்சொல் ஏவலாட்கள் என்ற கருத்திலேயே வருகின்றது. பொருள் வயிற் செல்லும் தலைவன், தன்னுடன் இளயரைக் கூட்டிச் செல்வது மரபுபோலத் தெரிகிறது. தொல்காப்பியம், பொருளதிகாரத்தில் இளையோர் என்போர் தலைவன், தலைவியின் ஊடற்காலத்து வாயில்களுள் ஒருவராக குறிப்பிடப் பட்டுள்ளனர். இத்தகைய குறிப்புக்களுள் ஒரு கூட்டத்தினரை ஒரு தனிக் குலக் குழுவாகக் கொள்வது எத்துணை பொருத்தமுடையது என்பது நியாயபூர்வமான ஒரு வினாவாகும். (முன்னர் குறிப்பிட்ட பிரபுத்துவ வளர்ச்சி பற்றிய எனது கட்டுரையை நோக்குக)

இக்கல்வெட்டை வாசித்த மகாதேவன் அவர்கள் தென்கு சிறுபொசிலை ஓர் இடப்பெயராகவே கொள்கிறார். சங்க இலக்கியக் குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கும் பொழுது, தெற்கு சிறுபொசில் என்ற இடத்தைச் சார்ந்த இளயர் என்றே கொள்ள வேண்டும் போலத் தெரிகிறது.

பொருள் வயிற் செல்லும் தலைவர்கள், சிற்சில ஊர்களிலிருந்த அப் பயணங்களுக்குப் பழக்கப்பட்ட இளையரைக் கூட்டிச் சென்றிருக்கலாம் போலத் தெரிகிறது.

[மேலே கூறப்பட்டனவற்றுள் பெரும்பாலானவை இலக்கிய வழிச் சான்றுகள் மூலம் 'The Development of Aristrocracy in Ancient Tamil Nadu' என்ற எனது கட்டுரையில் எடுத்துக் கூறியுள்ளேன். (பார்க்க : Studies in Ancient Tamil Society, NCBH, Chennai, 1995. (இதன் தமிழாக்கம் 'பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி' எனும் எனது கட்டுரைத் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளது. மக்கள் பதிப்பகம், சென்னை, 2004.)]

## VI

அடுத்து கல்வெட்டுக்கள் வழியாகத் தெரியவரும் பண்பாட்டு அம்சங்களை நோக்குவோம். வாழ்க்கை முறைமையில் எப்பொழுதுமே மதத்திற்குப் பிரதான இடமுண்டு. மதம் என்பது நம்பிக்கை - Faith (விசுவாசம்). ஐதீகங்கள் (Myths) - நம்பிக்கையை நியாயப் படுத்துபவை, நம்பிக்கையின் அடியாக எழுபவை. சடங்குகள் (கரணங்கள், rituals) நம்பிக்கை காரணமாகச் செய்யப்படுபவை. தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் சமணம் தவிர்ந்த மற்றைய மதங்கள் பற்றிய தரவுகள் இருப்பதற்கான வாய்ப்பு குறைவு. அதுவும் இக்கல்வெட்டுக்கள் மதக் கடமை காரணமாகவே செய்யப்பட்டவை. அதாவது சமணத் துறவி களுக்கு அச்சமயத்தின் துறவிகளல்லாத "இல்" வாழ்வோர், துறவிகள்

தங்கள் மதக்கடமைகளைச் செய்வதற்காக ஒதுக்குப் புறங்களில் இருப்பிடதானம், குகைதானம் செய்வர். இந்தக் குகைகளில் அவர்கள் இருந்து தங்கள் மதக் கடமைகளை நிறைவேற்றுவர்.

இத்தகைய இடங்களை பள்ளி என்றும் குறிப்பிட்டமை தெரிய வருகின்றது. "பளி" என்றும் கல்வெட்டுக் குறிப்புகள் உள்ளன. வழங்கப்பட்டவர்களின் பெயர் மற்றும் தகவல்களின் ஊடாக பல முக்கிய தகவல்கள் வெளிவருகின்றன.

சமணத் துறவிகள் பலர் சிறப்பாக சிரேஷ்ட துறவிகள் "*கணி*" எனப்பட்டனர். கணி, கணியன் என்ற பெயர்கள் முக்கியமானவை. இவர்களிற் சிலரைக் குறிக்க "ஆசிரிய" என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்த ஆசிரியன் தனது உபதேசப் பிரசங்கத்திற்கு அகவல் யாப்பினைப் பயன்படுத்தியிருக்கக்கூடிய ஒரு சாத்தியப்பாடும் உண்டு. ஆசிரியம் என்பது ஆசிரியனால் பயன்படுத்தப்படுவது என்ற கருத்துடைய தாகும். ஒரு பள்ளியில் பல துறவிகள் இருந்திருக்கலாம். அதனாலேயே நெல் கொடையாகக் கொடுக்கப்பட்டதற்கான சான்றினைக் காணலாம். பள்ளிச் சந்த மரபு இவ்வாறே உருவாகியிருத்தல் வேண்டும். சமண மத வழிவரும் சமுதாய ஒழுங்கமைப்பில் குடும்பிகர், துறவிகளுக்கு கொடை செய்வது மரபாகக் கொள்ளப்பட்டது. உண்மையில் பௌத்தம், சமணம் ஆகிய இரு மதங்களிலும் சமூகம் இரு வகையினரைக் கொண்டதாக எதிர்நிலைப்படுத்தி கூறப்படுவதுண்டு. ஒரு சாரார், இல்வாழ்வார் - இல்லறத்தார் - கிரஹபதி - கஹபதி - குடும்பிகர் ; மற்றையோர், துறந்தோர் - நீத்தார் - துறவியர்.

பௌத்த மதத்தில் கிஹி (Gihi) - இல்லற, ப்விதி (Paviti) - நீத்தோர் என்ற கருத்துண்டு. இந்தப் பின்புலத்திலேயே நமது அற நூல்களில் பேசப்படும் இல்லறம், துறவறம் என்ற தொடர்களை விளங்கிக் கொள்ளல் வேண்டும். திருவள்ளுவர் சமூகத்தை இல்வாழ்வார், நீத்தோர் என வகைப்படுத்துவார். இது மிக ஆழமாக நோக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

இல்லறவியலில் வாழ்க்கைத் துணை என்ற எண்ணக்கரு ஆணுக்கான வாழ்க்கைத் துணை என்ற கருத்திலேயே கூறப்படுகின்ற தெனினும், (கணவன்மார் மனைவிமாருக்கான வாழ்க்கைத் துணையாகக் கூறப்படவில்லை), இக்கொடைக் கல்வெட்டுக்களிற் சில பெண்கள் கொடைகளை வழங்கியிருப்பதைக் காட்டுகின்றன.

புகளூர் 5ம், 6ம் கல்வெட்டுக்களில் (பக். 412, 413) முறையே,

நலி (ய்) ஊர் ஆ பிடன் குறும்மகள்
கீரன் கொறி செயிபித பளி (புகளூர் - 5)

நல்லி(ய்) ஊர் ஆ பிடந்தை மகள்
கீரன் கொற்றி அதிடானம் (புகளூர் - 6)

வருகின்றன. குறும்மகள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதனால் பெண் குழநதையின் பெயராற் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கல்வெட்டுக்களில் சாதாரண பண்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய அதிக குறிப்புக்கள் இல்லை.

நான்கு கல்வெட்டுக்கள் இசை, நடனம் பற்றிய குறிப்புக்களைக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் காலத்தால் முந்தியது திருவாதவூர் (2) கல்வெட்டாகும். அதில் வரும் குறிப்பு பின்வருமாறு:

உபசன் பர்அசு
உறை கொட்டுபிதோன் (ப. 329)

இதன் கருத்து சற்று மயக்கமாகவே உள்ளது. மகாதேவன், உபசன் என்பதை பாகத வழித் தமிழ் உருவாக்கமாகக் கொண்டு உபாத்தியாயன் என்று கொள்கிறார். "உறை கொட்டுபிதோன்" என்பது உறைவிடத்தை வெட்டிக் கொடுத்தவன் என்பதாகும். "பர்அசு" என்பது ஒருவரின் பெயராகக் கொள்ளப்பட வேண்டுமா அல்லது "பர்அசி" என்ற எச்சமாகக் கொள்ளப்பட வேண்டுமா என்று தெரியவில்லை. பரசுதல் என்பது தெய்வங்களை விளித்துப் போற்றிப் பாடுதல் என்பதாகும். பரவு எனும் வினையடியின் இன்னொரு வடிவம்.

மகாதேவன் அவர்கள் மேலும், மேலே சென்று பர்அசுவை, பாரசவர் என்ற பெயரோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றார். நச்சினார்க்கினியர் உரையிற் கூத்தரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, கூத்தரை பாரசவர் என்று குறிப்பிடுவார். இதற்கு ஒரு வடமொழி மூலத்தை கொள்ளும் மரபே பெரும்பாலும் இருந்து வந்துள்ளது. பிராமண ஆணுக்கும், சூத்திரப் பெண்ணுக்கும் பிறந்தவர்களையே இவ்வாறு குறிப்பிடுவது வழக்கம்.

இப்பொழுது மகாதேவன் தரும் விளக்கத்தால் (பக். 553, 554) சங்கப் பாடல்களினூடே நாம் இதுவரை விரித்து நோக்காத ஒரு மரபும் இருந்தது தெரியவருகின்றது. பர்அசு என்பது பரவு என்பதோடு தொடர்புடையது என்று மகாதேவன் கூறுகிறார். "பரவுதல்" என்பது துதித்துப் பாடுதல் என்பதாகும். அதற்கான குறிப்புகள் சங்க இலக்கியத்தில் உண்டு (பாட்டும் தொகையும்). பர்அசு என்பது பரவுதலின் பேச்சு வடிவமாக இருந்திருக்கலாம்.

சங்க இலக்கியத்தில் பரிபாடலைத் தவிர, துதிநிலையில் வரும் பாடல்களில், தனிப்பாடல்கள் இல்லை. ஆனால், அத்தகைய ஒரு பாடல் முறை இருந்ததென்பது "வெறியாட்டு" ப் பற்றிய குறிப்புகளால் தெரிய வருகிறது. இங்கு சமண மதநிலைப் பாடலே குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும். மகாதேவன் பரவ எனும் சொல், நடனத்தோடும் தொடர்புடையது என்பதை நன்கு காட்டுகிறார். பரசவர் என்பதே பின்னர் சமஸ்கிருத மயப்பட்ட ஒரு விளக்கத்தைப் பெற்றிருக்கலாம் எனக் கூறுகின்றார். மகாதேவன் முக்கியமாகக் கொள்வது இந்தப் பர்அசு. பரவு மரபு உவச்சரோடு சேர்த்துப் பேசப்படுவதாகும்.

இந்தக் கல்வெட்டைப் பொறுத்தவரை உபச்சன், உவச்சன் என்பது உபாத்யாய என்பதன் பாகதவழிப்பேறு என்று கூறிவிட்டு, தொடர்ந்து (ப. 553) உவச்சன் என்ற சொல்லையெடுத்து, அது எவ்வாறு கோயிலில் மேளம் வாசிப்போரைக் குறித்து நின்றது என்பதை பிற்காலக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு கூறுகிறார். சமணநிலையில் உவச்சன், உபாத்தியாயனைக் குறிக்க பின்னர் வைதிக நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். இதிலுள்ள மிகச் சுவாரசியமான விடயம் என்னவெனில், கம்பரை உவச்சர் குலத்தினராகக்கொள்ளும் மரபு இருந்தமையாகும்.

உவச்சன் எனும் சொற்பிதிர் வழி விவாதம் ஒரு புறமிருக்க நமக்கு முக்கியமானது பரசுதல் என்பது சமணச் சூழலிலும் மதநிலைத் துதிப் பாடலைக் குறித்தது என்பதாகும்.

இது சமண - பௌத்த மதநிலை வழியாக தமிழ் மத, இலக்கிய மரபுகளினூடே வந்து சேருவதாகும்.

இந்தக் கல்வெட்டு கி. மு. 2ம் நூற்றாண்டுக்குரியது என்பது முக்கியமானவொரு தரவாகும்.

(தமிழ்நாட்டில் பிற்கால சமண, பௌத்த மதத்தினர் கலைகளைக் கண்டித்ததற்கான காரணங்களை அறிவதற்கு ப. த. ச. நா. வின் VI ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.)

பரவும் உவச்சன் பற்றிய குறிப்பு கி. மு. 2ம் நூற்றாண்டுக் கல்வெட்டில் வருகின்றனவெனிற் கி. பி. 4ம் நூற்றாண்டுக் கல்வெட்டில், தமிழ்நாட்டு இசை - நடன, ஆற்றுகை பற்றிய வரலாற்றில் இதுவரை நமக்குக் கிடைக்காத ஒரு பெரும் பொக்கிஷம் கி. பி. 4ம் நூற்றாண்டுக்கான அரச்சலூரைச் சார்ந்த மூன்று கல்வெட்டுக்களில் கிடைத்துள்ளது. இம்மூன்றும் ஓரிடத்திலேயே மேல் கீழாக வெட்டப் பட்டுள்ளன. முதலாவதாக உள்ள மேற்புறக் கல்வெட்டில்,

எழுத்தும் புணருத்தான் மலைய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்

எனக் குறிப்பிடப்படுகிறது. இதன் கருத்து, மலைய் வண்ணக்கனாகிய தேவன் சாத்தன், கீழ்வரும் (தாளச்) சொற்கட்டுகளுக்குரிய எழுத்துக்களைச் சேர்த்தான் என்பதாகும். இங்கு எழுத்து என்பது, சங்க இலக்கியத்தில் இச்சொல்லிற்கான சித்திரம் என்ற பொதுக் கருத்து அல்லாது எழுத்தொலியையே குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அதாவது, "த தை தா தை த" எனவரும் லயத்திற்கான எழுத்துக்களுள்ள சொற்களை இந்த சொற்கட்டுடன் சேர்த்தான் - புணருத்தான், என்றே கொள்ளல் வேண்டும். இந்த புணர்த்த என்ற சொற் பயன்பாடு சங்க இலக்கியத்தில் வருகின்றது. (இன்றைய காலத்திலும் சங்கீதக்காரர்கள், தாங்கள் பாடுவதை உருப்படி என்றே கூறுவர். அதாவது தாங்கள் பாடுவதை அவர்கள் ஒரு வடிவமாகவே (shape) காணுகின்றனர். அவர்களுக்கு பாடலின் எழுத்தொலியென்பது ஏற்ற இறக்கங்களுக்கேற்ப "இணைக்கப் பட்டதாக" இருக்கும்).

இவ்வுண்மையை மனங்கொண்டு நோக்கும் பொழுது தாளக் கட்டிற்கு ஏற்ற எழுத்தொலிகளைச் சொற்கட்டிற்குள் புணர்த்து தலாகவே கொள்ள வேண்டும்.

இம்முறையில் நோக்கும் பொழுது, இக்கல்வெட்டுக்களில் இத்தாள அமைதியிற் பாடப்பெற்ற பாடல் யாது என்பது தெரியவில்லை யென்றே கொள்ள வேண்டியுள்ளது. இக் கல்வெட்டு கி. பி. 4ம் நூற்றாண்டிற்கு உரியதாகும். அவ்வாறாயின் "பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்" என்ற நூலின் வகுப்பு முறைப்படி இது நிலப் பிரபுத்துவ காலத்துக்குரியது. அதாவது தொல்காப்பிய, கலித்தொகை, திருக்குறள் குறிப்புக்கள் ஆதியனவற்றுக்குரிய காலத்திற்கு இச்சொற்கட்டுக்களும் உரியன வாகும்.

சொற்கட்டு முறையிலிருப்பதை நோக்கும் பொழுது, இது அந்த ஆட்ட முறை ஏதோவொரு வகையிலான விதிமுறைப்படியாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. அந்தளவிற்கு நடனம், இசை ஆகியவை சாஸ்திரீய நிலைப்பட்டனவாகிவிட்டன என்பது தெரிகிறது. தொல்காப்பியத்தில் வரும் "பண்ணை" பற்றிய குறிப்பு இவ்விடத்தில் முக்கியமாகலாம்.

பண்ணை என்பது பெண்களுடன் இன்ப வேடிக்கைகளில் ஈடுபடும் இடமாகவே பேசப்படுகிறது. பண்ணை எனும் சொல்லே இசையுடன் இயைந்ததாக இருந்திருத்தல் வேண்டும். (இக்கருத்துச் சாத்தியப்

பாட்டினை எனக்குக் கூறியவர் பேரா. இ. சுந்தரமூர்த்தி ஆவார். அவரது புலமைக்கு என் வணக்கங்கள்).

அத்தகைய ஓரிடத்தில் விதிமுறையான ஆடல் வாய்பாடுகள் இருந்திருக்கலாம். இக்கல்வெட்டு எத்தகைய பின்புலத்தில் இந்தப் பதிவுகளைச் செய்ததென்பது புரியவில்லை. எவ்வாறாயினும் இது ஓர் ஆடற் களத்தோடு அல்லது ஆடற் கற்பித்தலோடு தொடர்புற்ற ஓர் இடமாகவே இருந்திருத்தல் வேண்டும். ஆகவே கி. பி. 4ம் நூற்றாண்டளவில் நடனம் (ஆடல்) சாஸ்திரிய விதிமுறைக்கு உட்டபட்டதாகிவிட்டது எனக் கருதலாம்.

இதில் மேலுமொரு முக்கிய விடயம் என்னவெனில், இச்சொற்கட்டு, இன்று வரை கூத்து மரபிலும், பரத நாட்டிய மரபிலும் பேணப்பட்டு வருகின்றமையாகும். பரதத்தில் இவை அடவுச் சொற்களென்றும், கூத்தில் தாளக்கட்டு என்றும் கூறப்படும்.

## VII

மகாதேவனது ஆய்வின் பொழிப்புகளாக வரும் பகுதிகளுள், இலக்கிய வரலாற்று மாணவனுக்கு மிக முக்கியமானது எழுத்தறிவு பற்றி அவர் கூறுவதே. தென்னிந்தியா முழுவதிலும் தமிழே உத்தியோகபூர்வ கல்வெட்டுக்களுக்கான பிரதேச முதலாவது நிலைப்பட்ட மொழியாக விளங்குகிறது. தென்னிந்தியாவின் மேற்கேயுள்ள கர்நாடக, ஆந்திரப் பிரதேசங்களில் தோன்றிய முதற் கல்வெட்டுக்களில் (கி. பி. 4, 6) பிரதேச மொழிச் சொற்கள் இடம்பெற்றதற்கான சான்றுகள் இருப்பினும், எழுத்துப் பதிவு பிராகிருதத்திலேயே நடைபெறுகின்றது. ஆனால், கி. மு. 3ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி. மு. 2ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்மொழியை பிராமி எழுத்துக்களால் எழுதும் வழக்கம் வந்துவிட்டது என்பதை மகாதேவன் ஒரு முக்கிய அம்சமாகக் கொள்கிறார்.

கல்வெட்டுக்களின் நிலையில் அவை பெரும்பாலும் சமணச் சார்புடையவையே. எனினும், இதேகாலகட்டத்தில் கி. மு. 2 முதல் கி. பி. 4 வரையான காலப்பகுதியில் மட்பாண்டங்களில் எழுத்துப் பொறிக்கப்பட்டிருப்பதும், அதில் சாதாரண மக்களின் பெயர்கள் காணப்படுவதும், மதநிலைப்பட்ட விடயங்களில் அல்லாது சாதாரண குடிநிலை வாழ்க்கையிலும் எழுத்து பயன்படுத்தப்பட்டது என்பதைக் கூறுகிறார். குகைக்கொடைக் கல்வெட்டுக்கள் நகரங்களுக்கு மிகத் தூரத்திலுள்ள பகுதிகளில் காணப்படுகின்றமை எழுத்துக்கான ஒரு பயன்பாட்டுப் பரவல் இருந்ததென்பதைக் காட்டுகின்றன.

இந்த எழுத்தறிவின் வீச்சு இசை, நடனத் துறைகளிலும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளமையை முன்னர் பார்த்தோம்.

தமிழ்நாட்டின் எழுத்து வளர்ச்சி, இக்காலத்திலே மிகப் பெரிதாகக் காணப்பட்டதென்பதும் அதற்கான காரணங்களை, ஒழுங்கமைக்கப்பட்ட மதம், அதனிலும் மேலாக கட்டிறுக்க ஒழுங்கமைதியான கடல் வணிகம், அந்த வணிகம் உள்ளூரில் ஏற்படுத்தியிருந்த தாக்கம் ஆதியனவும் எழுத்தின் இத்திடீர் விகசிப்புக்குக் காரணமாயிருந்தது என்பது பற்றிய ஒல்ட்சின் தம்பதியினரின் குறிப்பு ப. த. ச. நா. வின் 4ம் அத்தியாயத்தில் பேசப்படுகிறது.

இந்த எழுத்தறிவின் வளர்ச்சியைப் பற்றிப் பேசத் தொடங்கும் பொழுது மகாதேவன் இக்காலத்திலேயே வாய்மொழிப் பாடல் நிலையிலிருந்து எழுத்து நிலைக்கான மாற்றம் ஏற்படுகிறதென்று கூறுகின்றார். சங்க இலக்கிய மாணவர்களுக்கு இதுவொரு மிக முக்கியமான விடயமாகும். இந்த வளர்ச்சிக்கான காரண - காரியத் தொடர்பாக அரசின் தோற்றம், நிர்வாகம் ஆதியனவற்றையும் வணிகத்தையும் இணைத்துப் பார்க்கின்றார். எழுத்தின் தோற்றம் எல்லா வேளைகளிலும் வணிகத்தோடு தொடர்புடையதாக இருப்பதில்லை. மதத்தேவைகளும் தோற்றத்திற்குக் காரணமாக அமையுமென்பதை எகிப்திய - சுமேரிய சான்றுகளால் அறிகிறோம். ஆனால், எழுத்தின் திடீர்க் கையாளுகைக்கும், பரவலுக்கும் வணிக வளர்ச்சி மிக முக்கியமான உந்துதலாகும். அந்த வளர்ச்சி தமிழ்நாட்டில் இருந்திருக்கின்றது. அந்த அளவில் இவ்விடயம் ஆச்சரியத்தைத் தருவதன்று. ஆனால், இந்த விடயம் இலக்கிய வரலாற்றாய்வில் மிக முக்கியமான, அச்சாணியான சில கேள்விகளை எழுப்புகின்றது. முதலாவதாக நாம் பார்க்க வேண்டுவது, இந்தத் திடீர் எழுத்து ஆளுகையும், பரவலும், கிடைத்துள்ள தமிழ் இலக்கியத்தினுள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதாகும்.

அடுத்து, தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் கிடைக்கும் செய்திகள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுபவற்றை உறுதிப்படுத்துகின்றமையாகும். எனினும், மகாதேவன் எழுத்தின் வளர்ச்சி பற்றியும், காலப்பகுப்பு பற்றியும் (கி.மு. 2 - கி.பி. 4, கி.பி. 5 - கி.பி. 6) தருவன சங்க இலக்கியம் பற்றிய எமது பார்வையில் எத்தகைய கவனிப்புக்களை நிர்ப்பந்திக்கின்றன என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். இவை பற்றி இங்கு கிளப்பவுள்ள பல பிரச்சினைகள் பற்றி ஏற்கனவே ப.த.ச.நா. இல் நான் முதலில் எழுதிய முன்னுரையிலும், அத்துடன் "தமிழின் கவிதை இயல் - ஒரு தேடல்" என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நான் ஆற்றிய சொற்பொழிவுகளில் (நூலாக வெளிவரவுள்ளன) குறிப்பாக

1ம், 2ம் சொற்பொழிவுகளிலும் எடுத்துக் கூறியுள்ளேன். எனினும், கூறியது கூறல் எனும் குற்றத்திற்குப் பெரிதும் ஆட்படாத வகையில் இந்த விடயப்பொருள் பற்றி இங்கும் சிலவற்றைக் கூறவேண்டிய தேவையுள்ளது.

## VIII

மகாதேவன் கூறுவதில் இலக்கியம் சார்ந்த முதன்மை முக்கியத்துவமுடையது, வாய்மொழியிலிருந்து எழுத்துருவுக்கான மாற்றம் என்பதாகும்.

இலக்கியத்தைப் பொறுத்தவரையில், இது பாணரிலிருந்து புலவருக்கு வருவதான ஒரு மாற்றமாகப் பார்க்கலாம். இவ்விடயம் பற்றி கைலாசபதியும் தனது ஆராய்ச்சியில் பேசியுள்ளார். சங்க இலக்கியத் தொகுதியினைப் பார்க்கும் பொழுது பாணர்களின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து, புலவர்களின் நிலை பெருமதிப்புடைய ஒன்றாக வளர்ந்து வருகின்றது என்பதற்கான பல உதாரணங்களை எனது நூலில் நான் ஏற்கனவே காட்டியுள்ளேன்.

சங்க இலக்கியத் தொகுதியென நாம் கொள்ளும் பாடல்கள் யாவுமே புலவர்களின் ஆக்கங்கள் என்ற அடிப்படையிலேயே நமக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. பெயர் தெரியாத புலவர்களைக் கூட அவர்களின் கவித்துவ வரிகளைக் கொண்டே பெயரிட்டு அழைக்கும் அளவிற்கு, புலவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தினூடே காணப்படும் குறிப்புகள் சில இந்த மாற்றம் நிகழ்வதைக் காட்டுகின்றன.

1. புலவர்கள் சிலர் தங்களைப் பாணராகப் பாடியுள்ளமை.
2. "மதுரைக் காஞ்சி"யில் கல்வித் "தேர்ச்சியில்லாதவர்களை விடுத்து புலவர்களை முதன்மைப்படுத்துங்கள்" என்ற கூற்று.
3. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற இந்நான்கல்லது குடியுமில்லையென்று பாரம்பரியத்தை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் கூறப்பட்டவை. (புற நானூறு : 335)
4. புலவர்களை செம்மையான நாவுடையவர்களாகப் போற்றியமை.

   (உ+ ம்) செறுத்த செய்யுள் செய் செந்நாவின்
   வெறுத்த கேள்வி விளங்கு புகழ் கபிலன் (புற. 53).

5. கல்லாவாய்ப் பாணர் (கலி.) என்ற குறிப்பு.

இத்தகைய அம்சங்கள் அறிவுள்ள புலமையைப் போற்றுவதைக் காணலாம். அத்துடன் பாணர் பாடல் மரபுக்குப் பழக்கப்பட்ட அவைகளில் புலவர்கள் வந்துவிட்டனர் என்பதை தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனின் கூற்றாக அமையும் புறநானூறின் 72வது பாடல் காட்டுகிறது. "மாங்குடி மருதனைத் தலைவனாகக் கொண்ட புலவர் பாடாது வரைக என்று கூறுவது இதனை உறுதிப்படுத்துகிறது.

இங்குள்ள முக்கிய வினா யாதெனில், புலவரின் வருகை எழுத்தறிவையும் கொண்டு வருகிறதா என்பதேயாகும். புலவர்கள் "செந்நாப் புலவர்கள்" என்றே போற்றப்படுகின்றனர். கபிலரின் பாடற்சிறப்பு பற்றிய இளங்கீரனாரின் பாடல் முக்கியமானது. அதில் "செறுத்த செய்யுள்" என்று கூறப்படுகின்றது. "நாச் செம்மையானது" என்றும் கூறப்படுகிறது. அவர்கட்கு கேள்வியறிவு இருத்தல் வேண்டு மென்பது "வெறுத்த கேள்வி" என்பதனாற் புலனாகிறது. இவ்விடங்களி லெல்லாம் புலவர்கள் பாடுகின்ற மரபே முக்கியப்படுத்தப்படுகின்றது அல்லாமல் எழுத்து மரபு அன்று. எனினும், இவர்களிடத்து எதிர்பார்க்கப்படும் அறிவு கல்வி, கேள்விகளால் வந்த அறிவாகும். அத்துடன் அதுவே வரன்முறையான அறிவாகவும் இருந்திருத்தல் வேண்டும். ஆயினும், இவை பாடுதல் மரபினதாகவே வருகின்றன. இந்நிலமையை நன்கு மனதில் பதியவைத்து அடுத்து இன்னொரு நிலைக்குச் செல்வோம்.

எட்டுத்தொகையினுள் வரும் பதிற்றுப்பத்தை நோக்கும் பொழுது, அவை பாடல்களாகவே இருந்தன என்பதற்கு "தூக்கு வண்ணம்" பற்றிய குறிப்புகள் சான்றாகும். புலவர்கள் பாடல் மரபைப் போற்றினார்கள் என்பதற்கு இது தக்க சான்றாகும். பத்துப்பாட்டில் வரும் குறிஞ்சிப்பாட்டை தனியே பாடலாக மாத்திரம் கொள்ளலாம் என்று கருதுவதற்கு இடமில்லை. பிராமணராகிய கபிலர், தமிழரல்லாத ஓர் அரசனுக்கு (பிரகதத்தன்) தமிழிலக்கியத்தின் சிறப்பு அம்சமான அகப்பொருளை உணர்த்துவதற்கு பாடியதாகத் ("தமிழ் கற்பிப்பான் வேண்டி") தெரிகிறது. குறிஞ்சிப் பாட்டில் வரும் மலர்கள் பற்றிய பட்டியல் வெறுமனே பாடல் மரபுக்குரியதாக மட்டுமே கொள்ளப்பட முடியாது. பதிற்றுப்பத்து, புறநானூறில் தரப்பட்டுள்ள செய்யுள்கள் பாடல் மரபுக்குரியனவே. ஆயினும், அப்பாடல் மரபினுள்ளும் அறிவுசார்ந்த இறுக்கமான ஒரு போக்கே இருந்ததென்பதற்கு "செய்யுள்" என்ற சொற்பிரயோகமே சான்றாகும். தொல்காப்பியரும் "செய்யுள்" என்ற சொல்லையே பயன்படுத்துகிறார். அதன்கீழ் முற்றிலும் எழுத்துக்கே உரியவையான நூலை செய்யுளின் ஒரு வகையாகக் கொள்கின்றார். சங்க இலக்கியம் முழுவதிலும் செய்யுள் என்ற சொல் இரண்டு தடவைகள் மாத்திரமே,

அதுவும் கபிலரோடு மாத்திரமே சேர்த்துப் பயன்படுத்தப்பட்டிருப்பது, பாடல் மரபில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைக் குறித்ததாதல் வேண்டும்.

எழுத்து என்பது, எழுத்தறிவு நிலைப்பட்ட கல்வியையே குறிக்கின்றது என்பது திருக்குறளால் தெரியவருகின்றது (எண்ணென்ப ஏனை எழுத்தென்ப) அறநூல்களில் எழுத்து, எழுத்தறிவோடு சம்பந்தப்பட்டதாகின்றது.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நோக்கும் பொழுதே, எழுத்து என்பது ஒலிக்கும் முறை எழுதுகின்ற முறை ஆகிய இரண்டையுமே குறித்து நின்றது என்பது நூல் மரபு, மொழி மரபு என்ற இயற் பெயர்களாலே தெரிய வருகின்றது.

இவ்வாறு நோக்கும் பொழுது, எழுதப்படும் மரபு படிப்படியாக சங்க இலக்கியக் காலத்தினூடேயே வளர்ந்து வருகின்ற ஒன்றாக கருதப்படலாம் போலத் தெரிகின்றது. முதலில் சித்திரம் எழுதுவதைக் குறித்த இச்சொல், பின்னர் எழுத்தோடு, அதாவது எழுத்தொலிகளைப் பதிவு செய்யும் வடிவங்களாக வருகின்றது. மொழி எனும் சொல்லுக்கு பேசு, பேசுதல் எனும் கருத்து உண்டென்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். உண்மையில் தொல்காப்பியர் ஒலி வடிவங்களையும், சில இடங்களில் வரிவடிவ முறைமைகளையும் குறித்துச் செல்வதைக் காணலாம்.

இந்த எழுத்து முறைமை வளர்ச்சிக்கு சமண முனிவர்களின் தொழிற்பாடு ஒரு முக்கிய காரணமாக இருந்திருத்தல் வேண்டும். தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நூல்மரபு என்ற இயலுடனேயே தொடங்குகிறது. இங்கு நூல் என்பது ஒரே சமயத்தில் மொழிப் பிரயோகத்தின் இரண்டு மட்டங்களைக் குறிக்கின்றது.

1. நூல்களில் தமிழ் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள முறைமை.
2. அக்கால மரபுப்படி ஒரு நூலில் உள்ளவற்றை ஒருவர் வாசிக்க மற்றவர் கேட்டல்.

   அதாவது நூல்மரபினுள், அக்காலத்தில் எழுத்தும் வாசிப்பும் தொக்கி நின்றன. வாசிக்கும் பொழுதுதான் சார்பெழுத்துக்களுக்கான உச்சரிப்பு முக்கியமாகின்றது (குற்றியலுகரம், குற்றியலிகரம்).

செய்யுளியலில் நூலுக்குத் தரப்பட்டிருக்கும் விளக்கத்தினை நோக்கும் பொழுதும் நூலென்பது ஒரு விடயம் பற்றிய புலமை நிலை எழுத்தாகும் (treatise). சமணர்கள் தங்கள் பள்ளிகளில் சமணத்தைப் பயிற்றுவித்தமை அல்லது சமணம் பற்றிய நூல்களைக் கொண்டிருந்தமை

இங்கு குறிப்பிடப்படுகின்றதோ தெரியவில்லை. தமிழ்நாட்டிற்கு வடக்கே ஏற்கனவே அர்த்தமாகதி எனும் பிராகிருதமொழியை, பிராமி வரிவடிவில் எழுதியவர்கள் தமிழ்நாட்டில் அதே எழுதுமுறையைப் பின்பற்றி தமக்கு வேண்டியனவற்றை அதே பிராமி எழுத்துருக்களைக் கொண்டு தமிழ்மொழியில் எழுதத் தொடங்கியிருக்கலாம். ஆனால், கன்னடப் பிரதேசத்தில் இருக்காத ஒரு நிலை தமிழ்நாட்டில் இருந்தது. அது இம்மொழி ஒரு சிறப்பான பாரம்பரியமான ஓர் இலக்கிய மரபினைக் கொண்டிருந்தமையாகும். அத்துடன் பொருளியல் உந்துதல்களும் இருக்கவே, எழுத்து வழக்கு படிப்படியாக மேல்நிலைப்படத் தொடங்கிற்று எனலாம். பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் கிடைக்கும் தரவுகள், சமணப் பள்ளிகளில் வரன்முறையான கற்பித்தல் முறைமை இருந்தது என்பதனை ஊகித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

மொழியியல் ஆய்வுகளின்படி இக்கல்வெட்டுக்கள் முந்து பழந்தமிழுக்கு (Early old Tamil) உரியவை எனக் கூறப்படுகிறது. உயர் சமணப் பள்ளிகளில் இந்த மொழி அமைதியினையும், இலக்கிய மரபினையும் கற்பிக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டிருக்கலாம். சங்க இலக்கியங்களும் இம்மொழிக் காலத்துக்குரியவையே. அவ்வாறாயின், **சங்க இலக்கியங்கள் எவ்வாறு எழுத்து வழக்கிற்குக் கொண்டு வரப்படுகின்றன** என்பது முக்கியமானவொரு விடயமாகின்றது.

பாணர்கள் பாடிய பாடல் மரபு முற்றிலும் வாய்மொழி சார்ந்தது என்பது பற்றிய ஐயுறவு இல்லை. பாணர்களிலிருந்து வேறுபட்ட புலவர்கள் மரபு அக, புற மரபுகளினைக் கையேற்கும் பொழுதும் அவையும் பாடல்களாகவே இருந்தன என்பதிலும் ஐயம் கிடையாது. பாடுகின்ற புலவர்களிடத்தே சமாந்தரமாக எழுத்துப் பண்பும் இருந்ததா என்பது முக்கியமானவொரு வினாவாகும். இதற்கான சான்றுகள் எதுவும் தெரியவில்லை. ஆயினும், இதுபற்றிய ஓர் ஊகத்தினை மனங் கொள்வதற்கு தொகுத்தோன், தொகுப்பித்தோன் பற்றிய மரபுவழித் தரவுகள் முக்கியமாகின்றன.

தொகுப்பித்தோர் அரசர், தொகுத்தோர் புலவர். அத்தரவு பின்வருமாறு:

| நூல்கள் | தொகுத்தோன் | தொகுப்பித்தோன் |
|---|---|---|
| 1. அகநானூறு | மதுரை உப்பூரி குடிக்கிழான் மகன் உருத்திரசன்மன் | பாண்டியன் உக்கிரப் பெருவழுதி |
| 2. குறுந்தொகை | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக் கட்சேய் மாந்தரந் சேரல் இரும்பொறை |
| 3. கலித்தொகை | நல்லந்துவனார் | ----- |
| 4. ஐங்குறுநூறு | பூரிக்கோ | ----- |
| 5. நற்றிணை | ---- | பன்னாடு தந்த மாறன் வழுதி |

இப்பெயர்களுள் சங்க இலக்கியப் பாடல்களில் பாடப்பெற்ற அரசர் என ஐயந்திரிபறக் கூறக் கூடியவர் "யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை" ஆவார். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்பதற்கான அடையில் வேறுபாடு உண்டு. மாறன் வழுதி என்ற பெயர் பற்றியும் அத்தகைய ஒரு சிக்கல் உண்டு. தொகுத்தோர் பெயர்களை நோக்கும் பொழுது, புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் என்றே சொல்லப்படுகிறது. ஆனால், ஒரு கூடலூர்க் கிழாரின் பாடல்கள் இவ்விலக்கியங்களில் (குறு. 166, 167, 214 - புறம். 229) காணப்படுகின்றன. பெயர் ஒப்புமை அடிப்படையில் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையை முதன்மையாகவும் கூடலூர்க் கிழாரின் பெயரை ஓரளவிற்கும் எடுத்துக் கொண்டால் சங்க இலக்கிய காலத்திலேயே இந்த எழுத்து முயற்சி நடைபெற்றிருக்க வேண்டும் போலத் தெரிகிறது.

மேலும், குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆதியனவற்றின் தொகுப்பு முறையினை நோக்கும் பொழுது, அடியளவு முக்கியம் பெறுவதைக் காண்கின்றோம். (குறுந்தொகை 4 - 8, நற்றிணை 9 - 12, அகநானூறு 13 + ). எனவே இங்கும் குறிப்பாகத் தொகுக்கும் முயற்சியின் பொழுது எழுதும் முறை ஒரு முக்கிய இடம் பெற்றிருக்கலாம்.

அவ்வாறு எழுதப்பட்டிருப்பின், இவை எம்முறையிற் பேணப் பட்டன எனும் வினா முக்கியமாகின்றது. இதற்கு வருவதற்கு முன்னர் இப்பாடல்கள் தொகுக்கப் பெறுவதற்கு முன்னர் வாய்மொழி நிலையிற் கையளிப்பு முறைமை எவ்வாறு இருந்தது?

அது பாணர்கள் நிலையில் எவ்வாறிருந்தது? புலவர்கள் நிலைக்கு வரும்பொழுது யாதேனும் மாற்றங்கள் ஏற்பட்டனவா? அவ்வாறாயின்

அம்மாற்றங்கள் யாவை? என்பன முக்கியமாகின்றன. திருக்குறளை நோக்கும் பொழுது கி. பி. 4 ஆம் நூற்றாண்டிலேயே அறநூல்களை எழுதுவதற்கான ஒரு மரபு இருந்ததென்பது புலனாகின்றது. சமண சங்கம் போன்ற ஒரு நிறுவனம் இலக்கண (அற) இலக்கிய கையளிப்பிற்கு உதவியிருக்கலாம். ஆனால், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து போன்றவை பெரும்பாலும் மதச்சார்பற்றனவாக, ஆட்சி அதிகாரம், வீரம் சம்பந்தப்பட்டனவாகக் காணப்படுகின்றன. அப்படியாயின் இத்தொகுப்பிற்கான தேவையையும், முறைவழியையும் மதச்சார்ப்புக்கு அப்பாலேயே பார்த்தல் வேண்டும். இவ்வாறு சிந்திக்கும் பொழுதுதான் படிப்படியாக வளர்ந்துவரும் அரசுருவாக்கம் முக்கியமாகின்றது. மகாதேவனும் அரசுருவாக்கத்தை எழுத்து முறை மேலோங்கிய மைக்கான ஒரு காரணியாகக் கொள்கிறார். ஆனால், அரசுருவாக்கத்தைப் பொறுத்தவரையில் முந்தைய எமது வரலாற்றாசிரியர்கள் சிலர் சித்திரித்தது போலன்றி அரசுருவாக்கங்கள் அதிகார முழுமையுடையனவாய் இருந்ததாகக் கொள்வதில் சிரமமுண்டு (பார்க்க : பண்டைய தமிழ்நாட்டில் அரச அதிகார ஒழுங்கமைப்பு என்ற கட்டுரை, பண்டைத் தமிழர் சமூகம் / Studies in ancient Tamil Society).

இத்தகைய ஒரு பதிகைக்குத் தேவையான **வரலாற்று உந்துதல் யாது என்பதனை நோக்குதல் வேண்டும்**. பெரும்பாலும் இவ்விடயம் ஊக நிலைப்பட்டதாகவே இருந்தாலும் சங்க இலக்கியச் சூழல் குறிப்பாக பிராமிக் கல்வெட்டுக்கள் வழியாகத் தெரியவரும் அரசியற் சமூக மாறுநிலைகள் இதற்கான தேவையை உருவாக்கியிருக்கலாமோ என்ற ஐயத்தை எழுப்புகின்றன.

இந்த விடயத்தை ஆராய்வதற்கு முன், தான் ஆராய்ந்த கல்வெட்டுக்களின் கால அடைவையும், அந்த அடைவிற்கான காரணங்களையும் மகாதேவன் கூறியுள்ளமையை நோக்கல் வேண்டும். அவர் தரும் காலவகுப்பு பின்வருமாறு:

1. முந்து பிராமிக் கல்வெட்டுக்கள் - கி.மு. 2 - கி.பி. 1

2. பிந்திய பிராமிக் கல்வெட்டுக்கள் - கி.பி. 2 - கி.பி. 4

   இவற்றுடன் பிராமிக் கல்வெட்டுக்களின் முக்கியத்துவம் குறைந்து அடுத்து வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் முக்கியம் பெறுகின்றன. வட்டெழுத்துக்களையும் தமிழ் பிராமி வடிவத்தின் ஒரு மாற்றுரு வளர்ச்சியேயென அவர் கொள்கிறார்.

3. வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் - கி. பி. 5 - கி. பி. 6

முதலிரண்டு காலகட்டமும், கி.பி 4 வரையுள்ள கல்வெட்டுக் களின் வளர்ச்சிகளையும், தொடர்ச்சிகளையும் காட்டுகின்றன. இவற்றினூடே எழுத்துரு வளர்ச்சி, இலக்கண அமைதியின் தராதர நிலை (Standard form) ஆதியன காணப்படுகின்றன. முதலாவது கட்டத்திலும் பார்க்க, இரண்டாவது கட்டத்தில் எழுத்துப் பயில்வு சுலபமானதாக ஆவதுடன் தொல்காப்பியம் - எழுத்ததிகாரத்தில் கூறப்படும் எழுத்து மரபு பிந்தியதிலேயே காணப்படவேண்டுமென (ப. 231) கூறுகின்றார். இதுவொரு முக்கியமான தடயமாகும். அதாவது அவர் கூற்றுப்படி, இந்த எழுத்து முறைமையின் வளர்ச்சிப்படி தொல்காப்பியம் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதாக இருக்க முடியாதென்பது முக்கியமாகின்றது (பார்க்க: செம்பகலஷ்மியின் கட்டுரை).

தொல்காப்பிய நூல் அமைதியை நோக்கும் பொழுது, அது தமிழின் எழுத்து முறைமை முதல் இலக்கிய மரபு வரை தமிழ் மொழி இலக்கியம் பற்றிய ஓர் ஒட்டுமொத்தமான "அளிக்கையாக" (presentation) அமைகின்றது. இந்த அளிக்கை ஏற்கனவே வடமொழிமரபைத் தெரிந்திருந்த ஒரு கேட்போர் / கற்போர் வட்டத்திற்கே சொல்லப்படு-கின்றது என்பது அதிகார இயல் அமைவு மூலம் தெரிய வருகின்றது. தொல்காப்பியம் சமண சமயத்தைச் சார்ந்தது என்ற எடுகோள் ஏற்கப்படுமிடத்து (பார்க்க: வையாபுரிப்பிள்ளை - தமிழ்ச் சுடர் மணிகள்) பிராமிக் கல்வெட்டுக்கள் வெளிவந்துள்ள இப்போதைய நிலையில் ஒரு முக்கிய சாத்தியப்பாடு பளிச்சிடுகிறது. **தொல்காப்பியம் உண்மையில் உயர்நிலைத் தமிழ் கற்கும் சமணத் துறவிகளான ஒரு குழாத்திற்காக இருந்திருத்தல் வேண்டும்**. தொல்காப்பியம் - சொல்லதிகாரத்திலேயே அதனை எழுதியவருக்கு அக்கால இலக்கிய மரபு தெரிந்திருந்தது என்பது புலனாகிறது (ஆற்றுப்படை பற்றிய குறிப்பு).

தொல்காப்பியம் பற்றிய இன்னொரு மிக முக்கியமான உண்மை, அது தமிழை ஒரு எழுத்து மொழியாகக் கொள்கின்றது என்பதாகும். எழுத்ததிகாரம் 1 வது இயலிலேயே ஒலிமரபையும் வரிமரபையும் (புள்ளி) இணைத்தே சொல்லிச் செல்கின்றது. பொருளதிகாரத்தை விட்டு நோக்கினாலும் (அதை நிச்சயமாக பிற்காலத்துக்குரியதாகக் கொள்ளப்-படுவதற்கான காரணங்களை ப.த.ச.நா. நூலின் 3வது அத்தியாயத்திற் காணலாம்) எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் தொல்காப்பிய காலத்தில், தமிழில் எழுதுமுறை நிர்ணயமான ஓரிடத்தைப் பெற்று இருந்தது என்பதைக் காட்டுகின்றன. இதனால் குறைந்தபட்சம் 2-ம் நூற்றாண்டளவில், நிச்சயமாக கி.பி. 4ம் நூற்றாண்டிற்கு முன்னர் சமண

மதத்துறவியர் மட்டத்திலும், முக்கியமாக சமண மதத்தைப் பின்பற்றுகின்ற வணிகர்கள், அவர்களைச் சார்ந்த குழுக்கள் மட்டத்திலும் எழுத்து வழக்கு நிரந்தரமாக வந்துவிட்டதென்பது புலனாகின்றது.

இவ்விடத்தில் திருக்குறள் நூலாசிரியரின் மதம், பயன்பாடு பற்றிய ஒரு முக்கிய குறிப்பும் அவசியமாகின்றது. நூலின் (ப.த.ச.நா.) 3 ஆம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள திருக்குறள் பற்றிய குறிப்பு, திருக்குறள் கடந்துபோன சங்ககால வாழ்விற்கும், நடைமுறைக்கு வந்துள்ள புதிய சமூக ஒழுங்குமுறைக்கும் ஓர் இணைவினைக் காண முயலுகின்றது என்பது ப.த.ச.நா. வில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சமணர்கள், பௌத்தர்கள் தாம் வாழும் சமூகத்தை இல்வாழ்வோர், துறவோர் எனப் பிரிப்பது வழக்கம். பௌத்தம் இப்பிரிப்பினை கிஹி (gihi) பவிதி (Paviti) எனக்கூறும் என்பதை ஏற்கனவே பார்த்தோம். திருக்குறளில் வரும் நீத்தார், இந்து மதத்தில் வரும் சந்நியாசிகள் அல்லர். அவர்கள் சமூகத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள். சமண, பௌத்த அடிப்படையில் சமூகத்தைப் பிரித்துக் கொண்டாலும் அக்காலத்தில், தமிழகத்தில் நிலவிய வைதீக மத முறைமைகளையும் உள்வாங்கியே திருக்குறள் ஒரு புதிய வாழ்க்கை முறையினை முன்வைக்கின்றது (பார்க்க: வள்ளுவம் இதழ். 5 - எனது கட்டுரை).

இந்த முயற்சியை இன்னொரு வகையாகக் கூறலாம். அதாவது சமணத்தைச் சார்ந்தவர்கள் தமிழ்நாட்டில், தம் காலத்தில் நிலவிய சமூகச் செல்நெறியில் காணப்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பண்டைய வாழ்க்கை முறையும், புதிய அறநெறிகளும் இணைந்த ஒரு முறைமை பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர் என்பது புலனாகிறது. இந்நூலில் காட்டப்பட்டது போன்று பழைய சமூகத்தின் பல அம்சங்களை உள்வாங்கி அவற்றுக்குப் புதிய கருத்தும் பயன்பாடும் வழங்கும் ஒரு முயற்சிக்கு எடுத்துக் காட்டாக "**சான்றோன்**" என்ற சொற்பொருள் மாற்றம் அமைகின்றது எனலாம். சான்றோன் என்பான், வீரன் என்கின்ற நிலையிலிருந்து "**நல்ல சால்புடையவன்**" என்ற நிலைக்கு வருகின்றான் (பார்க்க : திருக்குறள் - சான்றாண்மை).

மகாதேவன் எடுத்துக் கூறும் எழுத்தறிவு (literarcy) பற்றிய தரவுகளை நோக்கும் பொழுது அவர் காட்டுவன, எழுத்து வழக்கின் - அதன் தொகு நிலையான வாசிப்பின் பரந்துபட்ட நிலையேயாகும். இதற்கு முன்னர் கூறப்பட்ட தொல்காப்பிய ஆக்கம் பற்றிய கருத்தையும், திருக்குறள் ஆக்கம் பற்றிய கருத்தையும் நியாயபூர்வ மானவையெனக் கொள்ள முடியுமெனில் இம் முயற்சிகள் அந்த எழுத்தறிவின் சமூகப் பயன்பாட்டை எடுத்துக் காட்டுவனவாக அமைகின்றன எனலாம்.

எனவே எழுத்தறிவின் பயில்வும், பரம்பலும் அக்காலச் சமூக நிலையில் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு வருவதை நாம் காணலாம்.

சங்க இலக்கியங்கள் தொகுக்கப் பெற்றமை நிச்சயமாக கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னராகவே இருத்தல் வேண்டும். இதுவரை காட்டப்பெற்று வந்த சமண மத மேலாண்மை, சமூக மாற்றத்தினை இலக்காகக் கொண்ட சமண எழுத்து முயற்சிகள் என்பன தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் எழுத்துப் பண்பாட்டின் தாக்கத்தைக் காட்டுகின்றன. அந்த எழுத்துப் பண்பாடு எந்தவகையிலும் அதற்கு முன்னர் நிலவிய பண்பாட்டை புறக்கணிக்கக் கூடிய நிலையில் இருக்க வில்லை என்பதற்கு திருக்குறள் - காமத்துப்பால் முக்கிய தடயமாக விளங்குகின்றது. இது பற்றி சிறிது ஆழமாக நோக்கல் வேண்டும். அறத்துப்பாலில் பௌத்த, சமண அறங்களையொட்டி இல்லறம், துறவறம் என்று வகுத்து நோக்கும் திருக்குறள், பொருட்பாலில் அரசனை மையமாகக் கொண்ட ஓர் ஆளுகை நிலையையே கட்டமைக்கின்றது. திருக்குறளின் பொருட்பாலில் அரசும், அரசனும் வெவ்வேறு நிறுவகங்களாக நோக்கப்படவில்லை. அர்த்த சாஸ்திரம் அரசனையும் ராஜ்ஜியத்தையும் பிரித்துப்பார்க்க திருக்குறளோ படை, குடி, கோள், நட்பு, அமைப்பு, அரண் என்பனவற்றைக் கொண்டவனே தலைசிறந்த அரசன் என்று கூறுகிறது. திருக்குறள் பொருட்பாலின் இறுதியில் வரும் 10 அத்தியாயங்களும் குடிகள் பற்றியன. அந்த அரசாளுகை அலகில், ஆளப்படுபவன் கடைசி அலகாகின்றான். இத்தகைய ஓர் இறுக்கமான கட்டுக்கோப்பிற்குள் தமிழ் அகத்திணை மரபைக் கொண்டுவரும் காமத்துப் பால், ஏன் எழுதப்படவேண்டுமென்பது ஒரு முக்கியமான வினாவாகும். காமத்துப் பாலில் அகமரபு தூய்மையாக்கப் பெற்று (பரத்தையர் வாசனையின்றி) இந்த ஒட்டுமொத்தமான சமண சமூக அமைப்பினுள் ஒன்றிணைக்கப்படுகின்றது. ஆண், பெண் உறவு பற்றிய அந்த மரபு நடைமுறை வலுக்கொண்ட ஒரு சமூக முறைமையாக இருந்திருத்தல் வேண்டும். அந்த மரபின் தொடர்ச்சியை தமிழ்நாட்டு மக்களிடையே மாத்திரமல்லாமல், குடகு நாட்டினரிடையேயும் காணலாம் (பார்க்க சிலப்பதிகாரம்).

இவ்வாறானவொரு சூழலிலேதான் புதிய வருகைகள், சமண, பௌத்தம் சாராத அல்லது சமண, பௌத்த வருகைகளுக்கு முந்திய தமிழ்நாட்டு குடும்ப உருவாக்க மரபும், அதன் நடைமுறைகளும் பேணப்பட வேண்டுவதற்கான உந்துதலாக இருந்தது எனலாம்.

வையாபுரிப்பிள்ளை, தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகியோர் திருக்குறளுக்குத் தரும் காலம், இந்தக் கட்டத்தில் முக்கியமாகிறது. திருக்குறள், சங்க காலத்திற்குப் பிந்தியது என்பது அவர்களின் முடிவு. அதே வேளையில் அது சிலப்பதிகாரத்திற்கு முந்தியதும் ஆகும். இந்த அடிப்படையில் நோக்கும் பொழுது தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றையும், சங்க இலக்கியத்தினுள்ளே வைத்துக்கொள்ள முடியாதனவாகிய திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, பரிபாடல் ஆதியனவும் சங்கம் பின், சிலம்பின் முன் வரும் ஆக்கங்களாகும். கால வரன்முறையில் இது கி.பி 250 இற்கும் கி.பி 450 இற்கும் இடைப்பட்ட காலமாகும். இவற்றினுள் இந்த இடைப்பட்ட காலமே (தொல்காப்பியம், திருக்குறள் வருகின்ற காலமே) தமிழ்நாட்டில் எழுத்துப் பண்பாடு நிலையூன்றி, கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கிய காலமெனலாம்.

இந்தப் பின்புலத்தில் அரசாட்சி வரலாற்றைப் பார்க்கும் பொழுது நூலின் (ப.த.ச.நா.) 4ஆம் அத்தியாயத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது போன்று சேர, சோழ, பாண்டிய அரச பரம்பரைகள் ஒவ்வொன்றிலும் மிக முக்கியமான அரசன் ஒருவன் மேற்கிளம்புவதைக் காணலாம்.

1. சோழர் - கரிகாற் பெருவளத்தான்.
2. பாண்டியர் - தலையாலங் கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்.
3. சேரர் - (இவர்களுக்கு இரு அரச பரம்பரைகள் வெவ்வேறு இடங்களிலிருந்து ஆட்சி நடத்தினர்.)

   அ. செங்குட்டுவன்.

   ஆ. சேரல் இரும்பொறை (A.D. 210).

இவர்கள் அவ்வவ் அரச பரம்பரைகளின் மேன்மையை நிலை நிறுத்திய பின்னர் ஏறத்தாழ இவர்களளவு முக்கியத்துவமுடைய அரசர்கள் எவரும் பல்லவ, பாண்டிய எழுச்சிக்காலம் வரை (கி.பி. 560-590) தோன்றவில்லையென்பதும் தெளிவு. இக்காலப் பிரிவின் உள்ளேயே களப்பிரர் வருகைவழிவந்த நிலைகுலைவும் ஏற்படுகிறது. அந்த நிலைகுலைவு கி.பி 4ம் நூற்றாண்டுக்குப் பின்னரே ஏற்பட்டதென்றும் 5,6ம் நூற்றாண்டுக் காலப்பகுதிக்குள்ளேயே ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் மகாதேவன் கூறுகிறார்.

நூலில் (ப.த.ச.நா.) களப்பிரரின் தலையீடு 5ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரியதாக எடுத்துக் காட்டியுள்ளேன்.

இதில் எல்லோருக்கும் ஒப்ப முடிந்தது யாதெனில், இக்கால கட்டத்தில் சிறுபாணாற்றுப்படை மூலம் நாம் கண்டறிந்ததற்கு இயைய (மூவேந்தருக்குப் பின்னர்) ஓர் அரசியற் தேக்கமே ஏற்படுகிறது.

இத்தகைய ஓர் அரசியற் தேக்கநிலை, அதனூடேயும் கன்னடப் பிரதேசத்தைச் சார்ந்தவர்களான களப்பிரர் பல்வேறு இடங்களிலிருந்து குறுநில மன்னர்களாக / பிரதானிகளாக ஆளுவதும் ஒரு புதிய அரசியற் பண்பாட்டை ஏற்படுத்தியதாகக் கொள்ளலாம். ஏற்கனவே கூறிய எழுத்து வழக்கின் பெருக்கம், எழுத்து முறைமையில் பல்வேறு ஆக்கங்கள் இருந்தன (நூல், உரை, பிசி என வருபவை) என்பதையும் காட்டுகின்றது. சங்க காலத்தின் இறுதியினோடு ஏற்படும் மாற்றம் பொருளாதார, அரசியற், பண்பாட்டு நிலைகளில் ஏறத்தாழ முன்னர் நிலவியவற்றிலிருந்தும் வேறுபட்ட, ஏறத்தாழ தளமாற்றத் தன்மை உடையனவாய் இருப்பதைக் காணலாம். இத்தகைய ஒரு பின்புலத்தில் குறிப்பாக சமண, பௌத்த மத வழிவந்த ஒரு சமூக அற முறைமை தமிழ்நாட்டினுள் மேலிருந்து கீழாக முன்வைக்கப்படுகின்ற அதே சூழலில் ஆட்சி முறைமையிலும், நியமங் களிலும் மாற்றம் ஏற்படவே வருகின்ற இந்த மாற்றங்கள் தமது ஆட்சிப் பாரம்பரியங்களையும், சமூக முறைமைகளையும் மாற்ற முனையும் நிலையில், அவற்றைப் பேணுவதற்கான முயற்சியாய்-செயற்பாடாய் முந்தைய சமூக இலக்கியப் பண்பாட்டை மீள நினைவுறுத்துவதற்காக அந்தப் பாடல்களைத் தொகுத்திருக்கலாம். எட்டுத்தொகை தொகுப்புக்-களுக்கான தோற்றத்தை இத்தகைய ஒரு பின்புலத்தில் நோக்குவது, வரலாற்றின் இயங்குநிலைப் பண்பிற்கு முரணானதல்ல. சேரர் பரம்பரையினரின் முக்கியமான மன்னர்களுள் இறுதிநிலைப்பட்டவனாகக் கூறப்படும், யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் பெயர் குறுந்தொகைத் தொகுப்புடன் தொடர்பு படுத்தப்படுவது ஆச்சரியத்தைத் தருவதன்று. மேலும் எட்டுத்தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப் பெற்றனவாகக் கருதப்படும் நற்றிணை, குறுந்தொகை தொகுதிகளுள் ஒரு தொகுதி இவரோடு சேர்த்துப் பேசப்படுவது மிகவும் முக்கியமான ஒரு தடயமாகும்.

இதுவரை கூறியவற்றால் சங்க இலக்கிய, குறிப்பாக எட்டுத் தொகைத் தொகுப்பானது மாறிவரும் அரசியற், சமூக, பண்பாட்டு நியமங்கள் காரணமாக முந்தியனவற்றை மீள நிலைநிறுத்தும் நோக்குடன், தொகுப்பு முயற்சிகளின் பணிகள் தொடரப்பட்டி ருக்கலாம். குறுந்தொகை போன்ற ஒன்றிற் தொடங்கிக் கலித்தொகை வரை இது சென்றிருக்கலாம். தமிழ் ஒலிகளுக்கு முற்றுமுழுதாக இயைந்த

வட்டெழுத்து முறைமையில், 6ம் நூற்றாண்டின் முடிவிற்கு முன்னர் இவை எழுத்துப் பதிவு செய்யப்பட்டிருக்கலாம்.

கல்வெட்டுக்கள் மூலமாகவும், திருக்குறள், நாலடியார் போன்ற தெரிய வருகின்ற சமண மதக் கருத்து நிலை மேலாண்மை, இக் கால வரலாற்றின் வேறுசில அம்சங்களைப் பார்க்கும்பொழுது, அக்கால வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் சமணக் கருத்து நிலை மேலாதிக்கம் இருந்ததெனக் கூறமுடியவில்லை. அரச பரம்பரை யினரை நோக்கும்பொழுது, அந்நிறுவன மேலாதிக்க நிலை நிறுத்துகையில் பிராமணியக் கருத்துக்கள் முதலிடம் பெறுவதை சில அரசர்களின் பெயர்களை தட்டி நிற்பதைக் காணலாம். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, ராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி என வருபவை. இவற்றை விட வேதங்கள் பற்றிய அறிகையும் இருந்துள்ளது. கபிலர் பாரிமகளிர் பற்றிக் கூறுமிடத்து "அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே" எனக் கூறுகின்றார்.

குறிப்பாக, பரிபாடற் காலத்தில் "செவ்வேள் திருமால்" ஆகிய கடவுளர்கள் வழிபடப்பட்டிருப்பது நன்கு தெரிகிறது. திருமுருகாற்றுப் படையை கி.பி 6ம் நூற்றாண்டிற்குப் பிந்தியது எனக் கொண்டாலும் பரிபாடலில் வரும் செய்திகள் தமிழ்நாட்டில் குறைந்த பட்சம் மதுரையில் ஓர் இந்துச் செல்வாக்கினை வைத்திருப்பது புலனாகின்றது. இதே பாண்டியப் பிரதேசத்திற்தான் சமணக் கல்வெட்டுக்களும் காணப்படு-கின்றன. பின்னர் அச்செல்வாக்கு படிப்படியாகக் குறைகின்றதெனவும் மகாதேவன் கூறுகிறார். மேலும் எட்டுத்தொகையில் வரும் எல்லாத் தொகுதிகளும் சிவன் அல்லது விஷ்ணுவைப் பற்றிப் பேசும் கடவுள் வாழ்த்துச் செய்யுள்களைக் கொண்டிருப்பதைக் காணலாம். மேலும் இப்பாடல்கள் எல்லாம் பாரதம் பாடிய பெருந்தேவனாருடன் தொடர்பு படுத்தப்படுகின்றன. இவ்வாறு நோக்கும் பொழுது படிப்படியாக வைதீக மதவாக்கம் பரந்து காணப்பட்ட அரசவைகள் முன்நின்று சங்க இலக்கியப் பாடல்கள் தொகுக்கப்படுவதை ஊக்குவித்திருக்கலாம் போலத் தெரிகின்றது.

எனது "தமிழில் இலக்கிய வரலாறு" என்ற நூலில், இறையனார் களவியலுரையில் வரும் சங்கம் பற்றிய தொன்மம் இந்துமதத்துடன் இணைக்கப்பட்டுள்ளமையைக் காட்டியுள்ளேன். இவ் இணைப்பின் முக்கியத்துவத்தினை Norman cutler என்பார் தனது கட்டுரை யொன்றில் வலியுறுத்தியுள்ளார் (Literary Cultures in Asia, Editor: sheldon Pollock).

இவ்வாறு நோக்கும்பொழுது இந்நிலைப்பட்ட ஒரு நோக்கு சமணம் ஏற்படுத்தும் அரசியற், சமூக, பண்பாட்டுத் தாக்கம் காரணமாக தமிழ் நாட்டின் பாரம்பரிய இலக்கியப் பண்பாடு மீள் கட்டுருவாக்கம்

செய்யப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. இந்நோக்கு இன்னுமொரு தெளிவையும் ஏற்படுத்துகிறது. அகத்திணை மரபை தமிழ் எனக் கூறும் மரபு குறிஞ்சிப்பாட்டிற்கான கொளுவிலும், இறையனார் களவிய லுரையிலும் காணப்படுகிறது. (ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு தமிழ் கற்பிப்பான் வேண்டி...., இது என்றுதலிற்றோவினின் தமிழ் நுதலிற்று).

அகமரபு முதன்மையான தமிழ் அடையாளமாகின்றது. தொல்காப்பியர், பொருளதிகாரத்தை அகத்திணை இயலுடனேயே தொடக்குவார். அகத்திணை மரபு மீட்டெடுக்கப்படுவதற்கான பண்பாட்டு பின்புலம் பற்றிப் பார்த்தோம். கி.மு. 2 முதல் கி.பி. 2 இறுதி வரையுள்ள காலப்பகுதியில் சமணம் மாத்திரமல்லாது வைதீக இந்து மரபு பற்றிய அறிகையும் நிலவிற்று என்பதனை அக்காலத்து மன்னர்கள், வேந்தர்கள் பற்றிய பாடல்கள் மூலம் அறியக்கிடப்பதை வரலாற்றாசிரியர்கள் பலர் எடுத்துக் கூறியுள்ளனர். குறிப்பாக வளர்ந்து வரும் அரசவுருவாக்கத்திற்கு இந்த வைதீகமதச் செல்வாக்குகள் உதவியுள்ளமை பற்றி இந்நூலின் ஆங்கில பதிப்பில் (நான்காம் அத்தியாயத்தில்) குறிப்புக்கள் உள்ளன. சாதவாகன வரலாற்றுப் பின்புலத்திலேயே தமிழ் நாட்டின் அரச வளர்ச்சியை புதிய அந்தஸ்து நிலைகள் கோரப்படுவதனைக் காண்கின்றோம். பாணர் புலவர் வேறுபாட்டினுள் சமஸ்கிருத மயவாக்கப் பண்பு காணப்படுவதனையும் அவதானித்துள்ளோம்.

இப்பின்புலத்தினை மனங்கொண்டு நோக்கும் பொழுது பதிற்றுப் பத்தின் அமைப்பும் புறநானூற்றின் முதல் 100 செய்யுள்களின் வைப்பும் முக்கியம் அடைவதைக் காணலாம். பதிற்றுப்பத்தின் தொகுப்பு சேரவம்சப் புகழ்ச்சியாகும். இதனூடே அரசன் என்ற ஆளுமையின் பொலிவு மிகைப்பாடு மிகத் தெளிவாகத் தெரிகிறது. புறநானூற்றின் முதற் பாடல்கள் வழியாகத் தெரியவரும் மன்னர்கள், வேந்தர்கள் வைதீக திசை முகத்தை நோக்குபவர்களாக காணப்படுகின்றனர். உண்மையில் இவை தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களின் வழியாக வரும் சமணச்சார்பு நிலையினை மறுதலிப்பதாகவே உள்ளன.

சங்க இலக்கியத் தொகுப்பில் இந்த கருத்துநிலை (Ideology) மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

## IX

சங்க இலக்கியத்தை நாம் பயிலும் பொழுது, அந்த இலக்கியங்களிற்கு அடிப்படையாக அமைந்த அகத்திணை, புறத்திணை மரபினைத் தளமாகக் கொண்டே நோக்குகின்றோம். அப் பார்வை நம்மை

தமிழ்நாட்டின் திணைமரபுடன் இணைத்து விடுவது மாத்திரமல்லாமல் அத்திணை முறைமையின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வியல்களின் தளங்களுக்கும் அவற்றின் முனைப்பு நிலைகளுக்கும் கொண்டு செல்கின்றது. இவ்வியல்பு சங்க இலக்கியங்களின் வரலாற்று நேர்மை, அவற்றின் நம்பகத்தன்மையை மேலும் வலியுறுத்துகின்றது.

ஆயினும், மகாதேவன் கல்வெட்டுக்களினூடாக சங்க காலத்துக்-குரியதென நிலைநிறுத்தும் காலப்பிரிவு மிக முக்கியமான வினாக்களை எழுப்புகின்றது. மேலும் இவ்விலக்கியம் பற்றிய அணுகுமுறைகள் பலவற்றினையும் கூட கேள்விக்குள்ளாக்குகின்றது.

சங்க இலக்கியம் என இன்று நாம் கொள்கின்ற தொகுப்புக் களுக்கான முயற்சிகள் ஏற்பட வாய்ப்பாக இருந்திருக்க முடியுமோ எனும் கருத்துடன் சங்க காலத்தின் அரசுருவாக்கக் காலத்தையும் முன்னர் சுட்டியுள்ளோம். யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் பெயர் அவ்வகையில் முக்கியம் பெறும் முறைமையினை எடுத்துக் கூறியுள்ளோம். சமண மேலாண்மை காரணமாக ஏற்பட்ட வாழ்வியற் பண்பாட்டு வேறுபாடுகளும். அரசுருவாக்க வளர்ச்சியினூடே காணப்படுகின்ற இந்து நிலையாக்கமும் (வரலாற்று ரீதியான சமஸ்கிருத மயவாக்கம்) சங்க கால இறுதிப் பகுதியில். அதாவது பிராமிக் கல்வெட்டுக்களின் செல்வாக்கு முனைப்புடன் இருந்த காலத்திலேயே அக்காலத்தின் ஆட்சி முறை வளர்ச்சி பற்றிய நிலையான ஒரு பார்வையை வளர்த்துள்ளமையை அவதானித்துள்ளோம். முக்கியமாகச் சமணம் கொண்டு வர முனைந்த கருத்துநிலை. பண்பாட்டு மாற்றங்கள் உணரப்பட உணரப்பட அந்த முந்தியகால ஆட்சி முறைமைகளையும். வேந்து வளர்ச்சிகளையும். அவற்றுக்கேயுரிய தொன்மங்களுடன் பதிவு செய்திருந்த இலக்கியங்களை மீள் நினைவுக்குக் கொண்டுவரும் முயற்சியாகவே சங்க இலக்கியப் பதிகையைப் பார்ப்பது பயன்தரக்கூடிய ஒரு தேடலாக அமையும் என்ற கருத்தே அங்கு முன்வைக்கப்பட்டது.

அந்தப் பதிகை முயற்சி, அவற்றை எழுதுவதற்கான வளம் வாய்ப்பாக இருந்த காலத்திலேயே செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தொல்காப்பியம் எழுதப்படுவதற்கான தேவையை இந்த மொழி, இலக்கியப் பேணுகை முயற்சியோடு தொடர்புற்றுமிருக்கலாம்.

தொகை நூல்களும், தொகை நூல்களுக்குப் பின்னர் அவை பற்றிய இலக்கண, இலக்கியப் பிரக்ஞை எழுவது இயல்பே. அவ் ஆரம்ப நிலையில் பத்துப்பாட்டு நூல்கள் ஒரு தொகுதியாகக் கருதப்பட வில்லை என்பதற்கு பின்னர் வரும் களவியலுரை சான்றாகும்.

இத்தகைய பிரச்சினைகளின் முதல் முகிழ்ப்பு, புதிய கால அடைவின் வழியே வெளிக்கிளம்புகின்றது. இப்பொழுது சங்க இலக்கியம் சுட்டும் காலம், கி.மு 3இன் இறுதி, கி.மு 2ன் தொடக்கமென கொள்ள வேண்டியுள்ளது. சிறுபாணாற்றுப்படை ஏறத்தாழ கி.பி 250 இற்கு உரியதென்பர். இந்நிலைபாடுகள் சங்க காலத்தை இப்பொழுது ஏறத்தாழ 450 வருடகாலத்திற்கு விரித்து வைக்கின்றன. முன்னர் கி.பி 100 முதல் 250 வரையென, 150 வருட காலத்திற்கே உரியதாகவே இக்காலப் பகுதியைக் கொண்ட நாம், இப்பொழுது ஏறத்தாழ 450 வருடங்களுக்குரியதெனக் கொள்ள வேண்டியுள்ளது.

சங்க இலக்கியங்களெனக் கொள்ளப்படும் கலித்தொகை, பரிபாடல் தவிர்ந்த எட்டுத்தொகை நூல்களையும், திருமுருகாற்றுப் படை தவிர்ந்த பத்துப்பாட்டு நூல்களையும் கி.மு. 200 முதல் கி.பி. 250 வரையான காலப்பகுதிக்குரியதான பாடல்களாகக் கொள்ளல் வேண்டும்.

ஆனால் இப்பொழுது இங்கு சங்க இலக்கியமென நாம் சுட்டும் இலக்கியத்தின் கால நீட்சி, மகாதேவன் அவர்கள் தருகின்ற இந்தப் புதிய காலத் தொடக்கம் - முடிவு காரணமாக (கி.மு 2 இன் தொடக்கம் முதல் கி.பி. 4இன் முடிவு வரை) மேற்கிளம்பும் காலப்பரப்பினுள் இந்த இலக்கியங்களை எவ்வாறு வைப்பதென்பது பற்றிய விடய வினாக்களையே இங்கு பார்க்கிறோம்.

ஐராவதம் மகாதேவன் அவர்களது இந்த ஆய்வு முற்றிலும் சமண மதக் கொடைகளாக அமைந்த பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றிய ஆய்வாக இருப்பதனால் இக்கல்வெட்டுக்களில் வரும் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு இவர் எடுத்துக் கூறும் சமூக, மத, பண்பாட்டுச் சூழல் ஏறத்தாழ முற்றிலும் சமணச்சித்திரிப்பாகவே இருப்பது தவிர்க்கப்பட முடியாத ஓர் அம்சமாகும். இக்கல்வெட்டுக்களின் பரம்பல் பற்றி தரப்படும் வரைபடம் தமிழ்நாட்டின் நடுப்பகுதியை குறிப்பாக பாண்டிய, சேர பகுதிகளை உள்ளடக்கியதாகவே காணப்படுகிறது.

இது இவ்வாறாயினும் சங்ககால மத, பண்பாட்டுச் சூழல் பற்றிய மீள்கட்டுரு வாக்கத்தின் பொழுது நாம் முற்று முழுதாக இந்தக் கல்வெட்டுச் சான்றுகளை நம்பியிருக்காது அக்காலத்துக்குரிய இன்னொரு முக்கிய சான்றான சங்க இலக்கியச் சான்றையும் மனங் கொள்ள வேண்டுவது மிகமிக அவசியமான ஒரு விடயமாகும்.

சங்க இலக்கியப் பாடல்களை நோக்கும் பொழுது அவற்றினூடே உணரப்படத்தக்கதாகவுள்ள வட இந்தியப் பிரக்ஞையும், சமஸ்கிருதப் பண்பாட்டுப் பரிச்சயமும் மிக முக்கியமாக தென்படுகின்றன.

சங்க இலக்கியங்களில் காணப்பெறும் வைதீக இந்துமதக் குறிப்புகள் பற்றி ஏற்கனவே பலர் எழுதியுள்ளனர் (நீலகண்ட சாஸ்திரி, சு.வித்தியானந்தன், சுமதி ராமஸ்வாமி).

இங்கு வற்புறுத்திக் கூறவேண்டியதாக உள்ளது எதுவெனில் வைதீக இந்துமதம் பற்றியோ அல்லது சமஸ்கிருதம் சார் பண்பாடு பற்றியோ வரும் சங்க இலக்கியக் குறிப்புக்கள் எத்துணை ஆழமாக வேரூன்றியிருந்தன என்பதாகும். வைதீக இந்துமதத்தின் அடிப்படைக் கருத்து நிலைகளிலும் சமஸ்கிருதப் பண்பாட்டிலுமிருந்த பரிச்சயமானது மிக்க இயல்பான முறைமையில் வெளிப்படுத்தப் பட்டுள்ள முறைமையினை நோக்கல் வேண்டும். புறநானூற்று இரண்டாவது பாடலை ஒரு நல்ல உதாரணமாகக் கொள்ளலாம். அந்தப் பாடலில் வரும் ஐம்பூதங்கள் பற்றிய குறிப்பும். மகாபாரத தொன்மம் பற்றிய குறிப்பு, பிராமணர் பற்றிய குறிப்பு, முத்து பற்றிய குறிப்பு என்பன ஒரு புறமாக இருக்க அவற்றிலும் முக்கியமாக விளங்குவது அந்தப்பாடல் அந்தக் கருத்து நிலைகளிலுள்ளே எத்துணை தோய்ந்து கிடக்கின்றது என்பதுவும் அக்குறிப்புகள் எத்துணை இயல்புநிலையில் - அதாவது சிறிதளவும் கூட அந்நியப்பாடு இல்லாமல் அந்தப் பண்பாட்டினுள் உள்ளே நின்று கூறப்படும் முறைமையினை நோக்குதல் அவசியமானதாகும். பாடுகின்ற புலவருக்கு அவர் எடுத்துக் கூறும் அந்த நிலமை அவருடன் பின்னிப் பிணைந்ததாகவே உள்ளது.

.................... அடுக்கத்து,
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத் தீ விளக்கின், துஞ்சும்
பொற்கோட்டு இமயமும், பொதியமும் போன்றே!

அத்தகைய ஒரு ஈடுபாட்டினுடைய பெறுபேறுதான் மேற்கூறிய செய்யுள். அப்பண்பாட்டில் நிலவிய இந்த மனநிலை முதன்மைப் படுத்தப்படாது போய் விட்டது.

நம்மைப் பொறுத்த வரையில் நாம் சங்கப் பண்பாடு என்பது தனியே சமணத்துக்குரியதாகவோ தனியே இந்துமதத்துக் குரியதாகவே கொள்ளாது இவை அச்சமூகத்தில் எத்தகைய சமூக, பண்பாட்டு ஊடாட்டங்களை ஏற்படுத்தியிருந்தன என்பது தான். இந்தப் பன்முகப் பாட்டை பிராமிக் கல்வெட்டுக்களின் வழிவருகின்ற சான்றுகள் உணர்த்த வில்லை. இதனால் அப்பண்பாடு பற்றிய எமது ஒட்டு மொத்தமான மதிப்பீடு சிக்கலுடையதாகவே காணப்படும்.

இவ்விடயம் பற்றிய பல்வேறு வினாக்களையும், சிக்கற்பாடு களையும் விவரிக்க முனையும் இக்கட்டத்தில் நாம் ஏற்கனவே பார்த்த பின்வரும் விடயங்கள் மறக்கப்படக் கூடாதனவாக உள்ளன:

1. இவை தொகுக்கப்பட்ட பாடல்களாகும்.

2. ஏற்கனவே எழுதப்பட்ட முன்னுரையில் விரிவாக விளக்கப்-பட்டிருக்கின்ற முறைமையின் அடிப்படையில் நோக்கும் பொழுது இக்காலப் பகுதியில் ஒரே நேரத்தில் பல்வேறு பாடல் மரபுகள் நிலவின எனக் கொள்ளல் வேண்டும். எட்டுத்தொகையில் வரும் தொகை நிலைப் பாடல் மரபுக்கும், பத்துப்பாட்டில் வரும் முருகு தவிர்ந்த ஒன்பது பாடல் களுக்குமிடையே கவித்துவ மரபு வேறுபாடொன்று வளரத் தொடங்கிவிட்டதோ என்ற ஐயத்தினை சான்றாதாரங் களுடன் அங்கு கிளப்பியுள்ளோம்.

   நியமமான ஐந்திணை மரபு ஒரு புறமாகச் சில பாடல்களில் அவற்றுக்குரிய முந்து வாசனையோடு பேணப்பெற (நற்றிணை, குறுந்தொகை) வேறுசில அவற்றினடியாக ஏற்பட்டு வந்த கவித்துவ வளர்ச்சி நிலைகளை காட்டுவனவாக அமைந்துள்ளன (அகநானூற்றின் பாடல்கள், ஐங்குறுநூறு ஆதியன) ஆனால், வேறுசிலவோ இந்த ஐந்திணை மரபின் முதல் - உரித் தொடர்ச்சி-யினை வெறும் மரபாகக் கொண்டு கவித்துவ கைத்திரிப்பு ஆற்றலுடன் (Poetic manipulation of tradition) புறத்திணைப் புகழ்ச்சி மரபிற்கு புதிய பரிமாண நீடிப்புக்களை ஏற்படுத்துகின்றன (பட்டினப்பாலை).

   (இந்த உள்ளகக் கவித்துவ மரபு மாற்றத்தின் படிநிலைகளை அம்மன்கிளி முருகதாஸ் தமது கலாநிதி ஆய்வேட்டில் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார்)

3. ஏற்கனவே காட்டப் பெற்றபடி வாய்மொழிப் பேணுகை நிலையி-லிருந்து எழுத்து நிலையில் மாத்திரமே இயற்றப் படத்தக்கனவான செய்யுள்கள் மேற் கிளம்புவதையும் பார்க்கிறோம்.

இந்த வாத முன்வைப்பிற்கு எதிராக எடுத்துக் கூற வேண்டிய முக்கியமான வாதங்கள் உள்ளன.

1. கலி, பரி தவிர்ந்த எட்டுத்தொகை பாடல்களையும், முருகு தவிர்ந்த பத்துப்பாட்டு பாடல்களையும் மொழிநிலையில் ஒரு காலத்துக்-குரியனவாக கொள்ளும் பண்பே இப்பொழுது உண்டு. கமில்

ஸ்வலபில் மொழியியல் அடிப்படையில் முந்து பழந்தமிழ் எனக் கொள்வது பொருத்தமானதாகுமா என்பது ஒரு முக்கிய வினாவாகும்.

2. கலி, பரி தவிர்ந்த எட்டுத் தொகையிலும், முருகு தவிர்ந்த பத்துப்பாட்டையும் பாடியவர்களாகச் சில புலவர்கள் அடையாளங் காணப்படுகின்றனர். கபிலர், பரணர் போன்றோரை உதாரணங் காட்டலாம்.

மொழியியல் நிலையில் காணப்படும் தன்மை சில முக்கிய வினாக்களைக் கிளப்புகின்றது. கி.மு 2ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலவிய உற்பத்தி முறைமை, வாழ்க்கை முறைமைகளுக்கும், கி.பி 2ம் நூற்றாண்டின் நடு; இறுதிப் பகுதிகளுக்கும் முக்கிய வேறுபாடுகள் எதுவும் இருக்கவில்லையா? மொழிமாற்றம் ஏற்படுவது உற்பத்தி முறைமை மாற்றங்கள், அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் ஆகியனவற்றோடு தொடர்புள்ள ஒன்றாகும்.

பிற்காலத்தில் வரும் மொழி, இலக்கியங்களோடு ஒப்பு நோக்கும் பொழுது முந்து பழந்தமிழினுள் (early old Tamil) ஓர் ஒருமையைக் காண முடிவது உண்மையெனினும், அதனூடே மொழி மாற்றங்கள் ஏற்பட-வில்லையா என்பதே பிரதான வினாவாகும்.

இலக்கிய நிலை நின்று பார்க்கும் பொழுது சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்விடயம் ப.த.ச.நா. வின் தமிழ் மொழிபெயர்ப்புக்கான முன்னுரையிலும் "தமிழின் அழகியல் ஒரு தேடல்" என்ற நூலிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது அவற்றின் சுருக்கத்தினை இங்கு மீட்டுக் கூற விரும்புகின்றேன்.

நற்றிணை, குறுந்தொகைக்கும் அகநானூற்றுக்குமுள்ள வேறுபாடு பற்றிப் பேசியுள்ளோம். எட்டுத்தொகை நூல்களுள்ளேயே ஐங்குறுநூறு அமைவு வேறுபாடுள்ளதென்பதை அவதானித்தல் வேண்டும்.

பத்துப்பாட்டைப் பொறுத்தவரையில் அதற்குள் திருமுருகாற்றுப் படையை விட்டாலும், சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை என நான்கு ஆற்றுப்படை இலக்கியங்கள் உள்ளன. இருப்பினும் தொல்காப்பியம், பொருளதி காரத்தின் செல்வாக்கு காரணமாக இந்த ஆற்றுப்படைகளை நாம் ஆற்றுப்படை இலக்கிய வடிவங்களாகப் பார்ப்பதேயில்லை. தொல்காப்பியம் ஆற்றுப்படையை புறத்திணையில் வரும் பல்வேறு துறைகளுள் ஒன்றாகவே பட்டியலிடும் (புறத்திணைச் சூத்திரம் - 60).

இதிலும் பார்க்க, கவிதையியல் நிலைப்பட்ட ஒரு முக்கியமான சிக்கற்கட்டம் பத்துப்பாட்டுப் பாடல்கள் ஒன்றினுள் தெரிகின்றது. அகத்திணை மரபு, புறத்திணை மரபென கவிதையாக்க மரபை இரு நிலைப்படுத்தி பார்க்கும் தொல்காப்பியப் போக்கு காரணமாகவும், அந்நோக்கினை மீள வலியுறுத்தும் உரை மரபு காரணமாகவும், வாழ்வியற் போக்கின் மனிதநிலை உணர்வுகளில் / உணர்கைகளில் புறத்தின் சோகங்கள், அகத்தின் எதிர்பார்ப்புகளையும் அங்கலாய்ப்பு களையும் அதிகரிப்பது பற்றியோ அல்லது புறத்திணைத் தொழிற்பாடு களின் பொழுது வரக்கூடிய "அக நினைவுகள்" பற்றியோ அதிக கவனம் செலுத்தாது விடும் நிலை, செய்யுள் இலக்கண மரபின் ஒரு நெறியாகிறது. "மாவாராதே மாவாராதே"- என்ற அக, புற இடையீட்டுச் சோகங்களின் தர்க்க ரீதியான வளர்ச்சிகளுக்கு நமது செய்யுள் இலக்கண மரபு அதிக நெகிழ்விடம் கொடுக்கவில்லை. ஆனால், நெடுநல்வாடையின் ஆசிரியனோ முற்றிலும் புறத்துக்கே உரியதான பாசறைச் சூழலில் அகநினைவுகளைக் கொண்டு வருகின்றான். அதேபோன்று தனிமை, அரசனின் மனைவியை புறத்தின் நெருக்கடி நிலைகள் பற்றிய சிந்தனையுள் தள்ளிவிடுகின்றது. இந்த மானுட நிலைச் சித்திரிப்பு உண்மையில் அகம் புறம் என்ற இறுகிய வரையறைகளுக்கு அப்பாலுள்ள மனித நிலை (Human Situations) உணர்வுகளைக் காட்டுவதாகும். அந்த ஆசிரியன் வாடைக் காற்றைக் குறியீடாகக் கொண்டு அதன் எதிரும் புதிருமான நிலைகளை அடைகளாக்கி, அக-புறத்திணை மரபுக்கு மேலே செல்ல முயல்கின்றார். வாடை, நெடு-நல்-வாடையாகிறது. இந்தக் கவிதைப் பாய்ச்சல் நச்சினார்க்கினியரால் புறத்திணை மரபுக்குள்ளேயே வைக்கப்பட்டு விளக்கப்படுகின்றது. அரசன் அணிந்திருந்த மாலை பற்றிய குறிப்புக் காரணமாக அதனை புறத்திணைச் சான்றாகவே கொள்ள வேண்டுமென்று ஓர் இலக்கியத் தீர்ப்பு அளிக்கப்படுகிறது. நச்சினார்க்-கினியர் அவ்வாறு அமைத்துக் கூற முயன்றாலும், நெடுநல் வாடை அக-புற மரபிற்கு மேலே மானுட நிலைச் சித்திரிப்புக்குச் செல்லவேண்டிய அவசியத்தைக் காட்டுகின்றது. உண்மையில் சிலப்பதிகாரத்தில் ஏற்படும் திருப்பத்திற்கான, கண்ணுக்கு உடனே புலப்படாத ஓர் அடிக்கல்லை நக்கீரர் இட்டு விடுகிறார்.

இதுவரை கூறியது, சங்க இலக்கியத்தினுள்ளேயே இலக்கிய மரபில் மாற்றங்கள் ஏற்பட்டுவிடத் தொடங்கிவிட்டன என்பதைக் காட்டுவதற்கேயாகும்.

(இவ்விடயம் பற்றி சற்று விரிவாக மேலே கூறிய சொற்பொழிவுத் தொகுதி நூலில் குறிப்பிட்டுள்ளேன்)

புலவர்களின் கால ஒருமை பற்றிய சிக்கல் நாம் பயப்படும் அளவிற்கு பெரிதாக இல்லை. ஏனெனில் இப்பொழுதே பத்துப்பாட்டில் வரும் கபிலர் என்ற பெயரையும், எட்டுத்தொகையில் வரும் கபிலர் என்ற பெயரையும் சேர்த்துப் பார்க்க வேண்டியதில்லை என்பதை "பாட்டும் தொகையும்" நூலின் பதிப்பாசிரியர்கள் மிகத் தெளிவாகவே கூறிச் செல்கின்றனர். பாடல்களின் தொகுப்பு இந்து மதத்தினர்களின் கைகளிலேயே இருந்தது என்று கொள்வதற்கு இடமுண்டாகையால் சில பெயர்கள் மீட்டு மீட்டு கூறப்பட்டிருக்கலாம். கலித்தொகையில் குறிஞ்சிக் கலி கபிலருடையதாகவே கூறப்படுவதுண்டு.

இவ்விடயம் தொடர்பாக இப்பொழுது மேற்கொள்ளப்பட வேண்டிய முதலாவது பணி, தொகை நூல்களையும் பாடல்களையும் இப்பொழுது நம்மிடத்துள்ள தரவுகளின் அடிப்படையில் தற்காலிகமான கால வரிசைக் கிரமப்படுத்தலாகும்.

இத்தகைய பணியினை திராவிட மொழியியற்கழகம் போன்ற புலமை நிறுவனங்களோ, அன்றேல் பல்கலைக்கழக தமிழ்த் துறைகளோ பொருத்தமான அறிஞர்களைச் சேர்த்துக் கொண்டு செய்யத் தொடங்கல் வேண்டும். இப்பொழுது நம்மிடையேயுள்ள இலக்கிய வரலாற்று நோக்கு பொதுப்படையாகவே பல்லவ, சோழ, நாயக்கர் காலப்பகுதிகளினூடேயுள்ள வரலாற்று அசைவியக் கத்தினை நோக்குவதில்லை. சங்ககாலத்திற்கு இத்தகைய ஓர் காலவரிசைக்கிரம நிரற்படுத்துகை உண்மையிலேயே சிரமமாகலாம். ஆயினும் வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீ. போன்றோரது ஆய்வுக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டும் வரலாற்று ஆசிரியர்கள், தொல்லியலாளர்கள் வழியாக வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டும் தொடங்கலாம்.

இத்தகைய ஒரு பணியினை மேற்கொள்ளும் பொழுது இலக்கிய ஆய்வாளர்களுக்கு எத்துணை முக்கியத்துவம் உண்டோ அத்துணை முக்கியத்துவம் வரலாற்று அறிஞர்களுக்குமுண்டு. அத்தகைய ஒரு கூட்டுப் பணியிலேயே வெற்றியீட்ட முடியும்.

அப்பணியினை உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும். மகாதேவனது ஆராய்ச்சி அதற்கான அத்தியாவசியத்தை நிர்ப்பந்திக்கிறது.

# X

இதுவரை ஐராவதம் மகாதேவன் அவர்கள் வெளியிட்டுள்ள 'Early Tamil Epigraphy' எனும் ஆய்வுப்பெருநூல் தமிழக, தமிழிலக்கிய வரலாற்றாய்வில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் வழியாகக் கிளம்பும் சிந்தனைகள் சிலவற்றைத் தொகுத்துத் தந்துள்ளோம். மகாதேவனின் ஆய்வு மிக நுண்ணிதாக நோக்கப்பட்டு, அவர் கூறும் கருத்துக்களின் ஏற்புடைமை தீர்மானிக்கப்படல் வேண்டும். இத்துறையில் ஏறத்தாழ 45 வருடகால பயில்வுப் பரிச்சயமுள்ள ஒருவருக்கு இந்த ஆய்வுப் பெருநூலின் தளமாக அமையும் திறந்த மனநோக்கும் குறிப்பாக முற்சாய்வின்மையும், நூலை வாசிக்கத் தொடங்கும் பொழுது கருத்தைக் கவருவனவாக உள்ளன.

ஏற்கனவே இக்கட்டுரையினூடே பல தடவைகள் குறிப்பிட்டுள்ளது போல பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் *(1981)*, தமிழில் இலக்கிய வரலாறு *(1986)*, பண்டைய தமிழ் சமூகம் பற்றிய ஆய்வுகள் *(1985)* எனத் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளமையால் மகாதேவனின் இந்த ஆய்வுப் பெருநூல், தமிழக சமூக - இலக்கிய வரலாறு, வரலாறெழுதுகையில் மேலும் ஒரு கட்டத்தை ஏற்படுத்தியுள்ளமையை உணருகின்றேன்.

இந்த ஆய்வுப் பெரும் பாதையில் மேலே தொடர்ந்து செல்வோமாக.


1. Mahadevan, Iravatham - Early Tamil Epigraphy (Harvard University - 2003)
2. சிவத்தம்பி, கார்த்திகேசு - பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் (தமிழ் மொழிபெயர்ப்பு)
3. சிவத்தம்பி, கார்த்திகேசு - Literary History in Tamil (1986, Tamil University, Thanjavur)
4. சிவத்தம்பி, கார்த்திகேசு - தமிழில் இலக்கிய வரலாறு (*2000* Madras)
5. சிவத்தம்பி, கார்த்திகேசு - Studies in ancient Tamil Society (1998, Madras)
6. கையெழுத்துப் பிரதிகள் - 1. தமிழின் கவிதையியல் ஒரு தேடல் (சென்னைப் பல். - சொற்பொழிவுகள்)
   2. Studies in Ancient Tamil Society இற்கான தமிழ் மொழிபெயர்ப்பு.

## நூல் விமர்சனம்

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
166 - 171

**I. இலங்கையின் பொருளாதார வரலாறு : வடக்கு - கிழக்குப் பரிமாணம்; ஆசிரியர் : வி. நித்தியானந்தம்; வெளியீடு: உயர் கல்விச் சேவை நிலையம், யாழ்ப்பாணம்; 2003; பக்கங்கள் : v + 228.**

கலாநிதி வி. நித்தியானந்தம் அவர்களால் யூன் 2003இல் வெளியிடப்பட்ட **இலங்கையின் பொருளாதார வரலாறு வடக்கு — கிழக்கு பரிமாணம்** என்ற நூல் தமிழில் அண்மையில் சமூக விஞ்ஞானத் துறைக்குக் கிடைத்த சிறந்த நூலாக அமைகின்றது. ஏறக்குறைய முப்பத்தைந்து வருடங்களாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பல பல்கலைக்கழகங்களிற் பொருளியல் ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவமும், அதனூடாகப் பெற்ற பொருளியலறிவும், இயல்பாகவே கிடைக்கப்பெற்ற தமிழறிவும், முன்னர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்ட அனுபவமும்; 1989ல் தமிழில் ஏற்கனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக **இலங்கை அரசியல் பொருளாதாரம் 1948 — 1956 : வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்** என்ற சிறந்த ஆய்வு நூலை வெளியிட்ட அனுபவமும் சேர்ந்து இலங்கைப் பொருளாதார வரலாற்றில், குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கின் பொருளாதார வரலாற்றில், சிறப்பான முறையில் ஆய்வு செய்யப்பட்ட நூலொன்றினைத் தமிழில் வெளிக்கொணர்வதற்கு அவருக்கு உறுதுணை புரிந்துள்ளன.

இந்நூல் எட்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. பொருளாதார வரலாறும் வரலாறின்மையும்: ஒரு முன்னுரை, பொருளாதார வரலாற்றுக்கான முன்கூட்டிய நிலைமைகள், யாழ்ப்பாண இராச்சியத்தின் பருநிலைப் பொருளாதார அமைப்பு, காலனித்துவப் பொருளாதாரப் போக்கின் எழுச்சி: போர்த்துக்கேயர், டச்சுக்காரர் காலங்கள், காலனித்துவப் பொருளாதாரப் போக்கின் வளர்ச்சி: பிரித்தானியர் காலம், ஈழத்தமிழர் கல்வியின் பொருளியல், பௌதிக வளங்களின் பாவனை, பொருளாதார வரலாறும் வரலாறின்மையும்: ஒரு பின்னுரை என்பனவே அந்த எட்டு அத்தியாயங்களுமாகும்.

நூலின் ஆரம்பத்திலேயே ஒரு நாட்டின் வரலாறு, பொருளாதார வரலாறு, அரசியல் வரலாறு என்பவற்றுக்கிடையேயான தொடர்பை விளக்கி ஒரு பிரதேசத்தின் பொருளாதார வரலாறு தனியாக எழுதப்பட வேண்டியதன் அவசியத்தை நூலாசிரியர் வலியுறுத்துகிறார். இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் பொருளாதார வரலாறு இலங்கைப் பொருளாதார வரலாற்றிலிருந்து வேறுபட்டுத் தனியாக எழுதப்படுவதற்கான அடிப்படைகளைக் கொண்டுள்ளது என்பதை விளக்குவதுடன், இது பற்றி ஒரு சிலரே அங்குமிங்குமாக சில ஆய்வுகளை மேற்கொண்டார்களே அன்றி பூரணமான ஆய்வு மேற்கொள்ளப்படாத ஒரு பகுதியாக இப்பிரதேசத்தின் பொருளாதார வரலாறு அமைந்திருப்பதை ஆசிரியர் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றார். யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சியின் பின்னர் இப்பிரதேசங்களை ஆண்ட அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோரும் இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் இப்பகுதிகளை ஆண்ட சிங்கள அரசாங்கங்களும் வடக்கு, கிழக்கின் பொருளாதார வளங்களை (பௌதிக வளம், மனிதவளம்) சிறப்பான முறையில் பயன்படுத்தி அப்பகுதிகளை விருத்தி செய்வதற்குத் தவறிவிட்டன என்ற கருத்தினை இந்நூல் முழுவதிலும் நிறுவிக்காட்ட முனைந்து அம்முயற்சியில் ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார் என்றே கருத வேண்டும்.

யாழ்ப்பாண அரசர்கள் இப்பகுதிகளை ஆண்ட போதிருந்த பொருளாதார நிலைமைகளை விளக்குகையில் விவசாயத்துறை சம்பந்தமாக நெல், வரகு, குரக்கன், திணை, சாமை, புகையிலை போன்ற பயிர்கள் பற்றியும், நிலவரி பற்றியும் பல தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அக்காலத்திற் காணப்பட்ட கைத்தொழில்கள் எனப்படக்கூடிய ஆபரண, கொல்ல, தச்சுத் தொழில்கள், நெசவுக் கைத்தொழில், சாயவேர் காய்ச்சுதல் போன்றன பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைத் தமிழ் அரசர்கள் ஆண்ட போதிருந்த கப்பல் தொழில், வர்த்தகம் என்பன பற்றித் தெளிவாக எடுத்துக் கூறப்படுவதுடன் யானை, மிளகு, பாக்கு, மஞ்சள், கராம்பு, கறுவா, இஞ்சி போன்றவை வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்ட பொருட்களாக அக்காலத்தில் அமைந்தன என்பதையும் அறியக் கூடியதாக உள்ளது. வர்த்தக மாற்று விகிதமானது யாழ்ப்பாண இராச்சியத்திற்குச் சாதகமாக அமைந்திருந்தது என்று ஆசிரியர் கூறுகின்றார். இவற்றை எழுதுவதற்குப் பேராசிரியர் பத்மநாதன் அவர்களின் **இலங்கைத் தேசவழமைகளும் சமூக வழமைகளும்** என்ற நூல் பெரும் உதவியாக இருந்தது என்பதை ஆசிரியர் குறிப்பிடத் தவறவில்லை. இவ்விடயங்களை விளக்கும் போது வரலாற்று

நூல்களிற் காணப்படும் பொருளாதாரம் சம்பந்தமான குறிப்புக்களைப் பொருளியல் தத்துவங்களுடன் இணைத்து விளக்கும் ஒரு சிறப்பியல்பை நாம் காணக்கூடியதாக உள்ளது. பொருளியல் தத்துவங்களை வரலாற்று அம்சங்களுடன் இணைத்து ஒரு ஆய்வாளன் ஒரு பிரதேசத்தின் பொருளாதார வரலாற்றை திறம்பட எழுத முடியும் என்பதற்கு ஆசிரியரின் முயற்சி ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

அடுத்து அந்நியர் ஆட்சியின் ஆரம்பமும், மக்களை ஆள்வதில் யாழ்ப்பாண மன்னர்களுக்கும், அந்நியர்களுக்கும் இருந்த வேறுபாடு விளக்கப்படுகின்றது. அந்நியர்கள் வடகிழக்குப் பகுதிகளை ஆளத் தொடங்கிய போது அப்போதிருந்த ஈழத்தமிழ் மக்களிடம் குறைவுபட்ட அரசியல் உணர்வு நிலை இருந்தமையால் ஈழத்தமிழர் தேசியவாதம் தோன்றுவதற்கான வாய்ப்பு அருகிக் காணப்பட்டதாக ஆசிரியர் கூறுகின்றார். அந்நியர் ஆட்சியின் காரணமாக ஈழத்தமிழர் குறித்துப் படிப்படியாக அருவமாக நடந்து முடிந்த நிகழ்வு யாதெனில், இதனை ஆசிரியரின் வார்த்தைகளில் கூறுவதாயின், "ஈழத்தமிழர் இலங்கைத் தீவினுள்ளான தமது பிரதேச ஒருமைப்பாட்டினையும் அதனை எல்லை யாகக் கொண்ட தமது தேசிய வாதத்தையும் விட்டுக் கொடுத்து ஒரு பரந்த புவியியல் வரையறையாகிய இலங்கைத் தீவினை ஆதாரமாகக் கொண்ட இலங்கைத் தேசிய வாதம் என்பதனுள் தம்மை அடக்கிக் கொள்ள தீர்மானித்திருந்தனர். அதாவது இலங்கைத் தேசிய வாதம் என்ற பெரிய மரத்தின் நிழலிற் குட்டையான தரத்தில் வளரும் ஒரு செடியாக ஈழத்தமிழர் தேசியவாத வளர்ச்சி நிர்ணயிக்கப்படுவதாயிற்று. தாம் ஒரு தனித் தேசம் தமக்கெனத் தனியான தேசியவாதம் ஒன்றுண்டு என்ற அம்சங்களைப் பெருமளவுக்கு ஈழத்தமிழர் மறந்து விடும் ஒரு போக்குத் தொடக்கி வைக்கப்பட்டிருந்தது". உட்சுருளும் தன்மை கொண்ட வகையில் வடகிழக்குப் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் இக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. இக்காலப் பகுதிகளில் ஈழத் தமிழர் இறைமை படிப்படியாகக் குறைந்து வரத் தொடங்கியமையினால் இன்றைய அரசியற் பிரச்சினைகளின் வடிவங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களாக இவை அமைகின்றன. இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆர்வமுள்ளவர்களுக்கு இந்நூலாசிரியர் முன் வைக்கும் கருத்துக்கள் பல புதிய உண்மைகளை விளக்கி நிற்பனவாக உள்ளன.

பிரித்தானியர் காலத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் காணப்பட்ட பொருளாதார நிலைகள் இந்நூலில் விளங்கப்படுத்தப் படுவதுடன் பெருந்தோட்ட முறையிலமைந்த பொருளாதாரமொன்றை இப்பகுதிகளில் உருவாக்கி இப்பிரதேசங்களை அபிவிருத்தி

செய்வதற்குப் பிரித்தானியர் தவறிவிட்டதாக ஆசிரியர் எடுத்துக் கூறுகின்றார். பனை, தென்னை, கரும்பு, புகையிலை, வாழை, மா, பலா போன்ற பயிர்களைப் பெருந்தோட்ட அடிப்படையில் உற்பத்தி செய்வதற்கான சாதகமான காரணிகள் இப்பகுதிகளிற் காணப்பட்ட போதும் பிரித்தானியர் அதனைச் செய்வதிற் கவனம் செலுத்தவில்லை. பெருந்தோட்ட முறையினடிப்படையிலமைந்த பொருளாதார அமைப்பை உருவாக்காமல் விட்டதால் ஈழத்தமிழர்கள் தங்கியிருத்தலிலிருந்தும் பாதுகாக்கப்பட்டனர் என்பது உண்மையேயாயினும் பெருந் தோட்டங்களை உருவாக்கியிருப்பின் போக்குவரத்து முறை இப்பகுதி-களில் விருத்திடைய வாய்ப்பேற்பட்டிருக்கும். போக்குவரத்து முறைகள் விருத்திடைந்திருப்பின் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையிலான தொடர்புகள் கூடுதலாக இருந்திருக்கும். இதனால் மனிதவள அசைவுகளும் பௌதிகவளப் பாவனையும் அதிகரித்து இப்பிரதேசங்கள் கூடுதலாக அபிவிருத்தி அடைந்திருக்கக் கூடிய வழிமுறைகள் தோன்றியிருக்கும். ஆனால், அரச பாராமுகம் காரணமாக இத்தகைய விருத்திகள் ஏற்படவில்லை என்பது ஆசிரியரின் ஆணித்தரமான கருத்தாக அமைகின்றது.

அந்நியராட்சி மட்டுமல்லாமல் வடக்கில் குறிப்பாக தீபகற்பத்தில் வாழ்ந்த ஈழத்தமிழர்கள் கூட (கூடிய செறிவில் இப்பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்தனர்) ஏனைய தமிழ்ப் பகுதிகளிலிருந்த பௌதிக வளத்தை நிறைவாகப் பயன்படுத்தத் தவறி விட்டமை சிங்கள அரசாங்கங்கள் தமிழ்ப் பிரதேசங்களிற் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது என்பது நூலில் விரிவாக விளக்கப்-பட்டுள்ளது. தற்போதுள்ள அரசியல் பிரச்சினையின் மூலவேர்களில் ஒன்றான தமிழ்ப் பிரதேசங்களிற் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் அமைவதற்கு எமது முன்னோரின் முயற்சியின்மை, தூரநோக்கின்மை போன்றன காரணங்களாக அமைந்து விட்டனவா போன்ற எண்ணங்கள் இக்கருத்துக்களை வாசிக்கும் போது வாசகனுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றேயாகும். எனினும், இராணுவ பலத்துடன் சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்டு அமைக்கப் பட்டமை அரசாங்கத்தின் அடாவடித்தனமான செயல் என்பதைச் சில உதாரணங்களுடன் ஆசிரியர் விளக்கி உள்ளார்.

ஈழத்தமிழர் கல்வியின் பொருளியல் என்பதைச் சிறப்பாக விரிவான முறையில் ஆசிரியர் ஆராய்ந்துள்ளார். 19ஆம் நூற்றாண்டில் தீபகற்பத்திற் சனத்தொகை அதிகரித்துப் பௌதிக வளப் பாவனைக்கும் மனிதவளப் பாவனைக்கும் இடையே ஒரு நெருக்கடி தோன்றவிருந்த சந்தர்ப்பத்தில்

ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வி முறை தீபகற்பத்தில் வாழ்ந்த சிலருக்கு வெளிப்போக்குத் துவாரமாக தொழிற்பட்டு நெருக்கடி நிலையைத் தணித்தது என்பதை ஆசிரியர் தெளிவாக விளக்கியுள்ளர். ஈழத்தமிழர்கள் கல்வியில் முன்னேற்றமடைந்திருப்பினும் கல்வியின் அடிப்படைக் குறிக்கோளான சமூகத்தில் உள்ள குறைபாடுகளைக் களைந்து முன்னேற்றமான, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கல் என்பதற்குப் புறம்பாகப் போட்டியடிப்படையிலான கல்வியே ஈழத்தமிழர் கல்வியமைப்பிற் காணப்படுவதாகக் குறை கூறுகின்றார். கல்வியினைத் தனிப்பட்ட பொருளியல் முன்னேற்றங்களுக்காக ஈழத்தமிழர்கள் பாவித்தார்கள், பாவித்துக் கொண்டிருக்கின்றார்களே யொழியச் சமுதாய முன்னேற்றம் குறித்துக் கல்வியினாற் பெற்ற நன்மைகளைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர் எனக் கூறுகின்றார்.

விஞ்ஞானக் கல்விக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத்துக் குறிப்பாக அதிக வருமானமும் சமூகத்தில் மதிப்பும் தரத்தக்க வைத்தியத் துறை, பொறியியல்துறை போன்ற துறைகளையே தற்போதும் நாடுகின்ற ஒரு பண்பு இருப்பதாகவும், சமூக விஞ்ஞானிகளை உருவாக்குவதில் ஈழத்தமிழ்ச் சமூகம் பின்தங்கிவிட்டது என்பதைத் தக்க ஆதாரங்களுடனும், சொந்த அனுபவங்களுடனும் விளக்கியுள்ளார். பிள்ளைகளின் திறமை, விருப்பம் என்பன கவனிக்கப்படாமல் பெற்றோரதும், பாடசாலை மட்டத்தினரதும் விருப்பத்திற்கேற்பவே பாடத் துறைகளைத் தெரிவு செய்யும் முறை காணப்படுகின்றது. ஒருவரின் கல்வி முன்னேற்றத்திற் சமூகத்தின் பங்கு இருப்பதை ஒத்துக்கொள்ளாத செயற்கைத் தன்மை வாய்ந்த சமூகமாக ஈழத்தமிழ்ச் சமூகம் விளங்குவதாகக் குறிப்பிடுகின்றார். ஈழத்தமிழர்களின் கல்வி வளர்ச்சியானது தனிப்பட்டவர்களுடைய வெற்றியாகக் கணிக்கப்படுகின்றதேயொழியச் சமூகத்துடன் இணைந்து செல்வதாக இல்லை என்பது ஆசிரியரின் வாதமாகத் தோன்றுகின்றது.

சிறப்பான முறையிற் பல விடயங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ள போதும் நூலின் தலைப்புக்கேற்ற வகையில் கிழக்கு மற்றும் வன்னிப் பிரதேசங்கள் பற்றிய ஆய்வுகள் பல கவனத்திற் கொள்ளப்படவில்லையென்றே கூற வேண்டும். வரலாற்று அம்சங்களைப் பொருளியல் தத்துவங்களுடன் இணைத்து விளக்குவதில் ஆசிரியர் வெற்றி கண்டுள்ள போதும் வரலாற்று ஆதாரங்களைக் குறிப்பாக விவசாய உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தி, வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்ட பொருட்களின் அளவு, நிலவரி, சுங்கவரி போன்றவை சம்பந்தமான விடயங்களைப், போதிய புள்ளி விபரங்களுடன் இணைத்துக் காட்டப்படாமையை இங்கு

குறிப்பிட வேண்டி உள்ளது. மேலும், வடக்குக் கிழக்கு பொருளாதார வரலாற்றில் அடங்கும் பல விடயங்கள் உதாரணமாக ஈழத்தமிழர் மத்தியிலான உயர் குழாத்தின் வளர்ச்சி, போக்குவரத்து, ஈழத்தமிழர் பொருளாதார வரலாற்றில் மலையகத் தமிழரின் பரிமாணம் போன்ற பல விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியவை என்பதை ஆசிரியரே ஒத்துக் கொள்கின்றார். அத்துடன் இளம் சமூக விஞ்ஞானிகள் இவ்விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கூறுகின்றார். இந்நூலில் பல புதிய தமிழ்ச் சொற்கள் பாவிக்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பென்றே கூறவேண்டும். உதாரணமாக முரண்நகை, ஊடுதொடர்பு, உட்சுருளும் தன்மை, வெளிப்போக்குத்துவாரம். மெய்மை முரண்பாடு. பருநிலைப் பொருளியல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சுருங்கக் கூறின், இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியின் பொருளாதார வரலாறு பற்றிய இந்நூல் தமிழில் நூல் வடிவிலமைந்த ஒரு முன்னோடி நூல் என்பதை எவரும் மறக்க முடியாது. வரலாறு, அரசியல், பொருளியல் போன்ற பாடங்களைப் பயிலும் மாணவர்கள், ஆய்வாளர்கள், இலங்கையின் வடக்குக் கிழக்குப் பற்றிய பன்முகப்பட்ட அறிவை வேண்டி நிற்கும் வாசகர்கள் போன்றோர்க்கு இந்நூல் மிகப் பயன்பாடுடைய-தொன்றாகும். எதிர்காலத்தில் வடக்குக் கிழக்குப் பொருளாதார வரலாறு பற்றிய ஆய்வினை மேற்கொள்ள முனைவோர் எவரும் இந்நூல் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் ஆசிரியர் வழங்கியுள்ள உசாத்துணை நூற் பட்டில் ஏனைய ஆய்வாளர்களுக்கு உதவி செய்வதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இது போன்ற ஆய்வு நூல்கள் தற்போது வெளிவர-வேண்டியது காலத்தின் கட்டாயமாகவும் அமைகின்றது. எதிர்காலத்திலும் இது போன்ற பல நூல்களை வெளியிட்டுத் தமிழ் ஈழப் பகுதிகள் பற்றிய பொருளாதார ஆய்வு என்னும் விடயத்திற்கு இவ்வாசிரிர் பெரும் பங்காற்றுவார் என்பதைத் தமிழுலகமும், அறிஞர் குழாமும் திடமாக நம்புகின்றது.

- ந. பேரின்பநாதன் *

---

* முதுநிலை விரிவுரையாளர், பொருளியற் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
172 - 180

## II. உலக அபிவிருத்தி அறிக்கை - 2004 : சேவைகளை வறியோருக்காக இயங்க வைத்தல் (ஆங்கிலம்) (World Development Report-2004 : Making Services Work for Poor People); வெளியீடு : உலக வங்கி ; பக்கங்கள் : xvi + 241.

"சேவைகளை வறியோருக்காக இயங்க வைத்தல்" (Making Services Work for Poor People) என்னும் நூல் பற்றிய அறிமுகமாகவும் விமர்சனமாகவும் இக் கட்டுரை விளங்குகிறது. உலக வங்கியின் 2004ம் ஆண்டிற்கான உலக அபிவிருத்தி அறிக்கையின் (World Development Report) தலைப்பாகவும் கருப்பொருளாகவும் இவ் விடயம் அமைந்துள்ளது. உலக வங்கியின் அறிக்கைகள் ஆண்டு தோறும் வெவ்வேறு கருப் பொருட்களில் அமைகின்றன. இவ்வாண்டின் அறிக்கை சேவைத் துறைகளின் செயற்பாடு பற்றியதாக உள்ளது. இந்த அறிக்கையிற் சேவைத் துறைகளை வறியோருக்கு பயன் தரும் வகையில் எவ்விதம் இயங்கச் செய்யலாம், அவ்வாறு இயங்க வைப்பதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் எவை என்பன விரிவாக ஆராயப்பட்டுள்ளன. 2004 அறிக்கையை எழுதிய நிபுணர் குழுவின் தலைவராகப் பணியாற்றிய சந்தாயனன் தேவராஜன் உலக வங்கியில் பணிபுரியும் இலங்கை நாட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சேவைகள் வறியோரைச் சென்றடைவதில்லை. தேவைப்படும் அளவிலும் தரத்திலும் அவை கிடைப்பதில்லை. அவற்றைப் பெறுவதிற் பல தடைகள் உள்ளன. வறியோராய் இருப்பதன் பொருள் குறைந்த வருமானத்தைப் பெறுதல் என்பது மட்டும் அல்ல. வறியோர் கல்வி யற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களின் குழந்தைகள் தரமான கல்வியைப் பெறுவதில்லை. நோய்களால் அவர்கள் அல்லல் படுகின்றனர். வறுமையின் சுமையைப் பெண்கள் சுமக்கின்றனர். பால் சமத்துவம் இன்மை உலகின் வறியோர் நிலையின் முக்கியமானதோர் அம்சம். சூழலின்

அழிவும் மாசடைதலும் உலகின், வறிய நாடுகளின் பிரச்சினைகளை மோசமடையச் செய்கின்றன. வறுமை ஒழிப்பு என்பது வருமானத்தை உயர்த்தும் பிரச்சினை மட்டுமல்ல. கல்வி, சுகாதாரம், போசாக்கு, குடிநீர் வழங்கல், சூழலின் சுத்தமும் சுகாதாரமும், மின்சாரமும் சக்தி தேவை ஆகிய அடைப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதன் மூலமே மக்களின் வறுமை நிலை நீங்கும். வறுமை ஒழிப்பை மனிதவள விருத்தி (Human Resource Development) என்னும் நோக்கில் பார்க்கும் தேவை உள்ளது. உலக வங்கியின் இந்த அறிக்கை மனிதவள விருத்தி நோக்கில் சேவைத் துறைகளின் பங்களிப்பை ஆராய்கிறது.

மனித வள அபிவிருத்தியுடன் நெருங்கிய தொடர்புடைய சேவைத் துறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம் :

1. கல்வி
2. சுகாதாரம்
3. நீர் வழங்கல்
4. மின்சாரம்
5. போக்குவரத்து

அபிவிருத்தி, சிந்தனையாளர்களின் கவனம் இன்று இச் சேவைகளின் உற்பத்தி, வழங்கல், பங்கீடு பற்றிய பிரச்சினைகளின் பால் திரும்பியுள்ளது. விவசாயமும் கைத்தொழிலும் நேரடியாகப் பண்டங்களை உற்பத்தி செய்யும் இரு துறைகளாகும். இவற்றின் உற்பத்தி மூலம் செல்வம் உருவாக்கப்படுகின்றது. அவற்றின் உற்பத்தி உயர்வே நாட்டின் முன்னேற்றத்திற்கான வழி என்ற எண்ணம் முன்னைய காலங்களில் நிலவியது. ஆனால் உற்பத்தி உயர்வு மட்டும் ஏழைகளின் வாழ்வில் மேம்பாட்டைக் கொண்டு வராது. சேவைகள் அவர்களைச் சென்றடைய வேண்டும். அபிவிருத்தி, அடைந்துவரும் நாடுகளிற் சேவைகள் துறைகளின் மேம்பாட்டிற்காக கோடிக் கணக்கான டொலர்கள் செலவிடப்படுகின்றன. உலக வங்கியின் பொருளியல், விருத்தித் தந்திரோபாயம் இரு அம்சங்களைக் கொண்டது. அவையாவன :

1. மக்களில் முதலீடு செய்தல் (Investing in People).
2. முதலீட்டிற்கான சூழல் வாய்ப்புக்களை மேம்படுத்தல் (Improving Investment Climate).

மக்களின் முதலீடு என்னும் தொடர் மனிதவள அபிவிருத்தியையே குறித்து நிற்கிறது. கல்வி, சுகாதாரம், போஷாக்கு ஆகியவற்றின் மேம்பாட்டின் மூலமே மனித வளம் விருத்தியாகும். கொரியா, தைவான், தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளின் முன்னேற்றத்தின் அடிப்படையாக அந்நாடுகளின் மனிதவள விருத்தி அமைந்துள்ளது.

சேவைகள் மக்களைச் சென்றடைவதில்லை; மக்களிற் செய்யப்படும் முதலீடுகள் விரயமாகின்றன. இதற்கான காரணம் யாது? ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் சேவைகளின் நுகர்வு தொடர்பாக வறியோர் - செல்வந்த வகுப்புக்களிடையே பாரிய இடைவெளி உள்ளது.

வருமான அடிப்படையில் நாட்டின் முழு மக்களையும் ஐந்து படைகளாக வகுத்துக் கொள்ளலாம். மேற்படையாக 20% உயர் வருமானம் பெறுவோரும்; அடித்தளத்தில் 20% குறை வருமானம் பெறுவோரும் அமைகின்றனர். சேவைத் துறைகளின் முதலீட்டின் எத்தனை வீதம் மேற்படையில் உள்ள செல்வந்த வகுப்பாரைச் சென்றடைகிறது எனவும்; கீழ்ப்படையில் உள்ள குறை வருமானம் பெறுவோரான வறியோரை எத்தனை சதவீதம் சென்றடைகிறது எனவும் ஒப்பீடு செய்து பார்ப்பதன் மூலம் இந்த இடைவெளியைக் கணக்கிடலாம். அரசாங்கங்களாற் கல்விக்கும் சுகாதாரத்துக்குமாகச் செலவிடப்படும் பணத்தின் கூடிய வீதாசாரம் உயர்வருமானம் பெறுவோரிடமே சென்றடைகிறது என்பதை விளக்கும் புள்ளிவிபரங்கள் வரைபட விளக்கத்துடன் நூலின் 39ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. சில உதாரணங்களை மட்டும் பார்ப்போம்.

நேபாளத்திற் கல்விக்காக அரசு செலவிடும் தொகையின் 46% மேல்மட்ட 20% செல்வந்தர் வகுப்பின் பிள்ளைகளின் கல்விக்குப் போய்ச் சேர்கிறது. 11% மட்டுமே அடிமட்ட 20% வறியோர் பிள்ளைகளின் கல்விக்குச் சேர்கிறது. மொறொக்கோ நாட்டில் மேல்மட்ட 20% செல்வந்தர் வகுப்பிற்குச் சுத்தமான குடிநீர் தடையின்றிக் கிடைக்கின்றது. ஆனால் கீழ்மட்ட வறியோரில் 11%த்தினரே சுத்தமான, குடிநீரைப் பெறுகின்றனர். சேவைகள் துறைகளின் வழங்கல், பங்கீடு என்பன வறியோர் சார்புடைய கொள்கைத் திட்டத்தைக் கொண்டமைவதில்லை. கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் இத்துறையின் சேவை வழங்குநர்கள் (Service Provider) ஆசிரியர்களாவர். சுகாதாரத் துறையின் சேவை வழங்குநர்கள் டாக்டர்களாவர். சேவைத் துறைகளின் முதலீட்டின் பெரும்பகுதி சம்பளமாகவே செல்கிறது. உகண்டா நாட்டில் கல்விக்குச் செலவாகும் பணத்தின் 87% சம்பளமாகச் செல்கிறது. மீதி 13%தான் ஏனைய கல்விச் சேவை உள்ளீடுகளுக்குச் செலவாகிறது. ஆசிரியர்களிலேயும் ஏழைகள்

மத்தியில் கிராமப் புறங்களில் பணி புரிவோர் தான் கல்விச் சேவையை வறியோருக்கு வழங்கும் முன்னரங்கப் பணியாளர். ஆனால் ஒதுக்குப் புறமான கிராமப் பகுதிகளுக்கு ஆசிரியர், மருத்துவர் ஆகிய முன்னரங்கச் சேவை வழங்குநர்கள் கிடைப்பதில்லை.

சேவைத் துறைகளினால் வறியோர் புறந் தள்ளப்படுவதையும் அவர்கள் பெயரிற் செலவிடப்படும் பணம் விரயமாவதையும் எப்படித் தடுக்கலாம்? இதற்கான வழி வறியோரைச் சேவைத் துறை நடவடிக்கையின் நடுநாயகமாக வைத்தல்தான் எனலாம்.

இதன் மூலம் :

1. வறியோர், செயல் திட்டங்களின் கண்காணிப்பாளர் ஆகவேண்டும். அவர்கள் சேவை வழங்குவோரை (ஆசிரியர், மருத்துவர் முதலியோர்) கட்டுப்படுத்தவும் தம் பணியைக் கடமை உணர்வுடன் ஆற்றுபவர்களாக மாற்றவும் அதிகாரத்தைப் பெறுவர்.

2. கொள்கை வகுப்பதில் வறியோரின் பங்களிப்பு இடம் பெறும். அவர்களின் குரலுக்கு மதிப்பு ஏற்படும்.

3. வறியோருக்குச் சேவையாற்றுவதால் ஊக்குவிப்புகளையும் சலுகைகளையும் கூடிய அளவிற் பெறலாம் என்ற எண்ணம் ஆசிரியர், மருத்துவர் போன்றோர் மனதில் ஏற்படக் கூடிய அளவிற்கு சேவைத் துறை நிர்வாகம் திருத்தம் பெறல்.

எந்தெந்த நாடுகளில் இத்தகைய வழிமுறைகள் ஏற்படுத்தப் பட்டனவோ அங்கெல்லாம் சேவைத் துறைகளின் செயல்திறன், பங்களிப்பு உயர்ந்திருக்கிறது. உலக வங்கியின் அறிக்கையில் இதற்கான உதாரணங்கள் பல சுட்டிக் காட்டப்படுகின்றன.

## கேரளமும் உத்தரபிரதேசமும்

அறிக்கையின் 44-45ம் பக்கங்களிற் கேரளம் உத்தரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களின் ஒப்பீட்டு விளக்கம் தரப்பட்டுள்ளது. இந்த இரு மாநிலங்களையும் ஒப்பிடும் போது "ஒரே தேசம் இரு துருவங்கள்" என்ற மலைப்பு ஏற்படும். கேரளாவின் பெண்கள் உத்தரப் பிரதேசப் பெண்களை விட 20 வருடம் கூடிய சராசரி ஆயுள் உடையவர்களாக இருக்கிறார்கள். உத்தர பிரதேசத்தின் சிசுமரண வீதம் கேரளாவை விட ஐந்து மடங்கு அதிகம். அங்கு உள்ள பெண்களில் மூவரில் ஒருவர் பாடசாலைக் கல்வியைப் பெறாதவர்கள். எழுத்து அறிவு அற்றோர். கேரளா 2000 ஆண்டின் தொடக்கத்தில்

எல்லோர்க்கும் கல்வி என்ற இலக்கை எட்டி விட்டது. அங்கு பாடசாலைச் சேர்வு வீதம் 100% ஆகும். இவ்விதம் கேரளா முன்னணியில் நிற்பதற்கும் உத்தரப் பிரதேசம் பின்தங்கி நிற்பதற்கும் காரணம் கேரளாவின் சமூக வரலாற்றுப் பின்னணி வித்தியாசமானதாக இருப்பது தான். கேரளாவில் மக்கள் சார்புடைய கொள்கைகள் முதன்மை பெற்றன. அடிப்படைத் தேவைகளான கல்வி, மருத்துவம், குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுதல், உணவு மானியம், சமூக சேவைகள் போன்ற துறைகளிற் கேரளம் பிற மாநிலங்கள் யாவற்றையும் விட முன்னணியில் திகழ்ந்தது. இச் சேவைகளின் அளவும், தரமும் உயர்வானவையாக இருந்தன. சேவைகளின் வழங்கலிற் சமத்துவமும், சமூக நீதியும் பேணப்பட்டன. கல்வியில் முன்னேறிய கேரளம் அரசியல் சமூகக் கொள்கைகளில் வித்தியாசமான போக்கைக் கடைப்பிடித்தது. உத்தரப் பிரதேசம் இதற்கு எதிர்மாறான போக்குடையது. அங்கு சாதி வர்க்கப் பிரிவினைகள் சமூக அரசியல் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தன. சுருங்கக் கூறின் மக்களை நடுநாயகப்படுத்தும் செயல்முறை கேரளாவிற் சாத்தியமாயிற்று. உத்தரப் பிரதேசத்தில் இது சாத்தியமாகவில்லை. கீழே தரப்படும் பட்டியல் இவ்விரு மாநிலங்களிற்கும் மத்தியில் உள்ள பாரிய இடைவெளியை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

கேரளமும் உத்தரப் பிரதேசமும் :
அடிப்படைத் தேவைகளின் வழங்கலும் மனித வள அபிவிருத்தியும்

| | கேரளம் | உத்தரப் பிரதேசம் | இந்தியா |
|---|---|---|---|
| 1. சிசு மரண வீதம் | 16.3 | 86.7 | 67.6 |
| 2. கருவள வீதம் | 1.96 | 3.99 | 2.85 |
| 3. பாடசாலைச் சேர்வு வீதம் (பெண்கள் 6-17 வயது) | 90.8 | 61.4 | 66.2 |
| 4. ஒருபோதும் பாடசாலை செல்லாத பெண்கள் (15-19 வயதினர்) | 1.6 | 49.3 | 38.7 |
| 5. தடுப்பூசி ஏற்றப்பட்ட பிள்ளைகள் (12-23 மாதங்கள்) | 79.7 | 21.2 | 42.0 |
| 6. ஆரம்பப் பாடசாலை வசதியைப் பெறும் கிராமவாசிகள் | 90.1 | 75.1 | 79.7 |

பொருளியற் சமூகக் கொள்கை வகுப்பதிற் கேரளத்தின் வறியோர் குரல் மாநிலசட்டசபை, பத்திரிகை, அரசியல் சமூக இயக்கங்கள் என்பவற்றின் ஊடாகக் கடந்த 50 வருடங்களாக ஒலித்து வந்தது தான் இதற்கான காரணம் என்ன என்பது வெளிப்படை. உத்தரப் பிரதேசத்தில் இது நிகழவில்லை. பசுமைப் புரட்சி மூலம் விவசாய உற்பத்தியில் முன்னேற்றம் கண்ட மாநிலங்களில் ஒன்று உத்தரப் பிரதேசம். ஆனால் பொருளியல் உற்பத்தித் துறையின் வளர்ச்சி அடிமட்ட மக்களுக்குச் சுவறவில்லை. காரணம் சேவைத் துறைகள் எதிர்பார்த்த அளவுக்குச் செயற்படவில்லை.


## வகை சொல்லும் கடப்பாடு (Accountability)

வகை சொல்லும் கடப்பாடு நன்முறையில் செயல்படாதுவிடின் சேவைத் துறைகள் தம் நடவடிக்கைகளை சிறந்த முறையிற் பேணமாட்டா என்பது பல நாடுகளின் செயல்திட்டங்கள் தரும் படிப்பினையாக உள்ளது. வகை சொல்லும் கடப்பாடு சேவைத் துறைகளிற் சிறப்பாகச் செயற்படுவதற்கு உணவைத் தயாரித்து வழங்கும் உணவுச் சாலை ஒன்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

* கொத்து ரொட்டிப் பார்சல் ஒன்றை ஒரு நுகர்வோன் உணவுச் சாலை ஒன்றில் வாங்குகிறார் (வழங்கல் அதிகாரம் உணவுச் சாலையிடம் கையளிக்கப்படுகிறது).
* நுகர்வோர் பணத்தைக் கொடுக்கிறார் (நிதி).
* கொத்து ரொட்டி வழங்கப்படுகிறது (சேவை).
* நுகர்வோர் அதனை உண்ணுகிறார் (அதன் தரம் பற்றிய தகவல் கிடைக்கிறது).
* மறுநாளோ இன்னொரு நாளோ அந்த உணவுச் சாலைக்குத் திரும்பச் செல்வதில்லை என்ற முடிவை நுகர்வோர் கொள்கிறார் (உணவுச் சாலை உரிமையாளர் தண்டிக்கப் படுகிறார். அவர் நாளடைவில் நுகர்வோரை இழக்கிறார்).

இங்கு வகை சொல்லும் கடப்பாடு சிறப்பாகச் செயற்படுகிறது. உணவுச் சாலை உரிமையாளர் போட்டிச் சந்தைச் சூழலில் செயற்படுகிறார். சந்தையின் வாங்கல் விற்றற் செயற்பாடுகளில் நுகர்வோர் இறைமை செயற்படுகிறது. இத்தொடர்பு நேரடியானது. அதனால் இதனை

வகை சொல்வதற்கான கிட்டிய பாதை என நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கல்வி, சுகாதாரம், போஷாக்கு, போக்குவரத்து, நீர்வழங்கல் ஆகிய அடிப்படைத் தேவைகளுடன் தொடர்புபட்ட சேவைத்துறைகளில் பொறுப்புச் சொல்லும் கடப்பாடு நேர்வழியில் செயற்படுவதில்லை. இங்கே Long route of accountability செயற்படுகிறது. கடப்பாட்டின் நீள்பாதை இது. இந்த நீள்பாதையில் கொள்கை வகுப்பாளர் (Policy Makers) உள்ளனர். முன்னரங்க சேவை வழங்குநர்களான ஆசிரியர்களையோ மருத்துவர்களையோ கண்காணிப்பதற்கும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய அதிகாரம் மக்களிடம் இல்லை. ஜனநாயக முறையில் அது கொள்கை வகுப்பாளர் (Policy Makers) ஊடாகச் செயற்படுகிறது. இந்த நீள்பாதையில் ஏற்படும் உறவு நிலையைப் பின்வரும் படம் எடுத்துக்காட்டுகிறது.




பாடசாலைக்கு ஆசிரியர்கள் ஒழுங்காக வருவதில்லை. பாடசாலையில், முறைகேடுகள் இடம்பெறுகின்றன. கல்வியின் தரம் வீழ்ந்து செல்கிறது என்ற முறைப்பாடுகள் கொள்கை வகுப்போர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசியல் வாதிகள் ஊடாக கல்வித்திணைக்களத்தைச் சென்றடைய வேண்டும். இந்த நீள்பாதையூடு பொறுப்புச் சொல்லும் கடப்பாடு செயற்படுவதில்லை. வறியோர் குரல் கொள்கை வகுப்போர் காதில் விழுவதில்லை. அக்குரல் அவர்கள் காதில் விழுந்தாலும் ஆசிரியரையோ மருத்துவரையோ கட்டுப்படுத்தும் அளவுக்கு வலுவுடையதாக அமைவதில்லை. ஆகவே இந்த நீள்பாதையில் கடப்பாடு சிறப்பாகச் செயல்படுவதற்கான மாற்றுவழிகள் எவை என்பதைச் சிந்தித்தல் வேண்டும்.

## மாற்று வழிகள்

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர் வழங்கல் போன்ற சேவைகள் இன்று பெரும்பாலும் அரசின் பொறுப்பு என்றே கருதப்படுகிறது. ஆனால் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ அதற்கு முன்னரோ இச் சிந்தனை எழவில்லை. இன்றும் கூடப் பலநாடுகளில் இச்சேவைகளின் உற்பத்தி விநியோகம் என்பன தொடர்பாகப் பல்வேறு வழிமுறைகள் உள்ளன. இச் சேவைத்துறைகள் யாவும் அரசின் ஏகபோகமாக இருக்க வேண்டும் என்ற கருத்திற்கு இன்று ஆதரவு குறைந்து வருகிறது. பலவித ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. பலவற்றின் கலப்பு முறைகள் ஒரே துறைக்குள் செயற்படுகின்றன. உதாரணமாக, அரசாங்கப் பாடசாலைகள், அரச உதவி பெறும் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் என்ற கலப்பு முறை கல்வித்துறையில் கடைப் பிடிக்கப்படலாம்.

### 1. ஒப்பந்த முறை

சில அரசுகள் சேவைகளை ஒப்பந்த முறையில் தனியார் துறைக்கும், அரசுசார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கும் (NGO) கையளிக்கின்றன. ஆரம்ப சுகாதார சேவைப்பணிகளை இவ்விதம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் முறையை கம்போடியா பரீட்சித்தது. 12 மாவட்டங்களைத் தெரிந்து அம்மாவட்டங்களில் வறியோருக்கான ஆரம்ப சுகாதாரச் சேவை தனியாருக்கு வழங்கப்பட்ட போது ஒப்பந்த முறையில் (Contracting Out) செயற்பட்ட பகுதிகளில் சுகாதாரக் குறிகாட்டிகள் சாதகமான போக்கைக் காட்டின. வறியோரும் அளவிலும் தரத்திலும் கூடிய சேவையைப் பெற்றனர்.

### உ. சேவைகளின் உற்பத்தி விநியோக உரிமையைத் தனியாருக்கு விற்பனை செய்தல்

சில நாடுகளில் இம்முறை நற்பயனை அளித்தது. வேறு சில நாடுகளில் இம்முறையால் பயன்விளையவில்லை. ஒரு குறிப்பிட்ட நகரத்தின் நீர் விநியோகத்தை கொலம்பியா அரசு தனியாரிடம் ஒப்படைத்தது. அதனால் விநியோகம் சீரடைந்தது. தற்போது கொழும்பு மாநகரசபை குப்பை கூளங்களை அகற்றும் பணியை அபான்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

### 3. உள்ளூராட்சி சபைகளிடம் ஒப்படைத்தல்

கல்வி, சுகாதாரம், நீர்வழங்கல் போன்ற சேவைகளை கிராம, நகர மட்டத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்தல் நீண்டகாலமாக பல நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### 4. சமூகத்திடம் ஒப்படைத்தல்

சேவைகளைக் கொண்டியக்கும் பொறுப்பைச் சமூகத்திடமே ஒப்படைத்தல் இன்னோர் வழியாகும். பாடசாலை ஒன்றை நடத்தும் பொறுப்பை பெற்றார் பழைய மாணவர் சங்கம் ஒன்றிடம் ஒப்படைத்தல் இம்முறைக்கு ஒரு உதாரணமாகும். கடமையில் அக்கறை செலுத்தாத ஆசிரியரை வேலையில் இருந்து நீக்குதல், தகுதியுள்ள ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்தல் ஆகிய பொறுப்புகள் இதன் மூலம் சமூகத்திடம் (Community) ஒப்படைக்கப்படும்.

### 5. பயனாளிகளிற்கு நேரடியாகக் கையளித்தல்

சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வளங்களை நேரடியாகக் குடும்பத்தலைவியிடமோ உறுப்பினரிடமோ கையளிப்பதே இம்முறை. காசநோயினால் பீடிக்கப்பட்டவருக்கான உதவித் தொகையை அவருக்கே நேரடியாகச் சேர்ப்பிப்பதை உதாரணமாகக் கூறலாம். இதேபோல் பாடசாலைக்கு உதவித் தொகையை வழங்குவதை விடுத்து மாணவருக்கு ஊக்குவிப்பு வழங்கலாம்.

இந்த முறைகள் ஒவ்வொன்றும் பொறுப்புச் சொல்லும் கடப்பாட்டின் நீள்பாதையில் உள்ள தடங்கல்களை எப்படி நீக்கலாம். வழங்குநர்கள் கண்காணிப்பதை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதற்கான பல்வேறு மாற்று வழிகளேயாகும்.

271 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் பக்கத்திற்குப் பக்கம் விளக்கப்படங்களையும் புள்ளிவிபர அட்டவணைகளையும் கொண்டதாய் பல்வண்ண அச்சில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிர்வாகிகள் ஆகிய பல்துறையினருக்கும் பயன்படக் கூடிய சிறந்த நூல்.

- க. சண்முகலிங்கம் *

* இலங்கை நிருவாகச் சேவையினைச் சேர்ந்த இவர் தற்போது புனர்வாழ்வு அமைச்சின் மேலதிகச் செயலாளராகப் பணியாற்றி வருகின்றார்.

அஞ்சலி

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
181 - 184

# எட்வர்ட் சயித்

**Edwurd Said**

## 1935 - 2003

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலே தலைசிறந்த திறனாய்வாளர்களுள் ஒருவராக விளங்கிய எட்வர்ட் சயித் அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்திலே ஆங்கிலம் மற்றும் ஒப்பியல் இலக்கியம் ஆகிய துறைகளின் பேராசிரியராகப் பணி புரிந்து வந்தவர்.

ஜெருசலத்தில் பிறந்த பலஸ்தீனியரான இவர் கைரோவிலும், அமெரிக்காவிலும் மேற்படிப்பை மேற்கொண்டவர். ஆய்வறிவாளர் என்ற முறையில் அவருக்கு உலகளாவிய செல்வாக்கு இருந்தது. பண்பாடு, அரசியல் போன்ற துறைகளில் அதிக அளவு ஈடுபாடு கொண்டதனால் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் ஆய்வறிவு ரீதியான செயற்பாட்டு வீரராய் அவர் திகழ்ந்தார். இத்துறைகள் மட்டுமன்றி இசைத் துறையிலும் ஆதார பூர்வமாகப் பேசக்கூடியவராய் அவர் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

அமெரிக்காவிலிருந்துகொண்டே பலஸ்தீன நலன்களுக்காக அவர் குரல் கொடுத்தமை அவரின் துணிவைக் காட்டி நின்றது. அமைப்பியல் வாதத்தின் பின் சில இடங்களில் புழக்கத்திற்கு வந்த இலக்கியத் திறனாய்வு முறையின் கடைசிக் கொழுந்தாக அவர் செயற்பட்டார்.

அவர் எழுதிய நூல்களில் இரண்டு முக்கியத்துவம் பெற்றன. அவையாவன: கீழைத்தேய வாதம் (Orientalism), பண்பாடும் ஏகாதிபத்திய வாதமும் (Culture and Imperialism). இவை முறையே 1978, 1993 ஆகிய ஆண்டுகளில் வெளியாயின.

இந்நூல்களைவிட வேறு நூல்களையும், ஏராளமான கட்டுரை களையும் எழுதி புலமையாளர்களையும், ஆய்வறிவாளர்களையும் எளிதிற் கவர்ந்து அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றார்.

புத்தொளி அறிவுக்கும், குடியேற்றவாதச் செயற்பாட்டுக்கும் இடையே இருந்து வந்த விரும்பத்தகாத உறவை இவர் அம்பலப்படுத்தினார். இது காரணமாகப் பாடச் செல்நெறிகள் பல மாற்றத்திற்குட்பட்டன.

மேனாட்டுக் குடியேற்றவாதப் பண்புகளினால் பயனடைந்த மேனாட்டார் அல்லாதோரும் சயித்தின் வழிகாட்டலில் புத்தறிவு பெற்றனர். அவர் ஒரு மனிதாபிமானியாக இருந்தபோதிலும் "மனிதத்துவம்" (Humanism) என்ற கோட்பாட்டைக் கண்டனத்துக்கு உட்படுத்தினார். இது பலருக்கும் ஒரு முரண்பாடாக உணரப்பட்டது. அதே வேளையில், இஸ்லாம் போன்ற நொய்மையான பொருள்களில் பண்பாட்டு ரீதியாகப் புனர் மதிப்பீடு செய்யப்படுவதை அடிப்படைவாதிகள் கேள்விக்குட்படுத்தினர்.

அவருடைய நூல்களுக்கு மத்திய கிழக்கு, ஆசியா, ஆபிரிக்கா, இலத்தின் - அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் மகத்தான வரவேற்பு கிடைத்து வந்தன.

பர்தா சட்டர்ஜி என்ற புலமையாளரின் வியப்புமிகு கூற்று இங்கு பதியத்தக்கது: "ஆபிரிக்க, ஆசிய ஆய்வறிவாளரிடையே ஐக்கியத்தை வலியுறுத்திவந்த சயித், பிரிட்டிஷ் குடியேற்றவாதக் கருத்துக்கள், இந்திய தேசிய வாதக் கருத்துக்கள் ஆகியன எவ்வாறு உருக்கொண்டு செயற்பட்டன என்பதைத் தனது "கீழைத்தேயவாதம்" (Orientalism) என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்."

அறிஞர்கள் சயித்தின் எழுத்துக்கள் பற்றி எழுதுகையில், சயித் "ஐரோப்பிய மைய நிலைப்பாட்டை" கீழிறக்கியதாகத் தெரிவிக்கிறார்கள். இந்தப் பண்பு, குறிப்பாக மேனாட்டு விஞ்ஞானப் படைப்புகளிலும் புனைக்கதைகளிலும் காணப்படுவதை சயித் சுட்டிக்காட்டியிருந்தார்.

சயித்தின் உலகளாவிய நோக்குப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். "வெவ்வேறு நெறிகளிலும், ஒற்றுமை வேற்றுமை போன்றவற்றைக் கண்ட சயித் அவை முரண்பாடாய் அமையாமல் மனிதத் துடிப்புடன் திளைத்தமையை எடுத்துக் காட்டினார்:" இது, இஸ்ரேலிய பியானோ இசை விற்பன்னர் டானியல் பாரன் பொயிமின் கூற்று.

சயித் மறைந்தமை ஆய்வறிவாளர் உலகுக்குப் பெரும் இழப்பு. ஏனெனில், அவர் உலகம் செறிந்த கலைஞர்கள், புலமையாளர்கள், அரசியல்வாதிகளின் நன்மதிப்பைப் பெற்று, மதிப்புக்குரியவராகக் கணிக்கப்பட்டார். இசை, இலக்கியம், மெய்யியல், அரசியல் போன்றவற்றில் புத்தாக்கக் கருத்துக்களை அவர் வெளியிட்டு வந்தார். இவை புதிய செல்நெறிகளுக்கு வழிவகுத்தன.

இது மட்டுமல்ல,

இசைநாடகத் திறனாய்வாளர், பியானோ வாத்திய இசையாளர், தொலைக்காட்சிப் புகழ் ஒளிபரப்பாளர், ஊடகத்துறை நிபுணத்துவர், ஜனரஞ்சகக் கட்டுரையாளர், பொதுமேடை விரிவுரையாளர், அரசியல்வாதி - இவ்வாறு சகல துறைகளிலும் அவர் பலருடைய கவனத்தையும் கவர்ந்து பெரும் மதிப்பைப் பெற்றார்.

அமெரிக்காவின் மத்திய கிழக்குக் கொள்கைகளையும், பாலஸ்தீன மக்களின் மனித உரிமைகளை ஈஸ்ரேல் மீறி வன்செயல்களில் ஈடுபட்டமையையும் சயித் எதிர்த்து வந்தார். அதேவேளையில் வலதுசாரி ஏடான 'Commentary', அவர் குருதிப்புற்று நோயினால் வாடியிருந்த நிலையிலும், அவர் மீது கண்டன மாரியைப் பொழிந்து தள்ளியது. இது நிகழ்ந்தது 1999ஆம் ஆண்டிலாகும். இஸ்ரேல் சார்பான நியூயோர்க் வட்டாரங்கள் அவரைக் கண்டித்தன.

அதேசமயம் தேவையற்ற விதத்தில் யூத எதிர்ப்பு வாதத்துக்குச் சலுகைகள் கொடுக்கும் விதத்தில் சயித் நடந்து கொள்கிறார் என பலஸ்தீனர்களும் அவர் மீது குற்றஞ் செலுத்தினர்.

ஐரோப்பிய யூத எதிர்ப்பு மனப்பான்மையைச் சுட்டிக்காட்டிய சயித், எதிர்வினையாக இஸ்ரேல் நடந்து கொள்வதை ஏற்றுக்கொண்டார். ஆயினும் இஸ்ரேல் பலஸ்தீனர்கள் மீது அதன் வெறுப்பைக் காட்டுவது பொருத்தமற்றது என்று வாதாடினார். அரபுகளுக்கும் யூதர்களுக்கும் பொருந்தக்கூடிய ஜனநாயக முறையை அவர் வலியுறுத்தி வந்தார். இஸ்ரேல் என்ற நாடு தனித்தியங்குவது போன்று பாலஸ்தீனர்களுக்கும் தனித்தியங்கும் நாடு தேவையென அவர் சுட்டிக்காட்டினார். சயித்தின் இடைவிடா முயற்சியினால் மட்ரிட் மகாநாடு, ஒஸ்லோ சமாதான முயற்சி போன்றவை இடம்பெற்றன எனலாம். இருந்தபோதிலும், 1991ல் சயித் பாலஸ்தீன தேசிய மன்றத்திலிருந்து விலகிக் கொண்டார். ஒஸ்லோ பிரகடனம், இஸ்ரேலுக்குத்தான் வாய்ப்பாய் அமைந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

இங்கு ஒரு விஷயத்தை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். சயித் இஸ்லாமியர் அல்லர். அவர் ஒரு கிறிஸ்தவர். இவருடன் கைரோவில் படித்தவர் ஆங்கிலத் திரைப்படத் துறையின் முக்கிய நடிகரான ஓமார் ஷெரிப் என்பது சுவாரஸ்யமான தகவல். சயித் அமெரிக்காவில் படிக்கும்பொழுது, அமெரிக்கப் பாங்கான கட்டுரை எழுதும் முறையைத் தாம் விரும்பியதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆர். பி. பிளக்மர், அன்ரோனியோ

க்ரம்ஷி, தியோடோர் அடோர்னோ, ரேமண்ட் விலியம்ஸ், மைக்கல் பூக்கோ போன்றோரை சயித் ஆசிரியர்களாகக் கனம் பண்ணினார்.

"பண்பாடும் ஏகாதிபத்திய வாதமும்" (1993) என்ற இவரது நூல் பிரசித்தி பெற்றதொன்று. ஜோசப் கொன்றட் என்ற ஆங்கில எழுத்தாளர் தொடர்பாக அவர் மேற்கொண்ட ஆய்வுக்கு அவருக்குக் கலாநிதிப் பட்டம் கிடைத்தது. போலாந்தில் பிறந்து ஆங்கிலத்தில் புலமைபெற்ற கொன்றாட் ஓர் இனவாதியாக இருந்தார் என சின்ஃஹுவா அச்சிபே போன்ற ஆபிரிக்க எழுத்தாளர் கருதியதையும் இங்கு நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஜேர்மானிய இசைமேதை வாக்னரின் இசை, கோட்பாடுகளையும் மீறிய இசை வெள்ளம் என சயித் கருதினார். மேற்கு - கிழக்கு வாத்தியக் குழுவை இவர் இஸ்ரேலியப் பிரஜையான டானியல் பரன்பொயிமுடன் சேர்ந்து உருவாக்கினார். 2003ஆம் ஆண்டு ஜுன் மாதம் பிபிஸியில் இவ் வாத்தியக் குழுவின் நிகழ்ச்சி பல்லாயிரக் கணக்கான ரசிகர்களைப் பரவசப்படுத்தியது.

எட்வர்ட் டபிள்யூ சயித் மரியம் கோர்டாஸ் என்ற மாதை 1970ல் மணந்து கொண்டார். அவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறந்தனர்.

எட்வர்ட் டபிள்யூ சயித் கடந்த 25 செப்டம்பர் 2003 அன்று தனது 67வது வயதில் காலமானார்.

- கே. எஸ். சிவகுமாரன் *

---

* திறனாய்வாளர் / பத்தி எழுத்தாளர் / மொழிபெயர்ப்பாளர்

சமூக அறிவு, தொகுதி 1, இதழ் 1&2, ஆடி 2004
ISSN 1391 - 9830
185 - 187

# போல் மார்லர் சுவிசி

## Paul Marlor Sweezy

## 1910 - 2004

சுவிசி ஓர் அமெரிக்கர். மார்க்சிய பார்வை பொருளியலாளராகத் தன்னை இனங்காட்டிக் கொண்ட சுவிசி ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் புகழ்பெற்ற பொருளியலறிஞர் ஷும்பீட்டரின் (Schumpeter) விருப்புக்குரிய மாணவனாகத் திகழ்ந்தவர் [இவருடன் கற்ற சக மாணவன் புகழ்பெற்ற பொருளியலறிஞன் போல் சாமுவேல்சன் (Paul Samuelson) என்பார் ஆவார்.] தனது கலாநிதிப்பட்ட ஆய்வுக்காகச் சமர்ப்பித்த "ஆங்கில நிலக்கரி வாணிபத்தின் தனியுரிமையும் போட்டியும் : 1550 - 1850" (Monopoly and Competition in the English Coal Trade 1550 - 1850) என்ற தலைப்பிலான ஆய்வு ஹாவர்ட் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது. இவ்வாய்வு "நிறுவனங்களின் உயர்வும் வீழ்ச்சியும்" தொடர்பான அல்பிரட் மார்சலின் (Alfred Marshall) கோட்பாடுகளை ஆழமாக விமர்சிப்பதாய் அமைந்தது. லண்டன் பொருளியற் கல்லூரியில் (LSE - London School of Economics) மேற்படிப்பை மேற்கொண்ட காலம் இவர் ஒரு மார்க்சியவாதியாக மலர்ச்சிப் பெற உதவியது.

"மாதாந்த மீளாய்வு" (Monthly Review) என்ற ஆங்கில மொழி ஏட்டின் ஆசிரியராக இவர் நெடுங்காலம் பணி புரிந்தார். சுவிசியும் லீயோ ஹியுபர்மானும் (Leo Huberman) இணைந்து இந்த ஏட்டை ஆரம்பித்தனர். மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார நிலை பற்றி இந்த ஏடு அதிக கவனம் செலுத்தி வந்தது. இது ஐரோப்பாவின் ஏனைய இடதுசாரி ஏடுகளினின்றும் வேறுபட்டு நின்றது. தெளிவான சிந்தனை, தெளிவான எழுத்து நடை என்பன இதன் சிறப்பம்சங்களாக விளங்கின. இதன் முதல் ஏட்டிலே "சோசலிஸம் ஏன்?" என்ற கட்டுரையை விஞ்ஞானி ஐன்ஸ்ரைன் எழுதியமையையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஆங்கில மொழியில்

உலகின் எந்தப் பகுதியிலும் இத்தகைய சோசலிஸ ஏடு வந்ததில்லை எனக் கூறலாம். இவ்விதழ் ஐரோப்பிய மையக் கருத்தோட்டத்தினின்று வேறுபட்டு நின்றது என்பதையும் இங்கு கூடவே குறிப்பிடலாம்.

இந்த ஏட்டின் இணை ஆசிரியராக ஹரி மக்டொஃப் (Harry Magdoff) என்ற இடதுசாரிப் போக்குக் கொண்ட பொருளியல் நிபுணர் சேர்ந்து கொண்டார். ஏட்டின் ஒவ்வொரு இதழிலும், இவ்விரு ஆசிரியர்களும் "மாதக் குறிப்புக்களை" எழுதி வந்தனர். அமெரிக்க முதலாளித்துவம் எவ்வாறு செயற்பட்டது என்பது உட்படப் பல விடயங்களை இப்பத்திகளில் இவர்கள் எழுதி வந்தனர். இப்பத்திகள் பல தொகுதி நூல்களாக வெளிவந்துள்ளன.

சுவிசி ஏட்டின் ஆசிரியராகவோ பத்தி எழுத்தாளராகவோ கட்டுரையாசிரியராகவோ மட்டும் தன்னை ஒதுக்கிக் கொள்ளவில்லை. நூலாசிரியராகத் திகழ்ந்த இவர் முக்கிய அரசியற் பிரச்சினைகளைப் பொறுத்தவரை ஒரு செயல் வீரராகவும் விளங்கினார்.

சோவியத் யூனியன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு எதிராகத் தனது வாதங்களை நிலைநாட்டல், "பாஸிஸ"ப்போக்குகளுக்கு எதிராகப் போராடுதல், கியூபா புரட்சிக்கு ஆதரவளித்தல் [ஏர்னஸ்ரோ சேகுவேரா (Ernesto Che Guevara) இவருடைய ஆத்ம நண்பன்], வியட்னாம் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடல், 1960களின் பிற்பகுதியில் அமெரிக்காவில் எழுந்த மாணவர் எழுச்சிகளுக்கான தோழமை ஆதரவை வழங்கல் போன்றவை இவரது இச்செயற்பாட்டுக்கு நல்ல உதாரணங்கள் எனலாம்.

அமெரிக்காவில் காம்யூனிஸ்டுகளை வேட்டையாடும் ஒரு கைங்கரியத்தில் 1954ல் கவர்ணர் மக்கார்த்தி என்பவர் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். சுவிசியும் வேட்டையாடப்பட்டு இரு தடவை விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார். சுவிசி கேள்விகளுக்குப் பதில் அளிக்காததால், நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையிலடைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். 1957ல் அமெரிக்க உயர் நீதிமன்றம் இவருடைய கோரிக்கையை அனுகூலமாக ஏற்றுக்கொண்டது.

1960களின் பிற்பகுதியில் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் மார்க்சியம் மீது புத்தார்வம் பிறந்தது. இது காரணமாக அங்கெல்லாம் இவர் விரிவுரைகளை நடத்தி வந்தார்.

பாஸிஸத்துக்கான எதிர்ப்புக்கு இடதுசாரிகள் ஆதரவு அளித்து வந்தனர். இதன் காரணமாக அமெரிக்க அரசாங்கத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தந்திரோபாய பந்தோபஸ்து அலுவலகத்துடன் இவர் தொடர்புக் கொண்டிருந்தார் [Office of Strategic Security (OSS)].

இந் நிறுவனமே மத்திய உளவு ஸ்தாபனத்தின் (CIA) முன்னோடி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சுவிசி 1940களில் எழுதிய "முதலாளித்துவ அபிவிருத்திக் கோட்பாடு" (The Theory of Capitalist Development) எனும் நூலும், போல் பரனுடன் (Paul Baran) சேர்ந்து 1960களில் எழுதிய "தனியுரிமை மூலதனம்" (Monopoly Capital) என்ற நூலும் (சேகுவேராவுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்ட இந்நூலை எழுத பத்து வருடங்கள் ஆகின. இந்நூல் வெளியாகு முன்னரே பரன் காலமானார்) அமெரிக்க இடதுசாரிகளின் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்புகளாக எடுத்துக் கூறுவர்.

"தனியுரிமை முதலாளித்துவத் தத்துவங்கள்" என்ற பொருளில், இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பிரசித்தி பெற்ற மார்ஷல் விரிவுரைகளை நடத்தும்படி சுவிசி கேட்கப்பட்டார்.

இவரைப் போல் பொருளியல் தொடர்பான மார்க்சியக் கோட்பாடு-களைத் தெள்ளத் தெளிவாக விளக்கிக் கூறியவர் எவருமிலர் எனலாம். ஜே. எம். கேயின்ஸ் (J. M. Keynes) என்ற மிகப் புகழ் பெற்றபொருளியல் நிபுணரின் தத்துவங்கள் ஏற்கனவே மார்க்சிய எழுத்திற் காணப்படுகின்றன என்று துணிவாக சுவிசி எடுத்துரைத்தார்.

இவருடைய "முதலாளித்துவ அபிவிருத்திக் கோட்பாடு" (The Theory of Capitalist Development) என்ற நூலிற் காணப்படும் மார்க்சிய தெளிவுரைகளை கார்ள் கௌற்ஸ்கி, ருடோல்ப் ஹில்பேர்ங், ஹென்றிக் க்ரொஸ்மன், ரோஸா லக்ஸம்பேர்க், மிக்ஹெயில் ரூகன் - பரனொவ்ஸ்கி, நிக்கோலாய் புக்ஹாரின் போன்றோர் மிக விரிவாகப் பயன்படுத்தியதுடன் அதனை விரிவாக்கம் செய்து பரப்பவும் செய்தனர்.

ஏகாதிபத்திய நாடுகளிடையே இருந்து வந்த போட்டா போட்டிகளும் பாசிசமும், முதலாளித்துவ அரசியற் பொருளாதாரத்தின் முகங்களே என்றும் சுவிசி விளக்கினார்.

மார்க்சியப் பொருளியற் கருத்துப் பரிமாற்றத்தின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பண்பாக "நுகர்வுக் குறைவு" (Under Consumption) என்ற கோட்பாட்டைச் சுவிசி வலியுறுத்தி வந்தார்.

சோஸலிஸம் தொடர்பாகத் தீவிர கடப்பாடுடையவராகச் செயற்பட்ட இந்த மாக்சிகப் பொருளியலாளர், தனது 94வது வயதில் 2004 பெப்ரவரி 28 அன்று காலமானார்.

- கே. எஸ். சிவகுமாரன் *

---

* திறனாய்வாளர் / பத்தி எழுத்தாளர் / மொழிபெயர்ப்பாளர்

# ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள்

கட்டுரைகள் புலமைதர உசாவலின் பின்னரே பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும். சமூக அறிவுக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள் வேறு சஞ்சிகைகள், ஆய்விதழ்கள் போன்ற எதிலும் வெளியிடப்பட்டிருத்தல் கூடாது. தமிழில் எழுதப்பட்ட கட்டுரைகள் பெரிதும் விரும்பப்பட்டாலும், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படலாம். அவை பிரசுரிப்பதற்குத் தகைமை பெறுமாயின் உரிய தமிழ் மொழிபெயர்ப்பில் வெளியாகும்.

உசர்வலுக்குச் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளுக்கு சொல் எண்ணிக்கை பற்றிய மேல்எல்லை எதுவுமில்லையாயினும் கட்டுரைகள் 5000 - 6000 சொற்களைக் கொண்டிருத்தல் பெரிதும் வரவேற்கப்படும். அதே போன்று, மீளாய்வுக் கட்டுரைகள் 3000 - 5000 சொற்களையும், நூல் மதிப்பீடுகள் 1000 - 2000 சொற்களையும் கொண்டிருக்கலாம்.

கட்டுரையின் இரு பிரதிகள் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியாகவோ கணினிப் பிரதியாகவோ உசாவலுக்கெனச் சமர்ப்பிக்கப்படலாம். எனினும், கட்டுரையில் எழுதியவர் பெயர், பதவி, நிறுவன விபரங்கள் எதுவும் சேர்க்கப்பட்டிருத்தல் கூடாது. இவை வேறொரு தாளில் தனியாக எழுதப்பட்டுக் கட்டுரையுடன் இணைக்கப்படுதல் வேண்டும். இவற்றுடன் 100 முதல் 125 சொற்கள் கொண்ட கட்டுரைச் சுருக்கமொன்றும் கட்டுரையுடன் அனுப்பப்படுதல் வேண்டும். கட்டுரைச் சுருக்கத்துடன் கட்டுரையிற் பயன்படுத்தப்படும் நான்கு முக்கியமான பதங்களையும் தயவுசெய்து குறிப்பிடவும். கட்டுரையை முடியுமாயின் 'வித்யா' எழுத்துருவினைப் பயன்படுத்தி இறுவட்டிற் (CD), கட்டுரையின் கடினப் பிரதிகளுடன் அனுப்புவது பெரிதும் விரும்பப்படும். எனினும், இது எதுவிதத்திலும் கட்டாயமானதன்று.

ஆய்வுக் கட்டுரைக்கான மேற்கோள்களுக்கு ஆசிரியர் திகதி முறைமையினை (Author Date System) அல்லது அடிக்குறிப்பு முறைமையினைப் பின்பற்றலாம்.

ஆசிரியர் திகதி முறைமை : (ஆசிரியர் பெயர், வெளியிட்ட ஆண்டு : பக்கம்) இம்முறை பின்பற்றப்பட்டால் அகரவரிசைப்படுத்தப்பட்ட உசாத்துணை நூற்பட்டியல் கட்டுரையின் இறுதியில் இருக்க வேண்டும்.

அடிக்குறிப்பு

நூலாயின் : முதலெழுத்துக்களுடன் ஆசிரியர் பெயர், நூலின் தலைப்பு, வெளியீட்டாளர் பெயர், வெளியிடப்பட்ட இடம், வெளியிட்ட ஆண்டு, பக்கம்.

சஞ்சிகையாயின் : முதலெழுத்துகளுடன் ஆசிரியர் பெயர், "கட்டுரையின் பெயர்", சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், இதழ் இலக்கம், பக்கம்,

உசாத்துணை நூற்பட்டியல்

நூலாயின் : ஆசிரியர் பெயரும் அவரின் முதலெழுத்துக்களும் (வெளியிட்ட ஆண்டு), நூலின் தலைப்பு, நூல் வெளியீட்டாளர் பெயர், வெளியிடப்பட்ட இடம்.

சஞ்சிகையாயின் : ஆசிரியர் பெயரும் அவரின் முதலெழுத்துக்களும் (வெளியிடப்பட்ட ஆண்டு), "கட்டுரையின் தலைப்பு", சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், இதழ் இலக்கம், வெளியீட்டாளர் பெயர், வெளியிடப்பட்ட இடம்.

| **சந்தா விபரம் : ஓர் ஆண்டுக்கு (இரு இதழ்கள்)** | | | இலங்கை | இந்தியா (வான்மார்க்கம்) | ஏனைய நாடுகள் (வான்மார்க்கம்) |
|---|---|---|---|---|---|
| தனிநபர் | ... | - | 500/= | U.S.$ 8 | U.S.$ 20 |
| நிறுவனம் | ... | - | 2000/= | U.S.$ 32 | U.S.$ 80 |
| தனி இதழ் | ... | - | 300/= | U.S.$ 5 | U.S.$ 12 |

ISSN 1391-9830

9 771391 983005

printed by
**KUMARAN PRESS**
PRIVATE LIMITED
*201, Dam Street,*
*Colombo-12*